மடாதிபதிக்கு
தெய்வ தரிசனம்



தெய்வ தரிசனம்

பரவஸ்து சூரிய நாராயணராவ்

தெய்வ தரிசனம்!

பரவஸ்து சூரிய நாராயணராவ்

தமிழாக்கம்:

V. பிலிப்துரை

வெளியீடு:
கருணாமயா மினிஸ்ட்ரீஸ்
ஹைதராபாத்
ஆந்திர பிரதேசம்.

பொருளாதார உதவி:
சாலோம் குட்நியூஸ் மினிஸ்ட்ரீஸ்
(ஸ்தாபகர்- கீதா ஸ்டீபன்)
ஹைதராபாத்.

அச்சிட்டோர்:
ஒரேப் ஆர்ட் பிரிண்டர்ஸ்
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை-600 024.
போன். 4835299

முன்னுரை!

கிறிஸ்தவம் என்பது ஒரு மதமல்ல, ஒரு கொள்கையல்ல, ஒரு தத்துவமுமல்ல, ஆனால் தேவன் மனிதனுக்கு வழங்கிய கருணைக் கொடை ஆகும். அந்த கருணைக் கொடை கிறிஸ்துவே. மனிதன் தேவனிடம் சேருவதற்கு நிரூபிக்கப்பட்ட ஒரே வழியாக இக்கிறிஸ்தவம் இருக்கிறது. இந்த சத்திய வழியில் கடந்து சென்ற அநேக விசுவாசிகளும், புண்ணிய புருஷர்களுமுண்டு. அப்படிப்பட்டவர்களில் சிலர் தேவ தரிசனம் பெற்றுத் தங்களுடைய அனுபவத்தையும், உணர்ச்சிகளையும் அடக்கிக் கொள்ள முடியாமல் மக்களுக்கு அவைகளை வெளிப்படுத்த நினைத்து அநேக புத்தகங்களை எழுதி உள்ளார்கள். அப்படிப்பட்ட புத்தகங்களினால் தேவனுடைய உழியக்காரர்கள் மனித சமுதாயத்தைக் கிறிஸ்துவமென்னும் உண்மையான சத்தியத்திற்குள் வழி நடத்த முடிந்தது. சர்வ வல்லமையுள்ள தேவன்தாமே அவர்களை அதிகமாக ஆசீர்வதித்துப் பிரயோஜனமடையச் செய்தார்.

1989 ஆம் ஆண்டு மே மாதம் சென்னை வேப்பேரி பாப்டிஸ்ட் சபை அங்கத்தினரான திருமதி சரஸ்வதி ஆனந்தவேலு என்பவர் பொது மக்களுக்கென உயிர்மீட்சிக் கூட்டங்களுக்கு ஒழுங்கு செய்திருந்தார்கள். அந்த கூட்டங்களுக்கு வந்திருந்த ஒரு சில தமிழ்ச் சகோதர, சகோதரிகள் நான் தெலுங்கில் செய்த பிரசங்கத்தையும் அனுபவச் சாட்சியையும் சிறிதளவு புரிந்துக்கொண்டு என்னிடத்தில் வந்து, ஐயா, நீங்கள் உங்கள் சொற்பொழிவைத் தமிழாக்கம் செய்திருந்தால் எங்களுக்கு நன்றாகப் புரிந்திருக்குமே, தயவு செய்து ஏன் அப்படிச் செய்யவில்லை என்று கூறிவிட்டுப்போனார்கள். அன்றுமுதல் என்னுடைய இந்தச் சிறிய புத்தகத்தைத் தமிழில் வெளியிட வேண்டுமென்று நானும், என் மனைவியும் ஊக்கமாக ஜெபித்து வந்தோம்.

ஆண்டுகள் சில கடந்தன. 1994 ஆம் ஆண்டு சென்னைப் பட்டணத்தைச் சேர்ந்த சகோதரி விஜயம்மா என்பவர்கள்

என்னுடைய புத்தகமாகிய ருஜிதர்சினி என்னும் புத்தகத்தை தெலுங்கில் வாசிக்க நேர்ந்தது. அவர்கள் அதிலுள்ள என் அனுபவத்தைத் தான் வேலை செய்யும் அலுவலகத்தில் மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டார்கள். அதை கேட்ட அநேகர் இந்தப்புத்தகம் தமிழில் வெளியிட்டால் எவ்வளவோ பிரயோஜனமாக இருக்குமே என்றார்கள். அந்த ஆர்வத்தின் தூண்டுதலே, இந்தப் புத்தகம் இன்று உங்கள் கைகளிலிருக்கிறது என்றால் முற்றிலும் அஃது உண்மை எனலாம்.

தமிழாக்கம் செய்யக்கூடியவர்கள் யாரெனத் தேடிய போது சென்னைப் பட்டணத்தைச் சேர்ந்த சகோதரர் வி. பிலிப் துரை அவர்கள் இப்பணியைச் செய்ய மனமுவந்து முன் வந்தார்கள். இவரும் பயங்கரமான பக்தி வைராக்கியம் நிறைந்த இந்து குடும்பத்திலிருந்து வந்தவர். இவர் அரசாங்கப் பணியாற்றிக் கொண்டு தேவனுக்கு ஊழியம் செய்து வருகிறார். நேரம் கிடைப்பதே கடினம்! அவ்வாறு இருந்தும் இப்புத்தகத்தை மொழி பெயர்க்கப் பலமுயற்ச்சிகளை எடுத்து எல்லோருக்கும் புரியக்கூடிய விதமாக சாதாரணமான நடைமுறை வார்த்தை களைக் கொண்டு தன் பணியைச் செவ்வனே செய்து முடித்துள்ளார். தேவன் தாமே அவரையும் அவர் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

அவருக்குப் புத்தக வடிவத்திற்கேற்ற தமிழ் மொழி பெயர்ப்பில் குறைந்த அனுபவமிருப்பதால் அவர் தமிழாக்கம் செய்ததை யாராவது தமிழ் ஆசீரியர் சரிபார்த்து கொடுத்தால் நலமாயிருக்கும் என அவர் பலகாலம் தேடி வந்தார். அப்படிப்பட்ட வேளையில்தானே அதே இடத்தில் அரசாங்கப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றி ஒரு சில புத்தகங்களையும் எழுதி வெளியிட்டு ஓய்வு பெற்றிருந்த ஒரு நல்ல தமிழ் ஆசிரியரான திரு அரங்கன் எம்.ஏ.எம்.பில் அவர்களை அவரின் மாணவர் சி.வி. கிருபாகர் இராஜன் மூலமாகக் கண்டுகொள்ள முடிந்தது. சகோ. பிலிப்துரை அவர்கள் தமிழ் ஆசிரியரை அனுகிய பொழுது அவர் இது இறைவனின் பணி இதில் எனக்கு பங்கு இருக்கட்டுமே என்று சொல்லி முழு சம்மதத்தைத் தெரியப்படுத்தி, தமிழாக்கத்தை

வாசித்தபோது அது அவருக்கு மிகுந்த கருத்துடையதாய் இருந்தமையால், இன்னும் இரண்டுமுறை வாசித்துத் தங்கள் வீட்டாருக்கும் இந்தப் புத்தகத்திலுள்ள கருத்துக்களை விளக்கிக் காட்டினார்கள். புத்தகம் நல்லமுறையில் அமைய வேண்டும் என்பதற்காக அதிக சிரமப்பட்டு திருத்தியதை எல்லாம் தாமே மறுபடியும் எழுதி கொடுத்தார்கள். என்னைச் சந்திக்க ஆவல் கொண்டிருந்தமையால் நான் சென்னைக்குச் சென்றபோது அவரைச் சந்தித்து உரையாடினேன். இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டுள்ளீர்கள். ஆதலால் உங்களுக்கு நான் ஏதாவது செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன் என்று சொன்னபோது அவர் அதை முற்றிலும் மறுத்து, இது இறைவனின் பணி இதினால் அநேக மக்கள் பயன்பெற உள்ளார்கள், அதுவே எனக்குப்போதும் என்று சொல்லி விட்டார்கள். இப்படிப்பட்ட தாராளமனதுடைய மக்களைப் பார்ப்பது எவ்வளவு அரிதானது. சகோதரர் அரங்கன் அவர்களையும் அவர் குடும்பத்தையும் தேவன் சந்தித்து ஆசீர்வதிப்பாராக!

இதை வாசிக்கும் உங்கள் ஒவ்வொருவருக்கும்கூட தேவனுடைய ஆசீர்வாதமும், அவருடைய உண்மையான வழிகாட்டுதலும் என்றென்றும் இருக்க வேண்டுமென வேண்டுகிறேன். தேவனின் தரிசனத்தோடும் தேவாசீர்வாதத் தோடும் உங்கள் எல்லோரின் வாழ்வும் பெரியதாய் அமைய வேண்டுமென இயேசுவின் நாமத்தில் ஆசீர்வதிக்கின்றேன்.

-பரவஸ்து சூரிய நாராயணராவ்.

தேவனுக்கே மகிமை!

"தெய்வ தரிசனம்" என்ற இந்த சிறிய புத்தகத்தை தமிழ் வாசகர்களுக்கு கிடைக்க செய்ய, தேவன் இந்த தம்பதியினரை ஏவி, உற்சாகப்படுத்தி, ஆசீர்வதித்தார். இவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை செலுத்துகிறேன். தமிழ் நாட்டில், தேவன் இப்படிப்பட்ட அநேக குடும்பங்களில், அவருடைய சேவையில் உதவி செய்ய, எழுப்பும்படி ஜெபிக்குமாறு கேட்டுகொள்கிறேன்.

நான் செய்த பிரசங்கள் எட்டு ஒலி நாடாக்களில் உள்ளன. அவைகளை தமிழில், மொழி பெயர்ந்து வெளியிட உதவி செய்ய, தேவன் அநேகரை ஏவி, உற்சாகபடுத்தி, ஆசீர்வதிக்கும்படி, ஜெபிக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஒலிநாடக்களில் உள்ள செய்திகள், கிறிஸ்துவர்கள் அல்லாதவர்கள், கிறிஸ்துவை அறிந்து கொள்ளவும், அவர்களை பரலோக இராஜ்ஜியத்திற்குள் வழிநடத்தவும் மிகவும் பிரயோஜனமானவைகள்.

இப்படிக்கு

ஆசிரியர்

(இந்த தம்பதியினர் சலோம் குட்நியூஸ் மினிஸ்ட்ரீஸ் ஸ்தாபகர்கள்.)

வாசகர் கவனத்திற்கு!

தேவனுக்குள் பிரியமானவர்களே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் வாழ்த்துக்கள்!! நீங்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் என் சாட்சியை வாசித்து வரும்போது "இவர் இலட்சுமி நாராயண சுவாமியின் ஆசாரிய குடும்பத்தில் பிறந்தவர். தேவதாகமத்தைச் சிறிதளவேனும் அறிந்தவரல்லர். தெய்வச் செயல் என்று எழுதும்போது ரோமர் *8:29,30* வசனங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். அப்படி இன்னும் சில இடங்களில் வேதாகமக் குறிப்புக்களைத் தந்துள்ளார். அந்த வேளையில் இன்னும் வேதாகமத்தை அறியாதவராக இருந்திருக்கிறார். சில நாள்களுக்குப் பிறகுதான் இவருக்கு வேதாகமம் கிடைத்திருக்கிறது" என்று இப்படிப்பட்ட சந்தேகங்களைப் பிசாசானவன் உங்களுக்குப் பிறப்பிக்கக் கூடும். இப்படிப்பட்ட சந்தேகங்களுக்கு அதாவது பிசாசுக்கு உங்கள் இருதயத்தில் இடம் கொடுத்துச் சத்தியத்திலிருந்து விலகிப் போகாமல் இருக்கும்படி எச்சரிக்கையாக இருக்க வேண்டுமாய் உங்களையெல்லாம் வேண்டுகிறேன்.

நான் இந்தப் புத்தகத்தை *1988*-இல் எழுதினேன். அதற்குள்ளாக நான் வேதாகமத்தை நூற்றுக்கணக்கில் எத்தனையோ முறை படித்திருக்கிறேன் என்கிற உண்மையை வாசகர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென விரும்புகிறேன்.

வாசகர்களின் பிரயோஜனத்திற்காகவேண்டி வேதாகமத்தில் என்ன இருக்கிறது என்கிற விஷயத்தை ஒரு விக்ரக ஆராதனைக் காரனாகிய என் சாட்சியை வாசிக்கும்போது புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக ஆரம்பத்தில் வேதாகமக் குறிப்புக்கள் கொடுக்கப் பட்டிருக்கிறது என்கிற கருத்தை மனதில் கொள்ள வேண்டுமென என் மனதின் வேண்டுதலாகக் கூற ஆசைப் படுகின்றேன்.

-பரவஸ்து சூரிய நாராயணராவ்

முற்பிதாக்கள்!

விலை மதிப்பற்ற இரத்தினங்களாலும், தன தானியங்களால் பெருமை பெற்றதும், வியாபாரத்திற் கேற்றதும், தங்கமும் உலகோகங்களும் நிறைந்ததும், சிந்து, கங்கை, யமுனா, கௌதமி போன்ற புண்ணிய நதிகளினால் அலங்கரிக்கப்பட்டதும், ஆடு மாடுகளுடனும், மிருகங்களுடனும், பலவகை மதுரமான கனிகளுடனும் நிறைந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் புகழ் நிறைந்ததுமாகிய இந்த இந்தியத் திருநாட்டில் அநேக சந்ததியார் வசித்து வருகிறார்கள். அதில் பரவஸ்து சந்ததியார் மிகவும் புகழ்பெற்றவர்கள். கவிதைகள் எழுதுவது, அரசவைக் கவிஞராயிருப்பது, நூல்கள் எழுதுவது, கோயில் பூசாரி வேலை செய்வது, ஜாதகம் பார்ப்பது போன்றவை அவர்களின் முக்கியத் தொழில்களாக இருந்து வந்தன.

19ஆம் நூற்றாண்டில் பஞ்ச தந்திரம், மித்ரபேதம், மித்ரலாபம், பாலவியாக்ரணம், சந்திவிக்ரஹம் போன்ற அநேக நூல்கள் பரவஸ்து சின்னய்ய சூரி அவர்களால் எழுதப்பட்டன. அதனால் இந்தச் சந்ததியினர் இந்தியாவில் அதிகப் பேரும் புகழும் பெற்று விளங்கினர். காலப்போக்கில் கலை உலகம் நலிந்து போனதினால் இச்சந்ததியினர் தென்னிந்தியாவில் சில தொழில்களைச் செய்யும் நிலை நேர்ந்தது.

பரவஸ்து கூர்மையா சுவாமியின் வம்ச வரலாறு!

சுமார் 17ஆம் நூற்றாண்டில் உக்களம் ஆந்திரா எல்லைகளுக்குச் சமீபமான ஜலந்தர் கோட்டை அரண்மனையில் பரவஸ்து கூர்மையா சுவாமிகள் அரசாங்க ஆசாரியராகப் பணியாற்றினார்.

பரவஸ்து கூர்மையா சுவாமியின் மகனார் வேங்கட சுவாமி ஆவார். வேங்கட சுவாமியின் மகனார் பரவஸ்து இராம மூர்த்தி சுவாமி ஆவார். இராம மூர்த்தி சுவாமியின மகனார்

பரவஸ்து அப்பல் நரசய்யா சுவாமி ஆவார். அப்பல் நரசய்ய சுவாமிகளின் குமாரர்தான் பரவஸ்து சூரிய நாராயணராவ் ஆவார்.

பிறப்பு!

"நீ தாயின் கருவில் உருவாகுமுன்னே நான் உன்னைத் தெரிந்து கொண்டேன்" (*எரேமியா 1:5*).

*1946*ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் நாள் சீரிகாகுளம் மாவட்டம், இச்சாபுரம் வட்டத்தைச் சேர்ந்த ஈதுபுரம் என்னும் கிராமத்தில் நான் பிறந்தேன். அது என் தாயாரின் தந்தையாகிய என் தாத்தாவின் கிராமம். என் தாயின் கருவில் உருவாகுவதற்கு முன்பே தேவனுக்கு என் பட்சத்தில் ஒரு நோக்கமும், திட்டமும் இருந்ததினால் என்னைத் தன் ஊழியத்திற்கு நியமித்துக் கொண்டதாகத் தெரிய வருகிறது. இந்த ஊழியத்தை நான் மிகவும் தாமதமாகத் தெரிந்து கொண்டேன். அதற்குப் பிறகு என் சரீரத்தைத் தேவனுக்கு ஜீவபலியாக ஒப்புக் கொடுத்தேன்.

என் பெற்றோர்களுக்கு நாங்கள் நான்கு பிள்ளைகள். இரண்டு ஆண்கள்; இரண்டு பெண்கள்.

என் தாயின் தந்தையாகிய என் தாத்தா ஸ்ரீ அழகிரி சூரியபாபு என்பவர் ஜாதகம் பார்ப்பதில் பேர் போனவர். எனவே என் ஜாதகத்தை பனை ஓலையில் எழுதி வைத்திருந்தார். பிறகு என் அப்பாவுடன் ஒரு இரகசியமான காரியத்தைக் குறித்தும் தெரிவித்திருந்தார். அந்த இரகசியமான விஷயத்தை என் பெரிய தகப்பனார் அநேக நாள்களுக்குப் பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் என்னுடன் பேசியதை வாசகர்கள் பின்னர் தெரிந்து கொள்வீர்கள்.

கல்வி!

என்னை ஐந்து வயதில் பள்ளியில் சேர்த்தார்கள். அதற்குப்பிறகு இச்சாபுரத்திலுள்ள் சுரங்கி மகாராஜா பள்ளியில் சமஸ்கிருதம், தெலுங்கு மொழிகளைப் பயின்ற பிறகு, உத்கலப் பல்கலைக் கழகத்தில் என் படிப்பை முடித்தேன்.

என் புரோகிதப்பணி!

சிரிகாகுளம் மாவட்டம் சோம்பேட்டை வட்டம் ஜலந்தர நாராயணபுரத்தில் 1964ஆம் வருடம் டிசம்பர் மூன்றாம் நாள் என்னைக் கோயில் பூசாரி வேலைக்கு நியமிக்கப் பெரியவர்கள் நிச்சயித்து, யஜுர் வேதம் 36 ஆம் அதிகாரம் 3ஆம் மந்திரத்தின் படி பிரதிஸ்டை செய்து, என்னை மறு பிறவியாக்கிக் கீழ்வரும் காயத்திரி மந்திரத்தை கற்பித்தார்கள்.

"ஹோம், பூர்பவஹ ஸ்வஹா,

தத்ச விதுர்வி ரேண்யம்,

பர்கோ தீமஸ்ய தீமஹி

தியோ யோணஹ பிரசோதயாத்."

இதன் கருத்தாவது:- ஓம்கார உருவானவர். துக்கமில்லா தவர்: எங்கும் நிறைந்தவர். எல்லா உலகங்களையும் சிருஷ்டித்து எல்லா ஐசுவரியத்தையும் தருகிறவர். ஏற்றுக் கொள்ளத்தக்கவர். பரிசுத்தர். எல்லா நன்மைகளையும் நல்கும் அந்தப் பரமாத்மாவின் சாயலை நான் கொண்டிருப்பேனாக. உலகத்தை ஆளும் உன்னத தேவன் எங்கள் அறிவை நேசிப்பாராக.

இந்த விதமாக என்னைப் பூநூல் தரிக்கச் செய்தும், அபிஷேகம் போன்ற காரியங்களைச் செய்வித்தும், ஸ்ரீலட்சுமி நாராயண சுவாமி ஆலயத்தில் என் பெரியப்பா, சித்தப்பா, பிள்ளைகளாகிய என் அண்ணன்மார்களின் உதவியால் என்னைப் பிரதான கோயில் பூசாரியாக எங்கள் பரம்பரை சடங்காச்சாரத்தின்படி நியமித்தார்கள்.

ஒரு சுதந்திர தின விழா நேரத்தில், அதிகாலையில் விழித்தெழுந்து தாமரைப் பூக்களுக்காகக் குளத்தில் நீந்திச் சென்று, உளையான சேற்றில் சிக்குண்டுத் தண்ணீர் குடித்துவிட்டு வெறும் காலின் பெருவிரல்களின் மேல் தவித்துக் கொண்டிருந்தேன். அந்நேரத்தில் குளிப்பதற்காக வந்த சிலர் என் நிலைமையைப் பார்த்தார்கள். உலக இரட்சகர்

என்னை மரணத்திலிருந்து தப்புவிக்கும்படி அந்த மனிதர்களைச் சாதகமாக உபயோகித்துக் கொண்டார். அந்தத் தேவனுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தெய்வச் செயல்!

''தேவன் யாரை முன்னறிந்தாரோ அவர்களை முன் குறித்துமிருக்கிறார். யாரை முன் குறித்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார். எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.''

தன் சித்தத்தின்படி சுயமாய் செயலாற்றும் உன்னில் தேவனின் காரியங்கள் விளங்கிக் கொள்ள முடியாதவை. அவரின் தரிசனங்களும் வெளிப்படுதல்களும் வித்தியாசமானவைகள்.

நான் வாலிபனாக இருந்ததினால் என் வாலிப நண்பர்களும் என்னுடன் சேர்ந்து சுற்றி வந்தார்கள்.

''சகவாச தோசே

குணே பவந்தே''

என்றாற்போல் சகவாச தோஷத்தால் தீயகுணங்கள் உடையவனானேன். நான் கோயில் பூசாரி வேலை செய்ததுடன்,வேத பாடங்களையும் கற்று வந்தேன். சாம வேதம், தாண்டிய மகா பிராஹம்னம், ஆரிய புலமை, தேவி பாகவதம், புரஊதாருண்யகோ உபநிஷத், மனுஸ் புருதி, ரிக் வேதம், சம்பூரண மகாபாரதம், பகவத் கீதை, விஷ்ணு புராணம், வேமண கவிதைகள் போன்ற புத்தகங்களை வாசிப்பதில் அதிக ஆர்வமுடையவனாகவும் இருந்தேன்.

நண்பர்களுடன் சேர்ந்து சினிமா பார்ப்பது, நேரம் கிடைக்கும் போதெல்லாம் மது, குடிப்பது, கோயிலுக்கு வரும் வாலிபப் பெண்களுடன் மிருகம்போல் விபச்சாரம் செய்வது போன்ற பாவ காரியங்களில் கைதேர்ந்தவனானேன். கிராமத்தில் இருக்கும் பெரியவர்கள், வாலிபர்கள் அனை

வரும் நான் சொல்வதை வேத வாக்காக நம்பி வந்தார்கள். ஆனால் மேலே குறிப்பிட்ட பாவ காரியங்கள் யாவும் இரகசியமாகவே நடந்து வந்தன.

எங்களுக்கு 5000 சீடர்கள் இருந்தார்கள். ஒவ்வொரு ஆண்டும் இரண்டு மூன்று மாதங்கள் சீடர்களின் வீடுகளைத் தரிசிக்க வேண்டுமென்னும் சடங்கு இருந்து வந்தது. அப்படித் தரிசிக்கும்போது சங்கு, சக்கரம் போன்ற அச்சுக்களை தீபத்தில் சூடாக்கி அவர்கள் தோள்களில் முத்திரையிடுவது வழக்கமாக இருந்து வந்தது. அங்ஙனம் சங்கு, சக்கர அடையாளங்களைத் தங்கள் தோள்களின்மேல் போட்டுக் கொண்டவர்கள் எங்களைத் தாம்பூலத் தட்டுக்களில் நிற்க வைத்து, எங்கள் கால்களைக் கழுவி, மலர்கள் தூவி எங்கள் பாதங்களில் வீழ்ந்து வணங்குவார்கள். இப்படிப்பட்ட சீடர்களின் வீடுகளைச் சந்திக்கும் பணிக்கென நான் என் இனத்தாருடன் சேர்ந்து பிரயாணம் செய்யப் புறப்பட்டேன். நான்கு நாட்கள் அவ்வண்ணமே கடந்து சென்றன.

நான்காம் நாள் இரவு நான் இதைக் குறித்து ஆழமாகச் சிந்திக்கலானேன். நான் செய்து வரும் அருவெறுப்புக்களை நினைவு கூர்ந்தேன். என்னைப் போன்ற அபாத்திரமான மனிதன், மனிதர்களால் தொழுது கொள்ளக் கொஞ்சமேனும் தகுதியற்றவன் என்பதை உணரலானேன். இது எனக்கு மிகவும் மன வேதனையைத் தந்தது. மனசாட்சியைக் கடிந்து கொண்டேன். வழக்கம் போல் மாலை வணக்கம் (சந்யா வந்தனம்) செய்யும் நேரத்தில் பாராயணம் செய்யும் சுலோகம் என் நிறைவிற்கு வந்தது. அது என்னவெனில்

''பாபோஹம் பாபகர் மஹம்
பாபாத்ம பாபசம்பவஹ
த்ராஹிமாம் க்ருபாயதேவா
சரணாகத வத்சலா''

(இது ஒரு மனிதனுடைய ஜன்ம பாவத்தைக் குறிப்பதாகும்'' மனுஸ்புருதி இரண்டாம் அதிகாரம்).

இதன் கருத்து: நான் பாவத்தில் பிறந்து பாவத்திலேயே இருக்கிறேன். பாவியாகிய நான் உன்னைத் தஞ்சம் நாடுகிறேன். நீ என்மேல் கிருபையாயிரும். அதாவது என் பாவங்களிலிருந்து என்னை விடுவித்தருளும்.

எங்கள் முற்பிதாக்களுக்கு இது தெரியாதா? ஏன் தெரியாது? அவர்கள் பாவிகளல்லரோ? ஏன் பாவிகளல்லர்? இந்தப் பகுத்தறிவில்லாத மக்களுக்கு ஏன் அவர்கள் இந்த சத்தியங்களைக் கற்றுத் தரவில்லை? ஆம், மக்களுக்குச் சத்தியத்தைப் போதித்திருந்தால் அவர்கள் இப்படிப் பாவிகளைப் பூசை செய்ய மாட்டார்கள்; விழுந்து வணங்க மாட்டார்கள் அல்லவா?

வாசகர்களே! உங்களுக்கு ஒரு சில உண்மைகளை உண்மையாய் விவரித்துச் சொல்லாமல் மறைப்பதில் எனக்குக் கொஞ்சமேனும் விருப்பமில்லை. எனவே கீழ்வரும் சில சுலோகங்களின் மூலம் மனிதர்களெல்லாம் பாவிகளென்றும், அந்தப் பாவக் கட்டுகளிலிருந்து விடுதலை பெறத் தங்கள் சொந்த தேவ தேவதைகளை வேண்டி வருவதாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

''ஜாக்ரத்ஸ்வப்னா சுசஸ்தியா வஸ்தானு ஞானதோ
ஞாதச்சா காமதோ காமதஹா சுவதஹா பரபிரேரணா
யாவாசம்பாவிதாணாம் சர்வேசாஹா பாபா நாமிமா
பனோத நார்தம் இஸ்டதேவதா ப்ரீத்யர்தம்''

அஃதாவது, எல்லா மனிதரும் தெரிந்தோ தெரியாமலோ, ஆசைப்பட்டோ, படாமலேயோ அநேக பாவங்களைச் செய்துவிட்டு, அந்தப் பாவங்களிலிருந்து இரட்சிக்க வேண்டுமென தங்கள் சொந்த தேவ தேவதைகளை வேண்டி வருகிறார்களென்று ஹேமாத்திரி ப்ராயச்சித்த காண்டத்தில், மஹாசங்கல்பத்ததில் எழுதப்பட்டிருக்கிறது. இன்னொரு புத்தகத்தில் இப்படியாக எழுதப்பட்டிருக்கிறது.

"இந்திரியானாம்- சகர்வேஷாம் யத்யேகம்ச்சாரதீம் த்ரீயாம் தேணாஸ்யாச்சாரதி ப்ரக்ஞாதுருதேஹா பாதாதீ ஓதகம்"

அதாவது தோல்பையிலுள்ள தண்ணீர்யாவும் ஒரு கட்டவிழ்த்த உடனே சிந்திப் போவதுபோல் ஐம்புலன்களில் ஏதாவது ஒன்று கெட்டுப் போகுமாகில் (விஷம் நிறைந்த தாகுமாகில்) மற்ற புலன்களும் செயலற்றுப் போகுமல்லவா? என்று மனுஸ்புருதி இரண்டாம் அதிகாரத்தில் எழுதப் பட்டிருக்கிறது.

இன்னொரு புத்தகத்தில் இப்படியாக எழுதப்பட்டிருக் கிறது.

"அவதே ஹேலோ வருணா நமோபிரவ யஞ்னேபிரீ மஹேவாவீர்பி ச்சயன்னஸ்மப்யாழசு ப்ரசேதராஜன்னே நாமச்சிரிதஹா க்ருதானி"

இதன் பொருள்: ஓ! வருண ராஜா! உன்கோபத்தைக் கையெடுத்துக் கும்பிடுவதினால் போக்கிக் கொள்கிறோம். யக்ஞத்தினாலும், யாகத்தினாலும் போக்கடித்துக் கொள் கிறோம். பாவ தோஷத்தைப் போக்கும் உன்னதமான வருண தேவரே! எங்களுக்காக இங்கு வாசம் செய்து நாங்கள் செய்த பாவங்களை நீக்கிவிடும். (இவ்வாறு ரிக் வேதம் பிரதம மண்டலம், 6வது அனுவாகம், 24 சூப்தம், 257 ருக் எழுதப்பட்டுள்ளது) இப்படி ஆரியர்கள் பிராத்தனை செய்து வந்தனர். இன்னொரு மந்திரத்தில் இப்படியாக எழுதப் பட்டிருக்கிறது.

மந்திரம்.

"பாபம் கரோதிமனுஜஸ்ததா தேவதயோபிசா
ததநாராயணோ ராஜின்னா ரஸ்சி தர்மஹா உபவ்
ஜாதவ் க்ருஷ்ணார் ஜூனே காமம்சவ் நாராயணஸ்யசவ்
புராணபீட்டிகாயம் வைமுனிபிஹி பரிகீத்திதவ்"

மனிதன் பாவம் செய்து கொண்டிருக்கிறான். அப்படியே தேவர்களும் பாவம் செய்துகொண்டிருக்கிறார்கள். தர்மனின்

குமாரர்களாகிய நாராயணன், நரன் என்னும் ரிசிஷகளும் பாவம் செய்ததினால் அவர்கள் நாராயணனிட்ட சாபத்தால் கிருஷ்ணார்ஜனராகப் பிறந்தார்கள். இது முனிவர்களால் சொல்லப்பட்ட புராணங்களில் உள்ளது என்று வியாசமகான் கூறினார். இதைக் குறித்து தெளிவான விளக்கம் தேவிபாக வதம் 6ஆம் ச்கந்தம் 10ஆம் அதிகாரத்தில் உள்ளது. எனவே மனிதர்களும் தேவர்களும் பாவிகளாய் இருப்பதினால் இவர்கள் எப்படி வணக்கத்திற்குரியவர்களாக முடியும்!

பரிசுத்த வேதாகமம் (Bible) இப்படியாகச் சொல்லுகிறது.

பாவம் செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல் அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத் தீர்ப்பிற்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்தார் (2பேது 2:4).

தேவ தூதர்களையே விட்டுவிடாத தேவன் மனிதர்களை எப்படி விட்டுவிட முடியும்? அது உண்மையாகுமானால் இந்த உலகத்தில் பார்ப்பனர்களாகிய நாங்கள் அவதார புருஷர்கள் என்று மனிதர்களை மயக்கி அவர்களால் ஆராதிக்கப்படும் இநதப் பார்ப்பனர்களுக்கு; அவதார புருஷர்களுக்கு இந்தச் சுலோகத்தின் அர்த்தம் தெரியாதா? அவர்கள் மனசாட்சி அவர்களைக் கடிந்து கொள்ளுகிறதில்லையா? என்கிற இப்படிப்பட்ட அநேக எண்ணங்களினால் தூண்டப்பட்டு வேதனைப்பட்டு இந்த மாதிரி மனித வணக்கத்தை இனி ஒருபோதும் ஏற்றுக்கொண்டு சாபத்துக்குட்படக் கூடாது என்று அந்த இரவு முடிவு செய்தேன்.

எனக்கு உபநயனம் செய்யும்போது என்னைக் காயத்ரி வாசிக்கச் செய்து பூநூல் அணிவித்த நேரத்தை நினைவு கூர்ந்தேன். யஜுர் வேதம் 36ஆம் அதிகாரம் மூன்றாம் மந்திரத்தின்படி என் ஆன்மா தட்டி எழுப்பப்பட்டு நான் மனமாறி புது பிறவியடைந்திருக்க வேண்டும். அந்தப் பூநூல் தரிக்கும் சடங்கிற்கு உண்மையாகவே வல்லமை இருக்குமேயாகில் அப்பூநூல் தரித்தபிறகு எனக்கு மனமாறுதலைத்

தந்திருக்கும். யக்ஞனம் செய்தாலும், காயத்திரி வாசித்தாலும், பூநூல் தரித்தாலும் என் அந்தரங்கத்தில் மாறுதலில்லை. எண்ணத்திலோ, சிந்தனையிலோ, செய்கையிலோ எந்தவித மாற்றமும் நிகழவில்லை. அப்படியானால் நான் எப்படி மறு பிறவியானேன். மறு பிறவி என்றால் இரண்டாவது முறை பிறப்பதல்லவா? என்னை மாற்றக்கூடிய வல்லமை இவைகளில் இல்லை என்பதை விளங்கிக் கொண்டேன். அப்படியானல் மனுஸ் புருதி இரண்டாம் அதிகாரத்தில் ''ஓ தேவா, நான் உன் தஞ்சம். என்மேல் கிருபை அருளும்'' என்கிற கூக்குரல் யாருக்குப் பொருந்தும்? பூநூலுக்கா? அல்லது யக்ஞனத்துக்கா? அல்லது தேவனுக்கா? தேவனுக்கு என்றால் யார் அந்தத் தேவன். இந்தவிதமான சிந்தனைகளுடன் அன்றிரவு தூங்கினேன்.

என் வாழ்க்கையில் ஒரு புதுத்திருப்பம்!

அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு பெரியவர்களுடன் சேர்ந்து எங்கள் தொழிலைச் செய்ய நான் அவர்களோடு சென்றேன். எங்கள் கால்களைச் சீடர்கள் கழுவ முற்பட்டபோது நான் தடுத்து நிறுத்தினேன். என்னுடன் வந்த பெரியவர்கள் காரணத்தைக் கேட்டபோது நான் மாலை வணக்கத்துக்குரிய சுலோகத்தை வாசித்து அதன் பொருளை விளக்கினேன். ''நான் பாவி. நீங்களும் பாவிகளே! எனவே நாம் இப்படி ஆராதிக்கப்பட பாத்திரமானவர் களல்லர்'' என்று சொல்லிக்கொண்டிருந்கும் போதே என் கன்னத்தில் ஓங்கி அறைந்தார் என் பெரியப்பா. இனிக் கதையில் திருப்பம் ஏற்பட்டதால் நான் வீடு வந்து சேர்ந்தேன். வேறு வழியில்லாமல் அவர்களும் என் பின்னாலேயே வந்துவிட்டார்கள். பெரியவர்கள் எல்லோரும் எனக்குப் புத்தி சொல்ல ஆரம்பித்தார்கள். உனக்கு உபநயனம் நடந்து விட்டது. எனவே நீ மறுபிறவி ஆக ''குரு தெய்வம்'' அதாவது குருவே தெய்வம் என்று பலவிதமாகப் போதனைகள் செய்யத் தொடங்கினார்கள். அப்பொழுது நான் அவர்களிடத்தில் இப்படிச் சொன்னேன். ''குருவே தெய்வம்'' என்று போதிப்பதினால் அவர்கள் குருக்களே தெய்வங்கள் என்று

நினைத்து ஆராதிக்கிறார்கள். அப்படியல்லாமல் ''தேவனே குரு'' என்று நீங்கள் போதித்திருந்தால் அவர்கள் உங்களை யல்லாமல் தேவனையே ஆராதிப்பார்கள். இன்று அவர்கள் இப்படிச் செய்வதற்குக் காரணமென்ன? நீங்களும் உங்கள் போதனைகளுமே தவிர வேறு என்ன? தேவன் தவிர வேறொரு குரு யாரும் கிடையாது என்று பலமாக நான் வாதிட்டேன்.

பரிசுத்த வேதாகமம் இப்படியாகச் சொல்லுகிறது. ''பூமியின் மேல் பிதா என்று ஒருவனையும் சொல்லாதிருங்கள். பிதா ஒருவரே! அவர் பரலோகத்தில் இருக்கிறார். நீங்கள் குருக்கள் என்று அழைக்கப்படாதிருங்கள். கிறிஸ்து ஒருவரே உங்கள் குருவாய் இருக்கிறார்'' (மத்தேயு 23:9,10). இவ்வசனம் இயேசுதாமே மக்களுக்குப் போதித்தாகப் பார்க்கிறோம்.

இவ்விதமான வாக்குவாதங்கள் நடந்தபிறகு நான் அவர் களைவிடச் சிறியவனாதலால் மௌனமாக இருக்க வேண்டிய தாயிற்று. மறுபடியும் வழக்கம்போல் இலட்சுமி நாராயண சுவாமி ஆலயத்தில் பூசாரி வேலை செய்து வந்தேன்.

ஓய்வு நேரங்களில் வேதங்கள், உபநிஷதங்கள், போன்ற இன்னும் பல புத்தகங்களையும் வாசித்து வந்தேன். நாட்கள் பல கடந்து சென்றன. பிறகு ஒரு நாள் பாவ பரிகாரம் எப்படிக் கிடைக்கும் என்கிற எண்ணம் எனக்குள் வந்தது. ஏனென்றால் பாவத்தின் விளைவைக் குறித்து நான் இப்படிச் சிந்திக்க லானேன்.

''அவஸ்யம் அனுபோக்தவ்யம் க்ருதம் கர்ம சுபாசுபம்''

அதவாது நல்லது செய்தால் நல்லதையே அனுவிப்பாய். கெட்டது செய்தால் கெட்டதையே அனுபவிப்பாய். இதிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. ஆம் தேவன் ஒருவரே ஆராதனைக்குரியவர். தேவனுடைய இடத்தில் நான் நின்று ஆராதனைகள் ஏற்றுக்கொண்டேன். எனவே தேவ கோபாக்கினை என்மேல் இருக்கிறது. பாவம் செய்தேன். அதன் பலனை அனுபவிக்காமல் இருக்க முடியாது.

இதிலிருந்து விடுதலை பெறுவது எப்படி என்கிற எண்ணமும் பயமும் என்னைப் பற்றிக் கொண்டதால் பாவ பரிகாரம் செய்யும் வழியைத் தேடலானேன்.

பரிசுத்த வேதாகமம் (Bible) இப்படியாகச் சொல்லுகிறது:

''உன் நடக்கையும் உன் கிரியைகளுமே இவைகளை உனக்கு நேரிடப்பண்ணின'' (எரேமியா 4:18).

இது உனக்குக் கசப்பாகத் தெரிகிறதல்லவா? உன் இதயத்தை தெரிவிக்கிறதல்லவா?

''நீதியைத் தேடுகிறவனுமில்லை. சத்தியத்தின்படி வழக்காடுகிறவனுமில்லை; மாயையை நம்பி அபத்த மானதைப் பேசுகிறார்கள். தீமையைக் கர்ப்பம் தரித்து அக்கிரமத்தைப் பெறுகிறார்கள்'' (ஏசாயா. 59:4).

அவைகளின் நெசவுகள் வஸ்திரங்களுக்கேற்றவைகள் அல்ல. தங்கள் கிரியைகளாலே தங்களை மூடிக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் கிரியைகள் அக்கிரமக்கிரியைகள். கொடுமையான செய்கை அவர்கள் கைகளிலிருக்கிறது.

அவர்கள் கால்கள் பொல்லாப்புச் செய்ய ஓடி, குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தத் தீவிரிக்கிறது. அவர்கள் நினைவுகள் அக்கிரம நினைவுகள். பாழ்க்கடிப்பும், அழிவும் அவர்கள் வழிகளிலிருக்கிறது ஏசாயா. 59:6,7ஆம் வசனங்கள். பாவ மன்னிப்பு பெற்றுக் கொள்வதெப்படி என்கிற எண்ணத்துடன் அதைத் தெரிந்து கொள்வதற்காக வேண்டி அநேக புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்தேன்.

அப்படிப்பட்ட வேளையில்தான் பசித்தவனுக்கு ஆகாரமும் தண்ணீரும் கிடைத்ததுபோல சாம வேதத்தில் நான் ஒரு சுலோசத்தைக் கண்டுகொண்டேன்.

இயேசு இப்படிச் சொன்னார்.

கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும் (மத்தேயு 7:7).

நான் தேடிக் கொண்டிருந்தேன். எனவே எனக்குக் கிடைத்தது.

வேதம் எல்லா மதப் புத்தகங்களுக்கும் தத்துவங்களும் ஆதாரமென்று மக்கள் அழுத்தம் திருத்தமாகச் சொல்லி வருகிறார்கள். சாம வேதத்திலுள்ள மந்திரம்.

''லிஹ்வ்யா கோப்தாராம் மஹக்யவ் ததினா கொரியன்த்தி ஹவ்யாயான பரியதாசீன்''

இதன் அர்த்தம். அவதாரம் எடுக்கப் போகிறவர் கன்னியின் வயிற்றில் பசுத் தொட்டியில் பிறப்பார். அதாவது பிறக்கிறவர் அவதார புருஷர் என்று சாம வேதம் சாட்சி கொடுக்கிறது.

சாம வேதத்தில் எழுதப்பட்ட இந்த அவதார புருஷர் யார்? இந்த விதமான அவதாரத்தைக் குறித்து இந்து புராணங்களின் படி ஆராய்ந்து பார்த்தேன். தசவதாரங்களில் அதாவது, பத்து அவதாரங்களில் எந்த ஒரு அவதாரமும் கன்னியின் வயிற்றில் பசுத் தொட்டியில் பிறக்கவில்லையே? ஆனால் ஒரு உண்மை தெரிகிறது. இந்து புராணங்களில் சில கன்னிகள் கலியாணமாகாமலிருந்தும் கர்ப்பம் தரித்து பிள்ளைகளைப் பெற்றெடுத்தார்கள். ஆனால் அந்தப் பிள்ளைகள் அவதாரப் புருஷர்களின் எண்ணிக்கையில் சேர்க்கப்படவில்லை. ஏனென்றால் பிறப்பும் அவதாரமும் வித்தியாசமானவை. பிறப்பு சாதாரணமானது. அவதாரம் என்பது உலக மீட்புக்காக தேவன்தாமே மனித வடிவத்தில் உலகத்திற்கு வருவது. இந்து புராணங்களில் கன்னியின் வயிற்றில் பிறந்ததாகக் குறிப்பிடும் எந்தப் பிள்ளையும் பசுந்தொழுவதத்தில் பிறக்கவில்லை. எனவே சாம வேதத்தில் சொல்லப்பட்ட இந்தச் சுலோகம் அவர்களுக்குப் பொருந்தாது. அவர்கள் வரலாறு நமக்கு எதற்கு? ஆனால் அவ்வாறு பிறந்த அவதார புருஷர் யாராக இருக்க முடியும்? அவரின் மூலமாக உலகத்திற்கு உண்டான மீட்பு எப்படிப்பட்டது? இவர் எந்தத் தேசத்தில் அவதரித்தார். அந்த அவதாரம் மறைத்து வைக்கப்பட்டதா? இப்படிப் பல்வேறு எண்ணங்களில் நான் அலைகழிக்கப்பட்டேன். இப்படி அவதாரமெடுத்த உத்தமர், சத்தியர், தேவ ஆவியில்

நிறைந்த பரிசுத்தர், மாபெரும் உன்னதமானவர் யாராக இருக்க முடியும்? நான் விஷயத்தைத் தேடிக் கண்டுகொள்ளும் பணியில் அதிகமான ஈடுபட ஆரம்பித்தேன். அதோடு பாவ பரிகாரத்தைக் குறித்தும் தெரிந்துகொள்ள முயற்சித்து வந்தேன். பிரியமான வாசகர்களே! உங்களுக்கு இந்தவித அவதாரத்தைக் குறித்துத் தெரியுமா?

எனவே தேவன்தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் காண்பிப்பார். ''கேளுங்கள். இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாக ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவாயாக. அதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தம்'' என்று ஏசாயா தீர்க்கதரிசி 730 ஆண்டுகளுக்கு முன்பே பரிசுத்தாவியினால் பிறக்கப் போகும் இயேசு கிறிஸ்துவின் அவதாரத்தைக் குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்ததாகப் பரிசுத்த வேதாகமம் கூறுகிறது.

ஒருநாள் நான் சாம வேதத்தில் எழுதப்பட்ட வசனங்களை வாசித்து அதன் அர்த்தமென்ன? இதில் குறிப்பிட்டிருக்கிற (இம்மானுவேல்) அவதார புருஷர் யார்? என்பதைத் தெரிந்து கொள்ள என் மூதாதியரைக் கேட்டேன். ஏன் என்றால் அந்த நேரத்தில் என்னிடம் வேதாகமம் கிடையாது. வேதாகம உண்மைகளை அறியேன். சாம வேதத்திலுள்ள அவதார புருஷரின் பிறப்பு வேதாகமத்தில் இருப்பதாக இதற்கு முன்பே நான் குறிப்பிட்டவிதமாக அப்பொழுது எனக்கு இதைக் குறித்துத் தெரியாது.

எங்கள் மூதாதியரை இந்த விஷயத்தைக் குறித்து வினவியபோது அவர்கள் பயங்கர எரிச்சலடைந்து ''நாங்கள் உன்னிடத்தில் சொல்லுவதொன்று. நீ செய்வது வேறொன்று. நம்முடைய தொழில் சம்பந்தமான புத்தகங்களைக் கொடுத்து வாசிக்கச் சொன்னோம். தினமும் பாராயனம் செய்யும் படியாக இன்னொரு புத்தகத்தையும் கொடுத்தோம். நீயோ இவைகளை விட்டுவிட்டு, உனக்கு விருப்பமான புத்தகங் களைப் படித்து உன் வாழ்க்கையைக் கெடுத்துகொண்டு இருக்கிறாய். அவதாரங்களை குறித்து தெரிந்துகொண்டு நீ

என்ன செய்யப் போகிறாய். அவைகளினால் உன் பிழைப்பு சாயுமோ?'' இப்படிப் பலவிதமாகப் பேசி என்னை வீட்டைவிட்டு விரட்டி விடுவதாகப் பயமுறுத்தினார்கள். நான் சிறுவனாக இருந்ததினால் அவர்கள் சொல்வதைக் கேட்டு பயந்து போனேன். இருப்பினும் என்னுடைய சிந்தனைகள் என்னை விட்டபாடில்லை. சத்திய மார்க்கத்தைக் கண்டு பிடிக்க என்னை ஏவிக் கொண்டிருந்தது. எனக்குள் ஒரு ஏக்கம், ஒரு உந்துதல் ஆவி இயக்கிக் கொண்டே இருந்தது. எனக்கோ வழி நடத்தக் கூடியவரோ, போதகரோ, அல்லது வழிகாட்டியோ யாருமே அந்த நேரத்தில் கிடையாது. எனவே நான் இவர்களைக் கேட்பதைக் காட்டிலும் இலட்சுமி சுவாமி ஆலயத்திலுள்ள ஓலைச் சுவடிகளையும், புத்தகங்களையும் இரகசியமாக வாசித்தால் எனக்கு ஏதாவது வழி பிறக்காமல் போகாதா? என்று தீர்மானித்து, அந்த கருத்தோடு 7-1/2 ஆண்டுகள் நான் பல்வேறு ஓலை சுவடிகளையும், புத்தகங்களையும் வாசிக்கலானேன்.

இலட்சுமி நாராயண சுவாமி மடத்தில் யக்ஞம் செய்ய வேண்டுமாய் பட்டணத்து மக்களும் கிராமத்து மக்களும், நிச்சயத்து இருந்தார்கள். காரணம் அந்த ஆண்டு மழையில் லாததால் ஆறுகள், ஏரிகள், கிணறுகள் எல்லாம் வற்றிப் போயின. குடிப்பதற்குக்கூட தண்ணீர் கிடையாது. இந்த யக்ஞம் செய்வதால் மழை பெய்யும் என்பதாக அவர்கள் நம்பி இருந்தார்கள். எனவே அவர்கள் கொஞ்சம் காசு சேர்த்துத் தந்து ஐந்து நாட்கள யக்ஞம் செய்யும்படி என்னைக் கேட்டுக் கொண்டார்கள். இந்தக் காரணத்தினால் என்னோடு மூன்று பேரைக் கூட்டிக் கொண்டு பட்டணத்திற்குச் சென்று யக்ஞத் திற்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொண்டிருந் தேன்.

அந்த வேளையில்தான் ஒலிபெருக்கியின் வழியாக ஆண்களும் பெண்களும் சேர்ந்து பாடும் ஒரு பாட்டு என் காதில் விழுந்தது.

''கன்னியின் கருவில் தோன்றி பசுந்தொழுவத்தில் பிறந்து மனித அவதாரமெடுத்து பாவம் போக்க வந்த இரட்சகர் நீரல்லவா? சிலுவை யக்ஞத்தில் சிந்திய உன் இரத்தம் பாவிக்குப் பாவ பரிகாரமல்லவா?''

இந்த வார்த்தை என் காதில் விழுந்தவுடனே கடைக் காரரைப் பார்த்து, ஐயா, இதோ இந்தச் சாமான் பட்டியலில் உள்ளவாறு சாமான்களைக் கட்டி இந்த ஆட்களிடம் கொடுத்துவிடுங்கள் என்றேன். என்னோடு வந்தவர்களைப் பார்த்து இந்தச் சாமான்களை வாங்கிக் கொண்டு இங்கேயே இருங்கள்'' என்று சொல்லிவிட்டு பாட்டு சத்தம் கேட்ட திசையை நோக்கி நடக்கலானேன். அங்குப் போய் பார்த்த போது அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று தெரிந்து கொண்டேன். ''இந்தக் கீழ்ச்சாதி மக்களோடே எனக்கென்ன வேலை'' என்று உடனே திரும்பிப்போக ஆரம்பித்தேன். இதற்கிடையில் எனக்குள் ஒரு எண்ணம் ''இவர்கள் யாராயினும் நமக்கென்ன? இவர்கள் மதத்தைக் குறித்தும் ஜாதியைக் குறித்தும் நமக்கென்ன? கடந்த 7- 1/2 ஆண்டு காலமாகக் கன்னியின் கருவில் மனுவாய் பிறந்த அவதாரப் புருஷரைக் குறித்து ஆராய்ந்து வருகிறோம். அதற்குப் புத்தகம் ஏதாகிலும் கிடைக்குமா என்றும் தேடி வருகிறோம். ஆனால் இப்பொழுதான் அதற்கு வழி பிறந்தது. இவர்கள் யாவரும் சேர்ந்து பாடிய பாட்டு அந்த அவதாரப் புருஷரைக் குறித்ததே. அதில் சந்தேகமேதுமில்லை. இவர்கள் நடுவில் வெள்ளை யங்கி தரித்து நிற்பவர் ஒருவேளை இவர்கள் மதபோதகராக இருக்கலாம். நாம் அவருடன் கலந்து ஆலோசித்தால் அந்தப் பாட்டை எழுதியவரின் பெயரும் ஒருவேளை நமக்குத் தெரியப்படுத்துவார். அந்த அவதாரப் புருஷரைக் குறித்து இவர்கள் பாடுவதினால் அந்தப் புத்தகம் அதாவது சாம வேதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற அவதாரப் புருஷரைப் பற்றிய புத்தகம் கிடைக்கும் இடத்தின் விவரங்களையும் இவர்கள் தெரிவிக்கக்கூடும்'' என்று பலவாறு எனக்குள் சிந்தித்துக்கொண்டு மீண்டும் அந்த மக்களிடம் திரும்பிப் போனேன். அப்பொழுது அந்த வெள்ளை அங்கி தரித்தவர்,

''இயேசு ஒருவரே தெய்வம்'' அவரே உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி. அவரில் விசுவாசம் வைத்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுகிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். நரகத்திற்குப் போகாமல் காக்கப்படுவார்கள். இல்லையேல் அழிந்து போவார்கள். (பரலோகத்திற்குப் போக மாட்டார்கள்)

மனிதர்களைத் தங்கள் பாவங்களிலிருந்து விடுவிக்க இந்த இயேசுதாமே தன் சொந்த இரத்தத்தைச் சிலுவை யக்ஞத்தில் பலியாகச் செலுத்தினார். எனென்றால் இரத்தம் சிந்து தலில்லாமல் பாவ மன்னிப்பு கிடையாது. இவரே அந்தப் பாவிகளை இரட்கிறவர். இவரே தேவகுமாரன். இவரே மனித குமாரன். (தேவன் மனித அவதாரமாய் கன்னியின் கருவில் பசுக்கொட்டிலில் பிறந்து அவதாரமெடுத்தார். பாவத்திலிருந்து விடுதலைபெற இவரே வழி. இவரையன்றி வேறே வழியில்லை. இவரே சத்தியம். வேறொரு சத்தியமில்லை. இவர் நித்திய ஜீவனுள்ள தேவன். இவரிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவர்கள் நித்திய ஜீவனைப் பெறுவார்கள் (நித்திய மரணத்தைக் காணாத வர்கள்). இவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்'' இப்படிப்பட்ட அநேக செய்திகைளத் தன் கையிலுள்ள வேதாகமத்தை வைத்துக்கொண்டு அரை மணி நேரம் பிரசங்கித்தார். நான் அருகில் நின்று அனைத்தையும் கேட்டேன். அதற்குப் பிறகு எனக்குள் நானே சொல்லிக் கொண்டேன். இயேசுவாம், சத்தியமாம், ஜீவனும் வழியாம், ஒளியாம் இவரே தேவனாம். வேறொரு தேவனும் கிடையாதாம். இவருக்கென்னவோ பைத்தியம் பிடித்திருக் கிறது போலிருக்கிறது. இருப்பினும் இந்தக் கீழ்ச்சாதி தேவனோடே நமக்கென்ன வேலை. நாம் வந்த வேலையை முடித்துக் கொண்டு போவோம்'' என்று தீர்மானித்து அவருடன் கலந்து பேச ஆரம்பித்தேன்.

நான் : ஐயா, உங்கள் பெயரென்ன?

போதகர் : என்னை பாஸ்டர் என்று சொல்லுவார்கள்.

நான் : ஐயா, பாஸ்டர் அவர்களே! எப்பொழுதாவது வேதங்களை வாசித்ததுண்டா?

மௌனம்

நான் : சரிபோகட்டும், சாம வேதத்தையாகிலும் வாசித்ததுண்டா?

போதகர் : வேதங்களைக் குறித்து எங்களுக்குக் கவலை யில்லை. எல்லா வேதங்களுக்கும் மேலான வேதம் இதோ என் கையிலிருக்கிறது. இதைத்தான் பைபிள் என்பார்கள்.

நான் : சாம வேதம் படிக்காமலேயே அதில் எழுதி யிருக்கும் அவதாரப் புருஷரைக் குறித்துப் பிறப்பு சம்பந்தமான பாடலை நீங்கள் எப்படிப் பாடினீர்கள்?

போதகர் : என்னது. கிறிஸ்துவின் பிறப்பு சாம வேதத்தி லிருக்கிறதா? எவ்வளவு ஆச்சரியம். அதனால் தான் போலும் அவருக்கு (கிறிஸ்துவுக்கு) அதிசயமானவர் என்று ஏசாயா பெயரிட்டார். ஐயா, உங்கள் பெயரென்ன?

நான் : பரவஸ்து சூரிய நாராயணராவ். சுருக்கமாகப் பரவஸ்து என்பார்கள்.

போதகர் : நீங்கள் பரவஸ்து சின்னய்ய சூரி அவர்களின் பரம்பரையைச் சேர்ந்தவரா?

நான் : ஆம்.

போதகர் : அப்படியானால் நீங்கள் புலமை வாய்ந்த வராய் இருப்பீரே!

நான் : புலவரல்ல. புலவர் பரம்பரையில் பிறந்தவன்.

போதகர் : நீங்கள் வேதங்களை கற்றதுண்டா?

நான் : நன்றாக.

போதகர் : உங்களுக்கு என்ன தேவை?

நான் : நீங்கள் பிரசங்கித்த அந்தக் கிறிஸ்துவை போன்ற பிறப்பைக் குறித்துச் சாம வேதத்திலிருக்கிறது. அவர் ஒரு அவதார புருஷர். அவர் எந்த யுகத்தில் தோன்றினார்? அவர் உலகத்திற்குச் செய்த மீட்பு என்ன? இப்படிப்பட்ட சில விவரங் களைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகின் றேன். எனவே, அவரைக் குறித்த விவரங் களைக் கொடுக்கும் புத்தகமும், அது கிடைக்கக் கூடிய இடத்தையும், இன்னும் அதற்குச் சம்பந்தமான புத்தகங்கள் இருக்குமாகில் அதையும் நீங்கள் எனக்கு தெரியப்படுத்து வீர்கள் என்று நான் உங்களிடம் வந்தேன்.

இங்ஙனம் நான் பேசிக்கொண்டிருக்கும் போதே அவர்களுடைய ஆட்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு ஆச்சரியமாகப் பார்க்க ஆரம்பித்தனர். காரணம் என் நெற்றியில் நாமம்: தலை முன்பாக சின்ன குடுமி, முழங்கால் வரை பஞ்சகட்சம், தோள்மேல் தொங்கும் ஒரு துண்டு, மார்பில் பூநூல், இரண்டு தோள்பட்டையின் மேலும் நாமங்கள், இந்த என் கோலம்தான் அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்க வேண்டும். ''நீங்கள் சாம வேதத்தில் வாசித்தது இந்த இயேசு கிறிஸ்துவை குறித்ததே. இதில் சந்தேகமே வேண்டாம்'' என்று அவர்கள் சொன்னார்கள். உங்களுக்குத் தேவையான விவரங்களை இந்த வேதாகமத்தில் பார்க்க முடியும். உங்களுக்குத் தேவையானால் இலவசமாக இந்த வேதாகமத்தை (BiBle) கொடுக்கிறோம். இன்னும் நீங்கள் வேதத்தில் கண்டது என்ன? என்று பாஸ்டர் என்னை வினவினார்.

''அவர் உண்மையான கிறிஸ்துவாக இருப்பாரானால், அவர் பிறப்பு, இரத்தம் சிந்துதல், யக்ஞம், பாவத்திலிருந்து விடுதலை போன்ற காரியங்கள், நீங்கள் இதுவரை செய்த பிரசங்கத்தில் குறிப்பிட்ட யாவையும் நான் கண்டு கொண்டேன்'' என்றேன்.

அவர்கள் யாவரும் இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, பரவசமடைந்து தங்கள் தேவனை துதித்துக் கொண்டிருக்க, அந்த வெள்ளையங்கி தரித்தவர் ஒரு புதிய வேதாகமத்தை எனக்கு வெகுமதியாக வழங்கினார். ''பரவஸ்து அவர்களே! கண்களை மூடுங்கள் உங்களுக்காக ஜெபம் செய்யப் போகிறோம்'' என்றார் பாஸ்டர்.

''சரி, நீங்கள் ஜெபம் செய்யுங்கள்'' என்று நான் சொன்னேன். ஆனால் என் கண்களை மட்டும் நான் மூடவில்லை.

அந்தப் பாஸ்டர் கண்களை மூடி கண்ணீரோடு ''ஆண்டவரே! இந்தப் பரவஸ்து அவர்கள் தன்னை அறியாமலேயே உம்மைத் தேடிவருகிறார். தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர்கள் என்று சொல்லப்பட்ட வண்ணமாக நீர் இவருக்குக் கிடைத்திருக்கிறீர். உம்முடைய ஆவியின் வழி நடத்துதல் இவருக்குத் தந்தருளும். உம்முடைய சத்தத்தைக் கேட்கச்செய்தருளும். உம்முடைய ஆவியினால் அபிஷேகித்து உம்முடைய கனமான ஊழியத்தில் உபயோகப்படுத்திக் கொள்ளும். புற ஜாதியான மக்களுக்குப் பிரயோஜனமாக இருக்கும்படி ஆசீர்வதித்தருளும். உம்மை அறியாத மக்களுக்கு வழிகாட்டியாகச் செய்தருளும்'' என்று ஜெபம் செய்தார். அவர் ஜெபிக்கும்போது நானும் அவர்களோடு ஒன்று சேர்ந்தேன். அதன் பிறகு அவர்களிமிருந்து விடை பெற்றுத் திரும்பி வந்தேன்.

மிக ஜாக்கிரையுடன் அந்த வேதாகமத்தை மறைத்துக் கொண்டு அந்த யக்ஞ சாமான்களைச் சுமப்பவர்களையும் அழைத்துக் கொண்டு வீடு சேர்ந்தேன்.

அன்று இரவு இலட்சுமி நாராயண சுவாமி ஆலயத்தில் இரகசியமாக வாசிக்கத் தொடங்கினேன். 2 1/2 ஆண்டுகளில் மூன்று முறை வேதாகமத்தைப் படித்து முடித்தேன். ஏசாயாவின் புத்தகம் விளங்காததினால் எட்டுமுறை வாசித்தேன். எங்கள் புத்தகங்களை வாசித்து வரும்போது இன்னும் ஏதோ ஒன்று வாசிக்க வேண்டும் என்று நினைக்கத் தோன்றும். ஆனால் வேதாகமம் வாசிக்கும்போது "நான் ஒரு பாவி. தேவகோபாக்கினை என்மேல் இருக்கிறது. நான் சபிக்கப்பட்டவன். நான் நரகத்திற்குச் செல்ல பாத்திரன். தண்டனைக்குரியவன். இருப்பினும் தேவனுடைய இலவச கிருபை இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பினால் கிடைக்கக் கூடியதாக இருக்கிறது. எனவே நான் இனி பாவம் செய்யக் கூடாது" என்ற விஷயங்களை அறிந்து கொண்டேன். தேவ பயம் என்னைப் பற்றிக் கொண்டது. என் இருதயத்தில் மாறுதல் ஏற்பட்டது. தேவனுக்கு தோத்திரம் உண்டாவதாக!

திராவிட யுகத்தினர் இப்படியாகச் சொல்லுகிறார்கள். "யஞ்னோப் அபதி" அதவாது "யக்ஞமே இரட்சிக்கும்" இரட்சிப்பு என்பது அழிவு இல்லாமல் வராது. அழிவு எங்கு இருக்கிறதோ அங்க இரட்சிப்பு கண்டிப்பாக வந்தாகும். அழிவை உண்டு பண்ணுகிறவர்கள் துன்மார்க்கமான எண்ணங்களை உடையவர்களாக இருப்பார்கள். இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டுமானால் தேவனுடைய கிரியைகளை அழிக்கும்படியான பாவச் சுபாவமுள்ள மக்களென்று சொல்லக்கூடும். இப்படிப்பட்ட மக்கள் அழிந்து போவது தேவனுக்கு எள்ளளவேனும் விருப்பமில்லை. அப்படிப்பட்ட மக்களை இரட்சிக்க தேவன்தாமே ஒரு வழியை ஆயத்தம் செய்திருக்கிறார். அந்த வழிதான் "யக்ஞம்" அதனால்தான் திராவிடர் "யக்னோவா அபகே" என்றார்கள். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்கிற காரியம் என்னவென்றால் ஒவ்வொரு பாவியும் இரட்சிப்படைய வேண்டுமென்பதே. அதற்குப் பிறகு ஆரியர்கள், மனிதர்களில் பாவம் செய்யாதவர்கள் இல்லை.

எனவே அந்தப் பாவ மனிதன் செய்கிற ''யக்ஞமானது'' பாவமாகவே இருக்கும். மனிதனை இரட்சிக்காது என்றார்கள். குருடனுக்குக் குருடன் வழி காட்ட முடியாதது போல், பாவிகள் செய்யும் யக்ஞம் அவர்கள் பாவங்களை எந்த விதத்திலும் போக்க முடியாது. எனவே, அஹம் தானாக ய்கஞமானால்தான், பலியானால்தான் இரட்சிப்பு உண்டாகும். அதைத்தவிர வேறொரு வழியில்லை. அஹம் என்னும் வார்த்தையின் அர்த்தமாவது தேவன் என்பது. இந்த ''அஹம்'', ''ஓம்'' என்ற வார்த்தையில் இருந்து வந்தது. ஓம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்னவென்றால் சப்தம், வாக்கியம். அந்த வாக்கியம் உச்சரிக்கும்பொழுது சப்தமாகிறது. இதையே பரிசுத்த வேதாகமத்தில், யோவான் சுவிசேஷம், முதல் அத்தியாயம் துவக்கத்தில் இவ்விதமாக எழுதப்பட்டிருக்கிறது. ''ஆதியில் வார்த்தையிருந்தது. வார்த்தை தேவனோடு இருந்தது. அந்த வார்த்தையே தேவனாயிருந்தது. அந்த வார்த்தையே பேசுகிறார்.'' ஆகவே தேவன் மோசேயுடன் இவ்விதமாக சொன்னார். நான் இருக்கிறவராகவே இருக்கிறேன். இருக்கிறவராகவே இருக்கிறவர், பேசுபவராக இருக்கிறார். பேசுபவரே வார்த்தையாகவும், சப்தமாகவும் இருக்கிறார்.

இப்பொழுது என்னில் புதிய மாற்றம் ஏற்பட்டது. இயேசு கிறிஸ்துவின் ஆவி எனக்குள் பிரவேசித்து என்னுடைய எண்ணங்களைப் புதுப்பிக்க ஆரம்பித்தது. என் செய்கையில் மாற்றம்; என் சிந்தனையில் மாற்றம்; என் தீர்மானம், நோக்கங்களில் மாற்றம் ஏற்பட்டு நான் பரிசுத்தமான தேவ பயத்துடன் ஜீவிக்க கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். அதனால் அந்த பரிசுத்தமுள்ள உன்னதமான தேவனுடைய நாமத்திற்கு மகிமையும் கனமும் உண்டாவதாக.

அன்பான வாசகர்களே! இயேசு கிறிஸ்துவைக் குறித்து வாசித்தவுடனே அல்லது கேட்டவுடனே விசுவாச முன்டாகும். அந்த உறுதியான விசுவாசம் எனக்குக்கூட உண்டானதென்று சொல்ல வாஞ்சிக்கிறேன். ஆஹா!

எப்பேர்பட்ட தேவனிவர். எவ்வளவு அன்புள்ள தேவனிவர். பாவிகளைப் பாவத்திலிருந்து இரட்சிக்க, பரலோகத்தைக் கொடுக்க, நித்திய நரகத்திலிருந்து தப்புவிக்கச் செய்து நித்திய ஜீவனைப் பெற்ற பாவியை எவ்வளவாய் நேசிக்கிறார். இந்த அன்பின் தேவனுக்கு, அப்படிப்பட்ட ஈவும் இரக்கமுள்ள தேவனுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகிமையின் சரீரத்தையும், மகிமை இராஜ்ஜியத்தையும், மகிமையின் சிங்காசனத்தையும் தன்னுடைய ஆவியின் சொரூபத்தையும் பாவிகளை இரட்சிக்கும்படி விட்டுவிட்டு மனித கோலமாக விண்ணுலகை விட்டு மண்ணுலக்கு வந்து பாவிகளின் பாவங்களைத் தன் சொந்த இரத்தத்தினால் கழுவி சுத்திகரித்து, விடுதலையளிக்கும்படியாகச் சிலுவையில் பலியான அந்த இரட்சகப் பெருமானை என் ஆத்துமாவே என்முழு உள்ளமே அவரைத் துதித்துப் போற்றுவாயாக என்று நான் என் மனதை வேண்டிக் கொண்டேன்.

அன்பான வாசகர்களே! நான் கண்டுகொண்ட வெளிப் படையான சத்தியத்தை நீங்களும் தெரிந்துகொள்ள வேண்டு மென்ற அளவில்லா ஆனந்தத்துடன் இதை நீங்கள் எந்த விதத்திலும் தர்க்க வாதமாக எடுத்துக் கொள்ளக் கூடாதென வேண்டிக் கொள்கிறேன். ஏனென்றால் யாரையும் எந்த விஷயத்திலும் தர்க்கிக்கவோ, தூஷிக்கவோ எனக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது.

பகவத் கீதை ஞானயோகம் 4,8இல் இப்படியாகச் சொல்லப்பட்டிருக்கிறது

"பரித்ராணயா சாதுநாம்

வினாசாயா சதுஷ்க்ருதாம்

தர்ம சம் ஸ்தாபணார்தாயா

சம்பவாமி யுகே யுகே"

இதன் அர்த்தம் என்னவென்றால் சாது ஜனங்களுக்கு விடுதலையளிக்க துன்மார்க்கரை அதாவது பாவிகளை

அழித்து நீதியை நிலைநாட்ட யுகா யுகங்களில் நான் அவதரிக்கிறேன் என்பதாகும்.

வேதங்களிலுள்ள வாக்கியங்கள் நிறைவேற்றப்படுவதற் காக வேண்டி தேவன்தாமே மனித அவதாரமெடுத்து அதை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. இந்த வேத வாக்கியங் களை நிறைவேற்றவே மனித அவதாரமாகக் குமாரன் உலகத்தில் வந்தாரேயல்லாமல் அதை அழிப்பதற்காக அல்ல. வேதங்களுக்கு விரோதமாக ஏதாவது சொல்லப்படு மானால் அது தேவனுடைய வார்த்தைகலாகாதென்பதை, நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களென்று நான் நம்புகிறேன்.

அநேக பக்தர்கள் அநேக கருத்துக்களைத் தெரிவிக் கிறார்கள். ஆனால் நான் சொல்லக் கூடியது என்னவென்றால் யஜுர் வேதம் 36ஆம் அதிகாரம் 3ஆம் மந்திரம் பிரகாரமாகத் தேவன் ஓங்காரவடிவானவர். ஓம் என்ற வார்த்தைக்குப் பலவிதமான மொழிகளைப் பேசுகிறவர்கள், பல நாடுகளைச் சேர்ந்தவர்கள், அவர்கள் சொந்த எழுத்துக்களில், அவர்கள் தெரிந்துகொண்ட எழுத்துக்களில் ஓம் இப்படி இருக்கும் என்று எழுதுகிறார்கள். ஒவ்வொரு மொழிக்கும் ஒரு வயதுண்டு அதே விதமாக ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு வயதுண்டு. ஆனால் ஓம்கார வடிவத்திற்கு மாத்திரம் வயது வரம்பு கிடையாது. So God is not limited to any literature nor He is limited to any language. எனவே யஜுர் வேதம் *36:3*இல் ஓம்கார வடிவத்திற்கு தற்சொரூபம் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. அதாவது அவர் தனக்குத் தானாகவே இருக்கிறவர் என்று அர்த்தம். God is self Existing God.

ஓம்கார வடிவத்திற்குக் காணக் கூடாதவர் என்றும் சொல்லலாம். ஏனென்றால் எந்த மனிதனும் தேவனைப் பார்த்தது கிடையாது. மனிதனோடு தேவன் பேச நேரிடும் போது அந்த மனிதனுடைய அறிவு ஞானத்திற்கேற்ற உருவம் கொண்டு தரிசனம் கொடுத்து அவனோடு பேசுவார். இந்தக் காரணத்தினால் ஒரு சில பக்தர்கள் சில வேளைகளில் தேவனைத் தரிசித்தததாக எழுதியிருக்கிறார்கள். ஆனால்

தேவனுக்கு அத்தனை உருவங்கள் கிடையாது. நான் கவனித்ததென்ன வென்றால் ஓம் என்னும் வார்த்தையே தேவன். அந்த வார்த்தை மாமிசமாகி கிருபையினாலும், சத்தியத்தினாலும், நிறைந்தவராய் நம் மத்தியில் வாசம் செய்யக் கன்னியின் கருவில் பசுக் தொட்டிலில் பாலனாய் பிறந்தாரென்று சாம வேததத்தில் நாம் இதற்கு முன்பே கற்று இருந்தோம்.

சாம வேதத்தின் இரண்டாம் பகுதியாகிய தாண்டீய மகா பிராமாணத்தில் இன்னொரு மந்திரம் இப்படியாக எழுதப் பட்டிருக்கிறது.

மந்திரம் : "பிரஜாபதிர்தே வேப்யம்
ஆத்மாநாம் யக்ஞம்
க்ருத்வா பிராயச்சித்"

இதன் கருத்தாவது "ஜனங்களை ஆளுகிறவர் ஜனங்களின் பாவம் போக்கும்படியாகத்தன் சொந்த சரீரத்தையே பிராயச் சித்த பலியாக ஒப்புக்கொடுத்து யக்ஞம் செய்வார். "பிரஜாபதி" என்றால் சிருஷ்டி கர்த்தராகிய தேவன் என்று அர்த்தம். அதனால்தான் ஆரியர்கள் "அஹம்" அதாவது பரித்தமான சிருஷ்டி கர்த்தாவாகிய தேவன் யக்ஞமானால் தான் இரட்சிப்பு உண்டாகும் என்றார்கள். அதே தாண்டீய மகா பிரமாணத்தில் இன்னொரு மந்திரம் இப்படியாகச் சொல்லு கிறது.

"சர்வ பாபபரிஹாரோ
ரக்த புரோக்ஷன மவஸ்யகம்
தத் ரக்தம் பரமாத்மேனா
புண்யதான பலியாகம்"

அதே தாண்டீய மகா பிரமாணத்தில் இன்னொரு மந்திரம் இப்படியாகச் சொல்லுகிறது. சர்வ பாவங்களும் அதாவது எல்லாப் பாவங்களும் செவியினால் கேட்கும் பாவம், வாயினால் பேசுகின்ற பாவம், கண்களினால் காண்கின்ற

பாவம், இருதயத்தில் தோன்றும் பாவ எண்ணங்கள், மனதில் (தலையில்) தோன்றும் பாவ சிந்தனைகள் பாவக் கிரியைகள் ஆகிய இவை எல்லாவற்றிலிருந்தும் விடுதலை வேண்டு மானால், இரட்சிக்கப்பட வேண்டுமானால், இரத்தம் சிந்தப் படுவது அவசியம். இரத்தம் சிந்துதலில்லாமல் பாவத்தி லிருந்து விடுதலை கிடையாது. அதன்படி பார்க்கும்போது துன்மார்க்கன் இரட்சிக்கப்படவேண்டுமென்று வேதங்கள் கூவிக் கொண்டிருக்கின்றன. ஆனால் பகவத் கீதை ஞானயோகம் 4:8இல் துன்மார்க்கன் அழிக்கப்பட வேண்டு மென்று கிருஷணர் போதிக்கிறார். இது வேதவாக்கியங் களுக்கு விரோதமானதல்லவா. சம்பூரண மகாபாரதத்தில்கூட இப்படி எழுதப்பட்டிருக்கிறது.

"இரத்த புரோட்சனம்
பாப விநாசம்"

அதாவது பாவம் போக்க இரத்தம் சிந்தப்பட வேண்டும். எனவே எல்லாப் பாவங்கள் போக இரத்தம் சிந்தப்படுவது அவசியமாகிறது. அந்த இரத்தம் தேவன்தாமே தன்னைத்தானே பலியாக ஒப்புக் கொடுப்பதினால் உண்டாகக் கூடியதாக இருக்கிறது.

முற்காலங்களில் பாவத்திற்குப் பிராயச் சித்தம் செய்ய வேண்டுமானால் நரமேத யக்ஞம், கோமேத யக்ஞம், அஸ்வமேத யக்ஞம் போன்றவைகளைச் செய்வார்கள் என்று ஆர்ஷேயம் (ஆரிய திருமுறைகள்) சாட்சிக் கொடுக்கின்றன. எனவேதான் ஆரியர்கள் இப்படிப்பட்ட யக்ஞங்களைச் செய்து கொண்டு அதில் நம்பிக்கையுள்ளவர்களாக இருந்து வந்தார்கள் என்று தெரியவருகிறது. சிருஷ்டி கர்த்தராகிய தேவன்தாமே யாகத்தைச் செய்து முடிப்பார். தேவன்தாமே செலுத்திய பலியின் காரணமாக உலகம் மீட்கப்பட்டது. அந்த வல்லமையினால் உலகம் நிலைக்கிறது. முழு உலகத்தின் மீட்பு யக்ஞம் என்பதாக ஆரியர்கள் நம்பினார்கள். பகவத் கீதை மூன்றாம் அதிகாரத்தில் இப்படியாக இருக்கிறது.

''சஹயக்ஞாஹா பிரஜாசுருஷ்ட்வா புரோவாச்சா பிரஜாபதிஹி அநேநா

பிரசவிஸ்யத்வமே சவோஸ்திவிஷ்ட்டா காமதுக் சர்வேஷ்யதே யக்ஞக்ச்சா

பிதகல்மஷஹா யக்ஞசிஸ்டா ம்ருதபுஜோயான்தி ப்ரம்மஸ்ஸநாதனம்''

அதாவது ஓ! குரு சத்தமா! ஆதியில் தேவனால் யக்ஞங்கள் மக்களில் உண்டாக்கப்பட்டது. இந்த யக்ஞங்கள் எல்லாத் தேவைகளையும் அளிக்கக்கூடியதாகவும் இருக்கிறது. யக்ஞத்தினால் பாவத்திலிருந்து விடுதலை பெற்று நித்திய இராஜ்ஜியத்தை பெற்றுக் கொள்ள முடியும். இது இல்லாதவர்க்கு எப்படி பரலோகம் கிடைக்கும். முற்காலத்தில் மக்கள் பலவிதமான பலிகளைச் செலுத்திக் கொண்டு வந்தனர். அது நிரந்தரமான பலியல்ல என்பதை அறிந்து, தேவன்தாமே பலிபசுவாக அவதரித்து மனுக்குலமனைத்திற்கும் பாவ பரிகாரமான மகா பெரிய ஒரே நிரந்தரமான பலி செலுத்த வேண்டுமென்று விசுவாசத்துடன் ''அஹம், ய்கஞோஸ்மி'' என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

அப்படியானால் ''துஷ்ட சிட்சனை'' அதாவது ''வினாசாய சதுஷ்க்ருதாம்'' என்று பகவத் கீதை 4:8இல் கிருஷ்ணர் எப்படி வேதங்களுக்கு விரோதமாகவும், தேவ நியமங்களுக்கு விரோதமாகவும் போதித்தார்.

துன்மார்க்கர் யாராயிருந்தாலும் தன் துன்மார்க்கத் திலேயே மரித்துப் போகக்கூடாது, துன்மார்க்கர் மனந்திரும்பி தேவனுடைய இராஜ்ஜியத்தில் சேர்க்கப்பட வேண்டு மென்பதே தேவனுடைய தீர்மானமாக இருக்கிறது.

இந்த விஷயங்களை அறிந்த நான் இனி மற்ற மதப்புத்தகங்களிருக்கிற தேவர்களுடைய வீண் வம்புக்குப் போகக் கூடாதென்று நிச்சயத்துக் கொண்டேன். சரி, இந்த விஷயத்தில் பரிசுத்த வேதாகமம் (Bible) என்ன சொல்லுகிறது என்று சற்றுப் பார்ப்போம்.

அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது. அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது என்று கொலேசேயருக்குப் பரிசுத்த பவுல் 2000 வருடங்களுக்கு முன்பே எழுதிய நிருபம் இரண்டாம் அதிகாரம் 17ஆம் வசனத்தில் உள்ளது.

இன்னொரு விதமாகச் சொல்ல வேண்டுமானால் துன்மார்க்கர் அழிந்து போகாமல் இரட்சிக்கப்பட வேண்டு மென்பதே தேவனுடைய தீர்மானமாக இருக்கிறது. இதைத் தான் இரட்சிப்பின் திட்டம் என்பார்கள். இது தேவனின் ஏற்பாடு. பகவத்கீதையிலுள்ள ஞானயோகம் 4:8 ஸ்லோகம் துன்மார்க்கரை இரட்சிப்பதற்குப் பதிலாக அழிக்கவும், நீதிமான்களை இரட்சித்துக்கொண்டு யுகயுகங்களில் இப்படிப் பட்ட காரியங்களைச் செய்து நீதியை நிலைநாட்ட தேவன் அவதாரமெடுக்கிறார் என்று எல்லா நீதிக்கும் விரோதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

தேவன் மனிதனை மண்ணிலிருந்து தோன்றச் செய்வதற்கு முன்பே அவனுக்குரிய இரட்சிப்பின் வழியை ஆயத்தம் செய்துவிட்டார். ஏனென்றால் மனிதன் தேவனைவிட்டு வழிவிலகி மதம் என்னும் உதவாத வழியைத் தனக்கென்று ஏற்படுத்திக் கொண்டு கெட்டுப் போனான். எனவே இவனை இரட்சிக்க முன் ஏற்பாடுகளைச் செய்துவிட்டார். இதைத்தான் தேவனின் உன்னத இரட்சிப்பின் வழி என்பார்கள்.

அன்பான வாசகர்களே! இப்பொழுது நீங்களே சற்று சிந்தித்துப் பாருங்கள். இந்தப் பகவத் கீதை ஞானயோகம் 4:8இல் உள்ள சுலோகம் எந்த காரணத்தினால் தேவ வாக்கியங்களுக்கு (தேவ நியமங்களுக்கு) விரோதமாக இருக்கிறது?

வேதங்களை எழுதியவர் வேத வியாசர் (வியாசமகரிஷி) என்பார்கள். ஆனால் வியாசரே வேதங்களை எழுதியதாக ஆதாரமேதும் கிடையாது. சரி; ஒரு வேளை வியாசரே வேதங்களை எழுதினார் என்று எடுத்துக்கொண்டாலும்

வேதங்களை நன்கு அறிந்த வியாசர் வேத வசனங்களுக்கு விரோதமாகப் பகவத் கீதையில் இந்தச் சுலோகத்தை எப்படி எழுத முடியும். பகவத் கீதையை வியாசர் எழுதினார் என்பார்கள். ஆனால் பகவத் கீதை வியாசரால் எழுதப்பட வில்லை. பகவத் கீதையை எழுதியவர் ''ஷ்யாதி'' என்பவர் இவர் ஒரு ஏழை பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் பகவத் கீதையை எழுதி வியாசரிடத்தில் எடுத்துச் சென்று தன் வயிற்றுப் பிழைபிற்காக வேண்டி அவருக்குச் சமர்ப்பித்தார். ஷ்யாதிக்கு வேதத்தின் கருத்து தெரியாது. எனவேதான் பகவத் கீதை ஞானயோகம் *4:8*இல் வேத வசனங்களுக்கு விரோதமாக ''ஷ்யாதி'' என்பவர் இந்த சுலோகத்தை எழுதிவிட்டார். வேத வியாசர் என்று மக்கள் பெயர் வைத்து விட்டார்கள். ஆனால் உண்மையாக வியாசர் வேதங்களை எழுதவில்லை. எனவேதான் பகவத் கீதை ஞான யோகத்தி லுள்ள சுலோகத்திற்கு அவர் எவ்விதத்திலும் பொறுப்பாக மாட்டார்.

பரிசுத்த வேதம் (Bible) என்ன சொல்லுகிறதென்றால் அவரேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழ் எங்கும் மனிதர் களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வெறோரு நாமம் கட்டளையிடப்படவில்லை *(அப். 4:19)*.

அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. ஏனென்றால் அவர் தம் ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார். மத். *1:21*. இயேசு என்றால் இரட்சகர் என்று அர்த்தம். எனக்காக ஜீவனைக் கொடுத்த இயேசு கிறிஸ்துவினால் மாத்திரம் இரட்சிப்பு வரும். இயேசுவே இரட்சிக்கிறார். அவரே இரட்சகர். என் மதம் என்னை இரட்சிக்காது. ஏனென்றால் பிரஜாபதியாகிய சிருஷ்டி கர்த்தர் மாத்திரமே இரட்சிக்கப் பாத்திரமாய் இருக்கிறார் என்று நாம் இதற்கு முன்பு தாண்டீய மகா பிராம்மணத்தில் தெரிந்து கொண்டோம்.

இங்கு கீழே எழுதப்பட்ட சத்தியம் சநாதனா தர்ம சாஸ்திரத்தை (தேவி பாகவதம் புத்தம்) ஆதாரமாக கொண்டது. இதை வாசிப்பவர். கீழே கொடுக்கப்பட்ட வார்த்தைகளை அப்படியே வாசிக்க வேண்டும்.

1. "கன்ன கூத்துருனு பார்யகா சேசிகொண்ணட்டி,

2. மாதவசுதடு காமகுடு காதே?

3. தனிவிதீர நகல்யனு கோரினட்டி,

4. யபவுடன்னடு காமகுடு காதே?

5. சுரகுருசதிதோ மருகேளிகூடின,

6. மருகஷ்யபுண்டு காமகுடு காதே?

7. அந்த தூரமு போனேலா,

8. யப்ஜநாபகேரியுண்டக கங்கனு நெத்தின தால்ச்சி,

9. குலுகுச் சுண்டடிநீவு காமகுடு காதே?"

இதன் அர்த்தம்: ஹைந்தவா தர்மசாஸ்திரத்தின்படி பிரஜாபதி என்றால் பிரம்மா என்று அர்த்தம். அந்தப் பிரம்மாவாகிய சிருஷ்டி கர்த்தர் பாவ பரிகார பலி செலுத்தும்படியாக தன் சரீரத்தை ஜீவபலியாக அக்கினிக்கு ஒப்புக் கொடுத்து யக்ஞம் செய்தார் என்று நாம் இதற்கு முன்பே கற்றிருக்கிறோம். இங்கு என்னுடைய கேள்வி என்வென்றால் யாருடைய பாவத்திற்கு இந்தப் பிரம்மா பிராயச்சித்தப்பலி செலுத்தினார்? என் கேள்விக்குப் பதில் நான் கடந்த 7 1/2 ஆண்டு காலமாகச் சத்தியத்தைத் தேடிப் புத்தகங்களை வாசித்துக் கொண்டு வரும்போது தேவி பாகவத்தில் பார்க்க முடிந்தது. அந்தச் செயலை இங்கு எழுதாமல் அதன் அர்த்தத்தை மாத்திரம் எழுதுகிறேன்.

அதாவது இங்கு அடங்கியுள்ள கருத்தாவது, மாதவன் என்றால் விஷ்ணுவைக் குறிக்கும். சுதன் என்றால் குமாரன் என்று பொருள். பிரம்மா மாதவனுக்குக் குமாரன். எனவே பிரம்மாவுக்கு மாதல சுதன் என்று பெயர். மாதலனின் தொப்புலிலிருந்து தாமரை பிறந்தது. அந்தத் தாமரையின் மேல் பிரம்மா பிறந்தார். எனவே மாதவ சுதன் என்று பிரம்மா

அழைக்கப்படுகிறார். இந்த மாதவ சுதன் கிருஷ்டியை உண்டாக்க வேண்டுமென்று ஒரு பெண்ணை உண்டாக்கி நாசியில் சுவாசத்தை ஊதினார். அந்தப் பெண் உயிர் பெற்றாள். ஆனால் உடனே அவளுக்குத் துணிகள் கொடுக்கப்பட வில்லை. எனவே. அவள் நிர்வாணமாய் இருப்பதைப் பார்த்து ரசித்த பிரம்மா காமயிச்சையினால் அவளைக் கட்டித் தழுவி அணைத்துக் கொண்டு தன் மனைவியாக்கிக் கொண்டார். சிருஷ்டித்தவர் அப்பெண்ணுக்குத் தகப்பனாரல்லவா? சிருஷ்டிக்கப்பட்ட பெண் அவரின் மகளல்லவா? அப்படிப் பட்ட மகளைத் தன் மனைவியாக்கிக் கொண்ட இந்த பிரம்மா காமவெறி கொண்டவனே தவிர தேவனாக எப்படி இருக்க முடியும்? சுரு என்றால் தேவர்கள். குரு என்றால் குரு. சுரகுரு என்றால் தேவர்களின் குருவாகிய பிரஷஸ்பதி. இந்தப் பிரஷஸ்பதியின் மனைவியாகிய தாராவுடன் சரீர இச்சை களில் ஈடுபட்டு காமலீலைகள் நடத்தி விபச்சாரம் செய்தவன் அந்தப் பிரம்மாதான். இப்படியாக இரண்டுமுறை பாவம் செய்து தான் செய்த பாவத்திற்காக பரிகாரம் செய்யும்படியாக யக்ஞம் செய்து அதில்தன் சரீரத்தை (வயிறு) சுட்டெரித்துக் கொண்டாரே தவிர உலக மீட்புக்காக உலகத்தின் பாவ பாரத்தைப் போக்கும்படியாக மனுக்குலத்தை மீட்கும் பொருட்டு யக்ஞம் செய்யவில்லை.

ஆரியர்களின் உபதேசத்தின்படி யக்ஞம் எப்படி அவரை பாவத்திலிருந்து இரட்சிக்க முடிவும். பிரம்மா இரட்சிக்கப் படும்படியாக அஹம் பலியாக வேண்டும். அதாவது தேவன் தாமே பிரம்மாவின் இரட்சிப்புக்காகவும் பலியாக வேண்டும். அந்த விதமாக பலியான தேவன் தச அவதாரங்களில் ஒரு அவதாரமும் கிடையாது. அது மாத்திரம் அல்லாமல் பாவபரிகாரத்திற்காக வேண்டி தேவன் தானே தன் சொந்த இரத்தத்தைச் சிந்த வேண்டுமென்று ''தாண்டிய மகா பிராஹமனம்'' போதிக்கின்றது.

இதன்படிகூட அந்தத் தச அவதாரங்களில் எந்த அவதாரமும் தன் சொந்த இரத்தத்தை ஜனங்களின் பாவ

பரிகாரத்திற்காக வேண்டிச் செலுத்தியதில்லை. பாவம் செய்தவன் தன் இரத்தத்தைச் சிந்தாமல் தன் பாவத்தை எப்படிப் போக்கிக் கொள்ள முடியும். பரமாத்மாக்கள் என்று அழைக்கப்படும் பத்து பேர்களில் ஒருவரும் இந்தக் காரியத்தைச் செய்யவில்லை. அப்படியானால் இதில் ஒருவனாகிலும் உண்மையான பரமாத்மாவாகயில்லையா என்கின்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது. இந்தச் சந்தேகத்தைத் தீர்க்கக்கூடிய மனித பிராணி அந்த இலட்சுமி நாராயண சுவாமி மடத்தில் ஒருவரும் கிடையாது. நான் இதுவரை ஒரு சில வேதங்களிலிருந்து தேர்ந்தெடுத்து எழுதிய சுலோகங்கள் நிரூபிக்கின்ற பரமாத்மா யார்? (Bible) பைபிள் என்ன சொல்லுகிறதென்றால் வெள்ளாட்டுக்கடா இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து நித்திய மீட்பை உண்டு பண்ணினார் (எபி. 9:12).

நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு உங்கள் மனசாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம் (எபி. 9:14).

அது மாத்திரமல்லாமல் நியாயபிரமாணத்தின்படி கொஞ்சம் குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப் படும். இரத்தம் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது என்பது எபிரெயர் 9:22இல் சொல்லப்பட்டிருக்கிறது.

அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியில் நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங் களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் (1யோவான் 1:7).

குற்றமில்லா மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலைமதிப்பற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே (1பேதுரு 1:19).

இதுவரைக்கும் நான் வாசித்துத் தெரிந்துகொண்ட உண்மை என்னவென்றால் எல்லா வேதங்களிலும் கிறிஸ்து வைக் குறித்த சாட்சி இருக்கிறது.

தேவன்தாமே இயேசு கிறிஸ்துவாக மனித அவதாரமெடுத் தார் என்று சாம வேதம் சொல்லுகிறது. பிராஜாபதி அல்லது சிருஷ்டி கர்த்தர் யார்? தன் சரீரத்தை மனுஷக் குலத்துக்காகப் பாவம் போக்கும் பலியாக ஒப்புக் கொடுத்து, தன் ஆத்து மாவையும் ஒப்புக் கொடுத்துதான் இரத்தத்தைச் சிந்தினாரோ அவரே உண்மையான பரமாத்மா. சிலுவையில் ஆணிகளால் அடித்து தொங்கவிடப்பட்ட நேரத்தில் பிதாவே இவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அறியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னியும், இதோ என் ஆத்துமாவை உன் கரங்களில் ஒப்புக் கொடுக்கிறேன் என்று சொன்னார்.

மனிதன் பூரண புருஷனாகச் சிருஷ்டிக்கப்பட்டான். அவனுக்குத் தேவனுடைய முழுமையான சகவாசமிருக் கிறது. ஆனால் அசுத்த ஆவிகள் அவனைச் சோதித்தன. மனிதன் பாவத்திலேயே விழுந்துவிட்டான். அவனுடைய பாவங்கள் அவனைத் தேவனிடத்திலிருந்து பிரித்துவிட்டது. மனிதனால் தேவனை எதிர்க்க முடியாது. தன்னுடைய பாவத்தின் நிலைமையை உணர்ந்து வெட்கப்படுவான். எனவே தேவனைத் திருப்திப்படுத்த ஒரு வழியைக் கண்டு பிடிக்கப் பார்க்கிறான்.

அதனால்தான் இத்தனை விதமான மதங்கள் உருவாயின. மனிதன் தேவனைத் தேடிக் கொண்டிருக்கிறான் என்பதற்கு இந்த மதங்களே சாட்சி சொல்லக் கூடியதாக இருக்கிறது. ஆனால் பாவம் மனிதனைக் குருடாக்கிக் போட்டது. அதனால் மனிதன் உண்மையான வழியைவிட்டு தவறான பாதையைப் பின்பற்றிக் கொண்டு இருக்கிறான்.

மனுக்குலத்தின் விடுதலைக்காகவும், இரட்சிப்புக் காகவும் தேவன் ஒரு வழியை ஆயத்தம் செய்தார். தேவன் மனுக்குலத்திற்காகத் தன் குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி வைத்தார். அவர் சிலுவையில்

மக்களுக்காகத் தன் ஜீவனைத் தந்தார். அவர் அப்படிச் செய்ததினால் மனிதர்கள் தங்கள் பாவத்தின் நிமித்தம் அனுபவிக்க வேண்டிய தண்டனையை அவரே ஏற்றுக் கொண்டார். இதனால் மனிதர்களாகிய நாம் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தோம். அவர் நமக்காகச் சிந்திய இரத்தம் எல்லாப் பாவத்திலிருந்தும் நம்மை விடுதலையாக்கும். ஏனென்றால் கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரிதோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை. ஜாதி, மதம், தேசம், மொழி என்று எந்த வித்தியாசமும் கிடையாது. எல்லார்க்கும் கர்த்தரானவர், தம்மைத் தொழுது கொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பந்தணராயிருக்கிறார்.

ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான் (ரோமர் 10:9,10,12,13). நாம் அவரை அழைப்போமானால் இயேசு கிறிஸ்து நம் ஜீவியத்திற்குள் வந்து நமக்குத் தன் ஜீவியத்தையும் இரட்சிப்பையும் கொடுக்க வாஞ்சிக்கிறார்.

மதம் எவ்வளவு பெரியதாக இருந்தாலும் நம்முடைய பாவங்களை நீக்க முடியாது. இயேசு கிறிஸ்து ஒருவர் மாத்திரமே நம்மைப் பாவத்திலிருந்து விடுவிக்கக்கூடியவர். ''அவர் உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி'' என்று யோவான் 1:29இல் வேதாகமம் (Bible) தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. அன்பான வாசகர்களே! பாவத்தின் சம்பளம் மரணம் ரோமர் 6:23 இல் எழுதப்பட்டிருக்கிறது. ஆத்மா அழிந்து போவது தேவனுக்குப் பிரியமில்லை என்று தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது. மனந்திரும்புங்கள்! அப்பொழுது பிழைப்பீர்கள். சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் (எசே. 18:32).

தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன். தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன் *1யோவா 5:11,12* இதன்படி சிந்தித்துப் பார்க்கும் பொழுது நான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டேன். எனவே நான் ஜீவனை உடையவன். அது நித்திய ஜீவன். நான் மரித்தாலும் நித்திய ஜீவனுக்குள் போவேன் நான் மரித்த பிறகு நித்திய நரகத்திற்குப் போக மாட்டேன் என்று இந்த வேதத்தின் மூலம் அறிந்து கொண்டேன்.

அன்பான வாசகர்களே உங்கள் விஷயத்தில் நீங்கள் என்ன விரும்புகிறீர்கள். நித்திய நரகமா அல்லது நித்திய மோட்சமா? நித்திய நரகத்தை நேசித்து அதை விரும்புகிறவர்கள் இயேசுவை வெறுப்பார்கள். நித்திய ஜீவனை வாஞ்சித்து அதைப் பெற விரும்புகிறவர்கள் இயேசுவை நேசிப்பார்கள். இப்படி இயேசுவை நேசிக்கிறவர்கள் ஜெபிக்கும்போது அவர்கள் சிந்தனை, இருதயம், கிரியைகள் முற்றிலுமாக பரிபக்குவப் படுகின்றன.

எனக்கு உபநயனம் நடந்த வேளையில் நான் பூநூல் தரித்துக் கொண்டேன். அந்த வேளையில் நடைபெற்ற சடங்குகளை ஒரு முறை ஞாபகப்படுத்திக் கொண்டேன். அது என்னவென்றால் ''அந்தப் பரமாத்மாவின் சாயல் நான் கொண்டிருப்பேனாக'' என்று காயத்ரி மந்திரம் கூறுவதை நான் கற்றுக்கொண்டேன். அது மாத்திரமன்று

''ஜன்ம நஜாயிதே சூத்ரம்

கர்ம நஜாயிதே த்விஜயம்'' அதாவது ஒவ்வொரு பிறப்பில் ஆத்ரனாக இருக்கிறான். ஆத்ரன் என்றால் மட்டமான ஜாதியைச் சேர்ந்தவன். இருப்பினும் சம்ஸ்கார செயல்களினால் அவன் பிரம்மனாகிறான் (மறுபிறவி அல்லது மறுபடியும் பிறந்தவன் ஆகிறான்). அதாவது உலகத்தை ஆளும் பரமாத்மாவாகிய தேவன் எங்கள் மனதை

மாற்றுவாராக என்று யஜுர் வேதம் 36 அத்தியாயம், 3வது மந்திரம் படித்திருக்கிறேன். ஆனால் என் மனதோ ஒரு போதும் மாறியது கிடையாது. காரணம் மந்திரத்தினால் மாங்காய் விழாது என்ற பழமொழிக்கேற்ப ஆத்திர குணம் ஒவ்வொருவனுக்கும் பிறவியிலேயே வந்துவிட்டது. பாவம் பிறப்புடனே வந்துவிட்டது. இந்த இரண்டும் உலக சம்பந்தமான எந்தச் சடங்குகளினாலும் போய்விட்டது. எனக்கு உபநயனம் செய்யப்பட்ட வேளையில் நான் பூநூல் தரித்துக் கொண்டேன்.

இந்தப் பூநூல் குறித்து வேமன என்னும் கவி இப்படியாகப் பாடியுள்ளார்.

''ஜனனகாலமந்து ஜன்னிதம்புலுலேவு
தல்லிமெடனுலேவு தனக்குலேவு
நடுமஜந்யாமேயா நகுபாட்டுகாதரா
விஸ்வதாவிராமா வினுரவேமா''

அதன் அர்த்தம்: பிறக்கும்போது பூநூல் உனக்கோ உன் தாயிக்கோ இல்லாதிருந்தும். மத்தியில் பூநூல் போடுவது நகைச்சுவைக்காகத்தானே, ஆம். நான் பூநூல் போட்டுக் கொண்டு பூசையினைச் செய்துகொண்டு, புகை பிடித்து, மதுகுடித்து, மாதுகளின் பின்னால் சுற்றிக் கொண்டிருந்தேன். என்னைப் பார்க்கிறவர்கள் ''இதோ! இலட்சுமி நாராயண சுவாமி கோயில் பூசாரியைப் பாருங்கள் என்று எண்ணி நகையாடும்படியான ஜீவியமாக என் வாழ்க்கையிருந்தது. ஏனென்றால் நான் ஆராதித்து வரும் அந்தத் தேவர்களும் அப்படிப்பட்டவர்கள்தான். வேமன கவி இதைக் குறித்து எழுதுகிறார்.

''கால்லகாடஏரு கடகீதலேக
முக்குரீத்தகான்லு முனிகிசெதிரே
நருனிஈதுமனின நகுபாட்டுகாதையா
விஸ்வதாவிராம வினுரவேமா''

திரு மூர்த்திகள் மாமிச இச்சைகளை மேற்கொள்ள முடியாமல் ஒவ்வொருவராய் விழுந்துபோய் கடைசியில்

மனிதனை மேற்கொள்ளும்படியாகச் சொல்வது நகைச் சுவையான காரியமல்லவா? என்று வேமன கவி கூறுகிறார்.

இவர்கள் அதாவது திருமூர்த்திகள் உலகத்தை நேசிப் பவர்கள். உலகத்தில் தங்கள் பந்தங்களை நேசிப்பவர்கள். உலகத்திலுள்ள ஸ்திரீகளை இச்சிப்பவர்கள். எனவேதான் வேமன கவி இப்படியாக எழுதியிருக்கிறார் என்று விளங்கிக் கொண்டேன்.

அப்பொழுது எனக்கொரு கேள்வி பிறந்தது. அது என்னவென்றால் நான் இதுவரை ஆராதித்து வரும் பிரம்மா, விஷ்ணு, ஈசுவரன் என்னும் இந்தத் திருமூர்த்திகள் தேவர்களல்லவா. இந்தக் கேள்விக்குப் பதில் கிடைக்க வேண்டிப் பெரியவர்களிடத்தில் சென்று கேட்டுப் பார்த்தேன். அவர்கள் மூர்க்கமாகக் கோபம் கொண்டு என்னை அடிக்க முயன்றார்கள். ''வீட்டைவிட்டு விரட்டிவிடுவோம்'' ஜாக்கிரதை என்று சொல்லி எச்சரித்துப் பயமுறுத்தினார்கள். வேமன எழுதிய கவிதைகளைப் படிக்கும்படியாக நாங்கள் உனக்குச் சொன்னோமா? உன் இஷ்டப்படி நீயே ஏன் படித்துக் கொண்டிருக்கிறாய் என்று என்னை அடித்துப் பயமுறுத்தினார்கள்.

நான் அப்போது சிறுவனாக இருந்ததினால் அவர்கள் பயமுறுத்தலுக்கு அதிகமாக பயந்துபோய் அவர்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டு மறுபடியும் இலட்சுமி நாராயண சுவாமி மடத்திற்கு வந்துவிட்டேன். அந்த மடத்தில் அநேக பீரோக்கள் இருந்தன. அதில் ஏதாவதொரு புத்தகம் எனக்குச் சரியான விடைதரும் என்பதாகச் சந்தோஷப் பட்டேன். இரகசியமாகச் சில புத்தகங்களை எடுத்து வாஞ்சையுடனும் கருத்தோடும் ஊன்றி வாசித்தேன். திடீரென ஒரு நாள் இந்த மந்திரத்தை கண்டேன்.

''இதித்துவஜனம் ஸ்ருத்யாப்ரஜாபதி ததாப்ரவீத்
அக்ஞானா தவமானேநா சாவித்ரீ குபிதாகதா
அத நாராயணஹா புத்ரம் வினிந்யமதி வர்ஜிதம்''

இதன் அர்த்தமாவது நாராயணனன் வார்த்தைகளைக் கேட்டுப் பிரம்மா இப்படிச் சொன்னார். நான் ஞானமில்லாத வனாய் சாவித்திரியை அவமானப்படுத்தினேன். அதனால் சாவித்திரி கோபங்கொண்டு என்னை விட்டுப் போய்விட்டாள் என்று சொன்னார். அப்பொழுது நாராயணர் தன் மகனின் மதிகேட்டை வர்ணிக்கிறார். இது பட்சி தீர்த்தம் ஹாத்தியம் சாம் அதிகாரத்தில் எழுதப்பட்டு இருக்கிறது. (ஸ்காந்த புராணம்) மேலே எழுதப்பட்ட சுலோகத்தின் அர்த்தத்தை வைத்துப் பார்க்கும்போது சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மா ஞானமில்லாதவராய் நாராயணர் அதாவது அவருடைய தகப்பனார் விஷ்ணு சொன்னதுபோல் சாவித்திரி என்னும் பத்தினியை அவமானப் படுத்தினாராம். இந்தச் சாட்சியை பிரம்மா தானாகவே சொல்கிறார்.

எந்தத் தகப்பனாவது தன் மகனுக்குப் பாவம் செய்யும் படியாகக் கற்றுக் கொடுப்பானா? விஷ்ணுவை நாங்கள் தேவன் என்று சொல்கிறோம். தேவர்களுக்கும் தேவரான நாராயனர் பாவம் செய்யும்படியாகச் சொன்னால் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மா பாவம் செய்யலாமா? பாவம் செய்கிறவர் எப்படிச் சிருஷ்டி கர்த்தாவாக இருக்க முடியும்? பாவம் செய்யச் சொல்கிறவர் எப்படித் தேவனாக இருக்கிறார்? இவை யாவும் எனக்கு ஆச்சரியமாகவும் அருவருப்பாகவும் காணப்பட்டன.

என் அருமையான நாட்டு மக்களே! ஓ! என் தேசமே கேள்! இந்த வெளிப்படையான சத்தியத்தை என் உறவினர்கள், என் முற்பிதாக்கள், புலவர்கள், ஆசாரியர்கள், ஏன் தெளிவாக எடுத்துச் சொல்லவில்லை. எந்தக் காரணத்தினால் அவை களை மறைத்து இந்த நாட்டில் மாத்திரமல்ல உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் மனிதர்களால் வணங்கப்பட்டு வருகிறார்கள். வயிற்றுப் பிழைப்புக்கு இது ஒரு வழிதானா?

சர்வ லோகத்தையும் படைத்துச் சகல ஐஸ்வரியங் களையும் தருபவரே! தற்சொரூபமானவேர! உன் அடியேனின் விண்ணப்பத்தைக் கேட்டருளும் என்னுடைய இந்தப் பாரத

நாட்டையும், நாட்டு மக்களையும் இந்த விபசார சம்பந்தமான, பயங்கரமான இந்தப் பாவ பூசைகளிலிருந்து விடுவித்தருளும். என் நாட்டின் மீதும் என் நாட்டு மக்களின் மீதும் பிதாவே! என் தேவனே! உன் உக்கிரத்தை வர விடாதிரும். என்று மாத்திரம் ஜெபிக்கக் கூடியவனாக இருக்கிறேன்.

ஸ்காந்தபுராணம் ருத்தர கோடி மஹாத்தியம் 7ஆம் அதிகாரத்தில் இப்படியாக ஒரு சுலோகம் இருக்கிறது.

''ததோவிஷ்னு சமாகத்யா பிரணம்யா முனிபுங்கவம்

பரமாதோ துரோஹமாரப்தம் க்ஜமயேஸ்தே துபவியா ச்சிதஹா''

இதன் அர்த்தம்: விஷ்ணு பகவான் புருஹமஹர்ஷ இடத்தில் பிரமாணம் செய்து இப்படிச் சொல்கிறார். நான் தெரியாமல் செய்த பாவத்திற்கு மன்னிக்க வேண்டுமாய் உம்மை மன்றாடுகிறேன். விஷ்ணு பகவான் துரோகம் செய்தாராம். அவரே சுயமாகத் தன் சாட்சியைச் சொல்லிக் கொள்ளுகிறார். இதை அறிந்தும்கூட இன்னும் துரோகம் செய்தவரை என் தேவனென்று எப்படி ஆராதிக்க முடியும். பிரியமானவர்களே! நீங்கள், அறியாமல் துரோகிகளைத் தேவர்களென்று ஆராதித்துக் கொண்டிருப்பது கொஞ்சமும் பிடிக்காமல் இந்தச் சிறிய புத்தகத்தை உங்கள் முன் வைக்கின்றேன். இன்னொரு சந்தர்ப்பத்தில் சிவபெருமான் பிரம்மாவின் தலையைத் துண்டித்ததினால் அவருக்குக் கொலைபாதகனாக ஆவி பிடித்துக் கொண்டதாம். அதனால் சிவபெருமான் நாரத முனியுடன் இப்படியாகச் சொல்லுகிறார் (ருத்ர நாரத சம்வாகம் என்ற புத்தகம்).

''அஹிம்ஸ்வ அபராதான மாலயோகிஞ்சி நோகதிஹி

த்வமே ஒபாய பூதோமே பவேய்தி ப்ராத்தனாமதிஹி

சரணாகதி ரித்யுக்த்தஸ்வ தேஒஸ்மின் ப்ரயுஜ்யதாம்''

அதாவது நான் குற்றத்திற்கு மூலகாரணன். எனக்கு எந்தவிதமான நீதியும் கிடையாது. ஓ! நாரதா! மகா முனியே! நீயே எனக்கு ஏதாவதொரு வழியைத் தெரிவித்தருளும். நான்

அதிகமான ஜெப விண்ணப்பதோடு உன்னைத் தஞ்சம் அடைந்திருக்கிறேன். இந்த விஷயத்தில் என்மேல் கிருபையாயிரும் என்று சொல்கிறார். அது மாத்திரமல்லாமல் தேவி பாகவத்தில் 4ஆம் பிரிவில் 8ஆம் அதிகாரத்தில் இந்த விதமான ஒரு சுலோகத்தையும் கவனிக்கலானேன். சுலோகம்:

"பிரம்மா விஷ்ணு ஸ்ததா ருத்ரஸ்தே சாஹம் காரமோ ஹீதா
பிரமஸ்தயஸ்மின் மஹா காதே சம்சாரே ந்ருப சத்தமா"

இதன் கருத்து: ஓ! இராஜா! பிரம்மா, விஷ்ணு, ஈஸ்வரன் என்று சொல்லக்கூடிய திருமூர்த்திகள் அகம்பாவத்தினால் மதிகெட்டு இந்த உலக வாழ்க்கையில் (சம்சாரத்தில்) மூழ்சி தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பைபிள் இப்படியாகச் சொல்லுகிறது. "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில் மாமிசத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ள வைகளெல்லாம் பிதாவினால் உண்டானவைகளல்ல. அவைகள் உலகத்தினால் உண்டானவைகள் (1யோவான் 2:15,16).

எனவே நான் வணங்கும் இந்தத் திருமூர்த்திகள் தேவர்களல்லர். இவர்கள் உலகப் பற்றுடையவர்கள். அவர்கள் இந்த உலகத்தார் போன்றவரே என்று விளங்கிக் கொண்டேன். போதலூரி வீர பிரம்மம் என்பவர் இந்தத் திரு மூர்த்திகளைக் குறித்து "இந்த மூன்று திருமூர்த்திகளும் இரட்சிப்பின் வழியை அறியாதவர்கள் என்று குறிப்பிடு கிறார். போதுலூரி வீரபிரம்மம், பிரம்மா, விஷ்ணு, மகஸேஸ்வரன், (திரிமூர்த்திகள்) என்பவர்களோடு இப்படியாக கூறுகிறார்.

"முக்குரு மூர்ததுலு ஜூட்டா மூலம் பெருகரு பாட்டா"

ஆனால் பரிசுத்த வேதாகமத்தில் இயேசு கிறிஸ்து என்ன சொல்கிறார் என்றால் "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமா

யிருக்கிறேன் என்னையன்றி ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' (யோவான். 14:6).

வழியை அறியாதவர்களைத் தேவர்களென்று நினைத்துக் கொண்டு வழியில்லாத வழியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுதோ வழியில் அதாவது கிறிஸ்துவில் இருக்கிறேன் என்று சொல்வதில் கொஞ்ச மேனும் சந்தேகமில்லை.

ஆரிய கவி தந்திர உபோத்காதமு என்னும் புத்தகத்தில் 11-14 ஆம் பக்கம் வரை ஸ்ரீராமரைக் குறித்தும், விஷ்ணுவைக் குறுத்தும் எழுதுகிறார்.

''கனகா ம்ருகமு புவினி கத்தூலேதனகயு

தருணி விடிச்சி சனியே தாசரதியு

தெலிவிலேனிவாடு தேவுடெட்லாயரா

விஷ்வதாவிராமா வினுரவேமா''

அதாவது வால்மீகி இராமாயணத்தில் இராமர் இலட்சுமணர், சீதை ஆகியோர் கானகத்தில் பர்லா சாலையில் வசித்து வருகிறார்கள். அந்நாள்களில் இராவணன் சீதையை கவர்ந்து செல்ல மந்திர சக்தியினால் மாய தங்கமான் குட்டியை அனுப்புகையில் சீதை அந்த மான் குட்டியின் அழகில் அதிகமாகக் மோகங் கொண்டு இராமனிடம் ''நாதா! பாருங்கள் இந்த மான் குட்டி எவ்வளவு அழகாக இருக்கிறது. இது எனக்குக் கண்டிப்பாக வேண்டுமென்று பிடிவாதம் செய்தாள். அந்த வேளையில் இராமன் ''சீதா! இதோ! பார்! இது ஜொலிக்கிற மான்குட்டியாகக் காணப்பட்டாலும் மாய மான்குட்டி, தங்க மான்குட்டியல்ல'' என்று தன் மனைவிக்குப் புத்தி சொல்லாமல் அவளை விட்டுவிட்டு அந்த மான்குட்டியின் பின்னாலேயே போய்விட்டார். மதி கெட்டவராகிய இவர் எப்படித் தேவனாக முடியும் என்று நிரூபிக்கிறார். இன்னும் விஷ்ணு விஷயத்திற்கு வரும்போது அவர் என்ன சொல்கிறார்.

"அப்புகொணியயனா- தொங்கிலியய்னா லெஸ்ஸா

ஜிஹ்வாகிம்பய்னா தானின் - புஜிம்ப்பவலயு

கண்ட்டிகிம்பய்னா காந்தலன்- கலயவலயு

ப்ரதுகுதினம்புலன்- மோக்ஷம் வெதுகுலேனலா"

நாவுக்குச் சுவையான உணவைத் திருடியோ, கடன் பட்டோ, சாப்பிட வேண்டும். கண்களுக்கு இனிமையான ஸ்திரீகளுடன் பாவம் செய்யலாம். மனிதனே நீயேன் இவை யாவும் விட்டு விட்டு உன் வாழ்நாள்களில் பரத்தையைத் தேடிக்கொண்டிருக்கிறாய் என்று கூறியுள்ளார்.

வால்மீகி இராமாயணத்தில் ஆரணியா காண்டம் 63ஆம் சர்கா 4ஆம் சுலோகத்தில் இராமர் தான்செய்த பாவத்தை குறித்துத்தானே சாட்சி கொடுத்து தான் பாவி என்பதை அறிக்கையிடுகிறார்.

"பூர்வம் மாயானூன மபீப்சித்தானி பாபானி கர்மாண்ய
அக்ருத் க்ருதானி தத்ரா மத்யாபத்தோ விபாகோதுக்கேன
துக்கம் யதகம் விசாமி"

அதாவது முன்பு நான் நிச்சயமாகவே அநேக பாவங் களைச் செய்திருக்கிறேன். அதனால் இப்பொழுது எவ்வளவோ துன்பத்தை அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

எனவே ஸ்ரீராமர்கூட பாவம் செய்தவர்தான். இரட்சகரல்ல (தேவனல்ல) என்பதாக நான் விளங்கிக் கொண்டேன்.

ஸ்ரீரங்க மஹாத்தியம் 7ஆம் அதிகாரத்தில் இப்படியாக எழுதப்பட்டிருக்கிறது.

"காமக்ரோத வசாசர்வே தேவஷின் பித்ருமானவாக"

அதாவது எல்லா தேவர்களும், முற்பிதாக்களும், மனிதர்கள் யாவரும் காம இச்சைகளுக்குட்பட்டவர்களே" என்பதாக மந்திரம் விளக்கம் தருகிறது.

இன்னொரு சுலோகம் இப்படியாகச் சொல்லுகிறது. மந்திரம்:

"பாபம் கரோதி மனுஜஸ்ததா தேவ தயரோபிசா
ததா நாராயனோ ராஜன்ன ரஸ்ச்ச தர்மஜாவுபவ்
ஜாதவ் க்ருஷ்ணார்ஜுனே காமம் சவ் நாராயணசியாசவ்
புராண பீட்டிகேயம் ஒய்முனிபிஹி பரிகீர்த்திதவ்"

இதன் கருத்து: மனிதன் பாவம் செய்கிறான். அப்படியே தேவர்களும் பாவம் செய்கிறார்கள். தர்மனின் குமாரராகிய நாராயணன் இன்னும் நரன் என்னும் ரிஷியும் கூட அவ்வண்ணமே பாவம் செய்ததினால் அவர்கள் நாராயணனின் வம்சத்தில் கிருஷ்ணராகவும் அர்ஜீனராகவும் பிறந்தார்கள். இந்த விஷயம் முனிகளால் சொல்லப்பட்டுப் புராணப் பகுதியில் இருக்கிறதென்று வியாச மகான் சொல்லுகிறார். தேவி பாகவதம் 6ஆம் ஸ்கந்தமு 10 ஆம் அதிகாரத்தில் இதைக் காணலாம்.

கடைசியாக நான் தெரிந்துகொண்ட சத்தியத்தை உங்களுக்கு விளக்குகிறேன். இராமர் கிருஷ்ணர் தெய்வ அவதாரங்களல்ல. அவர்களும் மனிதர்களைப் போலவே பிறந்து, மனிதர் பாவம் செய்த வண்ணமே தாங்களும் பாவத்தில் சிக்குண்டதால் அவர்கள் எந்த விதத்திலும் தேவர்களல்லர். இரட்சகருமல்லர். விசுவாமித்ரரும் விசுவா மித்ர வசிஷ்ட சம்வாதமு" என்னும் புத்தகத்தில் இப்படியாகச் சொல்கிறார்.

"நரசுராசுர யக்சகான கந்தர்வ
நருலந்தரு மரியு நெவ்வாரலயந்து
பொங்கனி வாரல பொடகான மேமு
சங்கக்கருநானா முத்ஜகமுலயந்து"

இதன் அர்த்தமானது: மனிதர்கள், தேவர்கள், இராட்சதர் கள், இராட்சத மனிதர்கள் யாவரும் பாவம் செய்தவர்களே! உண்மையுள்ளவன், அல்லது பாவமற்றவன் ஒருவனாகிலும் ஒருபோதும் இருந்ததில்லை.

அன்பான வாசகர்களே! பரிசுத்த வேதாகமம் என்ன சொல்லுகிறது தெரியுமா? திருடாதே யாத். 20:15. விபச்சாரம் செய்யாதே யாத். 20:14.

பரமபிதா இப்படிச் சொல்லுகிறார்.

''இப்படியிருக்க என்னை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? எனக்கு யாரை நிகராக்குவீர்கள்'' (ஏசா. 46:25).

''இப்படியிருக்க தேவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? எந்தச் சாயலை அவருக்கு ஒப்பிடுவீர்கள் (ஏசா 40:18).

நீங்கள் என்னை யாருக்கு ஒப்பிடுவீர்கள் என்று பரிசுத்தர் கேட்கிறார்.

பிரியமானவர்களே! பரிசுத்தரென்று சொன்னால் அவர் பொய் சொல்லமாட்டார். பொய் சொல்ல வைக்கவும் மாட்டார். மோசம் செய்ய மாட்டார். செய்ய வைக்கவும் மாட்டார். விபச்சாரம் செய்யமாட்டார். செய்ய வைக்கவும் மாட்டார். திருட மாட்டார். திருடச் செய்யவும் மாட்டார். இப்படிப்பட்ட குணங்களுடையவர்தான். பாவமில்லாதவர். அவர்தான் தேவன்.

''இதோ நான் நானே தேவன். என்னையன்றி வேறொரு தேவன் இல்லை. உயிர்ப்பிக்கிறவர் நானே. பிழைக்க செய்கிறவரும் நானே'' (உபாகமம் 32:39).

''உன்னை உருவாக்கிய தேவனாகிய என்னை உதறி விட்டாய். உன்னை பெற்ற தேவனாகிய என்னை மறந்து விட்டாய்'' (உபாகமம் 32:18).

பிரியமான வாசகரே! இதுவரை நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? அல்லது நீ என்ன செய்து கொண்டிருந் தாய்? சத்தியத்தை அறிந்து கொண்டாயல்லவா? இப்பொழுது என்ன செய்யலாமென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? ஆனால் நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்று பாருங்கள்.

இலட்சுமி நாராயண சுவாமி ஆலயத்தில் அநேக புத்தகங்களை இரகசியமாக வாசித்தேன். கடைசியாய் ஒரு உறுதியான தீர்மானத்திற்கு வந்தேன். பெரியவர்களிடம் சென்று இயேசு கிறிஸ்துவைக் குறித்த இரகசியங்களை எடுத்துச் சொன்னேன். அடா! இந்த மட்ட ஜாதி உறவு உனக்கு எப்படியடா கிடைத்தது என்று என்னுடன் வாதாடி தூஷித்தார்கள். அந்த வேளையில்தான் இயேசுகிறிஸ்து சொன்ன வார்த்தைகள் என் நினைவிற்கு வந்தன.

''என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்திப் பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய் சொல்லுவார்களானால் பாக்கியவான்களாயிருப் பீர்கள். சந்தோஷப்பட்டு களிகூருங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும் உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே (மத்தேயு *5:11,12*).

இந்த வசனங்களை என் நினைவிற்கு வந்தவுடன் நான் மிகுந்த சந்தோஷமடைந்து கொண்டிருக்கும்போது, ''வெட்கம் கெட்டவனுக்கு சிரிப்பொன்று தேவையா? அடேய்! நீ பிறந்தவுடனே உன் தாத்தா இவன் மட்ட ஜாதியில் பிறந்திருக்க வேண்டியவனென்று உன் அப்பாவின் காதில் இரகசியமாக சொன்ன வார்த்தை இன்று நிறைவேறிற்று என்று சொல்லி என்னைத் திட்ட ஆரம்பித்தார்கள்.

அதற்கு நான், என் பெரியவர்களிடம் இப்படியாக கூறினேன்.

"மாலகுலமுன புட்டி-மாலல தூஷிம்ப்ப,

த்விஜீலகேல இட்டி- தொங்கதனமு

அதிகுலமேதியோ- அரசிதா ஜீடரா

விஷ்வதாவிராமா வினுரவேமா''

(இது வேமனாரசனாவளி என்ற புத்தகத்தில் எழுதப் பட்டிருக்கிறது)

இதன் அர்த்தமாவது: பிராமணர்கள் சக்கிலி குலத்தில் பிறந்தவளின் வயிற்றில் பிறந்தார்கள். ஆகவே பிராமணர்கள் சக்கிலி குலத்தை சேர்ந்தவர்கள். இதை பிராமணர்கள் திருட்டுத்தனமாக மறைத்து வைத்து, தாங்கள் உயர்ந்த ஜாதியை சேர்ந்தவர்கள் என்று பெருமைபட்டு கொள்கிறார் கள். வேமனா மகாயோகி, பிரமாணர்களிடம் இவ்வாறு கேட்கிறார்! பிராமணர்களே, நீங்களே சக்கிலி குலத்தை சேர்ந்தவர்களானால், உயர்ந்த குலம் என்பது எது? எல்லா குலமும் தாழ்ந்த குலமே (சூத்ர குலமு) ஏனென்றால், ''ஜன்மநஜாயிதே சூத்ரம்'' என்று எழுதப்பட்டிருக்கிறது, என்று நான் என் பெரியவர்களிடம் சொன்னேன்.

பிரியமானவர்களே! இந்த வேளையில் இன்னொரு சத்தியத்தையும் உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். அதாவது பிராமணருக்கு மூல புருஷனாகிய வசிஷ்ட மகரிஷி, ஸ்ரீராமரின் குரு, விபசாரியான ஊருவசிக்குத்தான் பிறந்தார். ஊர்வசி ஆதி விஷ்ணுவின் மகள். இந்த வசிஷ்டன் சக்கிலி (ஆதி ஆந்திரவாசிகள்) குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைத்தான் மனைவி ஆக்கிக் கொண்டார். அவர்கள் சந்ததியான இந்தப் பிராமணர்கள் சக்கிலி குடும்பத்தைச் சேர்ந்தவர்களல்லாமல் வேறு யாராக இருக்க முடியும்? அதனால்தான் நாம் பிறப்பிலேயே சக்கிலி ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்துகொண்டு மற்ற ஜாதியாரை மட்டமாய் பேசுவானேன் என்று வேமன யோகி சொன்னது அத்தனையும் உண்மையென்று நான் என் பெரியவர்களிடத்தில் வாதிட்டபோது, அவர்கள் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாமல் என்னைத் தூஷித்து அடிக்க ஆரம்பித்தார்கள். இந்த வார்த்தைகள் வேமன்ரசனாவளியில் இவ்விதமாக எழுதப் பட்டிருக்கிறது.

''தள்ளி ஊர்வசி லஞ்சா- தணா யாவி மாதிக
தானு ப்ராமனுடைய - தரா வஷிஷ்டு
தபமுசே விப்ருண்டு- தர்க்கிம்ப குலமேரி
விஷ்வதாபிராமா- வினுரவேமா''

எங்கள் இலட்சுமி நாராயண சுவாமி மடத்தில், இன்னொரு இடத்தில் பித்தளையினால் வார்க்கப்பட்ட ஸ்ரீகிருஷ்ணர் சிலையைப் பெரியவர்களுக்குக் காண்பித்து இவ்வாறு சொன்னேன். தாத்தா! ஒவ்வொரு ஆண்டும் கிருஷ்ணஜெயந்தி வேளையில் இந்தக் கிருஷ்ணர் சிலையை நாம் ஊஞ்சலில் வைத்து மக்களுக்கு அநேக விதமான வேடிக்கை காட்டுகிறோம். மக்களுக்கு இது தேவனென்று சொல்லி பிரமிக்கச் செய்து, அதை வணங்கும்படியாகச் செய்து வருகிறோம். அந்த வேளையில் படித்தவர்களும், படிக்காத வர்களும், பண்டிதர்களும், பாமரர்களும், சைக்கிலில், ஸ்கூட்டரில், மோட்டார் சைக்களில், கார்களில் வந்து இந்தச் சிலையைக் கும்பிட்டுப் போகிறார்கள். அவர்களுக்கு நீங்கள் இந்த சத்தியத்தைச் சொல்லமாட்டேன் என்கிறீர்கள்.

"எந்தச் சத்தியத்தையடா" என்றார் என் தாத்தா.

அப்பொழுது நான் சொன்னேன்:

"ஷோட சகஸ்ர சுந்தரீ ஜனமோகி
துடகான நேனோபுதுனே தரிம்ப்ப
நாமீத கூர்மி யன்னடுனு பாயதட்டுகானா
சத்யபாமகு பூன்ப சக்திலேது
ப்ரதிதினம்புனு மத்யபானம்பு காவிஞ்சு
பலத்ருனக்கு பரிம்பகராது
சதுலதோகூடி சம்சாரமுள்சேசின
வாரெவ்வருனு தால்ப்பலேரு பூமி"

(இது விஷ்ணுபுராணம் 10:6ல் உள்ளது).

"சமந்தக மணி இது. அதிக பிரகாசமுடையது. இது எப்பொழுதும் ஜொலித்துக் கொண்டே இருக்கும். ஆனால் இதைத் தரித்துக்கொள்ள எனக்குக் கொஞ்சமேனும் யோக்கியதை கிடையாது. என் அண்ணனாகிய பலரா மனுக்கும்கூட யோக்கிதைகிடையாது" என்று கிருஷ்ணர் தானாகவே சாட்சி கொடுத்திருக்கிறார். இந்தச் சாட்சி விஷ்ணு

புராணம் 10:6இல் எழுதப்பட்டிருக்கிறது. ஒளியைத் தரித்துக்கொள்ள ஸ்ரீகிருஷ்ணர் பாத்திரமானவரல்லர். எனவே யார் ஒளியாய் இருக்கிறாரோ அவரே இந்தப் பிரகாசிக்கின்ற மணியைத் தரித்துக்கொள்ள பாத்திரனாய் இருக்கிறார். ஸ்ரீகிருஷ்ணர் நான் ஒளி அல்லன் என்கிறார். அப்படியானால் அவர் இருள். இருளானவர் தேவனாக இருக்க முடியாது. காரணம் மந்திரம் இவ்வாறு எடுத்துரைக்கிறது.

விஷ்ணுபுராணம் 10:6ல் விஷ்ணு மூர்த்தி சொன்ன சாட்சியம் இவ்வாறு இருக்கிறது.

அர்த்தம்: நான் பதினாராயிரம் கோபியோராடு உல்லாச மாடினவன். ஆகவே வெளிச்சத்தை தரித்துக்கொள்ள யோக்கியமானவன், பாத்திரன் அல்ல. அதுமட்டுமல்ல ருக்மனி, ராதா, சத்யபாமா என்றவர்களை மனைவிகளாக கொண்டிருப்பவன். ஆகவே வெளிச்சத்தை தரித்துகொள்ள பாத்திரன் அல்ல. என் சகோதரனாகிய பலபத்திரன் எப்போதும் மது குடிப்பவன். ஆகவே அவனும் வெளிச்சத்தை தரித்துக்கொள்ள பாத்திரன் அல்ல. பூலோகத்திலும் வானத்திலும் மனைவிகளை உடையவன் எவரும் வெளிச்சம் சம்பந்தப்பட்டவர்கள் (தேவர்கள்) அல்ல. ஆகவே விஷ்ணு (விஷ்ணுபுராணம் 10:6ல்) இவ்விதமாக போதித்து, ஒப்புக்கொள்கிறார்.

''சதுலதோகூடி சம்'சாரமுல் சேசின
வாரெவ்வருனு தால்ப்பலேரு பூமி''
''குருதேவா பரபிரம்மம் குரு ஓம் நிர்மலா சாந்தா
சாதுன மிருது பாஷன காமக்ரோத நிரமமுக்கத்தாஹ
சதாம்கார ஜநேந்திரயஹ''

அதாவது ''குரு பரபிரம்மாக இருந்து களங்கமற்றவரும், சாந்தமுள்ளவரும், சாதுவானவரும், தயவாய் பேசுகிற வருமாய் இருந்து, காம இச்சைகளை ஒழித்து அதிலிருந்து விடுவிக்கிறவரும், நல்லொழுக்கமுள்ளவரும், இச்சை

யடக்க முடையவராகவும் இருக்க வேண்டும். அப்பொழுது தான் இவர் குருவாக இருக்க முடியும்.

இன்னும் குரு என்ற வார்த்தைக்கு உபநிஷத்தில் இங்ஙனம் எழுதப்பட்டிருக்கிறது.

"கு சப்த அந்த கார ஸ்யாத்
ரு சம்ப தன்னி ரோத கஹா
அந்த கார நிரோத த்திவாத்
குரு ரித்திய பிதேயாதே"

அதாவது கு என்றால் இருள் என்று அர்த்தம். ரு என்றால் வெளிச்சம் என்று அர்த்தம். இருளை நீக்கி வெளிச்சத்தைக் கொடுப்பவன்தான் குரு. குரு பிரம்மா அல்லது தேவன் என்று பொருள்படுகிறது.

ஸ்ரீகிருஷ்ணர் நான் சமந்தக மணியை அதாவது ஒளியாய் பிரகாசித்துக் கொண்டிருக்கும் மணியை அல்லது ஒளிமய மான மணியைத் தரித்துக்கொள்ளப் பாத்திரனல்லன் என்று விஷ்ணு புராணத்தில் 10:6ல் தானே சாட்சி கொடுக்கிறார். அப்படி இருக்க அவர் ஒளியுமல்லர். குரு பிரம்மாவுமல்லர். தேவனுமல்லர். சிருஷ்டி கார்த்தாவும் அல்லர் என்று ஒப்புக் கொள்கிறார். அப்படியானால் அவர் ஒரு இருளின் சக்தி என்று ஏன் நீங்கள் மக்களுக்கு எடுத்துரைக்கக்கூடாது என்று என் தாத்தாவிடம் கேட்டேன்.

இதற்காக நான் அதிகமாகத் தாக்கப்பட்டேன். சத்தியத் தைத் தேடுகிற மக்கள் என்று சொல்லிக் கொள்வார்கள். ஆனால் சத்தியத்தை எடுத்துச் சொன்னாலோ ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். சரி அதோடாவது நின்றுவிடு கிறார்களா? இல்லை. சத்தியத்தைச் சத்தியமாய் எடுத்துச் சொல்லுகின்றவனையும் கொன்றுபோட வேண்டும் என்று துடிக்கின்றனர். சத்தியத்தைத் தேடுகிற மக்கள் சத்தியத்தை தேடுவதை விட்டுவிட்டு சத்தியத்தை எடுத்துக் காட்டுகிற மனிதனைக் கொன்றுபோட வேண்டும் என்று எண்ணி தேட ஆரம்பிக்கிறார்கள்.

பிரியமானவர்களே! நீங்கள் உண்மையோடு யோசித்துப் பாருங்கள். நீங்கள் சத்தியத்தைத் தேடுகிறவரா? அப்படியானால் உன் தேடுதல் எந்தப்பக்கம் திரும்பியிருக்கிறது. சத்தியத்தை விளங்கிக் கொண்டாயா? ஸ்ரீகிருஷ்ணர் ஒளியைத் தரித்துக் கொள்ள அபாத்திரராய் இருக்கும்போது உன் பாவத்திலிருந்து உன்னை விடுவிக்க எப்படிப் பாத்திரராக முடியும்? எவனாவது ஒருவன், தான் இருளாக இருந்துகொண்டு இருளிலிருக் கிறவர்களை எப்படிப் பிரகாசிக்கச் செய்ய முடியும்? சற்று யோசித்துப் பாருங்கள்.

இந்தச் சமந்தக மணியைக் குறித்து ஒரு பெரிய கதை இருக்கிறது. அதை நான் இதில் எழுத முடியாது. எனவே சுருக்கமாகச் சொன்னேன். இதிலே எழுதப்பட்டவை பல புத்தகங்களில் கண்டு கொண்ட உண்மைகள்.

பைபிள் ஒளியைக் குறித்து இவ்வாறு சொல்லுகிறது. ''அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாய் இருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது. இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை'' (யோவான் *1:4,5)*

இயேசு தாமே இப்படிச் சொன்னார். நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவண்டை வரான்'' *(யோவான் 14:6).*

இந்த வேத வாக்கியங்களின்படி பார்க்கும்போது இயேசு கிறிஸ்து தவிர வேறொரு இரட்சகர் இல்லை என்றும், அவராலேயல்லாமல் வேறேந்த விதத்திலும் மனுஷனுக்கு விடுதலையில்லை என்றும் நான் விளங்கிக் கொண்டேன்.

குடும்பத்தில் தொந்தரவுகள் (பிரச்சனைகள்)!

என் வாழ்க்கையில் முதன்முறையாக என் குடும்பத்தில் என் பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும், பரவஸ்து சந்ததி யாருக்கும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் கொடுக்கும்படி

யான பெரிய பாக்கியம் கிடைத்தது. அதற்காக இயேசு கிறிஸ்துவிற்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்று குடும்பத்தில் பெரிய போராட்டம் ஏற்பட்டது. மாலை வேளை வரைக்கும் நானும் என் ஆண்டவரும் ஒரு பக்கமிருக்க, என் குடும்பத்தாரும், உறவினர்களும் மறுபக்க மிருந்தனர். அந்தப் பயங்கரமான போராட்டமானது எல்லோரையும் பட்டினியாக இருக்கும்படியான ஓர் சூழ்நிலையை உருவாக்கிற்று. அன்று இரவு இலட்சுமி நாராயண சுவாமி ஆலயத்தில் நான் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தேன். எவ்வளவு முயற்சித்தாலும் தூக்கம் வரவில்லை. நள்ளிரவும் கடந்தது. மணி இரண்டானது. முதல் ஜாமக் கோழியும் கூவிற்று. விடியுங் காலமாயிற்று. என் ஆலோசனைகள் பலவிதமாகப் பிரேக்இல்லாத வண்டிபோல வேகமாகச் சென்று கொண்டிருந்தது. திடீரென மின்னலைப் போன்ற எண்ணம் எனக்குள் தோன்றிற்று. உடனே தைரியமாகத் துணிந்து நின்றேன் என் வாழ்க்கையில் ஏதோ இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று உறுதி கொண்டது. அந்த இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைப் புறஜாதியான மக்களுக்கு தெரிவித்தாக வேண்டும். மறைந்திருக்கிற இந்த இரகசியங்கள் பகிரங்கமாக அநேகர் மூலமாக எடுத்துச் சொல்லப்படுவதற்காக வேண்டி ஒரு புத்தகத்தையும் எழுத வேண்டும். இப்படிப்பட்ட ஊழியத்தைச் செய்ய நான் தீர்மானித்தேன்.

சூரியன் உதயமாவதற்குள் ஆலயத்திலுள்ள ஒலி பெருக்கியைக் கோயில் வாசல் முன் வைத்து இயேசு கிறிஸ்துவின் பிறப்பு சம்பந்தமான காரியங்கள் சாம வேதத்தில் எப்படி எழுதப்பட்டிருக்கிறது என்பதையும், எடுத்துச் சொன்னேன். இந்த விதமாகக் காலை 10 மணி வரைக்கும் சொல்லிக் கொண்டேயிருந்தேன். அதற்குள் மக்கள் கூட்டமாய் ஆலயத்தைச் சுற்றிலும் நின்று கொண்டு நான் சொல்வதை ஆர்வத்தோடு கேட்டு என் வார்த்தையில்

நம்பிக்கை வைத்தனர். இஃது உண்மைதான் என்று அநேக மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். இதைப் பார்த்த என் உறவினர்கள் என்னைத் தடுக்கப் பயந்தனர். ஆனால் மகனே நீ மிகவும் களைத்துவிட்டிருக்கிறாய். காலைக்கடன்களை முடித்துக் கொண்டு சாப்பிடு என்று சொன்னார்கள். நான் அதேவிதமாகக் காலைக் கடன்களை முடித்துச் சாப்பிட உட்கார்ந்து உணவை வாயில் வைக்கும் வேளையில் திடீரென இரண்டு கரங்கள் என் வாயை மூடியது. இன்னும் இரண்டு கரங்கள் என் இரு கரங்களையும் சேர்த்துப் பின்னால் கட்ட ஆரம்பித்தது. இதற்குள்ளாக நான் யாரையும் பார்க்க முடியாதவாறு என் முகத்தையும் தலையையும் துணியால் சுற்றிக் கட்டிவிட்டார்கள்.

இவ்வாறு கட்டப்பட்ட நிலையில் என்னை யாரோ எங்கேயோ தூக்கிக்கொண்டு போனார்கள். சிறிது நேரத்திற்குள் ஆடுமாடுகளை அடிப்பது போல் என்னை பயங்கரமாக அடிக்க ஆரம்பித்தனர். இவ்வாறு பலவகையில் என்னைச் சித்ரவதை செய்தனர். இதற்குள்ளாக நான் சுய நினைவை இழந்துவிட்டேன். எனக்கு மயக்கம் தெளிந்து கண்களைத் திறந்து பார்க்கும் பொழுது நான் இலட்சுமி நாராயண சுவாமி ஆலயத்தில் மூலஸ்தானத்தில் விடப் பட்டிருந்தேன். என் சரீர முழுவதும் அடிகளால் வேதனைப் பட்டுக்கொண்டிருந்தது. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. என் பெரியவர்கள் எதற்காக என்னை இப்படிச் செய்தார்கள் என்று இவ்வாறெல்லாம் நான் யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது பைபிள் வசனம் என் நினைவிற்கு வந்தது.

''நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள்: மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள். அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும் (மத். 5:14,15). அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது. இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை (யோவான். 1:5).

''இயேசுவே பிரம்மா அல்லது சிருஷ்டி கர்த்தா. அவரே உலகத்தை மீட்க மனித அவதாரமெடுத்தவர். அவரே பரம பிதா, பரிசுத்தர். அவரே உலக இரட்சகர். அவர் இரத்தம் சிந்தியதினால்தான் மனுக்குல மனைத்திற்கும் பாவ மன்னிப்பு உண்டானது. இதை நான் வேதங்கள் வாயிலாகவும், பல புத்தகங்களின் வாயிலாகவும் தெரிந்து கொண்டேன். அவரே என் தேவன். அவரே என் இரட்சகர் என்று விசுவாசிக்கலானேன்.

இந்தச் சத்தியத்தை என் வீட்டாருக்கும் என் உறவினருக்கும் தெரிவித்தேன். ஆனால் அவர்களோ இருளில் இருப்பதினால் இந்த ஒளியைப் பற்றிக் கொள்ளவில்லை.

''அவர் ஒளியிலிருக்கிறதுபோல் நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்'' *(1யோவான் 1:7)*.

பாடுகளின் ஆரம்பம்!

என் உறவினர்களெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து எனக்கு விரோதமாகச் சதி செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களுடைய முக்கிய நோக்கமென்ன வென்றால் நான் இயேசுவின் நாமத்தைத் தொழுதுகொண்டு அந்த நாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தால் அவர்களுடை குமாரர், குமாரத்திகளுக்குத் திருமணம் நடக்காது. அவர்களை ஜாதியிலிருந்து தள்ளிவைத்து விடுவார்கள். சமுதாயத்தில் அவர்கள் கேவலமாக மதிக்கப்படுவார்கள். இப்படிப்பட்ட எண்ணங்கள் அவர்களை அச்சுறுத்தியதால் அவைகளிலிருந்து விடுபட என்னைச் சித்ரவதை செய்து அச்சுறுத்தினார்கள். என் வாயினால் இயேசுவின் நாமத்தைச் சொல்லாமல் செய்ய வேண்டுமென்பதே அவர்களுடைய நோக்கமாக இருந்தது.

அந்த இரவு அவர்கள் ஆலயத்தின் மூலஸ்தானத்திற்கு வந்து ''எப்படி இருக்கிறது'' என்று என்னைக் கேவலமாகப் பேசி வேடிக்கையாகப் பார்க்க ஆரம்பித்தனர்.

''நான் என்ன தவறு செய்தேன்? என்னை ஏன் இவ்வாறு சித்ரவதை செய்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

அதற்கு அவர்கள் ''இந்த மட்ட ஜாதியான உறவு உனக்கு எப்படிக் கிடைத்தது? இதை விடடுவிடப் போகிறாயா? இல்லையா? என்று கேட்டார்கள்.

அதற்கு நான் ''நம்முடைய வேதங்களும், புத்தகங்களுமே இயேசு கிறிஸ்துவை குறித்துச் சாட்சி கொடுக்கின்றன. அவ்வாறெனில் அவைகள் கேவலமான மட்ட ஜாதிப் புத்தகங்களா? இந்த விஷயத்தில் உங்களுக்கு என்பேரில் ஏன் இவ்வளவு கோபம். எனக்கு விருப்பமான தேவனை நான் ஆராதிப்பேன். அதைத் தடுக்க உங்களுக்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. ஒரு கொடிய மிருகத்தை அடித்துத் துன்புறுத்துவதுபோல் என்னை அடித்துத் துன்புறுத்து கிறீர்கள். குலம், ஜாதி, மதம், வம்சம் என்று சொல்லி என்னை மிரட்டுகிறீர்கள். முதல் மனிதன் (ஆதிமனிதன்) சிருஷ்டிக் கப்பட்ட வேளையில் அவனுக்கு எந்தவிதமான ஜாதி இருந்தது. அவன் மதம் என்னவாய் இருந்தது. ஒன்றும் அறியாத மக்களுக்கு ஆசாரியர்களாகிய நாம் கவிஞன் எழுதிய கவிதைகளைச் சத்தியமாக மாற்றி ஒன்றுமில்லாததும் அவைகளை கைவேலையினால் பல ரகமான உலோகங் களினால் செய்யப்பட்டதுமான பொம்மைகளைத் தேவர் களென்று சொல்லி, மக்களைப் பிரமிக்கச் செய்துவிட்டு, மக்களைத் தவறான பாதையில் வழி நடத்திய நாமே இந்த விக்கிர ஆராதனைக்குக் காரணமாவோம்.

இந்த ஆலயத்தில் இருக்கிற இந்தக் கல், மரவிக்கிரகம் உண்மையான தேவனா? இது ஆகாயத்திலிருந்து கீழே விழுந்ததா? இதை நீங்கள் விலைகொடுத்து வாங்க வில்லையா? தேவன் ஏதோ ஒரு உருவமுடையவராக இருக் கிறார் என்று நினைக்கிறீர்களா? ஏதோ சில பழங்களினாலும், பூக்களினாலும் அவரைப் பூஜை செய்துவிடலாமா? தேவன் ஒளியாய் இருக்கிறவரல்லவா? இந்த ஆலயத்தில் நாம் விளக்கு வைக்காவிட்டால் இலட்சுமி நாராயணசாமி

இருட்டில்தான் இருக்க வேண்டியிருக்குமா? உலகத்தார் வணங்கும் தேவர்கள் இருளிலே இருக்கிறார்களா? இல்லையா? நாம் வைக்கும் விளக்கு எந்த அளவுக்கு வெளிச்சமாய் இருக்க முடியும்? நாம் வைக்கும் விளக்குகளிலிருக்கிற எண்ணெய் தீர்ந்துபோன உடனே நம்முடைய தேவர்கள் இருளடைந்துவிடுகிறார்கள். இருளி லிருக்கிற தேவனைத் தொழவேண்டிய நாம் இருளுக்குள் இருட்டறைக்குள் போகவேண்டி இருக்கிறது. இவை யாவும் மூட நம்பிக்கை; மோசம் என்று மக்களுக்குப் போதித்து வேதங்களிலிருக்கிற பரிசுத்தாவியாகிய மரித்து உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சத்தியங் களை மக்களுக்குப் போதிப்பதில் என்ன தவறு இருக்கிறது? இதற்காகத்தானே நீங்கள் என்னை இப்படி வேதனைப் படுத்துகிறீர்கள்? என்னை விட்டுவிடுவீர்களானால் நான் இனி ஒருபோதும் இந்தப் பக்கம் வராமல் உங்கள் கண்ணில் படாமல் எங்கேயாவது போய்விடுவேன்.

என் கால்களிலும், கைகளிலும் கட்டியிருக்கிற இந்தக் கட்டுகளை அவிழ்த்துவிடுங்கள் என்று கேட்டுக்கொண்டி ருக்கையில் அவர்கள் பயங்கரக் கோபங்கொண்டு ''நாங்கள் மதிகெட்டவர்களா? முட்டாள்களா?'' என்று கேள்வி கேட்டு அவர்கள் கொண்டு வந்த தடிகளினால் என்னை இரண்டு பக்கங்களிலும் குத்தவும், அடிக்கவும் தொடங்கினார்கள். இதனால் என்னுடைய வலதுபுற விலா எலும்பு முறிந்து விட்டது. இடது புறத்தோள்பட்டை எலும்பு நழுவிவிட்டது. (joint dislocated) திடீரென மயக்க மடைந்துவிட்டேன். மயக்கம் தெளிந்து பார்க்கும்போது விடியற்காலமாகிக் கொண்டி ருந்தது. எனக்கு விடுதலை கிடைக்குமா? என்கின்ற பயம் என்னைப் பற்றிக் கொண்டது. நான் எப்படியாவது விடுதலை பெற வேண்டும் என்கிற எண்ணத்தைத்தவிர வேறொன்றும் செய்ய முடியாத நிலையில் மனமொடிந்து போனேன். விலா எலும்பு வேதனை கொடுக்க ஆரம்பித்தது. தோள் பட்டையின் பயங்கர வலி என்னை அதிகமாகப் பயமுறுத்த ஆரம்பித்தது. அதற்குள்ளாக மூன்று நாள்கள் கடந்துவிட்டன. எனக்குச்

சாப்பாடோ தண்ணீரோ எதுவுமே அவர்கள் கொடுக்கவில்லை.

மூன்றாவது நாள் இரவு அவர்கள் என்னிடத்தில் வந்து, நாளைக் காலை உன் அப்பா உன்னைப் பார்க்க வருவார்கள். நீ ஏன் இப்படி இருக்கிறாய் என்பதற்கான காரணத்தை நீயே அவரிடத்தில் சொல். ஒரு வேளை அவர் உன்னை விடுதலை செய்யலாம் இல்லையா? அல்லது இந்த மட்ட ஜாதி தேவனையாவது வேண்டிக் கொள்ளும். அவனாவது உன்னை விடுவிப்பானோ? என்னவோ? என்று சொல்லிப் போய் விட்டார்கள்.

''எனக்குத் தாகமாக இருக்கிறது கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்'' என்று கேட்டேன். ஆனால் அவர்கள் தண்ணீர் கொடுக்கவில்லை. ''உன் தேவனைக் கேளும். அவரே உனக்குத் தண்ணீர் கொடுப்பார்'' என்று சொல்லிப் பரிகாசம் செய்தார்கள்.

என் தாய் தகப்பனாருடன் விவாதம்!

நான்கவாது நாள் மத்தியானம் ஆலயத்தின் கதவு திறக்கப் படுவதைப் பார்த்தேன். என்னை அன்பாய் நேசித்து வளர்த்த என் தகப்பனார் உள்ளே வருவதைக் கவனித்தேன். எனக்கு விடுதலை கிடைக்கும் என்று சந்தோஷப்பட்டேன். ஆனால் என் தகப்பனாரோ என்னருகில் வந்து ''மதிகேடான ஜாதி கெட்டவனே! நீ பிறக்கும் போதே மட்டமான ஜாதியில் பிறந்திருக்க வேண்டியவன். ஆனால் எப்படியோ இந்த பரவஸ்து வம்சத்தில் பிறந்துவிட்டாய்? என்று ஜாதகம் பார்க்கக்கூடிய உன் தாத்தா சொன்னார். அது அத்தனையும் உண்மையாகிவிட்டது. உன் நோக்கம்தான் என்ன? எங்களை அவமானப்படுத்திச் சாதிகெட்டவர்களாக்க வேண்டுமென்பதா? உன் விஷயமாக எல்லாவற்றையும் கேள்விப்பட்டு உன்னிடம் வந்தேன் என்று சொல்லிக் கொண்டிருக்கையில் நான் குறுக்கிட்டு ''அப்பா! நீங்கள் கேள்விப்பட்ட அத்தனையும் பொய். வஞ்சனையான பேச்சுக்கள் நான்

தவறொன்றும் செய்யவில்லை. இயேசுவே தேவனென்றும், எவ்வளவு பெரிய பாவியாகிலும் அவனை மன்னித்து நேசிக்கிற பாவிகளின் இரட்சகரென்றும் சொன்னேன். அவ்வளவுதான் அவரை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுகிறவர்கள் மாத்திரமே பரலோகத்திற்குப் போக முடியும். மற்றவர்கள் நரகத்திற்குத்தான் போவார்கள் என்று என் தகப்பனாரிடம் சொல்லிக் கொண்டிருக்கும் போது (போதித்துக் கொண்டு இருக்கும்போது) அவரும் பயங்கரக் கோபமடைந்து பலவிதமாக என்னைத் தூஷித்து ''நீ நாய் வாலைப் போன்றவன் எனவே உனக்கு இந்தத் தண்டனை போதாது'' என்று சொல்லி வெளியே போகிறவர், தன் காலால் என்னை எட்டி உதைத்துவிட்டுப் போய்விட்டார். அந்த அடியால் என் இருதயம் பயங்கரமாக வலிக்க ஆரம்பித்தது. அந்த இரவு விடுதலைக்காக யோசித்துக் கொண்டிருந்தேன். ஐந்து நாள்கள் ஆயிற்று. அன்று மாலை எனக்குப் புத்திமதி சொல்லி என்னை மாற்றும்படி என் தாய் அனுப்பி வைக்கப்பட்டார்கள். அவர்களோடு அந்த நாள் முழுவதும் அநேக விதமான வாதங்கள் நடந்தன. கடைசியாக அம்மா! உனக்குத் தேவ ஞானமில்லை. எனவே இப்படிப் பேசுகிறாய்! என்று சொன்னேன். அவர்களோ எதற்காக என் வயிற்றில் பிறந்தாயோ? பிறந்த போதே செத்துவிட்டாய் என்று நினைத்துக் கொள்கிறேன் போடா இவை யாவும் உன் கர்மம்! என்று சொல்லி என்னை விட்டுவிட்டுப் போய் விட்டார்கள். ஆறுநாள்களும் கடந்தன. ஏழாவது நாள் காலையில் எனக்குக் கொஞ்சமேனும் சுய நினைவு இல்லை. அந்த வேளையில் யாரோ சிலர் வந்து தரையில் வீழ்ந்து கிடக்கிற என் சரீரத்தை அப்படி இப்படியுமாய்ப் புரட்டிப் பார்த்து விட்டுப் போய்விட்டார்கள். ஏழாவது நாள் என் வாழ்க்கையில் கடைசி நாள் போல் எனக்குக் காட்சியளித்தது. நான் மரிக்கும் நிலைக்கு வந்துவிட்டேன். அவர்கள் ஒன்றிற்கும் உதவாத ஜாதி மதத்திற்காக, அந்தஸ்துக்காக என்னை இவ்வாறு கொடுமைப்படுத்தினார்கள். நான் மரித்துப் போவதே நல்லது என்று அவர்கள் தீர்மானித்து அன்று இரவே

என்னைக் கொன்றுவிட நிச்சயித்தார்கள். சுமார் பத்துபேருக்கு அதிகமாக உட்கார்ந்து ஆலோசித்தார்கள். ஊரெல்லாம் அமைதியாகிவிட்டது. இனி எனக்கு விடுதலை கிடைத்தாக வேண்டும் என்று தீர்மானித்துவிட்டேன். கடைசியாக இயேசுவை நோக்கி ஜெபிக்க வாஞ்சித்தேன்.

விடுதலை!

என் ஆலோசனையில் ஆண்டவர் மாத்திரமே மிகுதியாக நின்றார். இந்த நிலையில் தேவனைத் தவிர வேறு யாரும் என்னை விடுவிக்க முடியாது என்று தீர்மானித்து சொல்லண்ணா பெருமூச்சோடு அவரை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தேன். தேவனென்று ஒருவர் இருப்பாரானால் அவர் என்னை விடுதலை செய்யட்டும். எனக்குக் காட்சி தரட்டும்; என்னோடு பேசட்டும்; தேவன் இல்லை என்றால் நான் மரித்துப் போகட்டும் என்று ஜெபித்துக் கொண்டேன். இப்படி நான் சிந்தித்துத் தியானித்துக் கொண்டிருக்கையில் சிறிது நேரத்தில் மெதுவாகத் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. நான் மிகுந்த அச்சமுற்று யாரது? என்று வினவி கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தேன். ஒரு தேவ தூதனைப் போன்ற ஒருவர் என் கண்களுக்குத் தெரிய அவர் என்னை நோக்கிப் பார்த்தார். நானும் அவரை நோக்கிப் பார்த்தேன். அக்கினி மயமான அவர் முகத்தையும் பிரகாசிக்கின்ற அவர் கண்களையும் பசும்பொன் போன்ற அவருடைய அழகிய பாதங்களையும் என்னால் பார்க்க முடிந்தது. அவர் சரீரத்திலிருந்து வீசிய ஒளி என்மேல் விழ ஆரம்பித்தது. அவர் மெதுவாக என்னிடம் வந்து நின்று ''என் மகனே! பரவஸ்து! நீ எழுந்து காலூன்றி நில்'' என்றார். அப்பொழுது நான் ''ஐயா! நான் கட்டப்பட்டிருப்பதை நீர் அறிவீர். தண்ணீரில்லாமல்; ஆகாரமில்லாமல் விழுந்து கிடப்பதையும் நீர் அறிவீர். நீங்கள் என் கட்டுகளை அவிழ்த்துவிட்டால் அப்பொழுது நான் எழுந்து நிற்பேன்'' என்று தாழ்மையாய் வேண்டிக் கொள்ளும்பொழுது அவர் புன்னகையுடன் தரையளவு குனிந்து தன் வலக்கையினால் என் வலக் கையைப் பிடித்து

எழுப்பினார். அவர் என்னை அவ்வாறு எழுப்பும்போது என் கால்களிலும், கைகளிலும் கட்டப்பட்டிருந்த சங்கிலிகள் அறுந்து கீழே விழுந்தன. அதன் சத்தத்தைக் கேட்டுப் பின் பக்கம் பார்த்து இவர் உண்மையான ஒரு தேவனாகத்தான் இருக்க வேண்டுமென்று தீர்மானித்தேன். அதற்குள் என் உடைந்த என் விலா எலும்பைத் தொட்டுப் பார்த்தேன். அதுவும் சுகமடைந்திருந்தது. என் இரண்டு கரங்களையும் மேலே உயர்த்தித் திரும்பப் பார்த்தேன். சந்தேகமின்றி பரிபூரண ஆரோக்கியம் எனக்குக் கிடைத்துவிட்டது. என் உடம்பு முழுவதிலும் ஏற்பட்டிருந்த கருப்பு சிவப்பு காயங்களைப் பார்த்தேன். அஃது என் உறவினர்கள் என்னை அடித்ததினால் ஏற்பட்ட காயங்களின் வடுக்கள். அஃது அப்படியே இருந்தன. அதுவரை என் முன் நின்றவர் புன்னகையுடன் என்னை நோக்கிப் பார்த்துக் கொண்டேயிருந்தார். எனக்கு ஏற்பட்ட இந்த அற்புதமான மாறுதலுக்காகவும் விடுதலைக்காகவும் மிகவும் ஆச்சரியப்பட்டு அவர் பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினேன். அவர் என்னைத் தூக்கி எடுத்து ''மகனே! நீ எழுந்து நில். நான் உன்னோடு பேச வேண்டியிருக்கிறது'' என்றார். நானும் சரி ஆண்டவரே! அடியேன் கேட்கிறேன்'' என்றேன். அவர் ''மகனே! விடுதலையாக்கப்பட்டிருக்கிறாய். நான் உனக்குத் துணை நிற்பேன் பயப்படாதே! நானே உன்னைப் பாலப்படுத்தி உனக்கு சகாயம் செய்வேன். திகையாகே! கலங்காதே! நானே உன் தேவன். உன்னைப் பகைத்தவர்கள் யாவரும் வெட்கப்பட்டுப்போவார்கள். உன்னோடு வழக்காடியவர்கள் அழிந்து போவார்கள். நீ என் நாமத்தைப் பிரகடனம் செய்'' என்றார்.

அதற்கு நான் ''ஆண்டவரே! நீ யார்? உன் பெயரென்ன? உன் பெயர் அறியாமலேயே நான் உன்னை எப்படிப் பிரகடணம் செய்ய முடியும்? நீங்கள் இராமனா? கிருஷ்ணனா? வெங்கடேஸ்வரரா? சிவனா? சங்கரனா? யார்? உன் உண்மையான தோற்றமென்ன? அல்லது தாங்கள் இயேசு கிறிஸ்துவா? இயேசு கிறிஸ்துவானால் உங்கள் சரீரம்

நொறுக்கப்பட்டதாகச் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் காட்சியில் நான் உம்மைப் பார்த்திருக்க வேண்டுமே? ஆனால் இப்பொழுதோ உன் சரீரத்தில் காயங்கள் ஏதும் காணப்படவில்லையே! எனவே நீர் யார் என்று என்னால் விளங்கிக் கொள்ள முடியும்? தயவு செய்து நீர் மறைந்து போகாமல் கொஞ்சநேரம் என்னுடன் பேசி என் சந்தேகங்களை நிவர்த்தி செய்ய வேண்டுமாய் வேண்டிக் கொள்கிறேன் தேவன் பக்தர்களுக்கு தரிசனம் கொடுத்துச் சற்று நேரத்திற்குள்ளாக மறைந்து போவதாக அநேக புத்தகங்களில் படித்திருக்கிறேன். நீங்களும் அவ்வாறு மறைந்து போவீர்களானல் என் சந்தேகங்களை யாரால் தீர்க்க முடியும்? சாம வேதத்தின் இரண்டாம் பகுதியாகிய ''தாணடி மாக பிராம்மணத்தில்'' ''பிரஜா பதிர்தே வேபிலம்'' என்று சுலோகம் இருக்கிறது. அந்த யாகம் யார் செய்தது? அதோடு ''சர்வ பாவ பரிஹாரோ'' என்று வேறொரு சுலோகம் இருக்கிறது. இந்தச் சுலோகங்கள் யாரைக் காட்டுகிறது? அது மாத்திரமல்லாமல் சாம வேதத்திலேயே ''லிவ்ஹய கோப்த்தாரம்'' என்று எழுதப்பட்டிருக்கிறது. யார் இந்த பரமாத்மா? இந்த அவதார சம்பந்தமான காரியங்கள் யாரைக் குறிக்கிறது? யார் இந்த பரமாத்தமா? இந்த அவதார சம்பந்தமான காரியங்கள் யாரைக் குறிக்கிறது? என்று கேட்டுக் கொண்டிருக்கையில் இமைப்பொழுதில் அவர் மறைந்து இயேசு சிலுவையில் தொங்கும் காட்சி என் கண்முன் தோன்றியது. நான் பயந்து நடுங்கிச் சாஷ்டாங்கமாய் அவர் பாதத்தில் விழுந்து வணங்கி ''ஆண்டவரே! என்னை மன்னியும்!'' என்றேன்.

அவரோ கம்பீரமாக உரக்க ''நீ விசுவாசிக்க முடியுமானால் விசுவாசி விசுவாசிக்கிறவனால் எல்லாம் கூடும்'' என்றார். நான் எழுந்து நின்று ''ஆண்டவரே உம்முடைய நாமமே யல்லாமல் வேறொரு நாமத்தில் இரட்சிப்பில்லை. நீரே இரட்சகர். நீரே தேவனென்று'' சொல்லி அவரை வணங் கினேன். உடனே சிலுவைக் காட்சி மறைந்து ஆண்டவர் என் முன் நிற்பதைக் கண்டேன். மறுபடியும் நான் மனப்பூர்வமாக

என் ஆத்துமா சாந்தியடையுமட்டும் அவரை விழுந்து வணங்கினேன். தெளிவாக என்னால் அவரைப் பார்க்க முடிந்தது. அவரின் அழகை என்னால் விவரிக்க முடியாது. அவரின் வார்த்தைகளில் இருக்கிற ஆறுதல், இனிமை என் மனதைக் குளிரச் செய்தது. இயேசு ஆண்டவரே துதிப்பதற்கு அதாவது தெய்வமாய் ஆராதிப்பதற்கு உண்மையானவர். அவர்தான் தெய்வம் என்று சொன்னதற்கு இந்த மக்கள் என்னை இப்படித் தண்டிக்கிறார்கள்! உன் நாமத்தை நீர் எனக்குச் சொன்னவாறு இந்த மக்களுக்குச் நான் சொன்னால் சொல்லும்போதெல்லாம் எனக்கு இப்படித்தான் நடக்குமா? என்று அவரைக் கேட்டேன். அவரோ "உன்னோடு வழக் காடுகிற யாவரும் அழிந்து போவார்கள். இன்று முதல் நீ என் தாசன். நான் உன்னைத் தெரிந்து கொண்டேன். நீ சென்று எல்லா மக்களுக்கும் நானே தேவனென்றும், என்னையன்றி வேறொரு தேவன் இல்லை என்றும் நீ கண்ட எல்லாவற் றையும் எடுத்துச் சொல் தயங்காதே! நான் உனக்குத் துணை நிற்பேன்" என்று கட்டளையிட்டு என்னை ஆலயத்தின் வாசல் வரைக்கும் அழைத்துக் கொண்டு வந்து "நீ வலது புறமாகப்போ" என்று சொல்லி, என் கண்களைவிட்டு மறைந்து போனார்.

நான் வெளியே வந்து நின்று யோசிக்கலானேன். நான் வலது புறமாகப் போனால் அந்த வழி காட்டுக்குத்தான் போகும். அங்கு மலைகள், குன்றுகள் தவிர வேறொன்றும் இருக்காது. இடது புறமாகப் போனால் எங்கள் ஊருக்கு வெளியே சென்று பஸ்ஸிலோ, அல்லது இரயிலிலோ பிரயாணம் செய்து எங்கேயாகிலும் போகலாம் என்று நினைத்து இடப்புறமாக நடக்கலானேன். இடது புறத்தில்தான் எங்கள்வீடும் இருக்கிறது. எங்கள் வீட்டுத் திண்ணையின் மேல் சுமார் பத்து பேருக்கு அதிகமான ஆட்கள் அமர்ந்திருப்பதை நான் கவனிக்கவில்லை. ஊர் முழுவதும் அமைதியாய் இருக்கும் வேளை. இவர்கள் இங்கு அமர்ந்துகொண்டு எப்படி என்னைத் தீர்த்துக் கட்ட வேண்டுமென்று திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார்கள்.

''கர்த்தர் ஜாதிகளின் ஆலோசனையை விருதாவாக்கி ஜனங்களுடைய நினைவுகளை அவமாக்குவார்'' சங்கீதம் *33:10.*

''நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும். கர்த்தரோ அவைகளிலெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்'' சங்கீதம் *34:19.*

திடீரென ''யார் அங்கே'' என்று கர்ச்சிக்கின்ற சிங்கத்தைப்போல ஒரு குரல் கேட்டது. நானோ பயந்து ஓட ஆரம்பித்தேன். அவர்களோ என்னை விரட்டிக் கொண்டு வந்தார்கள். யார் கதவைத் திறந்தார்கள்? யார் விடுவித்தார்கள்? என்று என் தாத்தா பயங்கரமாகச் சத்தமிட்டுக் கொண்டிருக்க மற்றவர்கள் என்னை அடிக்க ஆரம்பித்தார்கள். நான் கீழே விழுந்துவிட்டேன். அதற்குப் பிறகு எனக்கு என்ன நேர்ந்தது என்று தெரியாது. நான் மரித்து உயிர்ப்பிக்கப்பட்டேனோ அல்லது மயக்கமடைந்து மறுபடியும் மயக்கம் தெளிந்து விழித்துக் கொண்டேனோ? நான் அறியேன்! நான் அறியேன்!!

''கர்த்தரின் கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது'' சங்கீதம் *34:15.*

''அவருக்குப் பயந்து தமது கிருபைக்காகக் காத்திருக்கிறவர்களின் பேரில் கர்த்தரின் கண்கள் நோக்கமாயிருக்கிறது'' சங்கீதம் *18:19.*

நான் எழுந்து நின்று பலம் பெற்றவனாகி இயேசுவைத் துதித்துக்கொண்டே முன்னேறிச் சென்றேன். கர்த்தர் எனக்குச் சொன்ன வார்த்தைகளை நினைவு கூர்ந்தேன். அவர் என்னை வலப்புறமாகப் போகச் சொன்னார். நான் இடப்புறமாகச் சென்றேன். அதற்குத்தான் இவ்வளவு துன்பங்கள். (இந்நாள்களிலும்கூட தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல் தேவனுடைய சித்தத்தை அறியாமல் தங்கள் சுய

ஞானத்தால் துன்பப்படும் அநேக ஊழியக்காரரையும் குடும்பங்களையும் ஏராளமாகப் பார்க்க முடியும்)

நான் ஒரு ஏரிக்கரையின் மேல் நடந்து கொண்டிருந்தேன். அது இரவு நேரம். எனக்குத் தாகமாயிருந்தது. தண்ணீர் குடிக்க வேண்டி ஏரியில் இறங்கித் தண்ணீர் குடித்துவிட்டு மேலே வரும்பொழுது எனக்கு முன் ஒரு கரடி நின்று கொண்டிருந்தது. அதைக் கண்ட நான் ''இயேசுவே என்னை இரட்சியும்'' என்று சத்தமாய் அழுதேன். அந்தக் கரடி தன் இரண்டு கால்களையும் மேலே தூக்கிப் பெரிய சத்தமிட்டுத் தன் வழியில் அது போய்விட்டது. நான் அதிகப் பசியோடு இருந்ததினால் என்கால்கள் நடக்க முடியாமல் நடுங்க ஆரம்பித்தன. நான் அந்த ஏரிக்கரையில் அமர்ந்துகொண்டு மேலே ஆகாயத்ததையும் அதிலுள்ள மேகங்களையும் நட்சத்திரங்களையும் சந்திரனையும் உற்றுப் பார்த்துக் கொண்டு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்னோடு பேசின அந்த ஒன்றரை மணி நேர சம்பாஷனையை நினைவுகூரலனேன். பசி தாங்க முடியாமல் அழ ஆரம்பித்தேன். வானத்திற்கு நேராக என் கைகளை உயர்த்தி ''எல்லாவற்றிற்கும் மேலான ஆண்டவராகிய இயேசுவே? என்னத்தை உண்போம்? என்னத்தைக் குடிப்போம்? என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார். மத்தேயு *6:31-32* என்று வாக்களித்தவரே! நான் பசியோடிருப்பது உனக்குத் தெரியவில்லையா?'' என்று பசியின் கொடுமையைத் தாங்க முடியாதவனாய் என் கைகளால் தலையில் அடித்துக் கொண்டிருந்தேன்.

இரண்டாவது தேவ தரிசனம்!

''நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' என்ற ஒரு கம்பீரக் குரலைக் கேட்டுக் கண்களைத் திறந்து பார்த்தேன். எனக்கு முன் ஒரு மேய்ப்பன் ஒரு கையில் ஒரு மண் பாண்டத்தையும், மறுகையில் ஒரு கோலும் பிடித்துக்

கொண்டு நிற்பதைக் கண்டேன். ''ஐயா! பசி தாங்க முடியவில்லை. நடக்கவும் முடியவில்லை; என்று நடந்த எல்லா நிகழ்ச்சி களையும் சுருக்கமாக அவருக்கு விவரமாக சொன்னேன். அவர் என்மேல் கிருபை கூர்ந்து அவர் கையிலுள்ள பாத்திரத்தை எனக்கு கொடுத்து இந்தப் பாலைக் குடி'' என்றார். நான் அதை வாங்கிக் குடித்தேன். அது சூடாகவும் மதுரமாகவும் இருந்தது. அவர் என்னைப் பார்த்து ''எழுந்து நில்'' என்றார். நான் எழுந்து நின்றேன். அதோ எதிரில் தெரிகிற ஓட்டு வீட்டிற்குச் சென்று ஓய்வெடுத்துக்கொள்'' என்று சொல்லிப் போய்விட்டார். நான் திரும்பிப் பார்த்தபோது ஒருவரையும் அங்குக் காணவில்லை. அவர் சொன்ன அந்த ஓட்டு வீட்டை நோக்கி ஓடிக் கொண்டிருந்தேன்.

திடீரென ஒருவர் அந்த நிலா வெளிச்சத்திலே ''யார் அங்கே?'' என்று பயங்கரச் சத்தம் போடுவதைக் கேட்டேன். அதைக் கேட்டு நான் அப்படியே அங்கேயே நின்றுவிட்டேன்.

ஒரு மனிதர் என்னருகே வந்து அந்த நிலா வெளிச்சத்தில் என்னை உற்றுப் பார்த்து அடையாளம் கண்டு கொண்டு ''ஓ! சுவாமி அவர்களா? என்ன ஆச்சரியம்? எங்கே ஐயா ஓடிக் கொண்டிருக்கிறீர்கள்? இந்த இரவுவேளையில் ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள்? நான் இந்த ஊரைச் சேர்ந்தவன் தான். நான் ஒரு கிறிஸ்துவ போதகர். அதோ தெரிகிறதே ஒரு வீடு. அதுதான் என்வீடு. என் பெயர் இயேசு இரத்தினம். உங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வேன். ஐயா, வாருங்கள். என்று என்னை அன்போடு தட்டிக் கொடுத்து ஆறுதலாகப் பேசி என்னை அவர் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனார். நான் தைரியமடைந்து அவர் பின்னாலேயே நடந்து கொண்டே சற்று நேரத்திற்கு முன்பு நடந்த நிகழ்ச்சியை (தரிசனத்தை) நினைவு கூர்ந்தேன். எனக்குப் பால் கொடுத்த அந்த மேய்ப்பன் சொன்ன வார்த்தைகள் எவ்வளவு உண்மையாயிற்று. மறைந்து போன அந்த மேய்ப்பன் யார்? தேவனா? உண்மையிலே இயேசு

கிறிஸ்துவா? இயேசு கிறிஸ்துவானால் அந்த இலட்சுமி நாராயண சுவாமி கோயிலில் நான் பார்த்த தோற்றம் போல் இல்லையே? அன்று அவர் ஒரு தேவ தூதனைப் போல் பிரகாசமுள்ளவராக காணப்பட்டார். இவரோ ஓர சாதாரண மனிதரைப் போல் இருக்கிறார். அவர் மறைந்து போனர். இவரும் மறைந்து போனார். இருவருடைய குரலும் ஏறத்தாழ ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. இப்படி எல்லாம் நான் யோசித்துக் கொண்டு அவர் பின்னாலே நடந்து செல்லுகையில் அவர் என் சிந்தனைகளை நீக்கி "சுவாமி! தாங்கள் எப்படி விடுவிக்கப்பட்டீர்கள்? தாங்கள் இந்த உலகத்தில் இனி இருக்கக் மாட்டீர்கள். மரித்திருப்பீர்கள் என்று நினைத்தோம். ஆனால் இன்று இரவு உங்களுக்கு ஏதோ ஆபத்தான காரியம் ஒன்று நேரிடப் போகிறதென்று இரகசியமாகச் கேள்விப்பட்டோம். தாங்கள் தேவ தரிசனம் பெற வேண்டும் என்றும், அந்தக் கொடியவர்களுடைய கைகளிலிருந்து தேவன்தாமே தங்களைத் தப்புவிக்க வேண்டுமென்றும் உபவாசமிருந்து ஜெபிக்கும்படியாக எங்கள் சபை மக்களுக்கு எல்லாம் சொல்லியிருந்தோம். தேவனுடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம். தேவன் எங்கள் ஜெபத்தை கேட்டு இன்று இரவு தங்களை எங்கள் வீட்டிற்கு வரும்படியாகக் கிருபை செய்திருக்கிறார்" என்று பேசிக் கொண்டே நாங்கள் வீட்டிற்குப் போனோம். அப்பொழுது தான் அவர்கள் மனைவி ஜெபத்தை முடித்து வெளியே வந்து பாஸ்டர் இடத்தில் "ஐயா! இப்பொழுதான் ஜெபத்தில் ஒரு தரிசனம் கண்டேன். அதில் இதோ இவரைப் போன்ற ஒரு இந்து பூசாரி உம்மோடு கலந்து வருவதாகத் தேவன் காண்பித்தார்" என்று சொல்லிக் கொண்டே என்னை உற்றுப் பார்த்து என் சரீரத்தின் மேல் ஏற்பட்ட காயங்களையும் பார்த்து ஆச்சரியப்பட்டு இவருக்காகத்தானே நாம் ஜெபம் செய்தோம். நம் ஜெபத்தைக் கேட்டு ஆண்டவர் இவரைக் காப்பாற்றி இருக்கிறார்" என்று தன் கணவரிடம் சொன்னார்கள். அவர் "நன்றாக விளங்கிக் கொண்டாயே" ஆம்! இவர்தான் அந்தச் சுவாமியாக இருந்தவர். நம் தேவன்

பெரிய தேவன். ஜெபத்தைக் கேட்கிற தேவன் ''கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்'' என்று வாக்களித்ததுபோல் நம் ஜெபத்தைக் கேட்டு இந்தப் பரவஸ்து அவர்களைத் தேவன் மரண அபாயத்திலிருந்து தப்புவித்திருக்கிறார்'' என்று அவர்கள் இருவரும் பேசிக் கொள்வதைக் கேட்டு ஆச்சரியப்பட்டேன். ஆம்! தேவன் நீதிமான்களின் ஜெபத்தைக் கேட்கிறவர். அன்றிரவு அவர்கள் சமைத்து எனக்கு உணவளித்தார்கள். நான் படுக்கும்போது என் காயங்களுக்கு என்ணெய் பூசி அதிகமாக உபசரித்தார்கள். தேவன் தாமே அந்தத் தம்பதிகளை ஆசீர்வதிப்பாராக!

அந்த வீட்டில் ஐந்து நாள்கள் தங்கியிருந்தேன். ஓய் வெடுத்த பிறகு, தேவ தரிசனத்தின்படி தேவ கட்டளைக்குக் கீழ்ப்படிந்து பிரயாணம் செய்ய ஆயத்தமானேன். அவர்களும் அவர்கள் சபையோடும் என்னை வழியனுப்புகையில் மிகவும் வேதனைப்பட்டார்கள். ஜெபத்தோடு என்னை வழியனுப்ப வேண்டும் என்பதற்காக அவர்களில் அநேகர் இரயில் நிலையம் வரை வந்தார்கள். நான் அங்கு தங்கியிருந்த அந்த ஐந்து நாட்களிலும் நான் சொன்ன வார்த்தைகளையும், சாட்சிகளையும் கேட்ட அநேக மக்கள் இந்து தேவர்களை விட்டு மெய்த் தேவனை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களும் என்னுடன் வந்திருந்தார்கள். அவர்கள் டிக்கெட் வாங்கிக் கொடுத்து செலவுக்கு நூறு ரூபாய் சொடுத்து என்னை வழியனுப்பி வைத்தார்கள். தேவ தரிசனம் பெற்றிருந்த தினால் என்னை யாரும் தடை செய்ய முடியவில்லை. அதற்கு முன்பு என்னை அங்கேயே அவர்களுடனேயே இருந்து விடும்படியாக வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுதோ தேவக் கட்டளைக்குக் கீழப்படிந்து பாஸ்டர் ஐயா அவர்கள் எனக்கு ஒரு சட்டையும் தன்னுடைய பேண்ட்டையும் கொடுத்து உடுத்திவித்து ஒரு வேதாகமத் தையும் என் கைளில் கொடுத்து என்னை இரயில் ஏற்றி விட்டார். டிக்கெட் எதுவரைக்கும் எடுக்கப்பட்டதோ எனக்குத் தெரியாது. ஆனால் கட்டாக் (Cuttack) என்று அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டதை மாத்திரம் கேட்டேன்.

வண்டி மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. என் சிந்தனைகள்கூட மெதுவாக நகர ஆரம்பித்தன. என் சிந்தனையில் எத்தனையோ மணி நேரம் கடந்துவிட்டது. கழிவு அறைக்குப் போக வேண்டியிருந்தது, நாங்கள் ஆசாரியராகையால் என் மேலே போட்டிருந்த துண்டை அறையில் கட்டிக் கொண்டு கழிவு அறைக்குள் போனேன். காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெளியே வந்து பார்க்கும் பொழுது நான் விட்டுச் சென்ற துணிகள் காணப்படவில்லை. அதில்தான் இரயில் டிக்கெட்டும் பணமும் இருந்தது. பசியோடும் ஏமாற்றத்தோடும் வண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். "நான் எங்கு போக வேண்டும்? யார் வீட்டிற்குப்போக வேண்டும்? என்ன செய்ய வேண்டும்? என்பிழைப்பு எப்படி? என்று இப்படிப்பட்ட எண்ணங்களினால் அலைகழிக்கப்பட்டு மனம் குழம்பிக் கலங்கிக் கொண்டிருக்கும்போது இரயில் நின்ற ஸ்டேஷன் கட்டக் என்று தெரிய வந்தது. வண்டியில் இருந்து இறங்கிப் பிளாட்பாரத்தில் நடந்து கொண்டிருக்கும்போது போலீஸ்காரர்கள், டிக்கெட் பரிசோதகர்கள். சுற்றிக் கொண்டிருப்பதைப் பார்த்து பயந்து போனேன். ஒரு காவல்காரர் என்னைப் பிடித்துக் கொண்டு உற்றுப் பார்த்து "டிக்கெட் எங்கே?" என்று கேட்டார். நான் "இல்லை" என்றேன். உடனே அவன் கையில் வைத்திருந்த துப்பாக்கியால் என் வயிற்றின் பக்கத்தில் ஓங்கிக் குத்தினான். அந்த அடியை நான் தாங்காமல் துடிதுடித்துக் கீழே விழுந்துவிட்டேன். என் கையில் இருந்த பரிசுத்த வேதாகமும் இன்னொரு பக்கம் விழுந்துவிட்டது. நான் பயந்து ஒடுங்கி எழுந்து நிற்கையில் அந்தக் காவல்காரன் ஏதோ தன் பாஷையில் பேசிக் கொண்டு மறுபடியும் என்னை நெருங்க ஆரம்பித்தான். அதற்குள்ளாக நீல வண்ண சூட்டும் சிவப்புச் சட்டையும் வெள்ளைாடையும் அணிந்திருந்த ஒருவர் திடீரென அங்கு வந்து அந்தக் காவல்காரரைத் தடுத்து என்னை

ஒரு தனிமையான இடத்திற்கு அழைத்துச் சென்றார். அவர் என்னோடு ஆங்கிலத்திலேயே பேசி என்னை விசாரித்தார் எனக்கு அவ்வேளையில் ஆங்கிலம் தெரியாது. எனவே அவருக்குச் சரியாகப் பதில் சொல்ல என்னால் முடியவில்லை. அதற்குப் பிறகு ஒரிசா மொழியில் கேட்டார். அந்த மொழியும் எனக்குத் தெரியாது. கடையில் ''இந்தி தெரியுமா? என்று கேட்டார். நான் தெரியும் என்றேன். அவர் ஒரு அதிகாரியாய் இருந்தார். அவர் என்னை கீழ்க் கண்டவாறு விசாரித்தார்.

அதிகாரி : உன் பெயர் என்ன?

நான் : என் பெயர் எஸ். என். ராவ் பரவஸ்து

அதிகாரி : நீங்கள் எங்கேயிருந்து வருகிறீர்கள்?

நான் : சோம்பேட்டையிலிருந்து

அதிகாரி : எங்குப் போகவேண்டும்?

நான் : தெரியாது?

அதிகாரி : நீங்கள் சேரவேண்டிய இடம் எங்கு என்று தெரியாமலேயே உங்கள் பிரயாணத்தை ஆரம்பித்தீரோ?

நான் : -----

அதிகாரி : நீங்கள் தேவ ஊழியரா?

நான் : -----

அதிகாரி : உன் தொழிலென்ன?

நான் : இலட்சுமி நாராயண சுவாமி ஆலயத்தில் பூஜாரி தொழில் செய்துவந்தேன்.

அதிகாரி : உனக்கு டிக்கெட் இருக்கிறதா?

நான் : ஆம் இருந்தது

அதிகாரி : எங்கே காட்டுங்கள்?

நான் : இப்பொழுது இல்லை.

அதிகாரி : என்ன ஆனது?

நான் : வழியில் துணிகளுடன் சேர்த்து யாரோ திருடிக் கொண்டு போய்விட்டார்கள்.

அதிகாரி : அதனால்தான் உங்களுக்கு துணியில்லையா?

நான் : ஆம்.

அதிகாரி : நீங்கள் ஆலய பூசாரி என்று சொல்கிறீர்கள். உம் கையில் பைபிள் இருக்கிறதே. உங்களைப் பார்த்தால் உண்மையாகவே பூசாரியாகத்தான் தெரிகிறது. உங்கள் உடம்பின் மேல் உள்ள அடிகளையும் காயங்களையும் பார்க்கும்போது உங்களை யாரோ சித்திரவதைச் செய்தது போலிருக்கிறதே. நீங்கள் சொல்லும் வார்த்தையில் உண்மை இருப்பதாகவும் தெரிகிறது. உங்களுக்கு என்ன நடந்தது என்பதை உண்மையாகத் தெரிவிக்க முடியுமனால் என்னால் இயன்ற உதவியை உங்களுக்குச் செய்வேன். இவ்வாறு அந்த அதிகாரி என்னிடம் சொன்னவுடன், அதற்கு நான், ஐயா! நான் ஒரு இந்து குடும்பத்தில் பிறந்தவன். இந்து வேதங்களிலும், புராணங்களிலும் இயேசுகிறிஸ்துவின் பிறப்பு, சிலுவை மரணம், இரத்தம் சிந்துதல், அவருடைய மரணத்தினால் மனுக்குலத்திற்கு கிடைத்த மீட்பு போன்ற காரியங்களை நான் அறிந்து கொண்டேன். அது மாத்திரமன்று, பரமாத்மாக்கள் என்பவர்கள் எங்கேயோ, எப்படியோ, ஏதாவது ஒரு விதத்தில் பாவம் செய்தவர்களாக இருக்கிறார்கள் என்றும் அறிந்து கொண்டேன்.

எனவே உண்மையான இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை குறித்து மற்றவர்களுக்கு சொல்ல தொடங்கியதால் எனக்கு இந்த நிலைமை ஏற்பட்டது. என் குடும்பத்தாரே இப்படி செய்தார்கள். என்றேன். அவர் என்னை பார்த்து இயேசுவை தவிர பாவிகளை இரட்சித்து பரலோகத்தில் சேர்க்ககூடிய தேவன் வேறொருவர் இல்லையென்று சொன்னால் நீங்கள் நம்புவீர்களா? என்று கேட்டார். நான் அதற்கு ''ஆம்! அல்லது உண்மை. எனக்குத் தெரியும். நான் நம்புகிறேன்'' என்றேன் அதற்கு அவர் ''நீங்கள் எப்படி நம்ப முடியும்? இந்து வேதங்களிலும், புத்தகங்களிலும் இயேசுவைக்குறித்து எழுதப்பட்டிருக்கிறதா?'' என்றார்.

நான் : ''ஆம். எழுதப்பட்டிருக்கிறது'' என்றேன். அதைக் கேட்டு அவர் மிகவும் ஆச்சரியப் பட்டார்.

இதற்கிடையில் டிக்கட் கலக்டரைக் கூப்பிட்டுச் சோம்பேட்டையிலிருந்து கட்டக் வரைக்கும் தேவையான பயணத் தொகையை அபராதத்தோடு மொத்தமாகச் சேர்த்து அவரே எனக்காகச் செலுத்தினார். ஒரு காவலரைக் கூப்பிட்டார். அவர் உடனே வந்து சல்யூட் அடித்து நின்றார். இவர் ஏதோ அவரிடத்தில் சைகை காட்டினார். அவர் வந்து என் கையைப் பிடித்துக் கொண்டார். நானோ இவர் ஒரு வேளை என்னைச் சிறையில் போடுவதற்காகத்தான் என் கையைப் பிடிக்கிறார் என்று பயந்து என் கையை உதறினேன். இதைக் கவனித்த அந்த அதிகாரி என்னைப் பார்த்து ''ஐயா, பயப்படாதீர்கள். நானும் கிறிஸ்தவன்தான். என் பெயர் சைமன் பிரசாத் இந்தக் காவலர் உங்களை என் வீட்டிற்கு அழைத்துச் செல்வார். நீங்கள் அங்குச் சென்று ஒய்வு எடுத்துக் கொள்ளுங்கள் என்றார்.

இதைக் கேட்டதும் என் உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்து தைரியம் கொண்டது. அந்தக் காவலர் என்னை வெளியே அழைத்துச் சென்று அந்த அதிகாரியின் காரைக் காட்டி இதில் அமர்ந்து கொள்ளுமாறு சொன்னார். நான் உள்ளே அமர்ந்ததும் கார் வீட்டை நோக்கி விரைந்தது. அதற்குள்ளாக அந்த அதிகாரி போன் செய்தாரோ என்னவோ அவர் கார் பங்களாவை நெருங்கியதும் இருபத்திரண்டு வயது நிரம்பிய ஒரு வாலிபப் பெண். ஒருவயதுள்ள பெண் குழந்தையோடு ஓடி வந்து என்னை மிகவும் பணிவன்புடன் வணங்கி வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார். நான்தான் பிரசாத் அவர்களின் மனைவி என்பதாகவும், அந்தப் பெண் குழந்தை தன் மகள் சுகந்தி என்பதாகவும் தன்னைத்தானே அவர் அறிமுகம் செய்து கொண்டார்கள். நானும் என் பெயரைச் சொல்லி என்னையும் நான் அறிமுகம் செய்து கொண்டேன்.

காலைக் கடன்களை முடித்துச் சாப்பிட்டுக் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டேன். இவ்வாறு மூன்று நாட்கள் கடந்த பிறகு அடுத்த நாள் மாலையில் அநேக ஜனங்கள் அவர் வீட்டுக்கு வருவதைக் கண்டேன். அந்த அதிகாரி என்னிடம் வந்து ''பரவஸ்து அவர்களே'' ''இன்று எங்கள் வீட்டில் ஜெபக்கூட்டம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அதில் நீங்கள் சாட்சி கொடுக்க வேண்டும்'' என்று கூறினார்கள். அதற்கு நான் ''ஐயா! சாட்சி என்றால் என்ன? அதைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாதே'' என்றேன்.

அதற்கு அவர் ''உன் வாழ்க்கையில் நடந்த அனுபவங் களைச் சொல்வது'' என்றார் ''ஓ! அதற்கென்ன சொல்கிறேன்'' என்றேன்.

அந்த இரவு நடந்த ஜெபக் கூட்டத்தில் சுமார் முந்நூறுக்கும் அதிகமாக ஆண்களும், பெண்களும், வாலிபர்களும், சிறுவர் சிறுமிகளும் கலந்து கொண்டார்கள்.

முதன் முதலில் பகிரங்கமாக என்னுடைய வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளை விவரித்துச் சாட்சி சொன்னேன்.

அக்கூட்டம் முடிய 10:45 மணி ஆயிற்று. என் சாட்சியினால் அநேகர் அசைக்கப்பட்டார்கள். கண்ணீர்விட்டார்கள். இவ்விதமாக ஊழியத்தில் தேவன் தன் நாமத்தின் மகிமைக்காக அந்தப் பகுதியில் என்னை உபயோகப்படுத்தி வந்தார்.

ஒருநாள் இரவு சாப்பிட்டு மேசையருகே அந்த அதிகாரி வந்தார். நீங்கள் இங்கே தங்குவது இன்றே கடைசி நாளாகும். அநேக கள்ளத் தீர்க்கதரிசிகளும், பொய் போதகர்களும் தோன்றி வயிற்றுப் பிழைப்பிற்காகத் திருட்டு வேஷம் போட்டு ஊரைச் சுற்றி மக்களை ஏமாற்றி வருகிறார்கள். உங்களையும் அவர்களில் ஒருவர் என்று யாரும் சொல்லாத வாறு பரிசுத்த பவுலைப் போல் ஏதாவதொரு உத்தியோகம் செய்து கொண்டு யாருக்கும் பாரமில்லாதவாறு சுவிசேஷ வேலையும் செய்து வருவது நல்லது. எனவே ஜெபித்து தேவனுடைய சித்தத்தை அறிந்து முன்னேறிப் போவது நலமாக இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது என்றார்.

அந்த இரவு முழுவதும் ஜெபம் செய்து ஆண்டவர் சித்தத்தின்படி சரி என்று சொன்னேன். அதற்குள்ளாக யு.பி.எஸ்.சி (U.P.S.C) பப்ளிகேஷன் ஆகி ஒருவார காலமாகிவிட்டது. அடுத்த நாள் யு.பி.எஸ்.சி பப்ளிகேஷன் விண்ணபத்தாளை எனக்குக் கொண்டு வந்து கொடுத்து அதைப் பூர்த்தி செய்து கையெழுத்திட்டு தன்னிடம் கொடுக்கும்படி அந்த அதிகாரி சொன்னார். என்னுடைய சான்றிதழ்களைத் குறித்த விவரத்தை அவரே பார்த்துக் கொண்டார். விண்ணப்பத்தாளை அவர் சொன்னவாறு பூர்த்தி செய்து அவரிடம் கொடுத்தேன். அடுத்த நாள் ஒருவர் வந்து என் தலையிருக்கிற குடுமியை எடுத்தார். இப்பெழுது என் தோற்றம் முழுவதும் மாறிவிட்டது. இனி இந்தப் பூநூல் எதற்கு என்று கருதி அதையும் தூக்கி எறிந்துவிட்டு தேவனைத் துதித்தேன். பழைய பூசாரியாக இருந்த நான் இப்பொழுது புதிய பூசாரியாகிவிட்டேன்.

பிரியமானவர்களே! யாராவது இயேசுவைத் தன் இருதயத்தில் ஏற்றுக் கொண்டால் அவன் ஆவி, ஆத்துமா,

சரீரம், ஜீவியம் எல்லாமே மாற்றமடைகின்றன. ஏனென்றால் இயேசுவே எல்லாவற்றிற்கும் காரணமாயிருக்கிறார்.

இயேசு இப்படியாகப் பிரசங்கிக்க வேண்டுமென்று தன் தீர்க்கதரிசிகளுக்குக் கட்டளையிட்டு இருந்தார்.

"நானே தேவன், வேறொருவரில்லை; நானே தேவன், எனக்குச் சமானமில்லை. அந்தரத்திலுள்ளவைகளை ஆதி முதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகால முதற்கொண்டும் அறிவிக்கிறேன். என் ஆலோசனை நிலை நிற்கும். எனக்குச் சித்தமானவை களையெல்லாம் செய்வேன் என்று சொல்லி,

உராய்ஞ்சுகிற ஒரு பட்சியைக் கிழக்கிலிருந்தும், என் ஆலோசனையை நிறைவேற்றும் மனுஷனை தூரதேசத்தி லிருந்தும், வரவழைக்கிறவராயிருக்கிறேன். அதைச் சொன் னேன். அதை நிறைவேற்றுவேன்; அதைத் திட்டம் பண்ணி னேன். அதைச் செய்து முடிப்பேன்" (ஏசாயா *46:9-11*).

இந்த உலகத்தையாகிலும், உலகத்திலுள்ளவைகளையா கிலும், நேசிக்கிறவன் எப்படித் தேவனாக முடியும். அதாவது சரீரத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை, போன்ற ஆசைகளையுடையவன் எப்படித் தேவனாக முடியும். பாவம் செய்கிறவனோ பாவத்தைச் செய்ய வைக்கிறவனோ தேவனாக முடியாது. ப்புருஹா தாருண்யக உபநிஷத்தில் இந்த விதமான பிராத்தனை இருக்கிறது.

"அசதோமா - சத்கமய
தம சோமா - ஜ்யோத்திர்கமய
மமுருத் யோர்ம - அம்ருதஸ்கமய
ஓம் சாந்தி சாந்தி சாந்தி"

இதன் அர்த்தம்: ஆண்டவரே! நாங்கள் அசுத்தத்தில் இருக்கிறோம். எங்களை சத்தியத்துக்குள் வழிநடத்தும். நாங்கள் நித்திய அழிவிலே இருக்கிறோம். எங்களை நித்திய

ஜீவனுக்குள் வழிநடத்தும். நாங்கள் சாந்தியில்லாமல் இருக்கிறோம். எங்களைச் சாந்திக்குள் வழி நடத்தும் என்று சாந்தி சாந்தி சாந்தி என்று ஏங்கதல் ஆகும்.

1. உலகம்முழுவதும் அசுத்தத்தினால் நிறைந்திருக்கிறது- பைபிளில் இப்படியாக இருக்கிறது.

''மனுஷனுடைய அக்கிரமம் பூமியில் பெருகினது என்றும், அவன் இருதயத்தின் நினைவுகளின் தோற்ற மெல்லாம் நித்தியமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு தாம் பூமியிலே மனுஷனை உண்டாகினதற்காக மனஸ்தாபப் பட்டார். அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது'' ஆதி. 6:5,6.

எல்லா மனிதர்களுடைய நினைவுகள் பொல்லாததாக இருக்கும்போது மனிதன் சிந்தித்துக் கற்பனை செய்து கொள்ளும் தேவர்கள் எப்படிப் பரிசுத்தமும் நித்யமுள்ளவர் களா இருக்க முடியும். 332 துஷ்ட சக்திகள் (எதை இந்த உலகத்திலே தேவர்களென்று ஆராதித்துக் கொண்டிருக்கிறார் களோ) இந்த ஆகாய மண்டலத்தில் சுற்றி வருகிறார்கள். அவர்களையே நாங்கள் முக்கோடி தேவர்களென்று அழைத்து வந்தோம். அவர்களையே வணங்கி வந்தோம். இப்பொழுதோ அவர்கள் தேவர்களல்லர் என்பதை அறிந்து அவர்களை விட்டுவிட்டேன். அவர்கள் ஒருவேளை எனக்குத் தேவை யானவைகளைத் தரலாம். சுகம், பணம், வீடு, வாசல், செல்வாக்கு, உத்தியோகம் போன்றவைகளைத் தரலாம். இன்னும் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வது, அற்புதங்கள் நடைபெறச் செய்வது, வியாதியஸ்தர்களை சுகப்படுத்துவது போன்ற காரியங்களையும் செய்யலாம். அவர்களின் சக்தியைப் பார்த்து மக்கள் அவர்களை தேவனென்று வணங்கி வருகிறார்கள். ஒன்றுமில்லாத ஒரு இடத்தில் சிலர் வீடு கட்டிக் கொண்டு குடியேறின பிறகு நாங்கள் சென்று அந்த இடத்தில் ஒரு சின்ன கோயிலைக் கட்டி ஒரு கல் அல்லது விக்கிரகத்தை அதில் வைத்து அதற்கு நகைகளைப் போட்டுத் துணிகளை உடுத்துவிக்கச் செய்து அதுதான் தேவன் என்று சொன்ன மாத்திரத்தில்

படிக்காதவர்களோடு படித்தவர்களும், வேதள சாஸ்திரிகளும் அது ஒன்றுமில்லை என்று அறிந்திருந்தும் அதற்குத் தூபம் காட்டுவதும், பலி செலுத்துவதும் பூசை செய்வதுமான காரியங்களைச் செய்கிறார்கள். இவை யெல்லாம் அசத்திய மானவைகளல்லவா? அது அசததியமென்று தெரிந்திருந்தும் ''அசத்தோமா சத்கமய'' என்று பிராத்தனை செய்து கொண்டு மறுபடியும் அவர்களிடத்திற்கே ஓடுவதில் எந்தவிதமானப் பிரயோசனமும் இல்லை என்பதை நான் விளங்கிக் கொண்டேன்.

பிரியமானவர்களோ நீங்களும் இப்படித்தான் செய்து கொண்டிருக்கிறீர்களா? அப்படியானல் இப்பொழுதே அதைவிட்டு விலகவும். நீ அசத்தியத்தில் இருப்பாயாகில் உனக்கு இப்பொழுது சத்தியம் வேண்டும். சத்தியம் என்றால் என்ன? நானே சத்தியம். என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவண்டை வரான் என்று இயேசு யோவான் 12:6இல் சொல்லியிருக்கிறார். அசத்தியத்திலிருக்கிற உனக்குச் சத்தியம் வேண்டுமா! அப்படியானல் உனக்குச் சத்தியமாகிய இயேசு தேவைப்படுகிறார்.

2. இருள் பாவத்திற்கு அடையாளமாக இருக்கிறது. இருளில் நடக்கிறவன் தான் போகிற இடம் இன்னதென்று அறியான். யோவான 12:35 சொல்லி இருக்கிறார். இதன் அர்த்தமாவது ''பாவத்திலே பிரயாணம் செய்து கொண்டிருக் கிறவர்களுக்கு அவர்கள் எங்குப் போய்க் கொண்டிருக் கிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியாது. திருமூர்த்திகள் எப்படிப் பாவத்தை மேற்கொள்ள முடியாதபடி அதில் விழுந்து அடித்துக்கொண்டு போய்க் கொண்டிருக்கிறார்கள் என்று இதற்கு முன் பல சம்பவங்களில் விளக்கமாகக் காண்பித்திருக்கிறேன். இதற்கு முன்பு நான் அவர்களை வணங்கி வந்தேன்.

இயேசுவின் வாழ்க்கை வரலாறு எனக்குத் தெரியாம லிருந்தது. அவைகளை அறிந்துகொண்ட பிறகு திருமூர்த்தி களை வணங்குவதை என் இருதயத்திலிருந்து நீக்கிவிட்டேன். பிரியமுள்ள சகோதர சகோதரிகளே! நீங்கள் என்ன செய்து

கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுதாவது இந்தப் புத்தகத்தின் மூலம் உண்மையை அறிந்து கொண்டீர்களா?

இந்தத் திருமூர்த்திகளை வணங்கிக் கொண்டிருந்த நாங்களும் இருளில்தான் இருந்தோம். அவர்களுக்கும் எங்களுக்கும் வெளிச்சம் தேவை. ''தமரோமா ஜயே திர்க்கமய'' என்று பிராத்தனை செய்து கொண்டிருந் தாலும்கூட இன்னும் இருளைவிட்டு விடாமலிருப்பது மதிக்கேடு என்று உணர்ந்துகொண்டேன். எனவேதான் அந்த இருளை விட்டு நீங்கினேன். ''நமக்கு வெளிச்சம் தேவை. தேவன் ஒளியாயிருக்கிறார். ஒளியில்லாதவன், வெளிச்சத் தில்லாதவன் தேவனல்லன்'' என்பது நமக்குத் தெரியும், விஷ்ணுபுராணம் 10:6இல் விஷ்ணு ''நான் ஒளியைத் தரித்துக் கொள்ளப் பாத்திரனல்லன்'' என்று ஜாம்பவனத்தில் சொன்ன தாக நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். அப்படியானால் இந்தத் தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் தேவையான வெளிச்சம் யார்? பிரியமானவர்களே ஆலயத்தில் ஆசாரி யனாக வேலை செய்து வந்த நாட்களில் அதிகாலையில் எழுந்து சுப்ரபாதம் வாசித்து முந்தய நாளில் போட்டிருந்த பூக்களை விக்ரகத்தின் மேலிருந்து எடுத்துவிட்டு புது பூமாலைகளைப் போட்டு அலங்கரித்து அந்த ஆலயத்தில் விளக்கை ஏற்றி வைப்பேன். அப்பொழுது அந்தச் சுவாமிக்கு வெளிச்சம் கிடைக்கும். நான் விளக்கை ஏற்றும்வரை அந்தச் சுவாமிகளும் இருளில்தான் இருப்பார்கள். இருளில் இருந்த அந்தச் சுவாமியைத் தொழ வேண்டிய நானும் அந்த இருளிலேயே பிரவேசிக்க வேண்டியிருக்கும். எனக்கும் அவர்களுக்கும் வெளிச்சம் தேவை.

பிரியமானவர்களே! நீங்களும் என்னைப் போல் செய் கிறீர்களா? அப்படியானால் உங்களுக்கும் வெளிச்சம் அவசியம். யார் அந்த வெளிச்சம்?

''நான் இந்த உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியா யிருக்கிறேன்'' என்று இயேசு சொன்னதாக யோவான் 9:5ல் சொல்லியிருக்கிறார். ஒளி என்றால் பாவம் இல்லாமை. அல்லது இருள் இல்லாமை என்று அர்த்தம். என்னில் பாவம்

இருக்கிறதாக உங்களில் எவன் சொல்ல முடியும் என்று இயேசு சொன்னதாக யோவான் 8:46ல் சொல்லியிருக்கிறார். அவர் பாவமில்லாதவர். எனவே ஒளியும் சத்தியமுமாக இருக்கிறார். இப்பொழுது வெளிச்சம் தேவை என்றால் இயேசு தேவை. இயேசு சொல்லுகிறார், ''நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். என்னைப் பின் பற்றுகிறவன் இருளில் நடவாமல் ஜீவ ஒளியைப் பெற்றிருக்கிறான்'' யோவான் 8:12.

பிரியமானவர்களே! இப்பொழுதும் நீங்கள் இருளிலேயே இருக்கின்றீர்களா? தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர். என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார் என்று பரிசுத்த வேதாகமத்தில் சங்கீதம் 18:29இல் சொல்லப் பட்டிருக்கிறது. எனவே இப்பொழுதே உன் இருளை வெளிச்சமாக மாற்றக்கூடிய ஒளியை (இயேசுவை) நோக்கி வேண்டிக் கொள். அப்பொழுது உன் வாழ்க்கை முழுவதும் வெளிச்சமாகிவிடும்.

3. மரணத்தில் (நித்திய நரகத்தில்) இருக்கிறார்கள். எனவேதான் ''ம்முருத்யோர்மா அம்ருதங்கமய'' என்று பிராத்திக்கிறார்கள். பைபிளில் என்ன எழுதப்பட்டிருக் கிறதென்றால் ''பாவம் செய்த தூதர்களை தேவன் தப்ப விடாமல் அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத் தீர்ப்புக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்'' 2பேதுரு 2:4. எனவேதான் அவர்கள் இப்பொழுது அந்தகாரமான நித்திய நரகத்திலே தள்ளப்பட்டிருக்கிறார்கள். இதனால்தான் நான் அசத்தியமானது தேவர்களல்லர் என்பதாக இந்தப் புத்தகத்தில் நிரூபிக்கவும்; சத்தியமானவரும் ஒளிமய மானவரும் நித்திய ஜீவனுமானவரும் இயேசுகிறிஸ்து ஒருவரே. அவர் மாத்திரமே பாவங்களை விடுதலை செய்ய வல்லவராய் இருக்கிறாரென்றும், நான் தெரிந்துகொண்டு இந்தப் புத்தகத்தின் வாயிலாக உங்களுக்கு முன் நிரூபித்துக் காட்டும்படி எனக்குள் தேவ ஆவியானவர் என்னை ஏவினார்.

நித்திய நரகம் அல்லது இருள் என்றால் அங்குப் புழு சாகாது. அக்கினி அணையாது என்று அர்த்தம். புழு சாவது என்றால், மனிதன் இந்தச் சரீரத்தை விட்டுத் தான் செய்த பாவத்தின் பயனை அனுபவிக்க நரகத்தில் நித்திய நித்திய காலமாய் தள்ளப்படுவதேயாகும். அந்த நரகத்திலிருந்து தப்புவிக்கப் பட்டு நித்திய ஜீவனுக்குள்போக வேண்டும் மென்று மக்கள் முறையிடுகிறார்கள். எனவேதான் "தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" என்று ரோமர் 6:23இல் எழுதப்பட்டிருக்கிறது. நானே ஜீவன் என்னிடத்தில் விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் (நித்திய நரகத்திற்குப் பாத்திரனாக அல்ல சரீரபிரகாரமாக அவன் ஜீவன் மரித்தாலும் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வான்) பிழைத்து (ஜீவனைப் பெற்று) என்னிடத்தில் சேர்வான். விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் ஒருபோதும் மரிப்பதில்லை (நித்திய நரகத்திற்க்கு போவதில்லை) இதை நம்புகிறாயா? என்று இயேசுதாமே இந்த உலகத்தைப் பார்த்து கேட்கிறார். பிரியமானவர்களே! இந்த கேள்விக்கு உங்கள் பதிலென்ன. இதுவரை நீங்கள் அவரை வெறுத்து வந்தவர்களானால் இப்பொழுதே அவரிடத்தில் அன்பு கூர்ந்து அவரை விசுவாசியுங்கள் அந்த ஆண்டவர் உங்களை நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும் படியாக செய்வார்.

4. ஓ ஆண்டவரே, நாங்கள் சாந்தியில்லாமலிருக்கிறோம். எங்கள்மேல் கிருபை கூர்ந்து சாந்தியைப் பெற்றுக் கொள்ள செய்தருளும் என்று மக்கள் மன்றாடுகிறார்கள். பாவத்திலே பிறந்து இருளிலே வளர்ந்து நரகத்தில் தள்ளப்பட இருக்கிறவர்களுகுகுச் சாந்தி வேண்டும். எங்கிருந்து கிடைக்கும்? பாவமில்லாமல் பிறந்தவரும் கொஞ்சமேனும் இருளில்லாதவரும் என்றும் ஜீவிக்கிறவருமாகிய இயேசு ஒருவரே அதைத் தரமுடியும். அவர் நம்மை அழைத்திருக் கிறார். வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே நீங்க ளெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையு மாயிருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு

என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். அப்பெழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று (மத்தேயு *11:28,29*) அசத்தியம், அந்தகாரம், நரகம் இவைகளை விட்டு அசாந்தியிலிருந்து சாந்திக்குள் வர வேண்டுமானால், இயேசு கிறிஸ்துவை மாத்திரமே இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இது முடியும் என்று நான் விளங்கி கொண்டு என் இருதயத்தில் அவரை ஏற்றுக் கொண்டேன். அதனால் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் புதிய சிருஷ்டிப்பாக மாற்றப்பட்டேன். அந்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இலவசமாக இதை எனக்குக் கொடுத்தார். பிரியமான வர்களே நீங்களும் இதைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாய் வாஞ்சிக்கிறீர்களா? நீங்கள் கிறிஸ்துவர்களானாலும் கிறிஸ்து வல்லாதவர்கலானாலும், உங்களில் சாந்தியில்லாவிட்டால், உங்களில் இயேசு கிறிஸ்து இல்லையென்று தெரிந்து கொள்ளுங்கள். இப்பொழுதே முழங்காற்படியிட்டு பிராத்தனை செய்யுங்கள். இயேசு தேவன் உங்களுக்கு சாந்தி, சமாதானம் அருள் செய்வார்.

வேலை வாய்ப்பு!

அந்தப் போலீஸ் அதிகாரியின் வீட்டில் மத்தியான உணவு சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது நான் யு.பி.எஸ்.சில் மினிஸ்டிரி ஆப் கம்மூனிகேஷனில் (Ministry of Communication) வேலைக்குத் தேர்வு ஆனதாகத் தந்தி வந்தது. தேவனை ஸ்தோத்தரித்தேன்.

போலீஸ் அதிகாரியிடமிருந்து பிரிதல்!

என்னை வழியனுப்புவதற்காக வேண்டி ஸ்தோத்திரக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. அநேகர் வந்திருந்தனர். ஜெபத்தோடு கூட்டம் ஆரம்பித்து, இனிய பாடலுடன் விசுவாசத்தையும், நம்பிக்கையையும் கொடுக்கக்கூடிய தெய்வ செய்தியுடன் கூட்டம் முடிந்தது. எனக்குப் பூமாலை களை போட்டார்கள். தேவ ஊழியர்களும் பெரியவர்களும் என்னை ஆசீர்வதித்து பெலப்படுத்தினார்கள். நல்ல விருந்து கொடுத்த பிறகு இரவு *8:30* மணிக்கு அநேகர் இரயில்

நிலையத்திற்கு வந்து என்னை ஈஸ்ட் கோஸ்டு எக்ஸ்பிரஸ்ஸில் ஏற்றி ஆனந்த கண்ணீர்விட்டு வழியனுப்பினார்கள். நானும் ஆனந்தமாய் பிரிவினையை ஏற்றுக்கொண்டு என் தேவனோடே பிரயாணம் செய்யத் தொடங்கினேன். என் பிரயாணம் முழுவதையும் ஜெபத்தில் செலவிட்டேன். வழியில் இரயில் காலதாமதமானதால் காலை 4:30 மணிக்கு ''பெர்ஹாம்பூர்'' வந்து சேர்ந்தது. இரயில் நிலையத்திலேயே என் காலைக்கடன்களை முடித்துக் கொண்டேன்.

''பெர்ஹாம்பூர்'' என்னும் இடத்திலேயே இருந்தேன். அங்கு வேலை செய்து கொண்டு தேவனுக்குச் சாட்சியாக இருந்தேன். ஒரிஸ்ஸா மாகாணததில் அநேக இடங்களில் தேவனுடைய ஊழியத்தில் உபயோகமாக இருக்கவும் தேவன் கிருபை தந்தார். பிறகு தேவன் இப்படி நினைத்தார். மனிதன் தனிமையாக இருப்பது நல்லதல்ல, அவனுக்கு ஏற்ற துணையை உண்டு பண்ணுவேன் ஆதி. 2:18 என்பதாக எனக்குத் திருமணத்திற்கு ஏற்பாடு செய்தார்கள்.

ரெபேக்காவுடன் கலியாணம்!

தேவ ஊழியக்காரர் ஒருவர் அந்தச் சமயத்தில் பெர்ஹாம்பூரில் உயிர் மீட்சிக் கூட்டங்கள் நடத்திக் கொண்டிருந்தார். ஒருநாள் இரவு கூட்டத்தின் முடிவில் தேவனுடைய ஊழியத்திற்குத் தங்களை ஒப்புக் கொடுக்க விரும்புகிறவர்கள் எழுந்து முன்னுக்கு வாருங்கள் என்றும், நான் உங்களுக்காக ஜெபிப்பேன் என்பதாகவும் தேவனுடைய ஆவியினாலே ஏவப்பட்டவராக ஆல்டர்கால் அறிவித்தார். யாரும் முன்னுக்கு வரவில்லை. தேவனுடைய ஆவியானவர் தேவனுடைய ஊழியர்க்காரர் மூலமாக அழைப்பு கொடுத்துக் கொண்டேயிருந்தார். இப்படி எவ்வளவோ நேர அழைப் பிற்குப் பிறகு இரண்டு சகோதரிகள் எழுந்து ஒப்புக் கொடுக்க முன் வந்தார்கள். அவர்களில் ஒருவர் விதவையாக இருந்தார்கள். அடுத்தவர்தான் சகோதரி M. ரெபேக்கா என்பவர்.

ரெபெக்கா மூன்று வயது குழந்தையாக இருந்தபோதே அவர் தகப்பனாராகிய பாஸ்டர் M. பீட்டர் கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

ரெபெக்காவுக்குப் பதின்மூன்று வயதான M. பிரசாத் ராவ் என்ற ஒரு அண்ணனும் இருந்தார். திருமதி. கிருபாவதி அவர்கள் பெர்ஹாம்பூர் கிறிஸ்தவ மருத்துவமனையில் பணியாற்றிக் கொண்டு, மகனை B.Com வரைக்கும் படிக்க வைத்தார்கள். திருமதி. M. கிருபாவதி அப்போது வாலிப வயதாயிருந்தும் மறுமணம் செய்துகொள்ள மறுத்து விட்டார்கள். தன்னுடைய இரு பிள்ளைகளையும் தேவனுக் கேற்ற சாட்சியிலும், பக்தியிலும் வளர்த்து அவர்களைத் தெய்வீகமான பிள்ளைகளாக உருவாக்கினார்கள். இந்தக் காலத்தில் தேவன்தாமே அவர்களுக்கு அநேக விதத்தில் உதவி புரிந்தார்.

ஆல்டர்கால் கேட்டு முன்னுக்குப் போன M. ரெபெக்கா தேவனுடைய ஊழியத்தில் அதிக ஆர்வமிக்கவராக இருந்ததினால், தருணத்திற்காகத் காத்துக் கொண்டு தேவனுடைய வழி நடத்துதலுக்காக ஜெபித்து வந்தார்கள். இன்றைய சமுதாய வாழ்க்கையில் ஒரு பெண் திருமணம் செய்து கொள்ளாமல் தேவனுடைய ஊழியத்திற்கென்று முன்னுக்குப் போவதென்பது அரிதான காரியமேயாகும். அதனால் அவர்கள் ஒரு உண்மையுள்ள உத்தமமான தேவனுடைய ஊழியக்காரருக்கு வாழ்க்கைப்பட்டுத் தேவனுடைய ஊழியத்தில் உதவியாக இருக்க வேண்டுமென ஜெபித்து வந்தார்கள்.

"நட்ஷத்ரம் பூஷணம் சந்த்ரோ

நாரீனாம் பூஷணம் பத்ஹி"

அதாவது ஆகாயத்தில் எவ்வளவு நட்சத்திரங்கள் இருந்தாலும், எவ்வளவு மேகங்கள் இருந்தாலும் சந்திரன் ஆகாயத்தில் இல்லாவிட்டால் நட்சத்திரங்களுக்கு அழகேது? மேகங்களுக்கு அழகேது? சந்திரனே இவைகளுக்கு அழகு.

சந்திரனில்லாத ஆகாயம் எப்படி அழகற்றதாக இருக்குமோ அப்படியே கணவனில்லாத ஸ்திரியும் சமுதாயத்தில் கேவலமாகத் காணப்படுவாள். எவ்வளவு ஆஸ்தி, அந்தஸ்து, அழகு இருந்தாலும் கணவன்தான் ஒரு ஸ்திரிக்கு அலங்காரம். ஸ்திரியானவள் புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள். எனவே புருஷனே ஸ்திரிக்கு அழகு.

மேடைக்கு முன்னால் நடந்து வந்த ரெபெக்காவின் தலைமேல் ஊழியக்காரர் தன் இரு கரங்களையும் வைத்து "உன் மனோ வாஞ்சைகள் தேவனின் சித்தத்தின்படி நிறைவேறுவதாக" என்று ஜெபித்தார். ஒருநாள் ஞாயிற்றுக் கிழமை பெர்ஹாம்பூர் ஆங்லிக்கன் சர்ச் முற்றத்தில் ஒரு வாலிபப் பெண் தன் கையில் பைபிளைப் பிடித்துக் கொண்டு நின்றிருப்பதைப் பார்த்தேன். அவர்கள் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டார்கள். இருப்பினும் தேவபக்தி உள்ளவராக அவர் காணப்பட்டார். அமைதியான தோற்றம். இவரைத் திருமணம் செய்து கொண்டால் எப்படி இருக்கும்? இது தேவனுக்கு விருப்பமாக இருக்குமா? இவர் பெற்றோர்கள் யாரோ? எனக்கென்ன இருக்கிறது. நான் ஒரு வழிப்போக்கன், இது எனக்கு எப்படிச் சாத்தியம்? இருப்பினும் தேவனால் கூடாத காரியம் உண்டா? இவ்வாறு நான் நினைத்துக் கொண்டு அவர்களை நெருங்கினேன். எங்கள் இருவர் மத்தியில் நடந்த உரையாடல் இவ்வாறு இருந்தது.

பிரைய்ஸ்தி லார்டு

பிரைய்ஸ்தி லார்டு

ம். ம். உங்கள் பெயர்?

ரெபெக்கா.

நீங்கள் யாருடைய மகள்? எந்தத் தாலுக்கா?

எம். பிரசாத் ராவ் தெலுங்கு பாப்டிஸ்ட் சர்ச் செக்ரட்ரி அவர்களின் தங்கை.

எங்கள் அம்மா எம். கிருபாவதி. இதோ வந்து கொண்டிருக் கிறார்கள். அவர்களுக்காகத்தான் நான் இங்குக் காத்துக் கொண்டிருக்கிறேன்'' என்று ஆலயத்தின் முற்றத்தில் பிரவேசித்துக் கொண்டிருந்த ஒரு ஸ்திரியைச் சுட்டிக் காட்டினார்கள். நான் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவர்கள் என்னிடம் வந்தார்கள்.

வணக்கம்! பரவஸ்து அவர்களே நன்றாக இருக்கிறீர்களா? என்று என்னை நலம் விசாரித்தார்கள்.

அம்மா! உங்களுக்கு என்னைப் பற்றித் தெரியுமா? என்று நான் கேட்டேன்.

அவர்கள் ஐயா! உங்கள் சாட்சியைக் கேள்விப்படா தவர்கள் உண்டோ? இந்தப் பெர்ஹாம்பூரில் வாழும் கிறிஸ்தவர்கள் எங்குக் கூடினாலும் உங்களுடைய சாட்சியைக் குறித்தே பேசிக் கொள்கிறார்கள். நானும் உங்கள் சாட்சியைக் கேட்டிருக்கிறேன். உங்களையும் பார்த்திருக் கிறேன் என்று சொல்லிக் கொண்டே ''இதோ! இவள்தான் என் மகள் ரெபெக்கா!'' என்று சொல்லி அவர்கள் தன் மகளை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்.

உடனே நான் ''நாங்கள் இருவரும் இப்பொழுதான் ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து கொண்டோம் அம்மா'' என்று சொன்னேன். மேலும் ''நான் உங்களைப் பார்த்தது போல் ஞாபகம் இல்லையம்மா'' என்றேன்.

நாங்கள் பலரோடு சேர்ந்திருப்பதினால் உங்களால் அது முடியாததுதான் என்றார்கள்.

அம்மா! நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? என்று நான் கேட்டேன். கஞ்சாம் பரிஷத் ஊருக்கு வந்தால் நீங்கள் எங்கள் வீட்டைக் கண்டு கொள்ள முடியும். ஒருதரம் எங்களுக்காக ஜெபிக்க வாருங்கள். எங்கள் அன்பான வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று அவர்கள் என்னை அன்போடு வரவேற்றார்கள்.

அதற்கு நானும் "நன்றி! அம்மா. தாங்கள் அழைப்பை ஏற்று கண்டிப்பாக நான் வருகிறேன்" என்றேன்.

அதற்குள் ஆலய மணி அடித்தது. எல்லாரும் ஆலயத்திற்குள் சென்றோம். பாட்டு, ஜெபம், காணிக்கை எல்லாம் முடிந்தது. அன்று ஆலயத்தில் நான் சாட்சி சொல்ல வேண்டியிருந்தது.

சகோதர் எஸ்.என். ராவ் பரவஸ்து அவர்கள் நாம் கேட்டுக்கொண்டதற்கிணங்கத் தன்னுடைய சாட்சியை நம் மத்தியில் பகிர்ந்து கொள்ள வந்திருக்கிறார்" என்று என்னைப் பற்றி அறிமுகம் செய்து வைத்தார்கள். அதற்குப் பிறகு ஒரு மணி நேரத்தில் சாட்சி முடிந்தது. பாஸ்டர் அவர்கள் பத்து நிமிடம் தேவனுடைய வார்த்தையையும் கொடுத்து ஆசீர்வாதத்தோடு கூட்டத்தை முடித்தார்கள்.

அன்றே கிருபாவதி வீட்டிற்குச் சென்றேன். அவர்கள் கொடுத்த சிற்றூண்டியை ஏற்றுக்கொண்டேன். நாங்கள் இப்படித் தேவனுக்குள்ளாக ஆவிக்குரிய உறவை ஏற்படுத்திக் கொண்டதற்காக தேவனைத் துதித்தேன். அநேகமுறை அவர்கள் வீட்டைத் தரிசித்து வந்தேன். ஒருநாள் ஜெபத்தோடு ரெபெக்கா திருமண விஷயமாகத் தயார் கிருபாவதியவர்களுடன் பகிர்ந்து கொண்டேன். அவர்கள் பெரியவர்கள். அநேக விஷயங்கள் என்னிடம் பேசினார்கள். முதலில் அவர்களுக்கு விருப்பமில்லாவிட்டாலும் அதற்குப் பிறகு அவர்கள் எல்லாரும் எங்கள் திருமணத்தை நல்ல முறையில் நடத்தி வைத்து எங்களை ஆசீர்வதித்தார்கள். சில நாள்கள் எங்கள் குடும்ப வாழ்க்கை மிக இன்பமாய் கடந்து சென்றது.

தொழிலும் ஊழியமும்!

மத்திய அரசாங்கம் என்னை கொஞ்ச நாள் தற்காலிகமாக வேலை செய்ய அருணாசல பிரதேசத்திற்கு அனுப்பி வைத்தார்கள். நாங்கள் கமாங்கி ஜில்லாவிலுள்ள டேங்கா வேலி என்னும் இடத்திற்கு வந்து சேர்ந்தோம். அங்கு எங்குப் பார்த்தாலும் புத்த மயமாக இருந்தது. அந்த மாகாணத்தில்

அதிகமானவர்கள் புத்தமதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். மரித்த சித்தார்த்தரை புத்தபகவான் என்று அங்குள்ள பாமர மக்கள் ஆராதித்து வருகிறார்கள். நான் அந்தப் பகுதியில் வாரண்ட் ஆபீசராகப் பணியாற்றிக் கொண்டு அந்தப் பகுதிகளை ஆராய்ந்து வந்தேன். டேங்காவேலி (Tenga Valley)யில் இராணுவ தொழிற் சங்க சர்ச் இருந்தது. எல்லா வகை சபையினரும் அந்த ஆலயத்தில்தான் ஞாயிற்றுக் கிழமையில் கூடி ஆராதித்து வந்தார்கள். சின்ன சிப்பாய் முதற்கொண்டு பெரிய ஜெனரல் வரை ஜெபம் செய்ய அந்த ஒரே சர்ச்சுதான் இருந்தது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் நூற்றுக் கணக்கில் ஆட்கள் வருவார்கள். அதிலே இராணுவ ஆட்கள் சிவில் ஆட்கள் ஆக எல்லாரும் கலந்து கொள் வார்கள். அந்த ஆலயத்திற்கு ஒரு பாஸ்டரும் வந்திருந்தார். அந்த இடம் அதிக உயரமுள்ள இடமாக (High Aetitude) இருந்ததினால் ஆண்டு முழுவதும் பனிகொட்டும் நிலை. அந்த ஆலயத்தில் அநேக ஞாயிற்றுக் கிழமைகளில் என்னுடைய சாட்சியைச் சொல்லி வந்தேன். அதற்குத் தேவனுடைய வார்த்தையைக் கொடுக்க வேண்டுமாய் எல்லா வகைச் சபையினரும் விசுவாசிகளும் என்னை உற்சாகப் படுத்தினார்கள். அவர்கள் மத்தியில் தேவனுடைய வார்த்தையைக் கொடுக்கும்படியான வாய்ப்பைத் தேவன் ஏற்படுத்தியதற்கு தேவனை வணங்கி, அருணாசலப் பிரதேசத்தில் எனது ஊழியத்தை ஆரம்பித்தேன். அந்த இடங்களில் அதுவரை காட்டேஜ் கூட்டங்கள் யாரும் நடத்தியதில்லை.

ஒவ்வொரு புதன் கிழமையும் குடும்ப ஜெபம் என்றும், ஞாயிற்றுக் கிழமைகளில் ஆலயத்தில் ஆராதனை என்றும், ஒவ்வொரு நாள் மாலையும் விசுவாசிகளின் வீடுகளைத் தரிசித்துக் கொண்டு அந்தக் காட்டுப் பகுதிகளில் பனி நிறைந்த பள்ளத் தாக்குகளில் இரவு சுமார் பன்னிரெண்டு, ஒரு மணி அளவிலும் நடந்து சென்று சுவிசேஷத்தைச் சொல்லி வந்தேன். இவ்வாறு சுமார் இரண்டரை ஆண்டு காலம் செய்து வந்தேன்.

அருணாசலப் பிரதேசத்தில் ஆண்டவர் செய்த அதிசயங்கள்!

1962ஆம் ஆண்டு இந்தியாவிற்கும் சீனாவிற்கும் நடந்த போரில் தன் பெற்றோர்களை இழந்தவர் பதினெட்டு வயதுள்ள ஜங்கபஹதூர் என்ற புத்த மத வாலிபர். அவரைப் பரிசுத்தாவியின் ஏவுதலினால் சந்தித்துச் சுவிசேஷத்தைக் கொடுத்து தேவன் பக்கமாகத் திருப்புவதற்குத் தேவன் கிருபை செய்தார். அவர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்ட பிறகு எங்கள் வீட்டுப பிள்ளைப்போல் அவரைச் சேர்த்துக் கொண்டோம். ஒரு வருடகாலம் எங்கள் வீட்டில் வைத்திருந்து ஜெபத்தையும் ஆவிக்குரிய காரியங்களையும் கற்றுக் கொடுத்து தேஜ்பூரில் (அஸ்ஸாம்) இருந்து Rev. ஆச்சாரியா அவர்களை வரவழைத்து ஞானஸ்நானமும் பெற்றுக் கொள்ளும்படியாகச் செய்தேன். ஜெனரல் ரிசர்வ் இன்ஜினியரிங் போர்சில் ஆட்டோ மொபைல் மெக்கானிக்காக அவருக்கு வேலையும் கிடைத்தது. அந்த வாலிபர் அதற்கு முன்பே ஆட்டோ மொபைல் இன்ஜினியரிங்கில் பயிற்சியும் பெற்றிருந்தார். என் வாழ்க்கையில் தேவனால் முதலாவதாக இரட்ச்சிப்புக்குள்ளாக வழிநடத்தப் பட்ட ஆத்துமா அதுதான். தேவனுடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக.

ஜோகசிங் என்னும் சீக்கிய மதத்தைச் சேர்ந்த ஒரு குடிகாரன் தன் மனைவி, மூன்று பிள்ளைகளுடன் வசித்து வந்தான். அந்தக் குடும்பத்தில் கணவன் மனைவியிடையே சமாதானமில்லாததினால் மிகவும் துக்கத்துடனும், கண்ணீருடனும் நாட்களைக் கடத்தி வந்தனர்.

அவன் தன் கவலைகளை மறக்கப் போதை மருந்துகளைச் சாப்பிட்டு அதிக மோசமான நிலையில் துன்பப்பட்டுக் கொண்டிருந்தான்.

நாங்கள் தங்கியிருந்த மேல் மாடியில் அவர்கள் வசித்து வந்தார்கள். நாங்கள் ஒவ்வொரு நாளும் அவர்களுக்காக

அதிக கண்ணீருடன் ஜெபித்து வந்தோம். பயங்கரக் குளிரில் நடு இரவு வரைக்கும்கூட ஊழியம் செய்து வந்ததால் எனக்குச் சரியாகத் தூக்கம் வராது. எனவே நானும், என் மனைவியும் சேர்ந்து தேவனுடைய சமூகத்தில் அந்தக் குடும்பத்திற்காக மன்றாட்டு ஜெபம் செய்து வந்தோம். ஒரு நாள் நடு இரவில் ஜோகாசிங் தூங்கிக் கொண்டு இருக்கும்போது தேவன் அவருடன் பேசினார்.

''ஜோகா சிங்''

''யாரய்யா நீங்கள்''

நானே உன் தேவன். உன்னை சிருஷ்டித்த உனக்கு அடைக்கலமான இரட்சிப்பின் கேடயம் நானே. நீயோ என்னை விட்டுவிட்டாய்.

''நீங்கள் இயேசு கிறிஸ்து போல் காணப்படுகிறீர்களே ஆம், அவர்தான் நான்'' ஆண்டவரே! குரு கோவிந்த தேவனல்லாவ? ''அவரைச் சிருஷ்டித்தது நான்தான்''

ஆண்டவரே! என்னை மன்னியும். நான் தெரியாமல் பாவம் செய்தேன்.

உன் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. என்னையன்றி வேறொரு தேவன் உனக்கு உண்டாயிருக்க வேண்டாம். என்னைப் பின்பற்று. நான் உனக்கு இளைப்பாறுதலைத் தருவேன்.

ஜோகாசிங் அந்த இருட்டிலேயே எழுந்து என் வீட்டுக்கு வந்து ''ராவ் சார் நான் இன்றிரவு ஆண்டவரோடு பேசினேன்'' என்றார்.

குரு கோவிந்த் வெறும் மனிதர்தான் என்று தெரிந்து கொண்டேன். இதுவரை தெரியாமல் அவரை ஆராதித்து வந்தேன். அவர் எனக்கு எந்தவிதமான தரிசனமும் கொடுக்கவில்லை; பேசவுமில்லை; ஆனால் இயேசு கிறிஸ்துவை நான் ஆராதிக்காவிட்டாலும் அவர் என்னுடன் மனிதரைப் போலவே பேசினார்'' என்று நடந்த விஷயத்தை

முழுவதுமாகச் சொல்ல ஆரம்பித்தார். அவருக்கு நான் ஜெபிக்கக் கற்றுக் கொடுத்துத் தேவனுடைய சகவாசத்தில் பலப்படும்படியாக வழி காட்டினேன். அடிக்கடி தேவன். அவரோடு பேச நேர்ந்தது. அவர் மூலமாகத் தேவன் எனக்குச் சில காரியங்களைக் கற்றுக் கொடுத்தார். அவருடைய மனைவியும் இயேசு கிறிஸ்துவை தொழுதுவர முன் வந்தார்கள். நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே தேவன் அவர்கள் இருவருக்கும் மத்தியில் நல்ல சமாதானத் தைக் கொடுத்தார். அவர்கள் தங்கள் வேலையையும்கூட இராஜனமா செய்துவிட்டுத் தங்கள் சொந்த ஊருக்குச் சென்று இயேசு கிறிஸ்துவிற்கு ஊழியம் செய்யத் தீர்மானித்தார்கள். அவர்கள் அப்படிப் புறப்படுகிற வேளையில் என்னிடம் ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். ''இராவ் சாஹப்ஜி நீங்கள் இருவரும் எங்களுக்காகக் கண்ணீர் விட்டுத் தேவனிடத்தில் மன்றாடி ஜெபித்தீர்கள். அதன் பயனாக எங்கள் குடும்பத்தில் நல்ல சமாதானம் ஏற்பட்டது. ஆனால் நாங்களோ உங்களுக்கு ஒன்றுமே செய்யாமல் போய்க் கொண்டிருக்கிறோம்'' என்றார்கள். அதற்கு நான் ''நீங்கள் ஏதாவது எனக்குக் கைம்மாறு செய்ய விரும்பினால் ஒன்று செய்யுங்கள். நீங்கள் உயிரோடு இருக்கும் நாளளவும் நீங்கள் செய்யும் ஊழியத்தின் மூலம் உங்களைப் போன்ற அநேக குடும்பங்கள் ஆண்டவரை அறியாமல் வழி தவறிப்போய் கொண்டிருக்கிற குடும்பங் கள், ஆண்டவரை அறிந்துகொண்டு அவர்கள் பாவங்களை அறிக்கையிட்டு அவைகளை விட்டுவிட்டு நல்ல சமாதானம் பெற்றுக் கொள்ளும்படியாக உபவாசமிருந்து கண்ணீரோடே ஜெபம் செய்யுங்கள். அது போதும். அது உங்களுக்கு ஆசீர்வாதமாகவும் இருக்கும்'' என்றேன். நான் அவர்களை அன்போடு வழியனுப்பி வைத்தேன். தற்போது அவர்கள் பஞ்சாப் மாகாணத்தில் குருதாஸ்பூர் என்னுமிடத்தில் தேவனுக்கொன்று உழைத்து வருகிறார்கள். தேவன்தாமே அவர்கள் ஊழியத்தை ஆசீர்வதிப்பாராக.

என் மனைவி கர்ப்பமாக இருந்த நாள்களில் ''ஆண்டவரே எங்களுக்கு ஒரு ஆண் பிள்ளையைத் தருவீரானால் அந்த

முதற்பிள்ளையை உமக்குரியவனாக்குவோம். அவனை உம் ஊழியத்திற்கே ஒப்புக் கொடுப்போம்'' என்று ஜெபித்து வந்தோம். அது குளிர்காலம். அந்தப் பகுதியில் சொல்ல முடியாத அளவுக்குப் பனிமழை பெய்து கொண்டு இருந்தது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் காலைக் கடன்களை முடித்துக் கொண்டதும், கொஞ்சம் வெயில் வந்ததால், ரெபெக்கா கதவைத் திறந்து வெளியே வந்து துணிகளைக் காய வைத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர் காலின் கீழ் ஏதோவொன்று மெத்தென்று இருப்பதாக உணர்நதார். அது பனியினால் மூடப்பட்டிருந்தது. இவர் கால் அதன்மேல் பட்டவுடனே அது அசைய ஆரம்பித்தது. இப்படி கால்களுக்குப்பட்டது என்னவாயிருக்மோ என்று குனிந்து பார்த்து பயமுற்று கதவருகே ஓடி வந்தார். அவர் சத்தத்தைக் கேட்டு நான் வெளியே சென்று பார்க்கும்போது, ஒரு நல்ல பாம்பு தவளைகளை நன்றாகத் தின்றுவிட்டு அசைய முடியாமல் விழுந்து கிடக்கும்போது, பனி பெய்ததால் அதன் உடல் மரத்துப்போய் சாகும் தருவாயிலிருந்தது. இதற்குள்ளாக அநேக மக்கள் வந்து அங்கு கூடிவிட்டார்கள். பல தரப்பட்ட மதத்தினர் அங்கிருந்ததினால் சிலர் ''நீங்கள் நாகேந்திரனைக் காலால் மித்துவிட்டதனால் தங்கத்தினாலோ அல்லது வெள்ளியினாலோ ஒரு நல்ல பாம்பு உருவத்தைச் செய்து இருபத்தைந்து தேங்காய்களை உடைத்துச் சிவபெருமானை அபிஷேகம் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் கர்ப்பதிலிருக்கிற பிள்ளை குருடனாய் பிறப்பான்'' என்றார்கள்.

வேறு சிலர் ''நீங்கள் உடனே சிவபெருமானுக்கு மஞ்சள் துணியினால் முடிப்பு கட்டி'' நாகேந்திர ராஜா என் மனைவியின் கர்ப்பத்திலிருக்கிற பிள்ளைக்கு எந்தத் தீங்கும் நேராவிட்டால் உனக்கு ஐந்து வாரங்கள், வாரத்திற்கு ஐந்து தேங்காய்கள் வீதம் அபிஷேகம் செய்து வைப்பேன். ஐந்து பிராமணர்களுக்கு அன்னதானம், வஸ்திராதானம் செய் வோம்'' என்று வேண்டிக் கொள்ளும்படியாக அறிவுரை கூறினார்கள். அப்படி வேண்டிக் கொண்டால்தான் உன்

மனைவியின் கர்ப்பத்தில் இருக்கும் பிள்ளை நன்றாகப் பிறக்கும் என்றார்கள். அவர்களில் பெரும்பான்மையோர் கிறிஸ்தவர்களாக இருந்தார்கள். அவர்களும் எங்களை அணுகி, ''ஐயா, அவர்கள் சொல்வது அத்தனையும் உண்மைதான். எனவே உங்கள் பெற்றோர்களுக்குக் கடிதம் எழுதி உங்களுக்குப் பதிலாக அவர்கள் சிவபெருமான் கோயிலுக்குச் சென்று அவர்கள் சொன்ன நேர்த்திக் கடனைச் செய்து கொள்வது நல்லது. எங்கள் பேச்சைக் கேளுங்கள். நீங்கள் பிடித்த முயலுக்கு மூன்றே கால்கள் என்று சொல்லாதீர்கள். நாங்கள் கிறிஸ்தவர்களானாலும், விக்ரக ஆராதனையிலிருந்து வந்தவர்கள் தாம். எங்களுக்கு ஏதாவது இப்படிப்பட்ட காரியங்கள் ஏற்படும்போது எங்கள் குடும்பத்தினர் எங்களுக்குப் பதில் இப்படிப்பட்ட நேர்த்திக் கடன்களைச் செய்து வருகிறார்கள். அதிலும் திங்கட்கிழமை சிவபெருமானை ஆராதிப்பதற்குச் சிறப்பான நாள். உங்கள் மனைவியின் கர்ப்பத்தில் இருக்கும் பிள்ளைக்குக் கட்டாயம் தோஷம் உண்டாகும். ஏதோ ஒரு குறைபாடு ஏற்படும் என்று பலவிதமாக எங்களை அச்சுறுத்தி அதைரியப்படுத்தினார்கள். இவையாவும் பிசாசின் கிரியைகள் என நான் தேவனுடைய கிருபையினால் உணரலானேன். நானும் என் மனைவியும் இரவும் பகலும் உபவாசமிருந்து கருத்தாய் ஜெபித்து வந்தோம்.

ஒரு நாள் இரவு கண்ணீரோடு மன்றாடி ஜெபித்துவிட்டுத் தூங்கிவிட்டேன். அடுத்த நாள் மதிய ஜெப வேளையில் நான் ஒரு தரிசனம் கண்டேன். அதில் ஒரு நல்ல ஆண் பிள்ளையை என் மனைவியிடம் கொடுத்து விட்டுப் போவதைக் கண்டேன். விவரத்தை அறிந்து கொண்ட நான் தேவனுக்கு நன்றியோடு துதி செலுத்தினேன்.

பிசாசு அதோடு என்னைவிட்டு விடாமல் நான் வேலை செய்யும் அலுவலகத்திலுள்ள அதிகாரிகளின் மத்தியில் எனக்குச் சமாதானமில்லாதபடியும் செய்தது. அதன் விளைவாக அவர்கள் என்னைத் தற்காலிக மாற்றத்தில்

(Tempurary duty) மற்றொரு இடத்திற்கு என்னை அனுப்பி வைத்தார்கள்.

அதாவது என் குடும்பம் டேங்காவேலியில்தான் இருந்தது. நானோ சில நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள பனிமலை மிகுதியுள்ள டிவிஷனுக்குச் சென்று பணியாற்றிவிட்டு மாதத்திற்கு ஒரு முறை வீட்டுக்கு வந்து குடும்பத்திற்குத் தேவையான காரியங்களை ஒழுங்கு செய்துவிட்டு மறுபடியும் திரும்பிப் போக வேண்டிய வகையில் நான் இருந்தேன். ரெபெக்காவிற்கு தெலுங்கு, ஒரிஸ்ஸா மொழிகளைத் தவிர மற்றெதுவும் தெரியாது. அங்கிருப்பவர்கள் லுச்சாயி, அஸ்ஸாமி, கோர்க்கா, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகள் பேசுவார்கள். ரெபெக்காவிற்கு இந்த மொழிகள் தெரியாத தால் பெரிய பிரச்சனையாயிருந்தது. எங்கள் வீட்டிலிருந்த ஆவிக்குரிய மகனாகிய ஜானஜங்கு பஹதூர் என்பவனும் வேலையில் சேர்ந்துவிட்டான். எனவே ரெபெக்கா தனித்து இருக்க வேண்டிய நிலைமையாயிற்று.

தேவையான எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு, ஜெபம் செய்துவிட்டு நானும் பிரயாணத்திற்கு ஆயத்தமானேன். இதற்குள்ளாக ஓட்டுநர் ஜீப்பில் என்னைக் அழைத்துக் கொண்டு போக வந்தார். எங்கள் திருமண வாழ்க்கையில் நாங்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து வாழ்வது இதுவே முதன் முறையாகும் . நான் என் மனைவியிடம் விடைபெற்றுக் கொண்டு ஹெலிபேட் கிரவுண்டுக்குச் சென்றேன். அதுவரைக்கும் நான் சென்று வேலை செய்ய வேண்டிய இடத்தை அறியாதவனாகவே இருந்தேன். இது இந்தியா சீனா எல்லைப் பகுதியாயிருந்ததினால் எது ஒன்றும் இரகசியமாகவும் திடீர் என்று தெரியப்படுத்தப்படும். நான் ஆர்டர் பெற்று நான் போக வேண்டிய ஊர் பைசாகி என்று தெரிந்ததும் நான் மிகவும் பயந்தேன். காரணம் அங்கு இருபத்தி நான்கு மணி நேரமும் பனி மழை பெய்து கொண்டே இருக்கும். அங்கு

நல்ல உணவும் கிடைக்காது. பிராண வாயுவும் குறைவாகக் கிடைக்கும். எனவே அங்குச் செல்கிறவர்களுக்கு மூக்கில் இரத்தம் ஒழுகுமாம். மருத்துவ மனைக்கு எடுத்துக் கொண்டு போய் கிசிச்சை கொடுத்துக் கொண்டு இருக்கும்போதே சில மணி நேரத்திற்குள் இறந்து போய் விடுவார்களாம். வயிற்றில் வாயுக் கோளாறு நிமித்தம் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு வேலையைத் தொடர்ந்து செய்ய முடியாமல் திரும்பிப் போனவர்களும் உண்டாம். அந்தப் பயங்கரமானப் பனி மலைகளில் நடப்பதினால் கால்விரல்களில் நோய் தோன்றி முழங்கால்வரைக் கால்களை எடுத்துவிட்டு முடமாக்கப்பட்டு வீட்டிற்கு அனுப்பப்பட்டவர்களும் உண்டாம். அப்படிப் பட்ட இடத்தில்தான் நான் கடுமையாக உழைக்க ஆரம்பித் தேன். என் மனைவிக்கு நாட்களை கடப்பது கடினமாகவே இருந்தன.

என்ன செய்வது. ஒரு நாள் இரவு நான் அதிக வேதனை யோடு கர்த்தரிடத்தில் மன்றாடினேன். அந்த இரவில் நான் தூங்கிக் கொண்டிருக்கும்போது ''என் மகனே பரவஸ்து! பைசாகியில் சுராவாங் என்னுமிடத்திலும், தவாங்கு என்னு மிடத்திலும் எனக்காக, உனக்கு எவ்வளவோ வேலைகளிருக் கின்றன. அதனால்தான் நீ இங்கு அனுப்பி வைக்கப்பட்டாய். எனவே திகையாதே, கலங்காதே, திடமனதாயிரு. நான் உனக்குத் தெரியப்படுத்துவதில் கவனமாயிருக்கிறேன். நான் உன்னுடனேயே இருப்பேன்'' என்று சொன்ன தேவனின் சத்தத்தைக் கேட்டேன். நான் உடனே எழுந்து என் பங்கரில் ஜெபிக்க ஆரம்பித்தேன். பங்கர் என்றால் பூமிக்கு அடியில் கட்டப்பட்டிருக்கும் ஒரு அறை (Room) இப்படிப் பனிபமலைப் பகுதிகளில் அரசாங்கமே இப்படிப்பட்ட பங்கர்களைக் கட்டித் தருகிறார்கள்.

தவாங்கு என்னும் அந்த இடம் ஒரு பனிமலைப் பகுதியாகும். அதே மலையின் அடிவாரத்தில் சீன் மக்கள் குடியிருக்கிறார்கள். அங்கிருந்து மூன்று மைல் பிரயாணம் செய்தால் சீனாவைச் சென்றடையலாம். பைசாங்கில் மூன்று

மாதம் பணியாற்றிய பிறகு அந்தப் பகுதியில் வாழும் எல்லார்க்கும் அறிமுகமாகும்படி கர்த்தர் செய்தார். அங்குள்ள பிரிகேட்ஹைட் கேர்டர்ஸில் அட்மினிஸ்ட்ரேடிங் ஜூனியர் கமிசண்டு அலுவலர் சுபேதார் மேஜர் சாலமோன்ராஜ் (Solomon Raj) அவர்கள் அநேக காரியங்களை என்னோடு பகிர்ந்து கொண்டார்கள். அதாவது பல மாகாணங்களைச் சேர்ந்த பலதரப்பட்ட அநேக கிறிஸ்தவர்கள் பைசாங்கிலும், சார வாங்கிலும், துவாங்கிலும் இருந்தார்கள். இந்த மூன்று இடங்களிலும் மூன்று விதமானச் சபைகள் இருந்தன. ஆனால் அநேக ஆண்டுகளாக அவைகள் மூடப்பட்டிருந்தன. நடத்தக் கூடியவர்கள் இல்லாததினால் ஞாயிற்றுக் கிழமைகளில் கூட ஆலயங்கள் திறக்கப்படுவதில்லை எனத் தெரிந்து கொண்டேன்.

சாலமோன் அவர்கள் தேவனுடைய காரியங்களில் அதிகமான வாஞ்சையுள்ளவர். என்னுடைய சாட்சியைக் கேட்ட பிறகு ''ஐயா! நீங்கள் தேவனால் அனுப்பப்பட்டவர்கள் என்பதாக விசுவாசிக்கிறேன். காணாமற்போன ஆடுகளைத் தேடும்படி நீங்கள் இங்கு அனுப்பப்பட்டிருக்கிறீர்கள் என்பதாகவும் தெரிய வருகிறது. எங்களுடைய அபிரிகேட் சமாண்டர் அவர்களும் கிறிஸ்தவர்தான். அநேக முறை மூடியிருக்கின்ற இந்த ஆலயக் கதவுகளை திறக்க வேண்டு மாய் அவர்கள் என்னிடம் பேசிவருகிறார்கள். எனவே உங்களைக் குறித்து நான் அவரிடத்தில் எடுத்துச் சொல் கிறேன். வருகிற ஞாயிற்றுக் கிழமை பத்து மணியிலிருந்து ஒரு மணிவரை ஆலயத்தில் ஆராதனை நடைபெறும் என்பதாக அறிக்கைகளைத் தயார் செய்து அறிவித்து விடுவோம். எனவே நீங்கள் ஜெபத்திற்கு ஆயத்தப்படுத்துங்கள்'' என்று சொல்லிவிட்டார்கள்.

அடுத்த நாள் மாலை பிரிகேட் கமாண்டர் அவர்கள் தன்னுடைய அறைக்கு என்னை அழைத்து அநேக காரியங்களைக் குறித்துப் பேசினார்கள். தன்னுடைய சாட்சியையும் சொன்னார்கள். சுமார் இரண்டு மணி நேரம் பேசிக்

கொண்டிருந்தோம். என்னுடைய சாட்சியையும் சொல்லும் படிக் கேட்டார்கள். ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தில் கேட்பீர்கள். இப்பொழுது வேண்டாம் என்று நான் சொன்னேன். சிற்றுண்டி அருந்திய பிறகு சாலமோன் அவர்களுடன் சேர்ந்து நாங்கள் மூவரும் முழங்கால் மன்டியிட்டுக் கர்த்தரிடத்தில் ஜெபித்துக் கொண்டோம்.

ஞாயிற்றுக்கிழமை காலை 10:30 மணிக்கு ஆலயம் முழுவதிலும் ஆட்கள் நிறைந்து வழிந்தனர். நிற்கக்கூட இடமில்லாதவாறு ஆட்கள் வெளியிலேயும், கதவருகிலே யும், சன்னல் பக்கமாகவும் நின்று கொண்டிருந்தார்கள். பிரகேட் கமாண்டர் அவர்கள் அதைப் பார்த்து மிகவும் சந்தோஷப்பட்டார்கள். ஆட்கள் வெளியே சௌரியமாக உட்காருவதற்காக சாமியானா போட்டு ஒழுங்கு படுத்தியிருந்தார் எல்லாரும் என்னுடைய சாட்சியைக் கேட்டார்கள்.

அதற்குப் பிறகு மற்ற மதத்தினரும் கூடத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டங்களில் வந்து கலந்து கொண்டார்கள். மிகவும் அற்புதமான ஊழியம் அந்தப் பகுதியில் நடக்கும் படியாகக் கர்த்தர் உதவி செய்தார். அநேகர் தங்கள் தீயவழிகளைவிட்டுக் கர்த்தர் பக்கம் திரும்பினார்கள். தேவனுடைய நாமத்திற்கு ஸ்தோத்திரமுண்டாவதாக!

மூன்று மாதங்களுக்குப் பிறகு கர்த்தர் என் கனவில் மெல்லிய குரலில் பேசினார். ''என் மகனே நீ பிரயாணத்திற்காக ஆயத்தப்படு, நீ பைசாக்கியில் செய்த அதே காரியத்தை சுரங்கியாலும் செய்ய வேண்டியிருக்கிறது. உனக்கு முன்னே நான் போகிறேன். பயப்படாதே'' என்றார்.

ஒரு வாரத்திற்குப் பிறகு நான் சுராவாங்குக்கு வேலை மாற்றம் செய்யப்பட்டதாக அரசாங்கத்தின் ஆணையைப் பெற்றுக் கொண்டு அலுவலக வண்டியில் சாமான்களை ஏற்றிக் கொண்டு புறப்பட்டேன். வண்டி வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. எங்குப் பார்த்தாலும் கார் மேகங்கள் பனி

மழைப்போல் பெய்து கொண்டிருந்தது. காடுகளைக் கடந்து சென்று கொண்டிருந்தோம்.

ஒரு மலையில் பனி என்றால் அடுத்த மலையில் மழை. ஜோங்கா (வண்டி) அப்படியும் இப்படியுமாய் ஓடிக் கொண்டிருந்தது. பனிக் கட்டிகளின் மேல் ஓட ஆரம்பித்தது. வலப்புறமாகத் திரும்ப வேண்டிய இடமது. நாங்கள் மலை ஓரத்தில் இருந்தோம். முன்னே இருப்பது சரியாகத் தெரியவில்லை. மலைப்பகுதிகளில் அடிக்கடி நிலச்சரிவு ஏற்படும். வழியும் குறுகியதாக இருக்கும். நான் வண்டியின் பின் சீட்டில் உட்கார்ந்து கொண்டு பைபில் படித்துக் கொண்டிருந்தேன் திடீரென ஓர் அதிர்ச்சி. ''மர்காயே சாஹிப்'' (செத்து விட்டேன்) என்று டிரைவர் இராம்சிங் அவர்கள் ஓர் பயங்கர மரணச் சத்தம் போட்டதும், வண்டி நின்று போனதும் ஏறக்குறைய ஒன்றாக இருந்தது. நின்றுபோன வண்டியின் சக்கரங்கள் முன்னுக்கு நகர்ந்து கீழே இறங்கி விட்டன. பைபில் படித்துக் கொண்டிருந்த நான் தலை தூக்கிப் பார்த்து, விஷயத்தை அறிந்து கொண்டதனால் மயக்க முற்றேன். எல்லாம் ஒரு நொடியிலேயே நடந்து விட்டது.

இப்படி எவ்வளவு நேரமானதோ எனக்குத தெரியாது. மயக்கம் தெளிந்து நான் விழித்துப் பார்க்கும்பொழுது எங்களுக்கு முன்னால் சாலை (Road) இல்லாததினால் ஜோங்காவின் (வண்டியின்) முன்னிரு சக்கரங்களும் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தன. பின்பகுதியிலிருக்கும் வலப்புறச் சக்கரம் சாலையின் ஓரத்தில் இருந்தது. இடப்புறச் சக்கரம் சாலையின் மத்தியில் இருந்தது. வண்டியின் முன் சக்கரங்களின் மத்தியில் ஒரு செடி காணப்பட்டது. அந்த மலை அடிவாரத்திலுள்ள மரத்தின் மீது இந்த வண்டியின் முன் பகுதி சாய்ந்திருந்தது. என் இருதயம் வேகமாக அடிக்க ஆரம்பித்தது. வண்டியின் டிரைவர் இராம்சிங்கைப் பார்த்தேன். அவருக்கு இன்னும் சுயநினைவு வரவில்லை. இருவரும் மேகத்துளிகளினால் நனைந்து போனோம். பைபிலின் காகிதங்களும் நனைந் திருந்தது. அப்பொழுது நான் சங்கீதம்

121:3 வசனத்தைப் படித்துக் கொண்டிருந்தேன். அந்த வசனமாவது ''அவர் உன் காலைத் தள்ளாடவொட்டார். உன்னைக் காக்கிறவர் உறங்கார்'' என்பதாகும்.

அந்த வசனத்தை மீண்டும் மனதிற்குள்ளாகத் தியானித்து, விசுவாசித்து, கண்ணீரோடு தேவனைத் துதிக்க ஆரம்பித்தேன். அல்லேலூயா! அல்லேலூயா என்று துதித்துக் கொண்டிருந்தேன். என் துதியின் சத்தத்தைக் கேட்டு டிரைவர் இராம்சிங் சுய நினைவிற்கு வந்து, நடந்ததைத் தெரிந்து கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் தன் இரு கைகளையும் கூப்பி மேல் நோக்கி என்னைப் போலவே அவரும் அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா என்று சொல்லிக்கொண்டு பயத்தினால் அழ ஆரம்பித்தார்.

நானும் அதே விதமாகத் துதித்துக்கொண்டு கீழே பார்த் தேன். கீழே ஒன்றுமில்லை. பாதாளம் போல் காட்சியளித்தது. இருள் சூழ்ந்து கொண்டது. கண்கள் சூழல ஆரம்பித்தது. மேல் நோக்கிப் பார்த்தேன். மேகங்களும் காணப்படவில்லை ஒன்றும் புரியாதவனாகத் திகைத்துப்போய் என்ன செய்வதென்று அறியாமல் அப்படியே துதித்துக் கொண்டு இனி எங்களை யார் இரட்சிப்பார்கள் என்று எண்ணிக் கலங்கி என் கையிலுள்ள பைபிலைப் பார்த்தேன்.

''இதோ இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை, தூங்குவதுமில்லை கர்த்தர் உன்னைக் காக்கிறவர். கர்த்தர் உன் வலது பக்கத்திலே உனக்கு நிழலாயிருப்பார். பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை. கர்த்தர் எல்லா தீங்குகளிலிருந்தும் விலக்கி உன்னைக் காப்பார். அவர் உன் ஆத்துமாவைக் காப்பார். கர்த்தர் உன் போக்கையும், உன் வரத்தையும், இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் காப்பார்'' இந்த வசனங்கள் என் கண்களில் பட்டவுடனே எனக்கு எங்குமில்லாத தைரியம் வந்தது. விசுவாசத்துடன் ''தேவனே'' என்று நான் சொல்லிக் கொண்டிருக்கும்போது டிரைவர் இராம் சிங் என்னைக் குறிக்கிட்டு யார் அந்தத்

தேவன்? என்று என்னைக் கேட்டார் நான் "அவர்தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. அவர் நம்மைக் காப்பாற்ற வல்லவராய் இருக்கிறார். நம்மை நிச்சயமாய் தப்புவிப்பார் என்று சொன்னேன். இவ்வாறு இராம்சிங்குடன் நான் பேசிக் கொண்டிருக்கும் போதே பிரிகேட் கமாண்டர் உடனே புறப்பட்டு வரவேண்டும் என்று மேல் அதிகாரிகளின் ஆணையின் பேரில் அவர் தன்னுடைய வேலைக்காரர் களுடன் அதே வழியில் புறப்பட்டு வந்தார்.

அவர்கள் எங்களை விட முன்னாலேயே போய் இருக்க வேண்டும். ஆனால் ஏனோ அது தெய்வச் சித்தமாய் இருந்ததினால் எங்களுக்குப் பின் வரவேண்டியவர்களாக இருந்தனர். பிசாசு என்னை வழியிலேயே அழித்துவிட நினைத்தான். ஆனால் பிசாசின் செயல்களை நன்கு அறிந்த தேவன் எங்களுக்குப் பின்னால் அந்தப் பிரிகேட்கமாண்டர் வண்டியை வரும்படியாகச் செய்தார். பிரிகேட் கமாண்டர் அங்கு வந்து தன் வண்டியை நிறுத்தி, விஷயத்தைப் புரிந்து கொண்டு, உடனே வண்டியிலுள்ள ஒயர்லெஸ் (Wireless) கருவியை இயங்கச் செய்து கிரேன் வரவழைத்து வண்டியை இழுத்துச் சரியாகச் சாலையில் வைத்ததோடு மட்டு மல்லாமல் அந்த அபாய நிலையிலிருந்து எங்களைக் காப்பாற்றும் முழு பொறுப்பையும் அவர் ஏற்றுக் கொண்டார். அதற்குப் பிறகு நாங்கள் அவர் வண்டியிலேயே சுராவாங் குக்குச் சென்றோம். "கோர்டாப் என்கொயிரியில்" (Courtof enquiry) நடந்ததைச் சொல்லும்படியாக இராம் சிங்கைக் கேட்டபோது, இராம்சிங் நடந்ததை முழுவதுமாகச் சொல்லி மரித்துப் போன எங்களுக்கு மறுபடியும் ஜீவனைக் கொடுத்தார் அந்த அல்லேலூயா தேவன் என்றார்.

யார் அந்த அல்லேலூயா தேவன்? என்று அந்த அதிகாரிகள் கேட்டார்கள். அதற்கு அவர் இதோ இந்த ராவ்சாரைக் கேளுங்கள். அவர் சொல்லுவார் என்று பதிலளித்தார். கொஞ்ச நாள்களுக்குப் பிறகு இராம்சிங்கும் அவர் மனைவியும் ஒரு இந்தி பைபில் வாங்கிப் படிக்க ஆரம்

பித்தார்கள். ஒரு நாள் ஆண்டவர் இராம்சிங்கின் மனைவியிடத்தில் ''உன் கணவனைப் பிழைக்கச் செய்தவன் நானே, அவர் எனக்காக ஜீவிக்க வேண்டுமென்று'' சொன்னதாக அக்கருத்தை என்னிடம் சொல்லி அவர் பகிர்ந்து கொண்டார்கள். நான் அவர்களுக்கு அதை விவரித்துச் சொன்னேன். அவர்கள் தங்கள் வேலையை இராஜினமா செய்து விட்டுத் தேவனுக்காக ஊழியம் செய்யப் பீகார் மாகாணத்திற்குப் போய் விட்டார்கள். ''நாவுகள் யாவும் கர்த்தரைத் துதிக்கும்'' என்று தேவன் சொல்லியிருக்கிறார். ரோமர் 14:12 இந்த வசனத்திற்கேற்றாற்போல் ஜோகசிங்கும் அவர் குடும்பமும், அதே விதமாக இராமசிங்கும் அவருடைய மனைவியும் தனித்தனியாக இருந்த போதிலும் அவர்களின் நாவும் தேவனைத் துதித்தன.

டேங்காவேலியில் ரெபெக்கா ஏழு மாதக் கர்ப்பிணியாக இருந்தார். அவர் உபவாசத்தோடு ஜெபித்து வந்ததினால் வயிற்றிலுள்ள குழந்தை பலவீன மடைந்திருந்தது. அதன் நிமித்தம் அவரைத் தவாங்கு மிலிட்டரி மருத்துவமனையில் சேர்த்து இருந்தார்கள். இந்தச் செய்தி எனக்குத் தெரிந்தபோது நான் அவரைப் பார்க்கப் புறப்பட்டேன்.

அதிகாலையில் 5.30 மணிக்குச் சுராவாங்கியிலிருந்து பைசாகிக்குப் ஹெலிகாப்டரில் போக வேண்டியிருந்தது. அதே இரவு ரெபெக்கா டிரங்கால் செய்து என்னுடன் பேசினார். ''நான் இப்பொழுது நன்றாய் இருக்கிறேன். நீங்கள் கவலைப்படவேண்டாம். எனக்கு வைத்தியம் பார்த்து வருகிறார்கள். நீங்கள் சுராவாங்கியிலேயே இருந்து தேவனுடைய காரியங்களைச் செய்ய ஆயத்தப்படுங்கள். நான் படுக்கையிலிருந்தே ஜெபித்து வருவேன்'' என்று பேசி என்னைத் தைரியப்படுத்தினார். இவ்விதமாக இரண்டு மூன்று நாள்களுக்கு ஒரு முறை தொலைபேசியில் நாங்கள் பேசி வந்தோம்.

சுராவாங்கில் மூடி இருந்த ஆலயக் கதவுகள் திறக்கப்பட உதவி செய்ய வேண்டுமென்றும், உனக்கு முன்னே நான்

போவேன் என்று எனக்கு வாக்குத்தத்தம் செய்த தேவனை நோக்கி ஜெபித்தேன். மூன்று நாள்கள் நன்றாக உபவாச மிருந்து ஜெபித்துவிட்டு அங்குள்ள இராணுவ அதிகாரியுடன் கலந்து பேசினேன். எல்லாவற்றையும் அவருக்கு நான் விளக்கமாகச் சொன்னபிறகு அவர் மகிழ்ச்சியடைந்து, ஆலயத்தில் கூட்டங்கள் நடத்த அவர் எனக்கு அனுமதி வழங்கினார். அங்கு அநேக இராணுவத்தினர் வாரத்திற்கு இருமுறை ஜெபத்தில் கலந்து கொண்டார்கள்.

அங்கே வந்த ஒரு புத்தமதத் தலைவர் ஒருவர் என்னோடு ''புத்தரும் தேவனல்லவா'' என்று தர்க்கிக்க ஆரம்பித்தார்.

அதற்கு நான் அவரை ''நீங்கள் தேவனாக முடியுமா?'' என்று திரும்பக் கேட்டு அநேக விஷயங்களைக் குறித்து ஒரு மாத காலம் அவரோடு இயேசுவைக் குறித்துப் பேசி வந்தேன். அதன் பிறகு அவர் தான் பின்பற்றி வந்த அந்த புத்த மதத்தைவிட்டு ஞாயிற்றுக்கிழமைகளில் நடக்கும் ஆராதனைக்கு வர ஆரம்பித்தார். இதைப் பார்த்த அந்தப் பகுதி மக்கள் குடித்து விட்டு அவரோடு சண்டை போட்டு போதையில் அவரைக் கத்தியால் குத்திக் கொன்று விட்டார்கள்.

நான் இராணுவ பாதுகாப்பு எல்லைக்குள் இருந்ததினால் என்னிடம் அவர்களால் வர முடியவில்லை. இல்லை யென்றால் என்னையும் அவர்கள் கொன்று தீர்த்துக் கட்டி யிருப்பார்கள். எனக்கு எந்த நேரமும் உயிர்ச்சேதம் ஏற்படலாம் என்று தெரிந்து கொண்ட இராணுவ அதிகாரிகள் என்னை அங்கிருந்து பத்திரமாக தவாங்க என்னுமிடத்திற்கு அனுப்பிவிட்டார்கள். அங்கு யாரோ ஒரு விஞ்ஞானி தொழில் சம்மந்தமாக வந்து ஆலயம் ஒன்று கட்டினார்கள். ஆனால் அந்த ஆலயம் அநேக ஆண்டுகளாய் மூடப்பட்டிருந்தது. அங்கு ஒரு தேவ ஊழியக்காரரும் இருந்தார். அவர் விபசாரத்திற்கும் குடிக்கும் அடிமையாகிப் புறஜாதி மக்களுடன் சேர்ந்து புத்த மதத்தைப் பின்பற்றி வந்தார்.

இப்படி நடைபெறுவதற்குக் காணரம் என்னவென்றால் அந்த விஞ்ஞானி வெளிநாட்டிற்குத் திரும்பிச் சென்று பணம் அனுப்பிக் கொண்டிருந்த நாட்கள் வரை அவர் புத்த மதத்தை விட்டு ஊழியம் செய்து வந்தார்கள். ஏதோ ஒரு காரணமாக அங்கிருந்து பணம் வருவது நின்றுபோன உடனே அவர் மறுபடியும் புத்த மதத்தில் சேர்ந்து விட்டார். இப்படித்தான் சிலர் ஊழியம் செய்து வருகிறார்கள் என்று விளங்கிக் கொண்டேன். பணத்திற்காகச் செய்யப்படும் ஊழியம் தேவனுக்குச் செய்யப்படும் உண்மையான ஊழியம் என்று சொல்ல முடியாது. நான் அந்த இடத்திற்குச் சென்று தேவனுடைய வார்த்தையை விவரித்தபோது அநேகர் வந்து ஆராதனையில் பங்கு கொண்டனர். எனக்கும் தெரியாமல் இருதய வியாதியுள்ள ஒரு ஜே.சி.ஓ (J.C.O) சுகமாக்கப் பட்டார். மேஜர் குரியன் என்னும் கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஒரு சகோதரர் பயங்கரமான குடிக்கு அடிமையாகி நோய்வாய்ப்பட்டவராக இருந்து வந்தார். மூன்று வாரம் தொடர்ந்து அவருக்காக ஜெபித்து வரும்போது அற்புதமாக அவர் சுகமாக்கப்பட்டார். கேப்டன் ஜி.கே. நாயர் அவர்களின் மகன் தாமதமாக போமடில்லா மாவட்டத்தின் தலைமை ஸ்தானத்திலுள்ள பல்கலைக் கழகத்தில் இடம் கிடைக்காமையால் படிக்க முடியாமலிருந்தார். இந்த விஷயத்தை அவர் என்னிடம் சொன்னபோது நான் ஜெபிக்க ஆரம்பித்தேன்.

அதன் பிறகு அருணாசலப் பிரதேச அரசின் கல்வித்துறை அமைச்சர் விசேஷமான ஆணைப் பிறப்பிக்கச் செய்து ஜி.கே.நாயர் அவர்களின் மகனுக்கு இடம் கிடைத்து படிக்கும் படியாக தேவன் உதவி செய்தார். இதற்குள்ளாக எனக்கொரு எண்ணம் வந்தது. எனவே ஆண்டவரிடத்தில் ஜெபிக்க ஆரம்பித்தேன். ஆண்டவரே! இந்தப் பகுதியை விட்டு இனி கொஞ்ச நாள்களில் நான் போய் விடப்போ கிறேன் அல்லவா! இப்பொழுது நான் ஊழியம் செய்து வரும் இந்த மூன்று இடங்களிலும் இரட்சிக்கப்பட்டவர்களை

வழிநடத்தக் கூடிய ஊழியக்காரரை அனுப்பும் என்று வேண்டிக்கொண்டேன். அதன் விளைவாக நான்கு மாதத்திற்குள் ஒரு மிஷனெரி அந்த இடத்திற்கு வந்து ஊழியத்தை ஆரம்பித்தார்கள். ரெபெக்கா ஒன்பது மாத நிறை கர்ப்பினியாக இருந்தார். நான் ஜெபித்தபோது தேவன் எனக்கு அந்தப் பகுதிலிருந்து விடுதலை கொடுத்தார்.

டேங்காவேலியில் மீண்டும் நுழைவு!

பிரியமானவர்களே! உங்களை எந்தவிதமான மரண அபாயங்கள். சூழ்ந்து வந்தாலும், உங்கள் நிலைமை எவ்வளவு பயங்கரமானதாக இருந்தாலும், தேவனின் வாக்குத்தத்தத்தை நினைத்துப் பாருங்கள். ''பயப்படாதே! நான் உன்னுடனே இருக்கிறேன். திகைக்காதே! நான் உன் தேவன். நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்'' *(ஏசா. 41:10)*.

இயேசு கிறிஸ்து மேலும் சொல்லுகின்றார். ''வருத்தப் பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' *(மத். 11:28)*.

எனவே பிரியமானவர்களே! இப்பொழுதே உன் தேவைக்காகத் தேவன் உதவி செய்யும்படி வேண்டிக் கொள்ளுங்கள். மேஜர் சூரியனுக்கும், கேப்டன் ஜி.கே. நாயருக்கும் உதவி செய்த இயேசு, இருதய நோயிலிருந்து ஜெ.சி.ஓ. வை குணப்படுத்திய இயேசு, என் உயிரையும், இராம்சிங் உயிரையும் காப்பாற்றிய இயேசு, யோகசிங்கிற்குத் தரிசனம் கொடுத்து அவரோடு பேசிய இயேசு தேவன், உங்களுக்கும் தரிசனம் கொடுத்து உங்களோடு பேசிப் சுகமளிக்க வல்லவராயிருக்கிறார். நீங்கள் இரட்சிக்கப் படுவீர்கள். ஆம், ஆமென்.

நான் டேங்காவேலியிலிருந்து என் வீட்டுக்குச் சென்றேன். ரெபெக்காவுக்கு பிரசவ வேதனை ஆபத்தான நிலையில்

இருந்ததினால் நான் வீடு சேர்வதற்குள் அங்குள்ள மக்கள் பலர் ஒன்று சேர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தனர். பிரசவ நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. அது முதல் பிரசவமானதால் தவாங்கிலுள்ள இராணுவ மருத்துவமனையில் சேர்த்தோம். ஐந்து நாட்கள் வரை அவரைப் பிரசவ அறைக்குள்ளாகவே வைத்திருந்தார்கள். மருத்துவ நிபுணர்கள் அவரைப் பரிசோதிக்க அவர் இருந்த அறைக்குள் சென்றனர். யாருக்கும் ஒன்றும் புரியவில்லை. ரெபெக்கா மரண அபாயத்துக் குள்ளானதால் அறுவை சிகிச்சை செய்து, குழந்தையை எடுத்தார்கள். குழந்தை தாயின் வயிற்றிலேயே ஐந்து நாட்கள் இருந்துவிட்டதால் உடலின் வெப்ப நிலையை இழந்து விட்டது. குழந்தையின் இருதயம் மெதுவாகத் துடித்துக் கொண்டிருந்தது. இதனால் மின்சார வெப்பச் சாதனங்கள் பொருத்தப்பட்டிருந்த ஒரு தனியறையில் ஊஞ்சலில் வெந்நீர்ப் பைகள் வைக்கப்பட்டு அதன் மேல் குழந்தையைப் படுக்க வைத்து எங்களிடத்தில் வந்து செய்தியைச் சொன்னார் கள். ''உங்கள் தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளுங்கள். எங்கள் கைகளில் ஒன்றுமில்லை'' என்று மருத்துவர்களும், நர்சுகளும் சொன்னார்கள்.

மூன்று நாள்கள் வரை அக்குழந்தையை அதே நிலையில் வைத்திருந்தார்கள். ரெபெக்கா நாற்பத்து எட்டு மணிநேரம் சுயநினைவு இழந்து இருந்தார். அவருக்கு இரத்தமும் ஏற்றினார்கள். தீவிரமான சிகிச்சையையும் செய்து வந்தார்கள். நானோ ஜெபத்தில் போராடிக் கொண்டிருந்தேன். தேவனுடைய சமூகத்தில் கண்ணீரோடு இரவும் பகலும் வேண்டுதல் செய்து வந்தேன்.

''என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். பிழைத்து என்னிடத்தில் விசுவாசமாயிருக் கிறவன் ஒருபோதும் மரிக்க மாட்டான். இந்த வார்த்தைகளை நம்புகிறாயா'' என்று சொல்லுகிற தேவனுடைய வார்த்தை களை நினைவு கூர்ந்தேன்.

''ஆண்டவரே! என் மனைவி பிள்ளை இருவரும் பிழைப்பார்கள். அவர்கள் ஒருபோதும் மரிக்க மாட்டார்கள்''

என்று விசுவாசத்தோடு கடைசியாக ஜெபத்தைச் செய்து முடித்தேன். தேவனை அறிந்தேன். நான்காவது நாள் நான் மருத்துவ மனைக்குச் சென்றபோது டாக்டர் மேத்யூ அவர்கள் என்னைப் பார்த்து ''உங்கள் ஜெபத்தை ஆண்டவர் கேட்டிருக் கிறார். இதோ! வந்து பாருங்கள். என்று சொல்லி என்னை ஒரு வார்டுக்கு அழைத்துக் கொண்டுபோய் ஊஞ்சலில் விளை யாடிக் கொண்டிருந்த ஆண்குழந்தையைக் காண்பித்தார். பக்கத்திலேயே ஆரோக்கியமாகப் படுத்திருந்த ரெபெக் காவையும் பார்த்தேன். தேவனைத் துதித்தேன். எவ்வளவு அதிசயமானவர் இந்த இயேசு. பத்து நாள்கள் கழித்து அவர்கள் இருவரையும் வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். குழந்தை எந்தவித ஊனமுமில்லாமல் நன்றாக இருப்பதைப் பார்த்து ஜனங்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். ஏனென்றால் அந்த ஜனங்கள் தான் ரெபெக்கா கர்ப்பவதியாக இருந்தபோது நல்ல பாம்பை மிதித்து விட்டதால் பிறக்கப் போகிற குழந்தை குருடாய் இருக்கும் என்று சொன்னவர்கள்.

மீண்டும் ஒரிஸாவுக்குப் பிரயாணம்!

சில நாள்கள் கடந்த பிறகு ஆண்டவர் என்னோடு கனவில் பேசினார். ''என் ஊழியக்காரனாகிய பரவஸ்து நான் உன்னோடு பேச வேண்டி இருக்கிறது. நீ உடனே இந்த இடத்தை விட்டு விட்டு நீ முன்பு விட்டு வந்த இடத்திற்கு மறுபடியும் செல். நான் உனக்குச் சொல்லும் வரை அங்கேயே இரு. இந்தப் பகுதியில் கொலைகள் நடக்க இருக்கிறது. நான் உன்னுடனேயே இருப்பேன். எனவே நீ பிரயாணத்திற்கு ஆயத்தம் செய்'' என்று கூறினார். அதற்கு நான் ''ஆண்டவரே! இந்தப் பச்சைக் குழந்தையையும், பிரசவித்த என் மனைவி யையும் அழைத்துக்கொண்டும், இந்தச் சாமான்களை எல்லாம் எடுத்துக் கொண்டும் என்னால் எப்படிப் போக முடியும். இன்னும் சிறிது நாள்கள் இங்கேயே இருக்கும்படி எனக்குக் கிருபை காட்டும்'' என்று வேண்டிக்கொண்டேன். அதற்கு ஆண்டவர் ''கலங்காதே! உன் அருகிலேயே இருந்து நான் உனக்குத் துணை செய்வேன்'' என்று சொன்னபோது

நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். நான் உடனே தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு கண்களைத் திறந்து பார்த்தபோது பக்கத்துப் படுக்கையில் இருந்த என் மனைவி காணவில்லை. குழந்தை மட்டும் விளக்கு வெளிச்சத்தில் கை கால்களை அசைத்துக் கொண்டிருந்தது. நான் திகைத்து அதிர்ந்துபோய் எல்லா அறைகளிலும் தேட ஆரம்பித்தேன். ரெபெக்கா ஒரு அறையில் முழங்கால் இட்டு ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதைக் கண்டேன். என் காலடிச் சத்தத்தைக் கேட்டு அவர் திடீரென எழுந்து கொண்டார். நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்முறுவல் செய்து கொண்டோம். அவர் தேவனிடத்தில் ஜெபித்தார்கள். "ஆண்டவரே நாங்கள் இப்பொழுது என்ன செய்ய வேண்டுமோ கட்டளையிடுங்கள்" என்று கேட்டதற்காகச் சந்தோஷப்பட்டார். தேவனின் மெல்லிய சத்தத்தைக் கேட்டதற்காக நான் மிகவும் சந்தோஷப்பட்டேன். எனக்குக் கிடைத்த தரிசனத்தை அவருக்கு விவரித்தேன்.

நாங்கள் மீண்டும் ஒரிஸா மாநிலம் வர முயற்சித்த போது பன்னிரெண்டு நாள்களுக்குள் அம்முயற்சி பயனளிக்க அருள் புரிந்தார். அப்போது என் குழந்தை பிறந்து இருபத்து எட்டே நாள்கள் ஆகியிருந்தது. எங்கள் பிரயாணம் எவ்வளவோ கஷ்டமான பிரயாணமாக இருந்தாலும்,தேவன் அதிகமான வசதிகளை செய்து தந்து எங்களைக் காத்து வந்தார்.

ஒவ்வொரு இடத்திலும் பிரயாணிகள் எங்களுக்கு உதவிசெய்ய ஆண்டவர் ஆட்களை ஆயத்தம் செய்திருந்தார். 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16ஆம் தேதி நாங்கள் ஒரிஸா வந்தடைந்தோம். 1978ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அருனாசலப் பிரதேசத்திலுள்ள கிறிஸ்துவ மிஷினெரிகளை அங்குள்ள புத்த மதத்தினர் வெட்டிக் கொலை செய்தனர். அந்நிகழ்ச்சி இந்த நாட்டையே அசைத்து விட்டது. ஒவ்வொரு மாநிலத்திலும் கிறிஸ்தவ இயக்கங்கள் அதை யொட்டி ஆரம்பிக்கப்பட்டன. அந்த இயக்கத்தினர் அந்த அந்த மாநில ஆளுநர்களை அனுகி அருணாசலப்

பிரதேசத்தில் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக நடந்து வருகின்ற வன்முறைச் செயல்களை உடனே தடை செய்யும் படி ஜனாதிபதியிடம் விண்ணப்பிக்க வேண்டுமென மனுக் கொடுத்தனர்.

ஒரிஸா மாநிலத்திற்குச் சங்கர் தயாள் சர்மா அச்சமயத்தில் ஆளுநராக இருந்தார்கள். ஆளுநரிடத்தில் சுத்தமான இந்திமொழியில் பேசுவதற்கு ஒன்றிற்கும் உதவாத என்னை ஆண்டவர் தேர்ந்து கொண்டதால் மக்கள் என்னைத் தேர்ந்தெடுத்தார்கள். ஒரிஸா மாநிலத்தில் கிறிஸ்தவ இயக்கங்களின் சார்பில் நானும் இன்னும் அநேகரும் சென்று இந்த மனுவைக் கொடுத்தோம். அந்தப் பயங்கரமான சூழ்நிலையிலிருந்தும் ஆண்டவர் என்னை இரட்சித்தார்.

ஒரிஸா மாநிலத்தில் ஊழியம்!

ஒரிஸா மாநிலத்திற்கு வந்த பிறகு புவனேஸ்வரத்தில் கொஞ்ச நாள்களும், அதன்பிறகு கர்காரோட் என்னுமிடத்தில் கொஞ்ச நாள்களும் இருந்து வந்தோம். நான் ஒரிஸாவில் இருந்தாலும் ஆந்திராவிலிருந்து ஊழியத்திற்கென அழைப்புக் கள் எனக்கு வந்து கொண்டே இருந்தன. ஒரிஸாவிலும் ஆண்டவர் சில இடங்களில் என்னை உபயோகப் படுத்திக் கொண்டார்.

ஆண்டவர் மற்றொரு குழந்தையையும் எங்களுக்குக் கொடுத்தார். இரண்டாவது பிரசவக் காலத்தில் ரெபெக் காவின் உடல் நிலை இன்னும் மோசமாக இருந்தது. தேவனிடத்தில் விசாரித்தபோது அறுவை சிகிச்சையின் மூலம் குமாரன் பிறப்பான் என்று தீர்க்கதரிசனமாக அறிவித்தார். அதே விதம் எங்களுக்கு இரண்டாவதாக மகன் பிறந்தான். இரண்டாவது முறை. சிசேரியன் ஆப்ரேஷன் செய்ததால் ரெபெக்கா மிகவும் பலவீனம் அடைந்து விட்டார். இதனால் அவருக்குப் பதினான்கு இரகமான கொடிய வியாதிகள் வந்தன. இந்நாள் வரைக்கும் அவர் அந்த வியாதிகளோடு போராடிக் கொண்டு தேவனுக்காக

ஜீவிக்கும்படி அவர் கிருபை செய்து இருக்கிறார். அதுவரைக்கும் நான் அரசாங்க வேலையில் இருந்து கொண்டே ஊழியம் செய்து வந்தேன்.

பெரியவன் பெயர் அருண்பரவஸ்து. சிறியவன் பெயர் கிரண் பரவஸ்து. இந்த இரண்டாவது குழந்தை பிறக்கும்போதே பயங்கரமான வயிற்றுவலி கோளாறினால் தாக்கப்பட்டிருந்தான். அதனால் அவன் வயிறு வீங்கும். வலியால் துடிப்பான்; அதனால் பால் குடிக்க மாட்டான். ஓராண்டு காலம் குழந்தை இப்படி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தமையால் நாங்கள் நிம்மதியற்றவர்களாகத் துன்பப்பட்டுக் கொண்டிருந்தோம். அநேக மருந்துவரிடத்தில் கொண்டு காட்டியதால் மிகுதியான பணம் செலவழிந்து போயிற்று. குழந்தை மருத்துவத்தில் நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்களிடத்திலும் நான்கு முறை எடுத்துச் சென்றோம். ஆனால் பிரயோஜனம் ஒன்றும் இல்லை. ஒரு நாள் கிரண் வலியினால் அழுது கொண்டிருந்தான். அதைப் பார்த்து சகிக்க முடியாமல் ஆண்டவரிடத்தில் ''ஆண்டவரே! கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்'' என்று மத்தேயு 7:7இல் வாக்குத்தத்தம் செய்திருக்கிறீரே. பத்தாம் வசனத்தில் நீங்கள் பொல்லாதவர்களாக இருந்தும், உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது பரலோகத்தி லிருக்கிற பிதா தன்னை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்கு அதைக் காட்டிலும் நல்ல ஈவுகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா என்று சொல்லி இருக்கிறீர். அப்படிச் சொல்லியிருக்கும்போது இந்த நல்லதல்லாத ஈவை எனக்கு நீர் ஏன் கொடுத்தீர்? இல்லாவிட்டால் எங்கள் குடும்பத்தில் உமக்கு பிரியமில்லாத காரியம் ஏதேனும் மறைந்திருக்கிறதா? அப்படியானால் தெரியப்படுத்தும். அப்பொழுதே நாங்கள் அதைச் சரிசெய்து கொள்கிறோம். இல்லாவிட்டால் நீர் கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றியருளும்.

நீர் பொய் சொல்ல மாட்டீர் என்று நான் அறிவேன். ''பிள்ளைகள் கர்த்தர் கொடுக்கும் சுதந்திரம் கர்ப்பத்தின் கனி

அவரின் ஈவு'' என்று சங்கீதம் 127:3இல் சொல்லி இருக்கிறீர். எனவே இது நீர் கொடுத்த சுதந்திரம். இதை நீரே மாற்றி உன் நாமத்தை மகிமைப் படுத்திக் கொள்ளும். இல்லாவிட்டால் கெட்ட ஈவு எனக்கு வேண்டாம். இது உம்முடையது. இதை நீரே எடுத்துக் கொள்ளும். இரண்டில் ஒன்று இன்று பொழுது விடிவதற்குள் தெரியவேண்டுமென்று இரவு 12 மணி வரைக்கும் ஜெபித்துக் கொண்டிருந்தேன். குழந்தை அதிகாலையில் எழுந்து நன்றாக விளையாடிக் கொண்டிருந்தது. எனக்கு எப்பொழுது தூக்கம் வந்ததென்றும் எப்பொழுது விழித்துக் கொண்டேன் என்பதும் எனக்கே தெரியவில்லை. நான் ஜெபித்துக் களைத்துப்போய் தூங்கி விட்டேன் என்று நினைக்கிறேன்.

குழந்தைத் தன் பிஞ்சுக் கரங்களால் என்னை வந்து தட்டி, தன் வயிற்றையும் தட்டிக்கொண்டு அதன் மொழியில் ஏதோ சொல்வதுபோல் எனக்குப்பட்டது. அந்த மொழி எனக்குப் புரியாவிட்டாலும் உவமை மொழியில் கர்த்தருக்கு நன்றி செலுத்தினேன். அந்த இரவு ஆண்டவர் தன் காயம்பட்ட கரத்தினாலேயே குழந்தையைத் தொட்டுச் சுகப்படுத்தினார். இந்நாள் வரைக்கும் அந்த வயிற்று வலி மறுபடியும் அக்குழந்தைக்கு வரவேயில்லை. தேவனுக்கு மகிமை யுண்டாவதாக.

பிரியமானவர்களே! உங்களுக்கு ஏதாவது வியாதி இருந்தால் உடனே முழங்காலிட்டு இயேசு கிறிஸ்துவை நோக்கி வேண்டிக் கொள்ளுங்கள். அருகிலுள்ள ஆலயத் திற்குச் சென்று அங்குள்ள ஊழியக்காரரிடம் ஜெபித்துக் கொள்ளுங்கள். ஆண்டவர் தொட்டு உங்களைச் சுகப் படுத்துவார். ஒரு வருடத்திற்குப் பிறகு ரெபெக்காவுக்கு ஹெர்னியா நோய் தொல்லை கொடுக்கத் தொடங்கியது. அவரின் வைத்திய செலவின் பொருட்டு மிகுந்த பண நெருக்கடி ஏற்பட்டது. மருத்துவர்கள் ஆபரேஷன் செய்து கொள்ளும்படி அறிவுரை கூறினார்கள். நானோ சற்றுக் காலதாமதம் செய்து வந்தேன். இரவு நேரங்களில் தூ...யாக

நான் ஜெபித்து வந்தேன். இங்ஙனம் மூன்று ஆண்டுகள் கழிந்தன. ரெபெக்கா மிகவும் உடல் நலம் குன்றி விட்டார்கள். அங்குள்ள விசுவாசிகள் எங்கள் வீட்டு வேலைகளில் அதிகம் உதவி செய்து வந்தார்கள். தேவன் தாமே அவர்களை ஆசீர்வதிப்பாராக.

அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும். எப்படி எங்கு என்று தேவனிடத்தில் கேட்டு வந்தேன். இவ்வாராக நான் ஜெபித்துக் கொண்டு இருக்கையில் ஒரு நாள் இரவு ''வாலாசா என்னுமிடத்தில் புதியதாகக் கட்டப்பட்டிருக்கிற ஆலயத் திற்குப்போ'' என்பதாகத் தேவனின் குரல் கேட்டது. உடனே நான் ஞாயிற்றுக் கிழமையன்று அதிகாலையில் எழுந்து இரயில் வண்டியில் வாலாசா சென்றேன். அங்குள்ள சபை ஊழியர்களிடத்தில் கலந்து பேசினேன். அவர் என் வார்த்தையில் விசுவாசம் வைத்து தன் சபை விசுவாசிகள் அனைவரிடத்திலும் என் விஷயத்தைத் தெரிவித்தார்கள். ரெவரெண்டு டி. ஜான் (T. John) அப்பாராவ் அவர்கள் புதியதாகச் சபையை அந்த இடத்தில் ஸ்தாபித்து ஊழியம் செய்து வருவது எனக்கு ஒரு போதும் தெரியாது. அந்த ஆலயத்தின் ஆராதனையில் சாட்சி சொல்லும்படி என்னைக் கேட்டார்கள்.

என்னுடைய சாட்சியைக் கேட்ட பிறகு, விசுவாசிகளும், சபை மக்கள் அனைவரும் ''நீங்கள் உங்கள் மனைவியை இங்கே கொண்டு வாருங்கள். மற்ற காரியங்களை நாங்கள் கவனித்துக்கொள்கிறோம்'' என்றார்கள். என்னை அவர்கள் தைரியப்படுத்தினார்கள். நான் உடனே வீட்டுக்குச் சென்று, அலுவலகத்தில் விடுமுறை எடுத்துக்கொண்டு, என் மனைவி குழந்தைகளுடன் வாலாசாவுக்கு வந்தேன். ரெபெக்காவை மருத்துவ மனையில் சேர்த்து அவருக்காக ஜெபிக்க ஆரம்பித் தார்கள். அறுவைச் சிகிச்சை செய்யும்போது ரெபெக்கா சுய உணர்வு அற்ற நிலைக்குப் போய்விட்டார்கள். அறுவை சிகிச்சை முடித்து ரெபெக்காவை தனி அறையில் கொண்டு போய் போட்டார்கள்.

அப்பொழுது அவருக்குச் சுயநினைவு இல்லை. அவ்வேளையில் அவருக்கு ஒரு தரிசனம் தெரிந்தது. சில கருப்புத் தூதர்கள் வந்து அவரைக் கொண்டு போகும்போது, சில வெண்ணிறத் தூதர்கள் வந்து அந்தக் கருப்புத் தூதர்களோடு யுத்தம் செய்துகொண்டு இருக்கும் போது ஒரு பெரிய தூதர் பட்டயத்தால் அந்தக் கருப்புத் தூதர்களை விரட்டியடிக்கையில் அவர்கள் ரெபெக்காவை விட்டு விட்டு ஓடி விட்டார்கள் என்று மயக்கம் தெளிந்த ரெபெக்கா எங்களுக்குச் சொன்னபோது நாங்கள் அதைப் புரிந்துகொண்டோம்.

அந்தச் சபையைச் சார்ந்த சகோதரர் N. சூரியநாராயணா அவர்களும் அவர் மனைவியாகிய சகோதரி விஜயகுமாரி அவர்களும் இன்னும் சகோதரர் ஜார்ஜ் அவர்களும் அவருடைய மனைவி சகோதரி புஷ்பம்மா அவர்களும் எங்களைப் பலவிதமாக ஆதரித்து உபசரித்தார்கள். ஆண்டவர் தாமே அவர்களை எல்லாம் ஆசீர்வதிப்பாராக.

''நான் அனுப்புகிறவனை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான். என்னை ஏற்றுக் கொள்ளு கிறவன், என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு கிறேன்'' என்று இயேசு சொன்னார் (யோவான் 13:20).

இயேசு கிறிஸ்து சொன்ன இவ்வண்ணமாக இவர்கள் எங்களை ஏற்று உபசரிக்கவில்லை. உண்மையிலேயே இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு அவருக்கு உபசரணை செய்தார்கள் என்றே எண்ண வேண்டியிருக்கிறது. அந்த அன்பான ஊழியக்காரராகிய Rev. D. ஜான் அப்பாராவ் அவர்களுக்கு எங்கள் இதயங்கனிந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

பைபில் மிஷன் இயக்கத்தின் உயிர்மீட்சிக் கூட்டங்கள் (GUNTUR) குண்டூரில் நடந்து கொண்டிருந்தன. அழைப்பை ஏற்று அந்தக் கூட்டங்களில் கலந்து கொண்டேன். அதற்குப்

பிறகு மேற்கு கோதாவரி ஜில்லாவில் தேவனுடைய ஊழியத்தில் பங்கு பெற்று ஒரிஸாவுக்குச் சென்றேன். வீட்டுக்குப் போனபோது ரெபெக்கா மிகவும் கவலை தரக்கூடிய நிலையில் இருந்தார்.

அவர் வயிற்றில் மறுபடியும் ஹெரினியா ஏற்பட்டிருக்கிறது என்று மருத்துவர்கள் கூறினார்கள். ஏற்கெனவே அவருக்கு மூன்று அறுவைச் சிகிச்சை செய்திருந்தார்கள். இது நான்காவது முறை. எனவே தேவனிடத்தில் சிலகாலம் காத்திருப்போம் என்று எண்ணிக் கருத்தாய் ஜெபித்து வந்தோம். பிள்ளைகளும் அடிக்கடி நோய்வாய்ப்பட்டு வந்தார்கள். வெறும் பால் மாத்திரமே குழந்தைகளின் ஆகாரமாக இருந்தது. இப்படிப்பட்ட சோதனை நிறைந்த நாள்களாக அவை விளங்கின.

என் குழந்தைகள் இருவரையும் மருத்துவ மனைக்கு அழைத்துக் கொண்டு போக வேண்டிய சூழ்நிலையில் இருந்தேன். என்ன செய்வது பணம் பற்றாக்குறை.

ஒருநாள் காலை 10 மணிக்கு நான் அலுவலகம் செல்லும் வேளையில் ரெபெக்கா என்னிடம் ''ஐயா, பால் பவுடர் தீர்ந்துபோய் விட்டது. இனி இரண்டே நாள்களுக்குத் தான் வரும். எனவே பால் பவுடர் வாங்க வேண்டும் என்று சொன்னார்.

''ஆபத்துக் காலத்தில் கர்த்தர் உனக்கு மறு உத்தரவு அருள் செய்வார்'' என்பதாகச் சங்கீதம் 20:1இல் சொல்லப்பட்டிருக்கிறதல்லவா என்று நான் பதில் சொன்னேன். அவர்கள் மெதுவாகச் சிறிது நேரம் தன் வேலையில் மூழ்கி விட்டார்கள். மூன்றாவது நாள் காலை 10 மணிக்கு அலுவலகத்திற்குச் செல்லும் வேளையில் ''ஐயா அலுவலகத்திலாவது யாரிடமாவது ரூபாய் ஐம்பது கடன் வாங்கி வரக் கூடாதா? சம்பளம் வந்ததும் கொடுத்து விடலாம் அல்லவா'' என்று என்னிடம் சொன்னார்கள். எதற்கு என்று நான் கேட்டேன். வேறு எதற்கும் இல்லை. நம் குழந்தைகளுக்குப்

பால்பவுடர் வாங்கத்தான் என்று ரெபெக்கா பதில் சொன்னார்கள். அதற்க நான் '"O.K. Don't Worry தேவன் தருவார்'' என்று சொல்லிக்கொண்டே வாசலைக் கடந்து சென்று, ஜன்னல் வழியாக ரெபெக்காவிடத்தில் ''இன்று மாலைக் குள்ளாக ஆண்டவர் பால்டின் அனுப்பி வைப்பார்'' என்று சொன்னேன். அதைக்கேட்டு அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

அலுவலகத்தில் மதியம் சாப்பாட்டு வேளையில் எல்லாரும் வெளியே போய்விட்டார்கள். நான் மட்டும் தனியாக இருந்தேன். என்னுடைய அதிகாரியின் அறைக்குள் போக முயற்சித்தேன். உள்ளே ஒருகாலும் வெளியே ஒருகாலும் வைத்திருந்தேன். உடனே ''என் பிள்ளைகள் கடன் கொடுப்பார்களே தவிர கடன் வாங்க மாட்டார்கள்'' என்னும் தேவனுடைய வார்த்தை என் செவிகளில் தொனிக்க ஆரம்பித்தது. அவ்வளவுதான் அதிகாரியின் அறையிலிருந்த கால்களை வெளியே எடுத்து வைத்து திரும்பிப் போகலாம் என்று வெளியே வருவதற்குள் என் அதிகாரி என்னைக் கவனித்து ''எஸ்,மிஸ்டர் பரவஸ்து! கம்மின் பிளீஸ் (yes mr. Parnvesthu come in please) என்று என்னை அழைத்தார்கள். அந்த அழைப்பை ஏற்று நான் அவர் அறைக்குள் சென்றேன். அலுவலகச் சம்பந்தமான சில காரியங்களைக் குறித்துப் பேசினார். அதற்குப் பிறகு ''ஏதாவது உதவி தேவையா?'' என்று கேட்டார். ஏனென்றால் அலுவலகத்திலுள்ளவர் களுக்கு அவர் அநேக முறை அநேக விதமான உதவிகளைச் செய்திருக்கிறார். அந்த வழக்கத்தின்படி அவர் என்னையும் அவ்விதம் கேட்டார். ''இராஜாக்களின் உதவியை நாடுவதைக் காட்டிலும் கர்த்தரை அண்டிக் கொள்வது நலம்'' என்கின்ற தேவனுடைய வார்த்தை எனக்கு நினைவுக்கு வந்ததால் அதிகாரி கேட்ட அந்தக்கேள்விக்கு ''ஆமாம் சார்; ரூபாய் நூறு தேவை என்பதற்குப் பதிலாக ''தேங்ஸ் சார் நோ பிளீஸ்'' என்று சொல்லிவிட்டு வெளியே வந்து விட்டேன்.

மதியம் அலுவலகத்தில் நான் உட்கார்ந்து கொண்டிருக்கின்றேன். ஆனால் என்னால் வேலை செய்ய முடியவில்லை. ஏதாவது வேலை செய்யத் தொடங்கலாம் என்றால் ''ஐயா, பிள்ளைகளுக்குப் பால்பவுடர் தீர்ந்துவிட்டது'' என்கிற சத்தம்தான் என் காதில் ஒலிக்க ஆரம்பித்தது. இதற்குள்ளாக டைபிஸ்ட் வந்து ''குட் ஆப்டர்நூன் சார்'' என்று சொல்லிவிட்டு எனக்கு முன்னேயுள்ள நாற்காலியில் வந்து அமர்ந்து என் குடும்ப நலனை விசாரிக்க ஆரம்பித்தார்கள். இவர் மிகவும் தாராளமான மனம் உள்ளவராக இருந்தால் ரூபாய் நூறு கொடுங்கள் என்று கேட்கும்படியான வார்த்தை என் உதடுகளைத் தொட்டது. உடனே பிசாசானவன் இந்த மனிதனை என்னண்டைக்கு அனுப்பி என்னை விசுவாசத்திலிருந்து வழிவிலகச் செய்து ஆண்டவர் மேல் அல்லாமல் மனிதர்மேல் ஆதாரப்பட்டு ஜீவிக்கும்படி பலவீனப்படுத்துகிறான் என்று உணர்ந்து கொள்ளும்படி தேவனுடைய ஆவியானவர் எனக்கு உதவி செய்தார். எனவே குடும்ப விஷயங்களை நான் அவரிடத்தில் பகிர்ந்து கொள்ள வில்லை. அவர் போய்விட்ட பிறகு ஏதோ கொஞ்சம் வேலை செய்ய முயன்றேன். இதற்குள் ''சார், உங்களுக்கு ஓவர் டைம் இருக்கிறதா? என்று ஒருவரின் சத்தம் கேட்டு நேரம் பார்க்கும்போது மாலை 5.30 மணியாக இருந்தது. உடனே புறப்பட்டு ஆறு மணிக்கு வீடு வந்து சேர்ந்தேன்.

வீட்டுக்கு கொஞ்ச தூரத்திலேயே என் மகன் கிரண் அழும் சத்தம் கேட்டது. உடனே என் இதயம் துடிக்க ஆரம்பித்தது. உள்ளத்தில் ஜெபித்துக் கொண்டே வாசலில் நான் கால் வைத்தேன். உடனே ரெபெக்கா ''ஐயா, மதியமே குழந்தைக்குச் சர்க்கரைத் தண்ணீர்தான் ஊட்டினேன். பால்டின் வாங்கி வந்தீர்களா? இல்லையா? யாரும் கடன் கொடுக்க வில்லையா? உங்கள் அதிகாரி மிகவும் நல்லவராயிற்றே! அவரிடத்தில் நீங்கள் கேட்கவில்லையா? என்னங்க? நான்தான் பேசிக் கொண்டே இருக்கிறேன். நீங்கள் மட்டும் பேசாமல் இருக்கிறீர்களே! என்று ஆவலாய் அவர் கேட்டார். அவர் கேள்விகளுக்கு மேல் கேள்வி கேட்டுக்

கொண்டிருக்கையில் நீ சரியாக ஜெபிக்கவில்லை, எனவே தேவன் உனக்குப் பால்டின் தரவில்லை, என்று நான் பதில் சொன்னேன். அவர் உடனே எழுந்து என்னிடம் வந்து நீங்கள்தான் சரியாக ஜெபித்து பால்டின் வர வழைக்கக் கூடாதா? என்று என்னிடம் சொல்ல ஆரம்பித்தார்.

அதற்கு நான் மட்டும் எங்கிருந்து கொண்டுவர முடியும் என்றேன். அதற்கு அவர் தகப்பனாகி விட்டால் எல்லாம் சரியாகி விடுமா? பிள்ளைக்கு வேண்டிய காரியங்களைக் கவனிக்க வேண்டியது தகப்பனல்லவா? கொஞ்சம் கஞ்சி காய்ச்சி உப்பு போட்டு ஊட்டச் செய்தேன். நான் என்ன செய்ய முடியும். அவன் கஞ்சி குடிக்க மாட்டேன் என்கிறான். அழுது அழுது மதியம் வாந்தியே எடுத்து விட்டான். அதனால் அவனுக்கு காய்ச்சலும் வந்து விட்டது என்று மளமளவென்று தனது ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்தார்.

இவை எல்லாவற்றையும் கேட்ட பிறகு எனக்கு மிகுந்த வேதனை உண்டாயிற்று. இருதயம் பாரமாகிவிட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நான் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குப் புலப்பட வில்லை. ஜெபம் மாத்திரமே செய்யத் தெரியும். அதனால் அலுவலகத்திலிருந்து வந்து, துணிகளையும் மாற்றிக் கொள்ளாமல் அறையில் முழங்காலிட்டு கொஞ்சநேரம் மௌனமாக உட்கார்ந்து இருந்தேன். அதற்குப் பிறகு அழ ஆரம்பித்தேன்.

''ஓ! ஆண்டவரே! என் தேவனே! இயேசுவே! என் இரட்சகரே! அடியேனின் மன்றாட்டுக்கு செவி சாய்த்தருளும். நான் சிறியவனாக இருந்தேன். இப்பொழுதோ பெரிய வனாகிவிட்டேன். நீதிமான்கள் கைவிடப்பட்டதையும், அவனுடைய பிள்ளைகள் பிச்சை எடுப்பதையாகிலும் பார்த்ததில்லை.

எல்லா ஜீவராசிகளும் உன்னையே நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. தகுந்த காலத்தில் நீர் அவைகளுக்கு ஆகாரம் அளிக்கிறீர். நீர் உம் உள்ளங்கையைத் திறந்து

ஒவ்வொருவரையும் திருப்தியாக்குகிறீர். உம்மை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்கு உண்மையாகவே நீர் சமீபமாய் இருக்கிறீர். உம்மிடத்தில் பயபக்தியாக இருக்கிறவர்களின் வாஞ்சைகளை நிறைவேற்றுகிறீர். பசியுள்ளவனுக்கு ஆகாரம் அளிக்கிறவர் நீரே! ஆண்டவரே! நீர் நீதிமான்களை நேசிக்கிறீர். ஆண்டவரே! நீர் இயேசு கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து உயிப்பிக்கச் செய்தீர் என்று நான் என் இருதயத்தில் விசுவாசிப்பதின் மூலமாக நீதிமானாக்கப்படவில்லையா? மிருகங்களுக்கும் கரையும் காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரமளிக்கிறீர். இதோ, நீதிமான்களில் ஒருவனாகிய உன் அடியேனாகிய நான் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்.

என் மகனாகிய கிரணுக்கு ஆகாரம் கொடுத்து உன் நாமத்தை மகிமைப்படுத்திக் கொள்ளும் என்று பலவிதமாகத் தேவனிடத்தில் மன்றாடிக் பெருமூச்சோடு தேவனுடைய அதிசயங்களையும் அற்புதங்களையும் நினைவுகூர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தேன். இரவு 12 மணியாயிற்று. இரயில் ஷிப்ட்டு வேலையாட்கள் வேலைக்குப் போகும் நேரமாகிவிட்டதால் சங்கு கெம்பீரத்தோடு ஒலித்துக் கொண்டிருந்தது.

நான் மிகவும் தேவையில் இருக்கிறேன். விடிவதற்குள்ளாக எனக்கு அருள் செய்யவேண்டுமென விடாப்பிடியாய்த் தொடர்ந்து ஜெபிக்கலானேன். கொஞ்ச நேரத்திற்குள் பின்புறக் கதவை யாரோ பலமாகத் தட்டும் சத்தம் கேட்டது. இதற்குள் கிரண் அழுது அழுது தூங்க ஆரம்பித்து விட்டான். பெரிய மகனும் இந்தப் பிரச்சனைக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை என்றாற்போல் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான். ரெபெக்கா மிகவும் பலவீனமாக வீழ்ந்து கிடந்தார்.

இதற்குள் கதவைத் தட்டும் சத்தம் மறுபடியும் கேட்டது. நான் முழங்காலிட்டுக்கொண்டே அந்தச் சத்தத்தைக் குறித்துச் சிந்திக்கலானேன். இது என் ஜெபத்திற்குப் பதிலா? அல்லது

யாராவது விசுவாசிகள் ஜெபத்திற்கு வந்திருக்கிறார்களா? (சில வேளைகளில் அநேக சபைகளைச் சார்ந்த விசுவாசிகள் இரவு நேரங்களிலும் தங்கள் தேவைக்காக வந்து ஜெபித்துக் கொண்டு போவது வழக்கம்) அல்லது இயேசு கிறிஸ்துவே தட்டிக் கொண்டிருக்கிறாரா? எதற்கு? ஏன் இருக்கக்கூடாது? இலட்சுமி நாராயண சுவாமி ஆலயத்தில் நான் கட்டப் பட்டிருக்கையில் கதவு திறக்கப்படவில்லையா? இயேசு கிறிஸ்து உள்ளே வரவில்லையா? என்னை விடுவித்து என்னோடு பேசவில்லையா?'' என்று கடந்த காலத்தை ஒரு முறை ஞாபகப்படுத்திக் கொண்டேன். மறுபடியும் கதவு தட்டும் சத்தம் கேட்டது. அந்தச் சத்தத்தைக்கேட்டு ரெபெக்கா விழித்துக் கொண்டு, ஐயா, யாரோ கதவைத் தட்டுகிறார்கள் என்று சொன்னபோது நான் கண்களைத் திறந்து அவரைக் கூர்ந்து கவனித்தேன்.

அவர் கண்களில் துக்கம், ஏக்கம், கண்ணீர், அதைரியம் ஆகிய பலவீனமான அறிகுறிகள் காணப்பட்டன. என் இருதயம் அவரைக் குறித்த கரிசனையினால் நிறைந்து விட்டிருந்தது. சாதாரண மனிதனாகிய என் இருதயமே இவ்வளவு கரிசனையினால் நிறைந்துவிடும் போது பரமபிதா! கிருபையுள்ள தேவன்! கொஞ்சமேனும் இருதய கடின மில்லாதவர் அன்பின் சொரூபி! இந்த இளம்பிள்ளையின் அவலநிலையைப் பார்த்து சும்மாயிருப்பாரா? என்று எனக்குள் நான் சிந்தித்துக் கொண்டு இருக்கையில் இன்னும் அதிக பலத்த சத்தத்தோடு இந்த முறை கதவு தட்டப்பட்டது. எனவே நாங்கள் இருவரும் சென்று கதவைத் திறந்து பார்த்து திகைத்துப் போனோம்.

என்ன ஆச்சரியம்! கதவைத் தட்டியது வேறு யாருமில்லை; பெயர்பெற்ற புகழ்வாய்ந்த தேவ ஊழியக்காரர் சகோதரர் புரூஸ் அவர்கள். அவர் எங்களைப் பார்த்து ''சகோதரரே! நாங்கள் இப்பொழுதுதான் ஊழியத்தை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்தோம். சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் என் மனைவிக்குத் தேவனுடைய ஆவிவானவரின் தூண்டுதல் வந்து இந்தப் பால்பவுடர் டின்னை உங்களிடம் கொடுக்கும்

படியாகச் சொன்னார். அதனால் சாப்பாட்டை முடித்துக் கொண்டு அந்தப் பால்டின்னை உங்களிடம் கொடுக்க உடனே இங்கே வந்தோம்'' என்றார்கள்.

அவர்கள் கூறியதை நானும் ரெபெக்காவும் அசையாமல் கேட்டுக் கொண்டிருந்தோம். அந்த ஊழியக்காரர் மறுபடியும் சொல்லத் தொடங்கினார். ''ஐயா, உங்களுக்கு ஏதோ தேவையிருப்பதாகத் தெரிகிறது. எனவே தயவுசெய்து தவறாக நினைக்காதீர்கள். இதோ இந்தக் காணிக்கையைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லிப் பால்பவுடர் டின்னையும்,காணிக்கையையும் என் கையில் கொடுத்து விட்டு வீட்டிற்குள் வந்து, அவரும் அவருடன் வந்த மற்ற மூன்று சகோதரர்களும் ஜெபித்துவிட்டுத் திரும்பிப் போனார்கள். நான் அவர்களை அனுப்பிவிட்டு அறைக்குள் வந்தபோது, ரெபெக்கா முழங்காலிட்டுத் தேவனைத் துதித்துக் கொண்டிருந்தார். பிறகு குழந்தைக்குப் பால் காய்ச்சிக் குடிக்க வைத்துவிட்டு தேவனுக்கு நன்றி செலுத்திவிட்டு இருவரும் தூங்கி விட்டோம். அதிகாலையில் ஒரு விசுவாசி தன் பேரனிடத்தில் ஒரு பால்டின்னை அனுப்பி வைத்தார்கள்.

நான் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அந்த விசுவாசியின் வீட்டுக்குச் சென்று அம்மா பிரைஸ்திலார்டு என்றேன். அவர்களும் பிரைஸ்திலார்டு (கர்த்தருக்கு ஸ்தோத்திரம் அல்லது துதி உண்டாவதாக) என்றார்கள். ''அம்மா நீங்கள் அனுப்பி வைத்த புதிய பால் டின்னைப் பெற்றுக் கொண்டேன். என்ன விஷயம்'' என்பதைத் தெரிந்து கொள்ளத்தான் கேட்கிறேன். அதற்கு அவர் ஏன் அனுப்பக் கூடாதா? என்றார். அதற்கு நான் அப்படி ஒன்றும் இல்லை. ஏன் நீங்கள் குறிப்பாகப் பால்டின்னை மாத்திரம் அனுப்பி வைத்தீர்கள்? என்பதைத் தெரிந்து கொள்ளத்தான் கேட்கிறேன்'' என்றேன். அவர் ''அவ்வளவு தானா'' என்றார் நான் ஆம்; வேறொன்றும் இல்லை என்றேன். அதற்கு அவர் அப்படியானால் கேளுங்கள் என்று பின் வருமாறு கூறத் தொடங்கினார்.

''நான் பதினொரு நாள்களாக இரத்தப் பேதியினால் கஷ்டப்பட்டு வந்தேன். ஒரு நாள் நீங்கள் எனக்காக வந்து ஜெபித்து விட்டுப் போனீர்கள். உடனே நான் பூரண சுகம் பெற்றேன். எனவே உங்களுக்கு ஏதாவது காணிக்கை கொடுக்க வேண்டும் என்று முயன்றேன். ஆனால் முடியவில்லை. நேற்று கடையிலிருந்து என் மகன் பால்டின், டீத்தூள் வாங்கி வந்தான். இது தெரியாமல் என் கணவரும் ஒரு பால்டின் வாங்கி வந்து விட்டார். என்ன செய்வதென்று தெரியாமல் குழப்பத்தில் இருந்தேன். இரண்டு பால்டின்கள் இப்பொழுது நமக்கு எதற்கு என்று எண்ணினேன். ஒன்றை உங்களுக்குக் கொடுத்து விடுவது நல்லது என்ற எண்ணம் என் மனதில் தோன்றியதால் அதை உங்களுக்கு அனுப்பி வைத்தேன். அவ்வளவுதான். இதில் வெறொரு இரகசியமும் கிடையாது என்றார். மேலும் அவர் ஆமாம் நீங்கள் எப்பொழுதும் இப்படிக் கேட்க மாட்டீர்களே? ஆனால் இப்பொழுது ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்? என்று அவர் என்னைக் கேட்டார். அப்பொழுது நான் நடந்த நிகழ்ச்சிகளை விவரித்து சாட்சியும் கொடுத்து தேவனை மகிமைப் படுத்தினேன். தேவனிடத்தில் விசுவாசம் வைத்து அவரை அண்டிக் கொள்கிறவர்களுக்கு அவர் ஒரு நன்மையும் குறையாக விட்டு வையார்.

இது என் விசுவாசப் பரீட்சையோ என்னவோ? அல்லது நான் எப்படித் தேவனை அண்டி ஜீவிப்பது என்பதைக் கற்றுக் கொள்ளத் தேவன் தாமே இப்படி மற்ற காரியங்களைச் செய்கிறார் போலும். எது எப்படியாக இருந்தாலும் தேவன் என்பவர் ஒருவர் இருப்பாரானால் அவர் இயேசு கிறிஸ்து மாத்திரமே.

என் கடந்த கால வாழ்க்கையை ஒருமுறை நினைவு கூர்ந்தேன். ஒவ்வொரு காரியத்திலும், ஒவ்வொரு கால கட்டத்திலும் எல்லா இடங்களிலும் தேவன் தாமே எனக்குத் தரிசனம் கொடுத்து உதவி செய்துள்ளார் என்பதை என்னால் விளங்கிக் கொள்ள முடிந்தது. வேறொரு கடவுள் இருப்பாரானால் இயேசு கிறிஸ்துவுக்குப் பதிலாக அவரே

எனக்கு முன்பாகக் காட்சியளித்திருக்க வேண்டும். ஆனால் இந்திய நாட்டில் விக்ரக ஆராதனைக்காரர் ஏராளமானவர்கள் இருந்த போதிலும் அவர்களில் ஒருவராவது என்னிடத்தில் வந்து எனக்கு உதவி செய்யும்படியாக எந்தக் தேவனாலும் ஏவப்படவில்லையே. ஆனால் நான் கேட்காமலேயே தேவ மகனாகிய இயேசு கிறிஸ்துவை ஆராதிக்கும் விசுவாசிகள் தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டவர்களாகத் தேவனுடைய நியமத்தின்படித் தேவ ஊழியக்காரனாகிய எனக்கு உதவி செய்யும்படியாகக் கிருபை அளித்திருக்கிறார். தேவன் அவர்களையும் அவர்களின் குடும்பங்களையும் பரலோக ஆசீர்வாதத்தோடு நிரப்புவாராக.

பிரியமானவர்களே! நீங்கள் ஒருவேளை என்னை இவ்விதமாகக் கேட்கலாம். ''நீங்கள் மாத்திரம் இராம ரையோ, கிருஷ்ணரையோ, அனுமாரையோ, அல்லது ஏதாவதொரு பாபாவையோ வேண்டியிருந்தால் அவர்களும் உங்களுக்குச் சகாயம் செய்திருப்பார்களா? அல்லது இல்லையா? என்பதைத் தெரிந்து கொண்டு இருக்கலாம் அல்லவா.''

ஆம்! உண்மைதான். நான் ஒருமுறை பார்த்திருக்கிறேன். இலட்சுமி நாராயணசாமி ஆலயத்தின் மூலத்தானத்தில் நான் கட்டுண்டவனாக விழுந்து கிடக்கையில் ''தேவனென்பவர் ஒருவர் உண்டானால் அவர் என்னை விடுவிக்கட்டும்.'' என்று நான் வேண்டிக் கொண்டபோது யாரும் வரவில்லை. நான் உங்களை ஒரு கேள்வி கேட்கவா? அப்பொழுது ஏன் அவர்கள் என்னை விடுவிக்க வில்லை? அவ்வளவு தூரம் போவா னேன். அந்த இலட்சுமி நர்ராயணசுவாமி ஆலயத்தின் மூலத்தனத்தில் கதவுக்கு அந்தப்பக்கம் அவரும் இந்தப்பக்கம் நானுமாக இருந்தோம். நான் அவருக்கு ஊழியம் செய்த வனல்லவா? ஒரு அங்குலம் இடைவெளியுள்ள மந்தமுள்ள ஒரு கதவைக் கடந்து வந்து அவர் எனக்கு உதவி செய்திருக்கக் கூடாதா? ஆனால் ஏன் அப்படிச் செய்யவில்லை. அப்படியானால் அவர் தேவனா? என்னவோ? அது ஒரு உலோகப் பொம்மை மாத்திரமே. இதை என் சொந்த

அனுபவம் பூர்வமாக உங்களிடத்தில் சொல்லிக் கொள் கிறேன். இது ஏதோ ஒரு கதையல்ல. அல்லது ஒரு புராணமும் அல்ல. இது என் வாழ்க்கையில் நடந்த உண்மையுள்ள ஜீவனுள்ள அனுபவச் சாட்சியாகும்.

ஏறத்தாழ சுமார் 23 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற காரியம் இது. நம் நாட்டில் முப்பத்து முக்கோடி தேவர் களிருக்க ஏன் இயேசு கிறிஸ்துவுக்கு மாத்திரம் என்மேல் ஈவு இரக்கமும், அன்பும் ஏற்பட்டது. ஏனென்றால் தேவன் உலகத்தை எவ்வளவோ நேசித்தார் என்பதாக பைபில் சொல்கிறது. அவ்விதம் நேசித்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒருவர்தான் நான் விடுதலையாக்கப்பட்ட அந்த இரவு பசியோடிருக்கையில் வழியில் என்னைச் சந்தித்து எனக்குச் குடிக்கப் பால் கொடுத்தார். அது மாத்திரமன்று. நான் தங்க வேண்டிய இடம் இயேசு கிறிஸ்துவை நேசிக்கிறவர் களின் வீட்டை மட்டுமே எனக்குக் காண்பித்தார். நீங்களும் எதாவது பிரச்சனையிலோ, கஷ்டத்திலோ, அல்லது தொல்லையிலோ இருப்பீர்களானால் அந்த இயேசு கிறிஸ்து நாமத்தை ஜெபம் செய்யுங்கள். அந்த ஆண்டவர் உங்களை இரட்சிப்பார். உங்கள் தேவைகளை எனக்கு எழுதி அனுப்புங்கள். நான் உங்களுக்காக ஜெபம் செய்வேன்.

ஒரு நாள் ஒரு சபையின் காரியதரிசி சுமார் 7மைல் தூரத்திலிருந்து என்னைத் தேடி என் வீடு வந்து சேர்ந்தார். அவர் தன்னைக் குறித்து அறிமுகம் செய்துகொண்டு, ''சகோதரரே நீங்கள் எங்கள் ஊருக்கு வந்து உங்களுடைய அனுபவ சாட்சியையும், தேவனுடைய வார்த்தையையும் கொடுக்க வேண்டும். எங்கள் சபையார் யாவரும் இதை விரும்புகிறார்கள்!''என்றுசொன்னார்.

நான் மௌனமாக இருந்தேன். அவர் மறுபடியும் சகோதரரே! நாளை ஞாயிற்றுக்கிழமை தாங்கள் ஒய்வாக இருந்தால் தயவு செய்து தவறாமல் வாருங்கள். நான் உங்களை அழைத்துக் கொண்டு போகத்தக்க ஏற்பாடுகளைச் செய்கிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்தார். நான் குறுக்கிட்டு தயவுசெய்து ஒன்றும் வேண்டாம். நானே வந்து

விடுகிறேன் என்றேன். அவர் இன்னும் சில ஆவிக்குரிய காரியங்களைப் பேசிவிட்டுத் திரும்பிப் போய் விட்டார். அப்படியே நான் அவர்கள் ஊருக்குச் சென்று என்னுடைய அனுபவச் சாட்சியையும்,தேவனுடைய வசனத்தையும் பிரசங்கித்தேன்

அதைக் கேட்டு அவர்கள் இன்னும் மூன்று நாள்கள் பிரசங்கிக்க வேண்டுமென்றார்கள். அதற்குப் பிறகு இன்னும் மூன்று நாள்கள் இங்கேயே தேவ வார்த்தையைக் குறித்தும் உங்கள் சாட்சியைக் குறித்தும் சொல்லுங்கள் என்றார்கள். ஏழு நாள்கள் அவ்வூரில் சுவிசேஷ ஊழியம் நடைபெற்றது. அந்தச் சபை சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்டது. அங்கு எப்படிப்பட்ட தேவ ஊழியர்காரர் வந்தாலும் எவ்வளவுதான் ஊழைத்தாலும், அவர் போகும்பொழுது அவரிடம் கர்த்தருக்கு என்று காணிக்கையாக ரூபாய் 50 அல்லது ரூபாய் 75 தான் கொடுக்கக் கிடைக்குமாம். ஆனால் எனக்குக் காணிக்கை கொடுக்கும்பொழுது அவர்கள் ஆச்சரியத்துடன் தேவனை துதித்துக் கொண்டு இவ்விதம் கூறினார்கள்.

ஐயா, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கன்மலையைப் பிளந்து தண்ணீர் பிறப்பிக்க வல்லவர், கல்லைப்போல இதயமுடையவர்களைத் தேவன் சதையைப் போன்ற இருதயம் உடையவர்களாக மாற்றியதால் உங்களுக்கு ஒரு பெருந்தொகை காணிக்கையாகக் கொடுக்க முடிந்ததென்று கூறி அந்தக் கடைசி நாள் கூட்டத்தில் எனக்காகக் கொடுக்கப்பட்ட காணிக்கைத் தொகையான 432 ரூபாயை எனக்குக் கொடுத்தார்கள். தேவனுடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. என்னுடைய தேவையைத் தேவன் அறிவார். என் பயங்கரமான கஷ்ட நேரத்திலும் நான் தேவனைத் தவிர வேறொருவரையும் அண்டவில்லை என்பதையும் ஆண்டவர் அறிவார். ''சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினி கிடக்கும். கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது'' என்று தேவனுடைய வார்த்தை சொல்லு

கிறது. அந்த மாதத்தின் என் தேவையைத் தேவன் அறிவார். எனவே ஒரு நன்மையும் குறைவுபடாமல் அவர் என்னைக் காத்தார்.

பிரியமானவர்களே! உங்களுடைய பாவங்களை ஜெபத்தில் அறிக்கையிட்டு அவைகளை விட்டுவிட்டு முன்னேறிச் செல்லுங்கள். என் பட்சத்தில் தயவு காட்டிய ஆண்டவர் உங்களுக்கும் தயவு காட்டுவார். ஒரிஸாவில் நாங்கள் வசிக்கும் கர்க்கா சாலைக்குச் சுமார் 12 கி.மீ. தூரத்தில் பிப்பில் என்னும் சாதாரண நகரம் ஒன்று இருக்கிறது. அங்கு ஐந்து நாள்கள் கூட்டத்தில் நான் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். மூன்றாம் நாள் இரவு சாப்பிட்ட பிறகு ஆலயத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் தூங்கிக் கொண்டிருந்தேன்.

சுமார் இரண்டு மணியளவில் யாரோ கதவு தட்டும் சத்தம் கேட்டு பயந்து போனேன். நான் பயந்ததற்கு வெட்கப்பட்டு ஆண்டவரிடத்தில் மன்னிப்புக் கேட்டு ஜெபிக்க ஆரம்பித்தேன். மறுபடியும் ஓயாமல் கதவைத் தட்டும் சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது. சரி கதவைத் திறந்துதான் பார்க்கலாமே என்று எண்ணிக் கதவைத் திறந்தேன். சுமார் இருபத்திரண்டு வாலிபர்களுக்கு மேல் அங்குச் கூடியிருந்தார்கள். அதில் ஒருவர் என்னைப் பார்த்து ''ஐயா, உங்களிடம் அவசரமாகப் பேச வந்தோம்'' என்றார். ''என்ன பேச வேண்டுமோ பேசுங்கள்'' என்று பயத்தோடு நான் சொன்னேன். அதற்கு அவர்கள் ''இங்கு வேண்டாம் உங்கள் அறையில் உட்கார்ந்து எல்லாவற்றையும் பேசலாம்'' என்றார்கள். ''சரி நீங்கள் யார்'' என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள் எங்களில் சிலர் இந்துக்கள், சிலர் கிறிஸ்தவர்கள்.

எல்லோரும் உத்தியோகம் செய்கிறோம். சிலர் வங்கியிலும், சிலர் பள்ளிக் கூடத்திலும், இன்னும் சிலர் அலுவலகத்திலும் வேலை பார்த்து வருகிறோம் என்றார்கள். மிக்க மகிழ்ச்சி; என்னுடன் பேச வேண்டிய விஷயம் என்ன என்று அவர்களை நான் கேட்டேன். அதற்கு அவர்கள் ''கடந்த மூன்று நாள்களாக ஒலி பெருக்கியின் மூலம் உங்கள்

பிரசங்கத்தைக் கேட்டு வருகிறோம். இயேசு கிறிஸ்து தவிர வேறு யாரும் தேவர்கள் அல்லர் என்று சொல்லுகிறீர்களே அதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவே வந்தோம்'' என்றார்கள்.

நீங்கள் அதாவது இந்துக்கள். மற்ற மதத்தைக் குறித்துக் தெரிந்து கொள்ள விரும்புவது சரிதான். ஆனால் கிறிஸ்தவர் களாகிய நீங்களும் இதைத் தெரிந்து கொள்ள வேண்டுமா? என்று நான் அவர்களைப் பார்த்துக் கேட்டேன். அதற்கு அவர்கள் அப்படி இல்லை ஐயா, உண்மை என்னவென்றால் இந்தக் கிறிஸ்து வாலிபர்களும் எங்கள் நண்பர்கள்தான். கடந்த மூன்று நாள்களாக நீங்கள் கொடுக்கும் தேவ செய்தியும், அனுபவ சாட்சியும் எங்களை அதிக பரவச மூட்டியுள்ளது. எனவே ஒரு சில காரியங்களை உம்மிடத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ள வந்தோம் என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது அவர்கள் மேல் பயங்கர மான சாராய நாற்றம் அடித்தது.

அப்பொழுது நான் அவர்களிடத்தில் ஐயா உங்களில் சிலர் என்னைக் காட்டிலும் அதிகம் படித்தவர்களாகவும், ஞானமுள்ளவர்களாகவும் இருக்கலாம். ஆனால் உங்களைப் பார்த்தால் குடிபோதையில் இருப்பவர்களாகத் தெரிகிறது. நான் சொன்னாலும் விளக்கிக் கொள்ள முடியாத நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் என்னிடம் வீண்வாக்குவாதம் செய்ய வந்திருப்பவர்களைப் போலத் தெரிகிறது. அது மாத்திரமன்று இப்பொழுது நேரம் சுமார் இரவு இரண்டு மணியிருக்கும். இந்த நேரத்தில் நாம் எல்லோரும் ஓய்வு எடுத்துக் கொள்வது நல்லது! என்று நான் சொல்லிக் கொண்டிருக்கையில் அவர்களில் ஒருவன் குறுக்கிட்டு ''நீங்கள் நினைப்பது போல் ஒன்றும் நடக்காது. நாங்கள் குடிகாரர்கள் அல்லர். நாங்கள் குடிப்பதற்கு வாங்கிய சாராயம் எங்கள் கையில்தான் இருக்கிறது. நீங்கள் சொல்லுவதுபோல் நாங்கள் குடிபோதையில் இல்லை'' என்று எனக்கு ஏதோ அனுகூலமாகத் தைரியப்படுத்திப் பேசுவது போல் பேசினார்.

''சரி'' என்று சொல்லி நாங்கள் அனைவரும் அந்த அறையில் உட்கார்ந்து கொண்டோம். அவர்கள் என்னை கேள்விமேல் கேள்விகள் கேட்க ஆரம்பித்தார்கள்.

அவர்கள் : இராமர் தேவனில்லையா?

நான் : அதைக் குறித்துச் சொல்ல எனக்கு அதிகாரமில்லை.

அவர்கள் : இது ஏதோ வாக்குவாதம் என்று நினைக் காதீர்கள். நாங்கள் கேட்கும் கேள்விகளுக்கும் நீங்கள் பதில் சொன்னால் போதுமானது.

நான் : சக்கிலி ஜாதியில் விபசாரியின் வயிற்றில் பிறந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்ட ஒருவன் தேவனுக்குக் குருவாக இருக்க முடியுமா?

அவர்கள் : இருக்க முடியாது. உண்மையில் சொல்லப் போனால் தேவனுக்குக் குருவாக அவர் இருக்கவே கூடாது. தேவனே சர்வத்திற்கும் குருவாக இருக்கிறார். சரி அந்தக் குரு யார்? தேவன் யார்?

நான் : நீங்கள் யாரைத் தேவனில்லையா என்று கேட்டீர்களோ அந்தத் தேவனுக்கு அவரே குரு. இந்தத் தேவனே அவரின் சீடன்.

அவர்கள் : நாங்கள் உங்களைக் கேள்வி கேட்டால் அதற்கு நேரே பதில் சொல்லாமல் வேறொரு கேள்வியைக் கேட்டு எங்களை வெட்கப்படும் படிச் செய்கிறீர்களே.

நான் : ஐயன்மாரே! நீங்கள் யாரைக் குறித்துக் கேட்கிறீர்களோ? அவரைப் பற்றி நீங்கள் நன்றாக அறிந்திருக்க வேண்டுமல்லவா?

அவர்கள் : ஸ்ரீ கிருஷ்ணர் தேவனில்லை என்கிறீர்களா?

நான் : இல்லை என்று சொல்வதற்கு நான் எம்மாத்திரம்? தயவு செய்து இப்படிப்பட்ட கேள்விகளை என்னிடத்தில் கேட்காதீர்கள். ஆம் என்றோ இல்லை என்றோ சொல்வதற்கு எனக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது. அவர்கள் வம்புக்கு நான் போகமாட்டேன். நான் ஒரு இந்தியன். இந்திய நாட்டில் வசித்து வருகிறேன். நான் என் நாட்டின் பன்பாடுகளுக்கு விரோதமாக நடந்துகொள்ள மாட்டேன். என் தோழமை மக்களின் இதயங்களை நான் காயப்படுத்த மாட்டேன். நான் விக்ரக ஆராதனைக் காரனாக இருந்தபோது கண்டு கொண்ட சத்தியங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லு கின்றேன். அவ்வளவுத்தான். என் பிரசங்கத்தைக் கேட்டு விருப்பமுள்ளவர்கள் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து அவர் பக்கமாகத் திரும்பி வருகின்றவர்கள் அவரை ஆராதிக்கலாம்.

ஆனால் ஒன்று. இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறவன் மனந்திரும்ப வேண்டும். மனந்திரும்புத லென்றால் புகை பிடிப்பது, விபச்சாரம் செய்வது, சாராயம் குடிப்பது. பொய் சொல்வது, மோசம் செய்வது, வஞ்சிப்பது, புறங்கூறுவது, அநியாயம் செய்வது, லஞ்சம் வாங்குவது, பொறாமையாய் நடப்பது, உலக ஆசை கொள்வது. மற்றவர் களைக் கஷ்டப்படுத்து வது, மற்றவர் கஷ்டப்படும் போது உதவி செய்யாமல் இருப்பது, மற்றவர்களை வெறுப்பது, பெண்களை இச்சையோடு

பார்ப்பது, போன்ற காரியங் களைச் செய்து வந்தவர்கள், அவைகளுக்காக உபவாச மிருந்து பாவங்களுக்காக மனவருத்தப்பட்டுக் கண்ணீரோடு அறிக்கை யிட்டு மறுபடியும் அதை நினைத்துக் கூடப் பார்க்காமல் எப்பொழுதும் தேவன்மேல் தியானம் வைத்து ஜெபித்து வரவேண்டும். தேவனுடைய பரிசுத்த வேதாகமத்தையும் வாசித்து வர வேண்டும். தூபதீப நைவேத்தியங்களுடன் நாம் இயேசுவை ஆராதிக்க வேண்டிய அவசியமில்லை. இயேசுவானவர் தேவனில் திரியேகத்தில் ஒருவரானவர். ஆகையால் நம் மத்தியில் வாசம் செய்து வருகிறவர்.

இந்தத் திரியேகத்தைக் குறித்துப் பேசுவதற்கு இது நேரமன்று. இந்தத் திரியேகக் கடவுளைக் குறித்துத் தெரிந்து கொள்ள விரும்பினால் நாளைக்கு நடக்க இருக்கும் கூட்டத்தில் வந்து கலந்து கொள்ளுங்கள். இதைக் குறித்துத் தான் நான் நாளை பிரசங்கம் செய்யப் போகிறேன். அது மாத்திரம் அன்று. இந்தத் திரியேகக் கடவுள் என்கின்ற தலைப்பில் இந்து புராணங்களில் இருக்கும் சில தத்துவங்களையும், கிறிஸ்தவ வேதாக மத்தில் இருக்கிற சில தத்துவங்களையும் ஒன்று சேர்த்துக் கைப்பிரதி ஒன்று பிரசுரிக்க வேண்டும் என்று ஜெபித்து வருகிறேன். அப்படி அச்சிட்ட பிறகு உங்களுக்குச் சில கைப்பிரதிகளை அனுப்பி வைக்கின்றேன்'' என்றேன்.

இப்பொழுது ஒரு வேளை நீங்கள் இப்படிக் கேட்கலாம். ''ஐயா, நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் இப்படிப்பட்ட குணலட்சணமுள்ள கிறிஸ்தவர்களைப் பார்க்க முடிய

வில்லையே என்று. நான் உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் இயேசுகிறிஸ்துவை மட்டும் பார்க்க வேண்டுமே தவிர கிறிஸ்தவர்களை அல்ல. அவ்விதமான கிறிஸ்தவர்களை நான் என்ன சொல்லுகின்றேன் என்றால் அவர்கள் மாய்மாலக்காரர். இயேசு கிறிஸ்துவும் இப்படிப்பட்ட மக்களைப் பார்த்து இவ்விதம்தான் சொன்னார். உங்களைப் போலவே நானும் இப்படிப்பட்ட கிறிஸ்தவர்களைப் பார்த்திருந்தால் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக அவரை வெறுத்து விட்டிருப்பேன்.

எனக்குத் தரிசனம் கொடுத்துப் பேசி விடுதலை செய்தது கிறிஸ்துவே தவிர கிறிஸ்தவர்களல்லர். இன்றைக்கு உலகம் கிறிஸ்தவத்தை ஒரு மதமென்று நினைத்து வருகிறது. அது மதமன்று மனிதர்கள் நடந்து செல்ல வேண்டிய மார்க்கமாகத் தான் இருக்கிறதே தவிர மதமன்று. எனவேதான் கிறிஸ்து இப்படிச் சொல்லியிருக்கிறார். ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவண்டை வரான்'' என்று அவர் பிரசங்கித்தார். அதனால் இது மதமல்ல மார்க்கம் எனலாம். நான் போதிப்பது கூட மதமல்ல, மார்க்கமேதான். இன்னும் கேளுங்கள் என்று சொல்லி வேதாகமத்தைத் திறந்து யோவான் 14:6 வசனத்தில் மேற்சொல்லிய வார்த்தைகளையும், இன்னும் சில குறிப்பு களையும் வாசித்துக் காட்டினேன்.

அதற்கவர்கள் ''ஐயா, நாங்கள் உண்மையைச் சொல் லட்டுமா? நாங்கள் இங்கு எதற்கு வந்தோமென்றால் உங்களை வீணானக் கேள்விகளைக் கேட்டு வம்புக்கு இழுத்து இந்தப் பகுதியிலிருந்து விரட்டியடிக்க வேண்டுமென்று திட்டமிட்டு வந்தோம். ஆனால் நீங்கள் எங்களைச் சந்தேகப்பட்டுத் தெரிந்து கொள்வீர்களென்று எண்ணி கிறிஸ்தவர்களைப் போல வேஷம் போட்டுக் கொண்டு வந்தோம். சரி, இதோ பொழுது விடியப் போகிறது. இப்பொழுது எங்களை என்ன செய்யச் சொல்கிறீர்கள்'' என்றார்கள்.

அதற்கு நான் "உங்களுக்கு விருப்பமானால் நீங்கள் எல்லோரும் முழங்காலிட்டு நாம் எல்லோரும் ஜெபம் செய்து கொள்வோம்" என்றேன். அவர்கள் எல்லோரும் என் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தார்கள். நான் ஜெபித்தேன். அவர்கள் எல்லோரும் என் கையைப் பிடித்துக் குலுக்கினார்கள். நானோ அவர்களைக் கட்டி அணைத்துக் கொண்டேன். இன்னும் நடக்க இருக்கும் இரண்டு நாள் கூட்டங்களுக்கும் அவர்களை வரும்படி அழைத்தேன். அவர்கள் சம்மதம் தெரிவித்துக் கலைந்து போனார்கள். தொடர்ந்து நடைபெற்ற கூட்டங்களில் எல்லோரைக் காட்டிலும் அவர்கள் ஆராதனை நடைபெறும் இடத்திற்கு முன்னதாகவே வந்து தரையிலே உட்கார்ந்து கைகளைக் கட்டிக் கொண்டு தேவனுடைய வார்த்தைகளைக் கவனமாய் கேட்டார்கள்.

பிறகு அவர்களில் சிலரை நான் தனியாகச் சந்தித்துப் பேசி, தேவனுக்குக் கொடுப்பதென்றால் என்ன என்பதையும் கற்றுக் கொடுத்தேன். அதற்குப் பிறகு அவர்கள் தங்கள் மரத்தில் காய்த்த தேங்காய்களையும் விளைச்சலின் முதல் பயன்களையும் ஆலயத்திற்குக் கொண்டு வந்து கொடுத்துத் தேவனுடைய ஊழியக்காரர்களைத் தங்கள் வீடுகளுக்கும் அழைத்துச் சென்று ஜெபித்துக் கொண்டதாகப் பின்னர் அறிந்துகொண்டேன். தேவன் தாமே அவர்களை மாற்றிப் புதுப்பித்து இரட்சித்து ஆவியில் வளர உதவி செய்வாராக. இவ்விதமாக ஒரிசாவில் தேவனுடைய ஊழியத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டேன்.

ஐ.சி.பி. இலக்கத்தினரால் பூரி ஜில்லாவிலுள்ள கூர்டாரேட் என்னுமிடத்திலுள்ள சவுத் வெஸ்ட் ரயில்வே பயிற்சி நிலையத்தில் உயிர்மீட்சிக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அதில் ஐந்துபேர் புறமதத்தினர் இயேசுவால் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் இப்பொழுது அங்குள்ள ஆலயத்தில் அங்கத்தினர்களாகச் சேர்ந்து ஆவியில் வளர்ந்து வருகிறார்கள்.

அதுமாத்திரமல்லாமல் கூர்டாரோடு சந்தபோட்டை என்னுமிடத்தைச் சேர்ந்த கிறிஸ்துவை அறியாதவர்களாகிய எட்டு பேரை ஆண்டவர் இரட்சிப்புக்குள்ளாக்கி வழி நடத்தினார். இன்னும் கூர்டாரோட் ரிடாங்க காலனியிலுள்ள கிறிஸ்துவுக்குள் இருந்தவர்கள் விக்ரக ஆராதனைக்காரராக இருக்கிறார்கள் என்று அவர்களுடைய உறவினர்கள் என்னிடத்தில் முறையிட்டு அவர்களைத் தேவன் பக்கமாக வழி நடத்தும் படியாகக் கேட்டுக் கொண்டார்கள். நான் அடிக்கடி அவர்களைச் சந்தித்துப் பேசி வந்தேன். ஓராண்டு கடந்த பிறகு அந்தக் குடும்பத் தலைவர் ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ள வேண்டுமென ஒரு நாள் என்னிடத்தில் கேட்டார்கள். நான் அவரிடத்தில் ''நான் அவசரமாக உயிர் மீட்சிக் கூட்டத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. திரும்பி வர இரண்டு மாதகாலம் ஆகும்,'' எனத்தெரிவித்து விட்டுப் போய் விட்டேன். அவர்கள் குடும்பத்தினர் ராஜமந்திரி என்னுமிடத்தில் நடைபெற்ற உயிர்மீட்சிக் கூட்டங்களுக்குச் சென்று அங்கு ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டார்கள் என்று அறிந்தேன்.

1985 ஆம் ஆண்டில் சுமார் பதினைந்து பேர்களை இரட்சிப்புக்குள்ளாக வழிநடத்த தேவன் எனக்கு உதவி செய்தார். பிரியமானவர்களே! இவர்கள் யாவரும் தேவனுக்கென்று வளர்ந்து கனி கொடுக்கும்படி ஜெபித்துக் கொள்ளுங்கள். பிரியமானவர்களே! தேவனுடைய மகிமையில் நீங்களும் பங்குபெற விரும்புகிறீர்களா? அந்தத் தேவனின் அதிசயமான காரியங்களை உங்களுடைய ஜீவியத்திலும் காண வேண்டுமா? அப்படியானால் எனக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்.

இவ்விதமாக ஒரிசா மாநிலத்தில் நல்ல ஊழியம் நடந்து வருகிற நாள்களில் பிசாசானவன் பொறாமைகொண்டு தேவனுடைய ஊழியத்தைத் தடை செய்யும்படி ஊழியம் செய்து வரும் ஒரு சிலரை அதற்குச் சாதகமாக உபயோகப்படுத்திக் கொண்டான். இப்படிப் பிசாசுக்கு

சாதனமாகிறவர்கள் அசுத்த ஆவி பிடித்தவர்கள் தவிர தேவனுடைய ஆவியைக் கொண்டவர்களல்லர் என்பதைத் தெரிந்து கொண்டேன். அவர்கள் என்னைத் தங்கள் சபையில் ஒரு கருவியாக உபயோகப் படுத்திக்கொள்ள விரும்பி னார்கள்.

நான் தேவனிடத்தில் ஜெபம் செய்து அது அவருடைய சித்தமல்ல என்பதைத் தெரிந்து கொண்டு அவர்களுக்கு இணங்கிக் கொடுக்கவில்லை. இதனால் அவர்கள் என் மீது பகை கொண்டு நான் போகும் இடங்களில் எல்லாம் கடந்த கால வாழ்க்கையில் அதாவது விக்ரக ஆராதனைக்காரனாக இருந்தபோது நடந்த சில அசுத்தமான காரியங்களை எடுத்துச் சொல்லி தேவனுக்கு நான் செய்து வந்த ஊழியத்தைப் பாழாக்கி வந்தார்கள். தேவனுடைய ஊழியத்தைக் கெடுக்கிறவர்கள் தேவனுடன் வழக்காடுகிற பிசாசாய் இருக்கிறான். பிரியமான சகோதரனே! நீ ஒருவேளை இப்படிப்பட்ட வேலையைச் செய்து வருகிறாயோ என்னவோ, அதற்காக வருத்தப்படு. இதனால் தேவனுடைய ஊழியத்தை நீ கெடுப்பதுமல்லாமல் உனக்கு நீயே தீங்கை வரவழைத்துக் கொள்கிறாய். இது உனக்கு வேண்டாம். இப்பொழுதே நீ உபவாசமிருந்து தேவனிடத்தில் முழங் காலிட்டு ஜெபிக்கவும். எல்லோருடனும் சமாதானமாக இருக்கவும் தேவன் உன்னை ஆசீர்வதிப்பார்.

இந்தக் காரியத்தின் நிமித்தம் நான் ஜெபித்து வருகையில், ஆண்டவர் என் மனைவி ரெபெக்காவின் கனவில் ''என் தாசனாகிய உன் கணவனைப் பிரயாணத்திற்கு ஆயத்தம் செய்யும்படியாகச் சொல்லவும். நான் அவரை ஹைதரா பாத்தில் நிலை நாட்டுவேன்'' என்று வெளிப்படுத்தினார். அடுத்த நாள் காலை அவர் இதை எனக்குத் தெரிவித்தார். நான் இந்த விஷயமாக அதிகமாக ஆலோசனை செய்து அதைரியப்பட்டுப்போனேன். ஏனென்றால் நான் கல்வி மானல்லன். அனுபவசாலியுமல்லன். தேவனுடைய வார்த்தைகளைக் கற்றவனுமல்லன். பிரசங்கிப்பதிலும் பின்

தங்கியவனாகவே காணப்பட்டேன். ஒரிசா மாநிலத்தின் எல்லைப் பகுதியில் பிறந்து வளர்ந்ததினால் சுத்தமானத் தெலுங்கு மொழியும் எனக்குப் பேசத் தெரியாது. அது மாத்திரமன்று. அது ஒரு புதிய இடம். ஹைதராபத்தில் என்னுடைய உறவினர்களோ, நண்பர்களோ, விசுவாசிகளோ, தெரிந்தவர்களோ, யாரும் கிடையாது.

அது ஒரு பெரிய பட்டணம். பிள்ளைகளின் படிப்பும் ஒரு பிரச்சனையாகிவிடும் என்று இப்படிப்பட்ட பலவிதமான ஆலோசனைகளினால் ஒன்றும் புரியாமல் சில மாதங்களைக் கழித்து விட்டேன். நான் மறுபடியும் என் மனைவியைப் பார்த்து ரெபெக்கா! நீ நன்றாக ஞாபகப்படுத்திப் பார். உன் கனவில் கேட்ட சத்தம் எப்படிப்பட்டது. ஏனென்றால் பிசாசானவன் கூட ஒளியின் தூதரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு பேசுவான் என்பதாக இருக்கிறது. அதோடு இயேசு கிறிஸ்துவும்கூட நீங்கள் பாம்புகளைப் போல் வினவுகிறவர் களாகவும் இருங்கள் என்று எனக்கு எச்சரிக்கை செய்துள்ளார். எனவே நாம் இந்த விஷயமாக மிக ஜாக்கிரதையாகப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும்'' என்றேன்.

அதற்கு அவர் என்னைப் பார்த்து, ''என்னங்க! என் தரிசனத்தில் உங்களுக்குச் சந்தேகமா! இல்லாவிட்டால் நான் ஏதோ சின்ன பிள்ளையைப்போல் கனவு கண்டு பிரமித்துப் போய் அது தேவ தரிசனமென்று சொன்னேனா? அப்படி யெல்லாம் நினைக்காதீர்கள்! என்று என்னைக் கடிந்து கொள்ள ஆரம்பித்தார்கள். அதற்கு நான் அப்படி ஒன்றுமில்லை. அந்த விஷயத்தை நாம் தேவனுடைய வார்த்தையோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்பதற்காகச் சொன்னேன். அவ்வளவு தான். அதற்கு நீ இப்படிக் கேள்விமேல் கேள்வி கேட்டு எனக்கு மனச்சங்கடத்தைக் கொடுக்கிறாயே என்றேன்: அவர் பொறுமையாக என்னருகில் அமர்ந்து நடந்ததை மறுபடியும் என்னிடம் சொல்லத் தொடங்கினார்கள். நானோ சரிதான். அதற்கென்ன இப்பொழுது. ஏன் அவசரப்படவேண்டும். மெதுவாகக் கவனிக்கலாம். மறுபடியும் கூட ஆண்டவர்

பேசுவார். அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம். தாவீதுகூட இரண்டு மூன்று முறை தேவனிடத்தில் கேட்கவில்லையா? நாம் கேட்டால் என்ன தவறு? கேட்போம். சும்மா, ஏதோ தரிசனமென்று பெருமைப்பட்டுவிட்டு ஓடி, வரும் துன்பங்களை அனுபவிப்பதைக் காட்டிலும், நிதானமாகத் தாவீதைப்போல கேட்டதையே மறுபடியும் கேட்டுப் பிரயாணம் செய்வது நல்லது என்று நினைத்துக் கொண்டு இதே கற்பனையில் மிதந்து சிந்தித்துக் கொண்டிருக்கையில் என் மனைவி என்னைப் பார்த்து ''என்னங்க, என்ன யோசனை? நாள் முழுவதும் ஒரே யோசனை தானா? நீங்கள் யோசித்து என்ன செய்ய முடியும்? என்றார்கள். அதற்கு நான் ''இது ஆலோசனை அல்ல. ஜெபத்திற்காக நோக்கம் கொண்டிருக்கவேண்டும். நோக்கமில்லாமல் ஒன்றும் நடக்காது'' என்று இழுக்க ஆரம்பித்தேன்.

உடனே நாங்கள் இருவரும் முழங்காலிட்டு ''பரம பிதாவே! நாங்கள் ஒன்றும் அறியாதவர்கள். ஞானமில்லா தவர்கள். உம்முடைய வார்த்தையில் இருக்கும் கருத்தை விளக்கிக் கொள்ள முடியுமா? நாங்கள் எம்மாத்திரம். எனவே மறுபடியும் உம்முடைய தரிசனத்தின் அர்த்தத்தைத் தெளிவு படுத்தியருள வேண்டும்'' என்று முறையிட்டு ஜெபம் செய்தோம். ஓர் ஆண்டு காலம் வரை ஜெபித்து வந்தோம். ஒரு பக்கம் ஜெபம் நடந்து கொண்டிருந்தது. மறுபக்கத்தில் அந்த ஆண்டு முழுவதும் ஆந்திர மாநிலத்தின் ஒரு சில மாவட்டங்களிலும், பட்டணங்களிலும், கிராமங்களிலும், புகழ்பெற்ற தேவ ஊழியர்களுடன் சேர்ந்து ஊழியம் செய்யும்படி ஆண்டவர் உதவியும் செய்து வந்தார். ஒரு நாள் இரவு நாங்கள் ''ஆண்டவரே! ஹைதராபாத்தில் பல துறைகளைச் சேர்ந்த பெரியவர்கள், கனவான்கள், பண்டிதர்கள், வேத விற்பன்னர்கள் என்று பல ரகத்தினர்கள் இருக்கிறார்கள்.

அங்கு நாங்கள் சென்று செய்ய வேண்டியது என்னவோ! புரியவில்லையே? அவர்களுக்கு ஒரு வார்த்தைக்கு அர்த்தம்

சொன்னால் அதில் அவர்கள் பத்து அர்த்தங்கள் அறிந்து கொள்வார்கள். நானோ! மூடனாயிருக்கிறவன். நான் எதற்கும் உதவாதவன். அங்குப் புகழ்பெற்ற பிரசங்கிகள் இருக்கிறார்கள். அல்லவா? அப்படியிருக்க நான் அங்குப் போவானேன்? அவர்களின் பெயரைச் சொன்னாலே ஆயிரக்கணக்கான மக்கள் கூடி விடுவார்களே. நானோ சுத்தத் தெலுங்கில் சரியாகப் பேசத் தெரியாதவன். ஆண்டவரே! இவை யாவும் உமக்குத் தெரியாதா? எனக்குப் பயமாக இருக்கிறது. நான் ஒருவேளை வெட்கப்பட்டுப் போவேனோ? என்னமோ? என்று பலவிதமாகச் சிந்தித்து ஜெபித்துக் கொண்டே தூங்கி விட்டோம்.

மூன்று நாள்கள் கடந்த பிறகு ரெபெக்கா நான்காவது நாள் மதியம் வேளையில் ''ஐயா, நாம் கொஞ்ச நேரம் ஜெபிக்கலாம்'' என்று அழைத்தார்! நானோ மிகவும் களைப் பாய் இருக்கிறேன். கொஞ்ச நேரம் ஓய்வெடுத்துவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு என்னை மன்னியும் ஆண்டவரே என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டு உடம்பைத் தரையிலே கிடத்தினேன்.

தூக்கத்தில் மூன்று வெள்ளைச் சிங்காசனங்களைக் கண்டேன். இடது புறமாயிருக்கிற சிங்காசனம் காலியாக இருந்தது. வலப்புறச் சிங்காசனத்தில் பனியைப்போல் வெண் வஸ்திரம் தரித்திருக்கிறவர் வீற்றிருக்கக் கண்டேன். மத்தியிலுள்ள சிங்காசனத்தில் இன்னொருவர் அமர்ந்திருந் தார். அவரும் வெண் வஸ்திரம் அணிந்திருந்தார். வலது புறத்தில் இருப்பவரைக் காட்டிலும் இவர் வயது முதிர்ந்தவர் போல் காணப்பட்டார். நான் கைகளைக் கட்டிக்கொண்டு அந்த மூன்று சிங்காசனங்களுக்கு முன்பாக நின்று கொண்டிருந்தேன். மத்திய சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவர் வாயிலிருந்து கெம்பீரச் சத்தம் எழுந்தது. ''நீ பிரயாணத்திற்கு ஆயத்தப்படு, நான் உன்னை ஹைதாரபாத்திற்குக் கொண்டு செல்வேன். அங்கு நான் உனக்குத் துணையாக இருப்பேன்.'' என்று கட்டளை இட்டு வெள்ளைக் காகிதத்தில் சிவப்புப் பெண்சிலினால் 1பேதுரு இரண்டாம்

அதிகாரத்தில் 5ஆம் வசனத்திலிருந்து, 7ஆம் வசனம் வரை இன்னும் 11ஆம் வசனம் என்று எழுதி, அந்தக் காகிதத்தை எனக்குக் கொடுத்து தனது வலது கை ஆள் காட்டி விரலை மேலாக உயர்த்திக் கொண்டு பிரசங்கி'' என்று மீண்டும் கட்டளையிட்டார். நான் உடனே விழித்துப் பார்க்கும்போது அது மாலை நேரமாகி விட்டிருந்தது. நான் ரெபெக்காவை அழைத்து எனக்குத் கிடைத்த தரிசனத்தை விளக்கினேன். அவர்கள் அதைக்கேட்டு பிரைஸ்தி லார்டு (Prise the Lord) என்று சொன்னார்கள்.

மதியானம் நான் ஜெபித்தேன்.''ஆண்டவரே எனக்கு நீர் காண்பித்த தரிசனத்தின் கருத்தை உமது அடியானாகிய என் கணவருக்கும் காண்பிக்க வேண்டும்'' என்று வேண்டினேன். எனவே ஆண்டவர் என் ஜெபத்தைக் கேட்டுப் பதில் அளித்துள்ளார். கடந்த நாட்களில் நாம் செய்து வந்த ஜெபம் இன்று பயன் தந்தது, என்று அவர் சொல்லிக் கொண்டு இருக்கும் போது என் வேதாகமத்தைக் கொண்டு வரச் சொல்லி 1பேதுரு 2:5; 7,11 ஆகிய வசனங்களை வாசித்தேன்.

ஜீவனுள்ளவர்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகை யாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும் படிக்குப் பரிசுத்த ஆசாரிய கூட்டமாகவும், கட்டப்பட்டு வருகிறீர்கள். அந்தப்படியே இதோ தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றது மாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன். அதன்மேல் விசுவாசமாயிருக் கிறவன் வெட்கப்படுவதில்லை. ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது. கீழ்ப்படியாமலிருக் கிறவர்களுக்கோ வீட்டைக் கட்டுகிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக் கல்லாகிய அந்தக்கல் இடறுதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். பிரியமான வர்களே! சந்நியாசிகளும், பரதேசிகளுமாகிய நீங்கள் ஆத்மாவுக்கு விரோதமாய் போர் செய்கிற மாமிச இச்சைகளை விட்டு விடுங்கள்.

இந்த வார்த்தைகளை வாசித்துத் தைரியமடைந்தேன். பிரயாணத்திற்கு ஆயத்தப்பட்டேன். ஹைதரபாத்திற்குச் சென்று எங்கே போவது என்ற கேள்வி எழுந்தது. ஒரு வாரம் கழிந்தபிறகு ''கூட்டங்களுக்கு உடனே புறப்பட்டு வரவும்'' என்று ஒரு தந்தி இராஜமந்திரியிலிருந்தும், இன்னொரு தந்தி உடனே கூட்டங்களுக்குப் புறப்பட்டு வரவும் என்று கொய்யா கூடத்தில் இருந்தும் வந்திருந்தன. அதனால் நான் கொய்யாகூடம் என்னுமிடத்திற்குப் புறப்பட்டுப்போனேன். அங்கு ஐந்து நாள்கள் கூட்டங்கள் நடந்து முடிந்தபிறகு ஹைதராபாத்திலிருந்து கூட்டங்களுக்கு உபசரித்து ''ஐயா, நீங்கள் ஹைதராபாத்தில் இருப்பது நல்லது'' என்றார்கள். ஆண்டவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்போம் என்பதாக நான் சொன்னேன்.

எனக்குள் நான் ''இது தேவன் காட்டிய வழி'' என்று நினைத்துக் கொண்டு அங்கிருந்த நாட்களில் அதிகமாக ஜெபித்து வந்தேன். ஹைதராபாத்தில் இருந்து ஒரு சகோதரர் தன் மனைவியுடன் நான் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் இடத்திற்கு வந்து என்னிடம் சகோதரரே! கூட்டங்கள் முடிந்த பிறகு நீங்கள் எங்கு செல்வீர்கள் என்று கேட்டார். அதற்கு ''நான் வீட்டை விட்டுவந்து பன்னிரெண்டு நாள்களாகின்றன. சுகவீனமாயிருக்கிற என் மனைவியும் பலவீனமான என் பிள்ளைகளும் வீட்டில் தனியாக இருக்கிறார்கள். அவர்களுக் காகவே நான் சீக்கிரமாகப் போகவேண்டுமென்று'' பதில் சொன்னேன்.

அதற்கு அவர்கள் ''சகோதரரே! நாங்கள் உங்கள் மனைவி பிள்ளைகளுக்காக ஜெபிப்போம். ஆண்டவர் அவர்களுக்கு எந்தத் தீங்கும் நேராதபடி பத்திரமாக காப்பார். நீங்களோ தேவனது ஊழியத்தில் இருக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம்'' என்று சொன்னார்கள். அதற்கு நான் ''நீங்கள் சொல்ல வேண்டியதை விவரமாகச் சொல்லுங்கள்'' என்றேன். அதற்கு அவர்கள் ''நீங்கள் நாளை எங்களுடன் ஹைதராபாத்திற்கு வந்து பத்து நாள்கள் தங்க வேண்டும்.

நாங்கள் அங்கு உயிர் மீட்சிக் கூட்டங்களுக்கு ஒழுங்கு செய்து இருக்கிறோம். அந்தக் கூட்டங்களில் ரெவரெண்ட் பிளிப் (Rev. Philip) ஆபிரகாம் அவர்களும், R.R.K. மூர்த்தி அவர்களும், தேவப்பிரகாசம் அவர்களும் பேச உள்ளார்கள். அவர்களுடன் சேர்ந்து நீங்களும் தேவனுடைய வார்த்தையைக் கொடுக்கலாம். என்று சொன்னார்கள். நானும் இது தேவனுடைய சித்தம், தேவன் நமக்குக் காட்டும் வழி என்று உணர்ந்து அவர்கள் அழைப்பை ஏற்பதாகச் சம்மதித்தேன்.

நான் அவர்களோடு ஹைதராபாத் வந்து சேர்ந்தேன். அவர்கள் வீட்டில் பதினொருநாட்கள் தங்கி இருந்தேன். நான் அவர்கள் விட்டில் தங்கியிருக்கையில் அவர்கள் ஹைதராபாத், சிகந்தராபாத், பகுதியில் இருக்கும் புகழ்பெற்ற தேவ ஊழியக்காரர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள் சில சபைகளில் சாட்சி சொல்லவும், பிரசங்கம் செய்யவும் தேவன் எனக்கு உதவி செய்தார்.

ஹைதராபாத் விஜயநகர் காலணியில் உயிர் மீட்சிக் கூட்டங்கள் நடத்தினார்கள். என் சாட்சியின் ஒரு பகுதியைச் சொன்னேன். அநேகர் தேவ ஆவியினால் அசைக்கப் பட்டனர். அவர்களில் ஒருவர் தான் பண்டிதர் என்பதாகத் தன்னைத்தானே எனக்கு அறிமுகம் செய்து கொண்டு, ''ஐயா, பரவஸ்து அவர்களே! நீங்கள் ஒரு புகழ்பெற்ற சந்ததியைச் சேர்ந்தவராக இருந்து கொண்டு இந்து மதச் சாஸ்திரங்களைக் கண்டித்துப் பேசிக்கொண்டு, கிறிஸ்தவ மதத்தைப் பிரசங்கித்து வருவது நல்லதல்ல'' என்று அவர் சொல்லிக் கொண்டு இருக்கையில் நான் குறுக்கிட்டு ''ஐயா, பண்டிதர் அவர்களே! நான் சொல்லியதில் ஏதாவது தவறு இருந்தால் சொல்லுங்கள் என்றேன்.

அதற்கு அவர் ''சத்தியம்தான், ஆனால் என்று இழுத்துக் கொண்டிருக்கையில், உடனே நான் ஐயா, சத்தியத்தையே நான் சொன்னேன் அல்லவா? எனவே, உங்களுக்கு விருப்ப மானால் ஏற்றுக்கொள்ளுங்கள், இல்லாவிட்டால் விட்டு விடுங்கள். என்னோடு தர்க்கிக்கிறவர்களுக்குத் தேவன் காணப்பட மாட்டார்.

எனவே அது எனக்குப் பிடிக்காது'' என்று நான் சொல்லிக் கொண்டு இருக்கையில் அநேகர் என்னைச் சூழ்ந்து கொண்டு என்னைக் கைகுலுக்கிப் பாராட்டினார்கள். இன்னும் சிலர் சில வெகுமதிகளைக் கொடுத்து ஜெபிக்கும் படியாகக் கேட்டார்கள். வேறு சிலர் கூட்டங்களுக்கு அழைப்பு கொடுப்போம் என்று சொல்லி என் விலாசத்தை எழுதிக் கொண்டார்கள். ஒரு சில பிரமாணர்கள் தங்கள் வீடுகளுக்கு வரும்படி என்னை அழைத்தார்கள். கடைசியாக ஒரு இன்ஜினியராக வேலை செய்யும் பிராமண சகோதர் என்னை அவர் வீட்டில் தங்கும்படி அதிகமாகக் கேட்டுக் கொண்டார்கள். நான் அவரிடத்தில் ''சகோதரரே! நாளை மறுநாள் தெனாலி என்னுமிடத்தில் கூட்டமிருக்கிறது.

அங்கு என்னை அழைத்துச் செல்ல தேவ ஊழியக்காரர் ஒருவர் காத்துக் கொண்டிருக்கிறார். எனவே இம்முறை என்னை மன்னித்து விடுங்கள். இன்னொரு முறை வரும்போது கர்த்தருக்குச் சித்தமானால் ஒரு நாளல்ல மூன்று நாட்கள் தங்கள் வீட்டில் தங்குகிறேன் என்று அவருக்குச் சமாதானம் சொல்லி அனுப்பிவிட்டேன். அன்று இரவு தேவ ஊழியக்காரர் தேவப்பிரகாசம் அவர்கள் வீட்டில் நானும், R.R.K. மூர்த்தி அவர்களும், தங்கியிருந்தோம். அடுத்த நாள் காலையும், மதியமும் அவர்கள் வீட்டிலேயே சாப்பிட்டுவிட்டு கடைசி கூட்டத்திற்கும் பிரசங்கிக்கச் சென்றோம். கூட்டம் முடிந்ததும் எல்லாரிடத்திலும் விடைபெற்றுக் கொண்டு தெனாலிக்குப் புறப்பட்டோம். நான் விடை பெறுகிற வேளையில், அநேக விசுவாசிகள் தேவ மக்கள் என்னைச்சூழ்ந்து கொண்டு, சகோதரரே! நீங்கள் ஹைதராபாத்திற்கு வந்து ஊழியம் ஆரம்பிக்க வேண்டும். ஆண்டவர் தாமே உங்களை இங்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று வேண்டி, உங்கள் வருகையை எதிர்பார்த்து ஜெபித்துக் கொண்டிருப்போம். ஏற்கெனவே அநேக சபை மக்கள் நீங்கள் இந்தப் பகுதிக்குத் தேவனால் அனுப்பப்பட வேண்டுமென்று ஜெபிக்கத் தொடங்கி விட்டார்கள்.

நீங்கள் நிச்சயமாக தேவனால் அனுப்பப்படுவீர்கள் என்று நம்புகிறோம். இவ்விதமாக அம்மக்கள் என்னை உற்சாகப்

படுத்தினார்கள். இவற்றை எல்லாம் கேட்டு எனக்குள் நானே தேவனைத் துதித்தேன். இப்பொழுது எனக்கு நல்ல தைரியம் வந்தது. நாட்டின் வல்லமை மிக்க ஊழியக்காரர்களுடன் சேர்ந்து உழைப்பது இதுவே எனக்கு முதன் முறையாகும். தேவன் வாயிலிருந்து வந்த வார்த்தை இங்கு நிறைவேறிற்று என்று எண்ணி, தேவனுடைய வார்த்தையை நினைவு கூர்ந்து தேவனுக்கு நன்றி செலுத்தினேன்.

பன்னிரெண்டாம் தேதி காலை பத்து மணிக்குத் தெனாலி வந்து சேர்ந்தேன். அங்கு மூன்று நாள்கள் கூட்டங்கள் நடத்திவிட்டுப் அடுத்தபடியாக வேமூர் என்னும் இடத்திற்கு அழைப்பைப் பெற்று அங்கும் மூன்று நாள்கள் கூட்டங்கள் நடத்திவிட்டு ஒரிசாவுக்கு புறப்பட்டு சென்றேன்.

ஆண்டவரே! நான் ஹைதராபாத்திற்குச் சென்று, என்ன செய்ய வேண்டும் என்றுகேட்ட கேள்விக்கு ஆண்டவர் இவ்விதமான செயலைச் செய்து காண்பித்து விட்டார். நீ எனக்காக ஒன்றும் செய்யமுடியாது. ஆனால் நான் எனக்கு வேண்டியதை உன்னை வைத்துச் செய்து கொள்வேன் என்ற தேவனுடைய வார்த்தை உண்மையாயிற்று. இனி ஹைதரா பாத்திற்கு வர எந்த விதத் தடையும் கிடையாது. பயம், சந்தேகம் எல்லாம் என்னை விட்டுப் போய் விட்டன. நான் ஹைராபத்திற்குப் புறப்பட வேண்டிய நேரத்திற்காகக் காத்திருந்தேன்.

சில தேவ மக்கள் ''சகோதரரே! உடனே குடும்பத்துடன் புறப்பட்டு வாருங்கள்''. என்று தந்தி அனுப்பினார்கள். சரி, புறப்படலாம் என்று நினைத்தால் பணம் பற்றாக்குறை ஏற்பட்டது. எனவே அதற்காக மூன்று நாட்கள் ஜெபித்து வந்தேன். மூன்றாம் நாள் மாலை 3மணிக்கு தபால்காரர் தந்தி மணி ஆர்டர் ஒன்றைக் கொண்டுவந்தார். அதில் 400 ரூபாய் வந்திருந்தது. தேவனுக்குத் துதி செலுத்தி அன்று மாலை 6.15க்குப் பெட்டியை எடுத்துக்கொண்டு பிரயாணப்பட்டு கதவருகே வந்து இங்ஙனம் ஜெபித்தேன்.

''ஆண்டவரே! ஆபிரகாம், தனக்குத் தெரியாத நாட்டிற்கு உம் சித்தத்தின்படி விசுவாசத்தினாலே புறப்பட்டுச் சென்றார். நானும் ஆபிரகாமைப் போல் எனக்குத் தெரியாத இடத்திற்கு விசுவாசத்தினால் உம் வார்த்தையின்படியே போய்க் கொண்டிருக்கிறேன். எனக்கு முன் உம் சமூகம் போக வேண்டுமாய் வேண்டிக் கொள்கிறேன். என் வழிகளை நீர் செம்மையாக்கியதாக நம்புகிறேன்.

ஆபிரகாமை கானானில் ஸ்திரப்படுத்திய வண்ணமே ஹைதராபாத்தில் என்னையும், என் சந்ததியையும் ஸ்திரப்படுத்திப் பலுகி பெருகச் செய்தருளும் என்று என் குடும்பத்தாருடன் ஜெபித்து விடைபெற்றுக் கொண்டு, அன்றிரவு கோணார்க் விரைவு இரயிலில் பயணம் செய்யத் தொடங்கினேன். மறுநாள் 3மணிக்கு ஹைதராபாத்திற்கு வரவேண்டிய வண்டி இரவு 9மணிக்கு வந்து சேர்ந்தது. இவ்விதமாக அந்த மாநகரத்திற்கு வந்து சேர்ந்து ஓய்வு எடுத்துக்கொண்டு அடுத்த நாள் எர்ரகட்டா என்ற இடத்தில் உள்ள C.S.I. ஜெப அரங்கில் நடந்து வரும் கடைசி கூட்டத்தில் பிரசங்கித்தேன்.

சுமார் ஒரு வார காலம் ஒரு சகோதரருடைய வீட்டிலே தங்கியிருந்த பிறகு, அங்குள்ள விசுவாசிகள், தேவ ஊழியக்காரர்கள் ஆகியோர் ஆலோசனை செய்து சிகந்திராபாத்தில் மல்காசகிரி பகுதியில் அனுமான் பேட்டையில் வாடகை வீட்டில் நான் வைக்கப்பட்டேன். வீட்டு வாடகை கட்டுவதற்கு ஒரு சகோதரி பொறுப்பேற்றுக் கொண்டார்கள். ஒரு மாதம் கழித்து பக்கத்தில் உள்ள மற்றொரு பெரிய வீட்டிற்கு மாற்றப்பட்டேன். அங்கு ஒரு சகோதரியின் வீட்டில் சுமார் 40 பேர்கள் ஜெபத்திற்காகக் கூடுவார்கள். அந்தச் சகோதரி தான் என் வீட்டு வாடகையையும் குடும்பத்திற்குத் தேவையான அனைத்துச் செலவினையும் ஏற்றுக் கொண்டார்கள். இப்படிச் சில நாட்கள் நான் தனிமையாகக் காலம் கழித்தபிறகு, என் குடும்பத்தையும் கொண்டு வரும்படித் தொந்தரவு செய்த காரணத்தினால் 1986 ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் தேதி நான்

ஒரிசாவுக்குப் புறப்பட்டுச் சென்றேன். அங்கிருந்து ஜனவரி 25 ஆம் தேதி எங்களுடைய தட்டுமுட்டுச் சாமான்களை எடுத்துக்கொண்டு குடும்பத்தோடு புறப்பட்டு ஹைதராபாத் பட்டணம் வந்து சேர்ந்தோம். பிப்ரவதி மாதம் 18ஆம் தேதி வரை அங்குச் சிறிய சபையாக கூடும் மக்களுக்கு மேய்ப்பனாக இருந்து வந்தேன். இதற்கிடையில் மற்ற சபையினர் தங்கள் கூட்டங்களில் பேசும்படி என்னை அழைத்தார்கள். ஆனால் அந்தச் சிறிய சபை மக்கள் அதற்கெல்லாம் நீங்கள் போகக் கூடாது என்று என்னைத் தடுத்தார்கள்.

மேலும் அவர்கள் ''நீங்கள் ஒரு விசேஷித்த வேலைக்காக அமர்த்தப்பட்டுள்ளீர்கள். அதை மாத்திரம் தான் செய்ய வேண்டும். இப்படியெல்லாம் சுற்றிக் கொண்டிருக்கக் கூடாது என்றார்கள். இந்த விஷயமாக ஜெபிக்க ஆரம்பித்தேன். சில நாட்கள் கழித்து அவர்கள் என்னைப் பார்த்து உங்கள் பிரசங்கங்கள் மிகவும் கடினமாக இருக்கிறது. இருதயத்தைக் குத்துகிறது. நீங்கள் பிரகங்கிக்கிற முறையையும் மாற்றிக் கொள்ள வேண்டும். உங்கள் பாஷையும் சரியாக இல்லை. நன்றாகப் பேசக் கற்றுக் கொள்ள வேண்டும்'' என்றும் சொல்ல ஆரம்பித்தார்கள்.

ஒரு நாள் மதியம் உபவாசக் கூட்டத்தில் பிரசங்கித்துக் கொண்டிருக்கும் வேளையில் என் குடும்பக் காரியத்தைப் பொறுப்பேற்றுக் கொண்ட சகோதரி பிரசங்கத்தின் நடுவில் என்னைத் தடுத்து (We don't want you Preach, stopit) உங்கள் பிரசங்கம் எங்களுக்கு தேவையில்லை. நிறுத்துங்கள் என்றார்கள். நான் உடனே நிறுத்திவிட்டேன். get out from my home (என் வீட்டை விட்டுப் போய்விடுங்கள்) என்று சத்தமிட்டார்கள். நான் என் வீட்டுக்குப் போய் விட்டேன்.

விசுவாசப் பரிட்சை!

''ஆண்டவரே! ஐதராபாத்திற்கு ஆயத்தப்படச் சொன்னீர். ஆயத்தப்பட்டேன். புறப்படச் சொன்னீர். புறப்பட்டேன். இருப்பினும் எங்கேயோ தவறு செய்திருக்கிறேன். எனக்கு

அது புரியவில்லை. என் தவற்றை எனக்குக் காண்பியும். உமக்கு விருப்பமில்லாத எதையோ நான் செய்திருக்கிறேன். அதனால்தான் எனக்கு இப்படி நடந்தது. எனக்குத் தயவு செய்து என் குறையை நான் உணர எனக்கு உதவி செய்யும்'' என்று நான் ஜெபிக்க ஆரம்பித்த போது ஆண்டவர் ''மகனே, நான் உன்னை ஹைதராபாத்திற்கு வரச் சொன்னது உண்மைதான். வந்த பிறகு என்ன செய்ய வேண்டுமோ அதை என்னிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளாமலயே மனிதர்கள் யோசித்துச் சொன்னதை நீ செய்தாய், நீ இங்கிருப்பது எனக்குச் சித்தமில்லை. எனவே உன்னை வெளியே இழுத்தேன்'' என்று தேவனும் மனிதனும் நேருக்கு நேர் பேசுவதைப்போல் பேசிப் பலப்படுத்தினார்.

அதே நாள் மாலை 3-30 மணிக்கு ஹைதராபாத்தில் உள்ள லிங்கம்பள்ளி என்னும் சென்ட்ரல் யூனிவர்சிடி போன்ற இடங்களில் கூட்டங்களை ஒழுங்கு செய்து அந்தக் கூட்டங்களில் என்னைப் பேசும்படி ஒரு சகோதரர் என்னை அழைத்தார். நான் ஐந்து நாட்கள் அந்தக் கூட்டங்களில் கலந்து கொண்டேன். பகல் முழுவதும் உபவாசமிருந்து முழங்காலில் நின்று ஜெபித்து வந்தேன். கூட்டங்கள் முடிந்தவுடன் இரவு 10 மணிக்குச் சாப்பிட்டுவிட்டு மறுபடியும் விடியற்காலை 2-30 மணி வரை ஜெபித்து வந்தேன். நான் இந்தக் கூட்டங்களுக்கு ஒரு சகோதரரின் மோட்டார் வண்டியில் புறப்படும் வேளையில் என் மனைவி என்னைப் பார்த்து ''ஐயா, நீங்கள் போய்க் கொண்டிருக் கிறீர்கள். வீட்டில் இன்றிரவு ஒரு வேளைக்கு மாத்திரமே அரிசி இருக்கிறது. எதாவது வாங்கலாம் என்றாலும் கையில் ஒரு பைசாகூட கிடையாது. நம்முடைய குடும்ப பாரத்தைச் சுமக்கப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த சகோதரியும் கடந்த இரண்டு நாட்களாக அவர் செய்து வந்த உதவியையும் நிறுத்திக் விட்டார்கள். அவரும் நம்மை விரட்டி விட்டார்கள். இதை எல்லாம் நினைத்துப் பார்க்காமல் நீங்களோ கூட்டங்களுக்குப் போய்க் கொண்டிருக்கிறீர்கள். பிள்ளைகளும் சிறியவர்களாக இருக்கிறார்கள். பசியைத்

தாங்க மாட்டார்கள். மறுபடியும் நீங்கள் என்றைக்கு வருவீர்களோ? என்னவோ? நானோ இந்தப் பட்டணத்திற்குப் புதியவள். எனக்குத் தெரிந்தவர்களோ? உறவினர்களோ இங்கு யாரும் கிடையாது. காலையில் எழுந்தவுடன் குழந்தைகள் பசி என்பார்கள். நான் என்ன செய்வது? போய் வாருங்கள்'' என்று சொல்லிவிட்டு இரகசியமாக சமையல் அறைக்கு என்னைக் கூப்பிட்டு மிக்க வேதனையோடும் கண்ணீரோடும் இவ்வார்த்தைகளைக் சொன்னார்கள்.

வேதனையைத் தாங்க முடியாமல் நானும் அழுது விட்டேன். உடனே ஒரு வார்த்தையைச் சொன்னேன். ''அம்மா நீர் கவலைப்பட வேண்டாம். இன்று மதியம் அங்கிருந்து விரட்டப்பட்ட பிறகு வீட்டிற்காக நான் ஜெபித்துக் கொண்டிருந்த வேளையில் ஒரு மெல்லிய சத்தத்தைக் கேட்டேன். நீயோ அச்சமயத்தில் குழந்தை களுக்குச் சாப்பாடு கொடுத்துக் கொண்டிருந்தாய் என்று சொல்லி நான் கேட்ட அந்த மெல்லிய சத்தத்தையும் என் மனைவியின் காதில் போட்டேன். அதற்குள் ஒரு சகோதரி ''இதுதான் பரவஸ்துவின் வீடா? என்று கேட்டுக் கொண்டு வந்தார்கள். அதைக் கேட்டு நான் ''என்ன வேண்டும்'' என்று கேட்டேன். அவர்கள் ஒன்றுமில்லை உங்களைக் குறித்து அநேகம் பேர் அநேக முறை சொல்வதைக் கேள்விப் பட்டுள்ளேன். எனவே உங்களைக் கண்டு ஜெபித்துச் செல்லலாம் என்று வந்தேன் என்றார்கள்.

''சரி, வாருங்கள், உங்களுக்காக ஜெபிக்கிறேன் என்று சொல்லுகையில் ''சீக்கிரமாக வாருங்கள் பிரதர்'' என்று மோட்டார் வண்டியை வெளியே நிறுத்திவைத்திருந்த சகோதரர் குரல்கொடுத்தார். நானோ பிரதர் இதோ வந்து விடுகிறேன் என்று சொல்லிவிட்டு ஜெபத்தை முடித்தேன். வந்திருந்த சகோதரி பாஸ்டர் அவர்களே! எங்கேயாவது போகிறீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு நாள் ''ஆம்! சகோதரியே! இன்றிரவு கூட்டத்தில் நான் பிரசங்கிக்க வேண்டும். சுமார் 40 கிலோ மீட்டர் தூரம் பிரயாணம் செய்ய வேண்டும்.

எனவே நீங்கள் மறுபடியும் இங்கு வாருங்கள். சவகாசமாய் ·பேசுவோம் என்று சொல்லிவிட்டு என் பிரிப்கேஸைக் (சூட்கேஸ்) கையில் எடுக்கையில் அவர்கள் 50 ரூபாய் எடுத்து என் கையில் காணிக்கையாக வைத்தார்கள். ஆசீர்வதித்து விட்டு, என் மனைவியிடம் அந்த ரூபாயைக் கொடுத்துவிட்டு நாங்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் புன்முறுவல் செய்து தேவனுக்குப் புரியும் படியாக உவமை மொழியில் துதி செலுத்தினோம்.

பிரியமானவர்களே! இக்கட்டான வேளைகள் சூழ்ந்து வரும்பொழுது, உங்களுக்குப் பற்றாக்குறையும், வேதனையும் ஏற்படும் பொழுதும் இயேசுவிடம் ஒடி வாருங்கள். உபவாசத்துடன் முழங்காலிட்டு உங்கள் தேவை அனைத்தையும் சொல்லுங்கள். அவரிடத்திலிருந்து பதில் கிடைக்கும் வரை காத்திருங்கள். அவசரப்படாதீர்கள். யாரிடத்திலேயும் ஓடாதீர்கள். வேறு எந்த ஆலோசனை யையும் செய்ய வேண்டாம். அவர் ஒருவரின் ஆலோசனையே போதுமானது. நீங்கள் இயேசு கிறிஸ்துவை ஆராதிக்கிற வர்களாக இருந்து, அல்லது விசுவாசிக்கிறவர்ளாக இருந்து அவசரப்பட்டுச் சொந்த ஆலோசனைபடி யாராவது செய்தால் அது உங்களுக்கு விரோதமாகவே முடியும்.

அப்படிப்பட்ட வேளையில் நீங்கள் தேவனிடம் ஓடி வந்து உங்கள் தவறுகளை அறிக்கை இடுங்கள். ஒருவேளை உங்கள் தவறு உங்களுக்குத் தெரியாவிட்டால் ''ஆண்டவரே, எங்களிடம் என்ன தவறு இருக்கிறது'' என்று எங்களுக்குத் தெரியவில்லையே எங்களுக்குத் தெரியப்படுத்தும் என்று ஜெபித்து தேவனுடைய சித்தத்திற்காக காத்திருந்து அதன்படி செய்வது உங்களுடைய கடமை. இது என்னுடைய அனுபவம்.

நான் மோட்டார் வண்டியில் (Scooter) பிரயாணம் செய்து லிங்கம்பள்ளி போய்ச் சேர்ந்தேன். அன்றிரவு கூட்டத்தில் பிரசங்கித்துவிட்டு எனக்கென்று ஒழுங்கு செய்த வீட்டிற்குச் சென்று அன்றிரவு முழுதும் முழங்காலிட்டு ஜெபித்தேன். நான்

என் வீட்டைவிட்டு வெளியே வந்தபோது என் வீட்டில் ஒரு வேளைக்கு வேண்டிய அரிசி மாத்திரம் இருந்தது. அடுத்த நாள் முழுவதும் உபவாசத்தில் கழித்து இரண்டாம் நாள் கூட்டம் முடிந்த பிறகு இரவு 2-30 மணிக்குத் தூங்கச் சென்றபொழுது என் இருதயம் மிகவும் பயத்தால் நிறைத்திருந்தால் எனக்குத் துக்கம் வரவில்லை. உடனே நான் எழுந்து உட்கார்ந்து கொண்டேன். ''நாமோ வயிறு நிறைய சாப்பிட்டோம். நம் வீட்டிலோ ஒரு வேளைக்கு மாத்திரமே அரிசி இருக்கிறது'' என்று எண்ணி மறுபடியும் ஜெபிக்க ஆரம்பித்தேன். ''ஆண்டவரே! என் வீட்டிற்குத் தேவையான அரிசியைத் தந்தருளும்'' என்று ஜெபித்தேன். மூன்றாம் நாள் மதியம் நான் சாப்பிடவில்லை. டீ குடித்துக் கொண்டே யோசித்துக் கொண்டிருந்தேன்.

''ஆண்டவரே! நான் வீட்டைவிட்டுக் கூட்டங்களுக்கு வரும்போது வீட்டில் எதுவும் இல்லை. அவர்கள் அங்குப் பட்டினியால் கிடக்கிறார்களோ? என்னவோ தெரியவில்லை. என்று நினைத்தேன். அந்த நேரத்தில்தான். ''வீட்டிற்குச் சென்று பார்'' என்ற சத்தம் என் காதில் கேட்டது. முதலில் நான் பயந்தேன். ஏனென்றால் அந்தப் பகுதியில் ஆள் நடமாட்டமும் இல்லை. எனவே இது தேவனுடைய சத்தம் என்று தெரிந்து கொண்டேன்! கூட்டம் முடிந்ததும் வீட்டிற்குப் போகலாம் என்று நினைத்தேன். அந்தச் சத்தத்தைக் கேட்டதும் ''வீட்டில் யாருக்காவது சுகம் இல்லையோ என்னவோ'' என்று கலக்கமுன்றேன்.

''ஆண்டவரே! இன்றிரவு நான் வீட்டிற்குப் போக வேண்டுமானால் மோட்டார் வண்டி வசதியுள்ள ஒரு சகோதரர் இங்கு வரும்படிச் செய்யும்'' என்று ஜெபித்தேன். அன்றிரவு ஒர கேரள சகோதரர் மோட்டார் வண்டி கொண்டு வந்திருந்தார். அவருடன் சேர்ந்து இரவு 1 மணியளவில் வீடு போய்ச் சேர்ந்தேன். ''ரெபெக்கா'' என்று அழைத்துக் கதவைத் தட்டியவுடனே அவர் கதவைத் திறந்தார். உள்ளே சென்றவுடனே 45 கிலோ அரிசி மூட்டை அங்கிருப்பதைப்

பார்த்து இது என்ன என்று கேட்டேன். அவர் அரிசி மூட்டை என்றார்கள். நான் யார் கொடுத்தது என்று கேட்டேன். அதற்கு அவர் எனக்குத் தெரியாது என்றார்கள். தெரியாமல் அரிசி இங்கு எப்படி வந்தது என்றேன். அதற்கு அவர் ''ஒரு ரிக்ஷாக்காரர் பரவஸ்து வீடு இதுதானா'' என்று கேட்டார். நான் ஆம் என்றேன்.

உடனே அந்த ரிக்ஷாக்காரர் ரிக்ஷாவில் இருந்த இந்த மூட்டையை இறக்கி வீட்டில் வைத்து விட்டுப் போய் விட்டார். நான் இதை நீங்கள்தான் அனுப்பி வைத்து இருப்பீர்கள் என்று நினைத்துக் கொண்டேன் என்று சொன்னார். நான் ''இது உண்மையா'' என்றேன். அவர் ''ஆம், இது உண்மைதான் என்றார். அடே! அரிசி எப்படி வந்தது. நான் அனுப்பவில்லையே! தேவன் எவ்வளவு உண்மையுள்ளவர். அதிசயமானவர்'' என்று சொன்னேன். அன்றிரவு நாங்கள் இருவரும் தேவனைத் துதித்தோம்.

தேவன் என்னை வீட்டிற்குச் சென்று பார் என்று ஏன் சொன்னாரென்றால் ''நீ வீட்டிற்குச் சென்று பாரும். நீ கேட்டவுடனே அரிசியை அனுப்பிவிட்டேன். ஆனால் இன்னும் அரிசி! அரிசி! என்று மூன்று நாட்களாக ஓயாமல் என்னை அரித்துக் கொண்டிருக்கிறாயே! நீ கேட்டதை நான் கொடுத்து விட்டேனோ! இல்லையா போய்ப் பார்'' என்பதுதான் அதன் அர்த்தம் என்று நான் பின்னர் உணர்ந்து கொண்டேன்.

கேட்டதைப் பெற்றுக் கொண்டோம் எனவே தேவனை விசுவாசிக்க வேண்டுமே என்று எண்ணி அடுத்த நாள் காலையில் மிக்க மகிழ்ச்சியுடன் கூட்டம் நடக்கும் இடத்திற்குச் சென்றேன். கூட்டம் நடந்த எல்லா நாட்களிலும் நன்றாக சாப்பிட்டுவிட்டு மிக்க உற்சாகத்தோடு பிரசங்கித்தேன்.

ஒரு சமயம் ஞாயிற்றுக்கிழமை அன்று என் மகன் கிரண் ஜுரமாக இருந்தான். ஏற்கெனவே அவன் சாப்பிட்டு நான்கு

நாள்காளாயிற்று. சாப்பாடு கொடுத்தால் ''வேண்டாம்'' என்று தள்ளி விடுகிறான். சரி என்னதான் சாப்பிடுவாய் என்று கேட்டால் கோதுமை ரொட்டி என்றான். சரி இப்பொழுது கோதுமை ரொட்டி எங்கும் கிடைக்காதப்பா என்று எவ்வளவு சமாதானம் படுத்தினாலும் அவன் கேட்டபாடில்லை. ஆனால் அவன் நான்கு நாள்களாகச் சாப்பிடாமல் பலவீனமாக இருந்தது எங்களுக்கு வருத்தமாக இருந்தது. ரொட்டி ரொட்டி என்று சொல்லிக் கொண்டே அவன் தூங்கி விட்டான். தூக்கத்திலிருந்து எழுந்தவுடனே அவன் ரொட்டி கேட்பானே? என்ன செய்வது என்று என் மனைவியிடம் கேட்டேன். ''நாம் ஜெபிப்போம், ஆண்டவர் இவன் தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்வதற்குள்ளாகக் கோதுமை ரொட்டியை அனுப்பி வைப்பார்'' என்று அவர் சொன்னார். உடனே நாங்கள் இருவரும் ஜெபம் செய்ய ஆரம்பித்தோம்.

குழந்தைகள் இருவரும் தூங்கிக்கொண்டு இருந்தார்கள். மதியம் ஒரு மணி இருக்கும். நாங்கள் இருவரும் ஜெபிக்கத் துவங்கினோம். ''ஆண்டவரே! வனாந்திரத்தில் கேரூத் ஊற்றண்டைக்குப் போவோம்'' என்பதாக தீர்க்கதரிசியான எலியாவுக்கு கட்டளை இட்டீர். நீர் அந்த ஊற்றுத் தண்ணீரைக் குடி. உன்னை பிழைக்கச் செய்யும்படியாகக் காகங்களுக்குக் கட்டளை இட்டிருக்கிறேன் என்று அவருக்குச் சொன்னீர். நீர் கட்டளை இட்ட வண்ணமாகவே அவர்கள் அங்குச் சென்று யோர்தானுக்கு அருகில் உள்ள கேரூத் நீரூற்றண்டைத் தங்கினர். நீர் காகங்களுக்குக் கட்டளையிட்ட வண்ணமாகவே காலையிலும், மாலையிலும் மாமிசமும் அப்பமும் கொண்டுவந்து கொடுத்தன. அவர் அந்த நீரூற்றைப் பருகி வந்தார். நாட்டில் பஞ்சம் அதிகரித்தது. பூமியில் நீரூற்றும் காய்ந்து போனது மழையும் பெய்யவில்லை. அதற்குப் பிறகு நீர் அவரிடத்தில் ''நீ சீதோம் பட்டணத்தில் சாரிபாத் என்னும் கிராமத்திற்குப் போ. உன்னை போஷிக்கும்படி அங்கு ஒரு விதவைக்குப் கட்டளை இட்டிருக்கிறேன்'' என்று சொன்னீர்கள். அதன்படி அவர்

எழுந்து சாரிபாத்திற்குப் போகும்போது பட்டணத்தின் வாசலண்டையில் ஒரு விதவை விறகு பொறுக்கிக் கொண்டிருந்தாள். அவளைப் பார்த்துக் தாகத்திற்குத் தண்ணீர் தா என்று கேட்டார். அவள் தண்ணீர் கொண்டுவரச் செல்லுகையில் அவர் அவளை மறுபடியும் அழைத்து நீ எனக்கு ஒரு அப்பம் செய்து கொண்டு வா என்று கேட்டார். அதற்கு அந்த விதவை ''ஐயா, தேவன் மீது ஆணையாகச் சொல்லுகிறேன். தொட்டியில் ஒரு பிடி மாவும் குடத்தில் கொஞ்சம் எண்ணெயும் தவிர வேறொன்றும் என் வீட்டில் கிடையாது. நானும் வியாதியாய் இருக்கிற என் மகனும் சாவதற்கு முன்பு அதைச் சுட்டுச் சாப்பிட விறகைப் பொறுக்கிக் கொண்டிருக்கிறேன்'' என்றாள்.

அதற்கு ''எலியா! பயப்படாதே போய் நான் சொன்ன வண்ணமாகச் செய்யவும். ரொட்டி செய்து முதலில் எனக்கென்று கொண்டு வா. அதற்குப் பிறகு சென்று உனக்கும் உன் பிள்ளைக்கும் செய்து கொள்ளலாம் என்றார். ''பூமியின்மேல் மழை பெய்யும் வரைக்கும் தொட்டியிலிருக்கும் மா குறைந்து போவது இல்லை'' என்றார். அந்த ஏழை விதவை அதைக் கேட்டு வீட்டிற்குச் சென்று அந்தக் தேவ மனிதன் சொன்ன வண்ணம் செய்தபோது அவரும் அந்த ஏழை விதவையும் அவள் வீட்டாரும் அநேக நாட்கள் திருப்தியாகச் சாப்பிட்டு வந்தார்கள்.

அதற்குப்பிறகு அந்த ஏழை விதவையின் மகன் வியாதியினால் மரித்துப்போனான். அதையறிந்த எலியா அந்த மகனைத் தானிருந்த அறைக்குக் கொண்டு சென்று தன் கட்டிலில் படுக்க வைத்து அவன் மேல் மூன்று முறை விழுந்து ஆண்டவரே! இந்தச் சிறுபிள்ளைக்கு மறுபடியும் ஜீவன் உண்டாகச் செய்யும் என்ற ஜெபத்தைக் கேட்டு அந்தப் பிள்ளையைப் பிழைக்கச் செய்தீர். எலியாவையும் பிழைப்பூட்டினீர்.

எலியாவைப் போஷிக்க வேண்டி ஓர் இடத்திலேயிருந்து இன்னொரு இடத்திற்கும், ஓர் ஊரிலேயிருந்து இன்னொரு ஊருக்கும் வழி நடத்தினீர். ஏதோ, அற்புதங்கள், அதிசயங்கள் செய்யும்படியாகவோ அல்லது சாரிபாத் ஊரார் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதற்காகவோ நீர் அப்படிச் செய்யவில்லை. அதே விதமாகப் பிதாவே! உன் அடியேனையும் அவன் வீட்டாரையும் நினைவு கூர்ந்தருளும் என் மகன் ரொட்டி வேண்டுமென்று நான்கு நாள்களாகக் கேட்டு அழுது கொண்டு இருக்கிறான்.

கிருபை காட்டும் நீர் கட்டளையிட எலியாவுக்குச் சாரிபாத்தில் அப்பம் கிடைத்த வண்ணமாகவும் கேரீத் ஊற்றண்டை மாமிசமும் அப்பமும் கிடைத்த வண்ணமாகவும் என் பிள்ளைகளுக்கும் இந்தப் பட்டணத்தில் அப்பம் கிடைக்காமல் போகாது. நீர் கட்டளையிட நீர் சொன்ன வண்ணமாக இந்தப் பட்டணத்திலுள்ள மக்கள் உன் அடியேனின் வீட்டிற்கு (மாவு) கொண்டுவராமல் போவார்களா? என்று ஜெபித்து ஆமென் என்று சொன்னவுடனே எங்களோடு சேர்ந்து இன்னும் பல குரல்கள் ''ஆமென்'' என்று சொல்வதைக் கேட்டுக் கண் திறந்து பார்த்து நானும் ரெபெக்காவும் திகைத்துப் போனோம். எங்கள் ஜெபத்தின் மத்தியில் மூன்று விசுவாசிகள் முழங்காலிட்டு இருந்தார்கள்.

அதில் ஒரு சகோதரி ''பிரதர் இன்று 10 கிலோ கோதுமை அரைத்து வந்தேன். மாலையில் ரொட்டி சுடலாம் என்று எண்ணி. மதியம் தூங்கிக்கொண்டு இருக்கும்போது உங்களுக்கு அதில் முதல் பயனாகக் காணிக்கையாகக் கொஞ்சம் ''மாவு'' கொடுக்க வேண்டுமென்று தேவன் ஏவிக் கொண்டிருக்கையில் இதோ இரண்டு கிலோ மாவு டின்னில் கொண்டு வந்து உங்களுக்குப் பின்னாலே வைத்துவிட்டு முழங்காலிட்டு ஜெபத்தில் உட்கார்ந்து கொண்டேன். நம்முடைய தேவன் எவ்வளவு அதிசயமானவர் என்று அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கையில், இன்னொரு

ஆசிரியை B.A.B.Ed படித்தவர், புறமதத்தினர், சில வேளைகளில் அவருக்குத் நான் தேவனை பற்றிச் சொல்லி வந்தேன். அவர் ''அங்கில் (uncle) நேற்று ரேஷன் கடையில் நல்ல கோதுமை வந்திருந்ததைப் பார்த்து 10 கிலோ வாங்கிச் சுத்தம் செய்து மாவரைத்து வைத்தேன். நேரமில்லாததால் கொண்டுவர முடியாமல் போய் விட்டது. இதோ பத்து கிலோ கோதுமை மாவு என்று சொல்லி என்னிடம் கொடுத்தார். எல்லோரும் ஆனந்தக் கண்ணீர் வடித்துத் தேவனைத் துதித்தோம்.

இதிலிருந்து தேவனுடைய வார்த்தையில் சொல்லப்பட்ட வண்ணம் தேவன் தன்னை நேசிக்கிற மக்களுக்கு ஆயத்தம் செய்திருப்பவைக் கண்களுக்குக் காணப்படவுமில்லை. செவிக்குக் கேட்கப்படவுமில்லை. இதயத்தில் தோன்றவுமில்லை (1கொரி. 2:9) என்றாற்போல் நேற்று தேவன் எனக்கு ஆயத்தப்படுத்திய கோதுமை மாவு இன்று இந்நேரம் வரைக்கும் எனக்குக் காணப்படவில்லை; கேள்விப்படவில்லை, என் இருதயத்தில் தோன்றப்படவுமில்லை.

பிரியமானவர்களே! விளங்கிக் கொண்டீர்களா? இயேசு கிறிஸ்து எவ்வளவு பெரிய தேவனென்று. இயேசு என்றால் இரட்சகர் என்றும், கிறிஸ்து என்றால் அபிஷேகிக்கப்பட்டவர் என்றும் அர்த்தம். உன் ஆபத்துக் காலத்தில் உன்னை இரட்சிக்கின்ற உன்னைக் காக்கின்ற தேவன், என்னையும் என் நிலையையும் கண்டு அதே ஆண்டவரால் இரட்சிக்க முடிந்தது. அவர் கேட்கிற தேவன், எனவே அவர் என் கூக்குரலைக் கேட்டார். இயேசு நேற்றும், இன்றும், என்றென்றும் மாறாதவராய் இருக்கின்றார். அன்று எலியாவைப் போஷித்த தேவன் என்னையும் என் குடும்பத்தையும் போஷித்தார். அப்படிப்பட்டவர் உன்னை போஷிக்க மாட்டாரா? பரிசுத்த வேதாகமத்தில் (Bible) 33 ஆயிரம் வாக்குத்தத்தங்கள் இருக்கின்றன. நீ எப்பொழுதாவது அந்த வேதாகமத்தை வாசித்திருக்கிறாயா? இல்லாவிட்டால் இப்பொழுதே வாசிக்க ஆரம்பிக்கவும் அதிலே

சொல்லப்பட்டிருக்கிற தேவனுடைய வாக்குத்தத்தங்களை இறுகப் பற்றிக் கொள்ளுங்கள். முழங்காலிட்டு ஜெபியுங்கள். அன்று என் மன்றாட்டைக் கேட்ட தேவன் இன்று உன் ஜெபத்தையும் கேட்பார்; பதிலளிப்பார். கேளுங்கள் கொடுக்கப்படும் என்று இயேசு உன்னை அழைக்கிறார். அவருடைய அழைப்பிற்கு இணங்கிச் சென்றால் நீங்கள் வேண்டியதை அவர் கண்டிப்பாகக் கொடுப்பார். ''தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவின் மகிமையினாலே நிறைவாக்குவார் என்று தேவன் பிலிப்பியர் *4:19*.இல் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். உன் குலம், ஜாதி, மதம் எதுவாயினும் அதைக் குறித்துத் தேவனுக்கு அக்கறை இல்லை. நீதான் தேவனுக்குத் தேவை. உன்னையே அழைக்கிறார். நீ எந்தச் சபையைச் சேர்ந்த கிறிஸ்துவனாயினும் நீ இரட்சிக்கப்படுவாய். மறுபடியும் பாவத்தில் விழுந்து போனவனாக இருந்தாலும் சரி தேவன் உன்னை அழைக்கிறார். ''வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னண்டைக்கு வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' (மத். *11:28*).

கோதுமை மாவு கொண்டு வந்த அந்தச் சகோதரியின் மகன் நான்கு ஆண்டு காலமாக நெப்ரடீஸ் என்னும் வியாதியினால் கஷ்டப்பட்டு வந்தான். அந்த சகோதரி நல்ல விசுவாசி. அத்துடன் கருத்தாய் ஜெபிக்கக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். அந்த மகனுடைய சுகத்திற்காக வேண்டி அநேக ஜெபங்களைச் செய்தார்கள். அநேக ஊழியக்கார விசுவாசிகளுக்குக் கடிதங்கள் எழுதி தன் மகனுக்காக ஜெபிக்கும்படிக் கேட்டுக் கொண்டார்கள். இருப்பினும் அந்தப் பிள்ளை சுகமடையவில்லை. ஏனென்றால் அவர்கள் தங்கள் வருவாயில் தசமபாகத்தையோ, முதற் பலனையோ கொடுத்து அறியாதவர்கள். பிரியமானவர்களே! நீங்கள் எந்தக் கிறிஸ்துவச் சபையில் இருந்தாலும், நீ எவ்வளவுதான் உபவாசித்து ஜெபித்தாலும், எத்தனை ஊழியக்காரரிடத்தில் ஜெபித்துக் கொண்டாலும் அதனால் ஒன்றும் பிரயோஜன

மிருக்காது. காரணம் நீ தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் போவதே. தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறதென்றால் எனக்குக் கொடுத்துச் சோதித்துப் பாருங்கள் என்பதாக. ''எனக்குக் கொடுத்தால் உன்னை ஆசீர்வதிப்பேன்'' என்று தேவனுடைய வார்த்தை உறுதியாகக் கூறுகிறது. அப்படியானால் நீ கொடுக்கிறாயா? தசம பாகமென்றால் 20 ரூபாய் அல்லது 50 ரூபாய் என்றல்ல பொருள். தசம பாகமென்றால் பத்தில் ஒரு பங்கு என்று அர்த்தம். சில குடும்பங்களில் கணவன் மனைவி இருவரும் வேலை செய்து 4 ஆயிரம் அல்லது 5 ஆயிரம் என்று சம்பளம் வாங்கி வருவார்கள்.

ஆனால் அவர்கள் தேவனுக்கு அளிப்பது 50 ரூபாய் அல்லது 100 ரூபாய் கூட இருக்காது. அவர்கள் வஞ்சகர்கள். மனிதன் தேவனை வஞ்சிக்கலாமா? நீயும் தேவனை வஞ்சித்து வருகிறாயா? தேவனுக்குத் தசமபாகம் கொடுப்பதற்குப் பின் வாங்குகிறாயா? ஆனால் ஆயிரக்கணக்கான பணம் டாக்டர்களுக்கும், மருத்துவமனைகளுக்கும் கொடுத்து வருகிறாய் அல்லவா? உனக்குப் புத்தி எப்பொழுதுதான் வரும். தேவன் உனக்கு வியாதியைக் கொடுத்து வருந் தினாலும் புத்தி வரவில்லையே? ஒருவேளை பலவிதமான பிரச்சனைகளினால் பாதிக்கப்பட்டு வருகிறாயோ என்ன வோ? இந்த நேரத்திலிருந்தாவது தேவனுக்குக் கொடுக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொள்ளவும், உபவாசமிருந்து, கண்ணீர்விட்டு ஜெபித்து நீ செய்த தவறுக்காக அறிக்கை யிட்டுத் தேவனுக்குக் கொடுக்கக் கற்றுக் கொள்ளவும். அப்பொழுதுதான் தேவன் உனக்குக் கொடுப்பார்.

விசுவாசியே! தேவஜனமே! கேள். சாரிபாத் என்னும் ஊரில் எழை விதவைத் தனக்கு இல்லாத சூழ்நிலையில் தேவ மகனுக்கு முதல் பலனைக் கொடுத்தார்கள். அதனால் அவளும், அவள் வீட்டாரனைவரும் பூமியில் மழை பெய்து, கோதுமை விளைந்து, அது அறுவடை செய்யும் காலம் வரைக்கும் மாவு குறைந்து போகாமலும், குடத்திலுள்ள

எண்ணெய் வற்றிப் போகாமலும், திருப்தியாகச் சாப்பிட்டு வந்தார்கள். அது மாத்திரமல்லாமல் அந்த ஏழை விதவையின் மகன் மரணத்துக்குக் கேதுவான வியாதிபட்டபோதும் தேவ மனுஷர் ஜெபம் செய்ததினால் சுகமடைந்தான்.

நீ சுகத்தைத் தேடி வருகிறாயா? உன் பிரச்சனைகளுக்குப் பரிகாரம் தேடி வருகிறாயா? நீ கஷ்டத்தில் பற்றாக் குறையினால் துன்பப்பட்டுக் கொண்டு இருக்கிறாயா? உன் நிலைமை எதுவாயினும் சாரிபாத் விதவையைப்போல் முதலாவதாக தேவனுக்குக் கொடுக்கவும்; அப்பொழுது தேவன் உனக்குப் போதுமான அளவுக்குக் கொடுப்பார். தேவனுடைய கிரியைகளை உன் வாழ்க்கையில் பார்க்க வேண்டுமானால் உன் வாழ்க்கையில் கிரியை நடப்பிக்கப் படவேண்டும். முதலீடு வைக்காமல் வியாபாரத்தில் லாபம் கிடைக்குமா? தேவன் உனக்கு ஒரு தாலந்தைக் கொடுத்து இருக்கிறார். அதுதான் கொடுக்கும் குணம். அந்தத் தாலந்தை நீ பூமிக்கடியில் புதைத்து விட்டாயோ? என்னவோ? அதனால்தான் நீ இப்படி இருக்கிறாய் என்று உணர்ந்து கொள். ஆனால் அதே தாலந்தை மற்றவர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் அதை வைத்து வியாபாரம் செய்து நல்ல லாபத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

அவர்கள் உத்தமமும் உண்மையும் உள்ள ஊழியக்காரரே என்று அழைக்கப்பட்டார்கள். அவர்கள் உன்னைப் போலப் புதைத்து வைக்கவில்லை. உன் தசம பாகத்தையும் முதற் பலனையும் தேவனுக்குக் கொடுக்கும் போது அவர் உன்னைப் பத்து மடங்கு ஆசீர்வதிக்கிறார் என்பதை இப்பொழுது தெரிந்து கொள்ளவும்.

ஒரு முறை உபவாச ஜெபக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு நான் ஆலயம் செல்ல வேண்டியிருந்தது. நான் புறப்படும்பொழுது என்னிடம் ஐந்து ரூபாய் மட்டுமே இருந்தது. நான் கணக்குப் போட ஆரம்பித்தேன். வீட்டி லிருந்து ஆலயத்திற்குப் போக ரூ.1-80-ம் திரும்பி வர ரூ.1-80-ம் செலவு ஆகும். நமக்கு நான்கு ரூபாய் போதும்.

எனவே ஒரு ரூபாயை வீட்டில் வைத்துவிட்டு இரண்டு ரூபாய் நோட் இரண்டை என் பக்கெட்டில் போட்டுக்கொண்டு பஸ் ஏறினேன். வீட்டிலிருந்து 10 கி.லோ. மீட்டர் தூரத்தில் ஆலயம் இருந்தது. வீட்டில் ஒரு ரூபாய் ஏன் வைத்தேன் என்றால் நாளைக்கு வீட்டின் செலவுக்கு ஒரு பைசா கூட கிடையாது. அதனால்தான். ஒரு ரூபாயாவது வீட்டில் இருக்கட்டுமே என்று எண்ணி வைத்துவிட்டுப் போனேன்.

பஸ் டிக்கெட்டிற்காக இரண்டு ரூபாய் கொடுத்தபோது பஸ் கண்டக்டர் ஐந்து பைசா கொடுங்கள் 25 பைசா கொடுக்கிறேன் என்றார். நான் இல்லை என்று பதில் சொன்னேன். சரி பிறகு தருகிறேன் என்று சொல்லி டிக்கட்டை மட்டும் கொடுத்துவிட்டுச் சென்றார். பஸ்ஸில் உட்கார்ந்து கொண்டேனே தவிர ஜன்னல் வழியாக ஏதோ பார்ப்பதைப் போல் பார்த்துக் கொண்டே வீட்டில் ஒரு ரூபாய் மட்டும் இருக்கிறது. நாளை எப்படிக் கழியப்போகிறதோ? நாம் பஸ்ஸில் வராமல் சைக்கிளில் வந்திருந்தால் ஐந்து ரூபாய் மீதியாயிருக்கும் அல்லவா? ஆனால் 10 கிலோ மீட்டர் சைக்கில் மிதிக்க முடியுமா? உபவாசத்தினால் ஏற்கெனவே பலவீனமாக இருக்கிறோம். நாம் ஏன் இப்படிச் செய்தோம். ஆலயத்திற்கு வராமல் இருந்து விட்டிருந்தால் என்ன? சரி இது தவறாயிற்றே? ஆண்டவர் தண்டிக்க மாட்டாரா?

நாளை ஞாயிற்றுக்கிழமை ஆலயத்திற்கு எப்படிப் போவது. பஸ் டிக்கட்டிற்கும் காசு கிடையாதே. எனக்கும், ரெபெக்காவுக்கும், பிள்ளைகளுக்கும் காணிக்கை செலுத்த என்ன இருக்கிறது? என்று பலவிதமான சிந்தனையில் ஆழ்ந்து போனேன். இதற்குள் நான் இறங்க வேண்டிய இடத்தைக் கண்டக்டர் சத்தம் போட்டுச் சொல்ல நான் துள்ளிக்குதித்துப் பஸ்ஸை விட்டு இறங்கி விட்டேன்.

கண்டக்டர் கொடுக்க வேண்டிய இருபது பைசாவையும் கொடுக்கவில்லை. நானும் கேட்டு வாங்க மறந்து விட்டேன். பஸ் புறப்படும்போது ''ஐயோ, நமக்குச் சேர வேண்டிய இருபது பைசாவைக் கண்டக்டரிடம் விட்டு விட்டோமே''

என்ற கவலையுடன் ஆலயத்திற்குள் பிரவேசித்தேன். ஐந்து நிமிடம் கழித்துப் பாட்டு பாடத் தொடங்கினார்கள். காணிக்கை செலுத்த வேண்டிய நேரம் வந்தது. எல்லோரும் காணிக்கை செலுத்த காணிக்கை பெட்டியிடம் வந்து கொண்டிருந்தார்கள். நானோ கண்களை மூடிக்கொண்டு நான் இருக்கும் இடத்திலேயே உட்கார்ந்து ஆலோசனை செய்து கொண்டிருந்தேன். என் பாக்கெட்டில் இரண்டு ரூபாய் மட்டுமே இருந்தது. அதைக் காணிக்கையாகச் செலுத்தி விட்டால் பஸ் கட்டணத்திற்குக் காசு கிடையாது. காணிக்கை போடா விட்டால் தேவன் கோபித்து கொள்வாரோ என்னவோ? தேவனுக்கு ஏன் கோபம் வரவேண்டும். என்னிடத்தில் இரண்டு ரூபாய் மட்டுமே இருக்கிறது என்று அந்தத் தேவனுக்குத் தெரியாதா? என்ன?நான் எவ்வளவு தவறு செய்து விட்டேன். வீட்டில் வைத்துவிட்டு வந்த அந்த ஒரு ரூபாயைக் கொண்டு வந்திருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும். அந்த ஒரு ரூபாயைக் காணிக்கையாகச் செலுத்தியிருக்க முடியும் அல்லவா? ஆண்டவரே! இந்தத் தவறான புத்தி எனக்கு ஏன் வந்தது? நாளையதினத்தைக் குறித்து கவலைப்படுகின்ற அந்தக் கெட்ட புத்தி இன்னும் நம்மிடத்தில் மறைந்து இருக்கிறதே.

இப்பொழுதே அந்தக் கெட்ட புத்தியை இயேசுவின் நாமத்தில் சிலுவையில் அறைகிறேன். இனி ஒருபோதும் நான் அந்தக் கெட்ட புத்தியை என் மனதில் வரவிடமாட்டேன். ஆண்டவரே! என்னை மன்னியும் என்று எனக்குள்ளேயே ஜெபித்துக் கொண்டேன். இதற்குள்ளாகச் சாட்சி பிரசங்கம் முடிந்தது. சாட்சி சொல்லுகிறவரையும், பிரசங்கிக்கிற வரையும் நான் பார்த்துக் கொண்டிருக்கிறேனே தவிர என் காதில் ஒன்றும் விழவில்லை. இப்பொழுது புரிகிறதா அந்தக் கெட்ட புத்தி என் ஆவிக்குரிய வாழ்க்கையை எவ்வாறு கெடுத்தது என்று. சாரிபாத் விதவையைக் குறித்து நினைக்கலானேன். அடுத்தபடியாகக் காணிக்கைப் பெட்டியில் காணிக்கையாக இரண்டு காசைக் காணிக்கையாகப் போட்ட ஏழை விதவையை நினைக்கலானேன். எனக்கிருந்த கெட்ட புத்தியைச் சிலுவையில் அறைந்தேன் அல்லவா? எனவே நல்ல புத்தி எனக்குள் கிரியைச்

செய்ய ஆரம்பித்தது. திடீரென எழுந்தேன். எல்லோரும் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆலயத்தில் உள்ள எல்லோருக்கும் என்னை நன்றாகத் தெரியும்.

ஆனால் அவர்களுக்குத் தெரியாது, நான் காணிக்கை பெட்டியில் என்னிடம் இருந்த இரண்டு ரூபாயைக் காணிக்கையாகப் போட்டு விட்டு 10 கிலோ மீட்டர் தூரம் ஆண்டவருக்காக நான் நடந்து போவேன் என்று நான் நடந்தே இரவு ஒரு மணிக்கு வீடுபோய்ச் சேர்வேன் என்று ஆண்டவரை தவிர மற்றவர்களுக்கு யாருக்குத் தெரியும். இவ்வாறு யோசித்துக் கொண்டே காணிக்கைப் பெட்டியை விட்டு நான் உட்கார்ந்து கொண்டு இருக்கும் இடத்திற்குச் சென்றேன். அங்குள்ளவர்களைப் பார்த்தேன். அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். நானோ அவர்களைக் குறித்து நமக்கென்ன? இவர்களுக்குக் கெட்ட புத்தி இல்லையா? இவர்கள் சிரித்தால் சிரிக்கட்டுமே? உலகத்தோடு நமக்கென்ன வேலை?

நாம் இன்றிரவு ஆண்டவருக்காக 10 கிலோ மீட்டர் நடக்கப்போகிறோம். இப்பொழுது சிரிக்கிறவர்கள் எல்லோரும் நம்மோடு நடப்பார்களா? இவர்கள் ஏன் சிரிக்கிறார்கள் என்றால் காணிக்கை செலுத்த வேண்டிய நேரத்தில் காணிக்கை செலுத்தாமல் இப்பொழுது செலுத்துகிறாரே என்று. கூட்டம் முடிந்தது. எல்லோரும் போய்க் கொண்டு இருந்தார்கள். நானும் அவர்களோடு சேர்ந்து வாசலுக்கு வந்தேன். அதற்குள் ''ஐயா, பரவஸ்து'' என்று சபை மூப்பரின் குரல் கேட்க ஆரம்பித்தது.

திரும்பி பார்த்தேன். பாஸ்டர் அவர்கள் உங்களை அழைக்கிறார் என்று கூட்டிக்கொண்டு போனார். அங்குச் சென்றதும் பாஸ்டர் அவர்கள் காணிக்கையிலிருந்து 25 ரூபாய் எடுத்து ''பரவஸ்து, நீங்கள் மிகவும் தூரத்திலிருந்து வந்திருக்கிறீர்கள். இப்பொழுதே இரவு 9-30 மணியாயிற்று. இனி நீங்கள் எவ்வாறு நடந்து செல்ல முடியும். எனவே

ஆட்டோவில் செல்லுங்கள்'' என்று சொல்லிப் பலவந்தமாக என் பாக்கெட்டில் 25 ரூபாயை திணித்து விட்டார்கள்.

நான் தேவனை துதித்து கொண்டே வெளியில் வந்தேன். என்னிடம் இருந்த இரண்டு ரூபாயைப் பஸ் கட்டணத்திற்காக நான் வைத்துக்கொண்டு இருந்தால் எனக்குத் தேவன் 25 ரூபாய் கொடுத்திருக்க மாட்டார் அல்லவா? 25 ரூபாயைப் பார்க்காதீர்கள். தேவன் செய்த அற்புதத்தை பாருங்கள். நாளை ஞாயிற்றுக் கிழமை . பஸ் கட்டணத்திற்கு காசு இல்லை என்று நின்று போய் விடாதீர்கள். பிரியமானவர்களே! நான் தேவனுக்கு இரண்டு ரூபாய் கொடுத்தேன். ஆனால் தேவனோ எனக்குப் பத்து மடங்குக் கூட்டிக் கொடுத்தார். எனவே நீங்கள் தேவனுக்கு 200 ரூபாய் கொடுப்பீர்களே யானால் தேவன் உங்களுக்கு 2000 ரூபாய் கொடுப்பார் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

அந்த நெப்ரயீட்ஸ் நோயுள்ள பிள்ளையை எங்கள் வீட்டில் வைத்துக் கொண்டு தேவனைக் குறித்து அப்பிள்ளைக்காக 40 நாட்கள் வரை ஜெபித்து வந்தேன். தேவன் தம்முடைய கிருபையினால் அந்தப் பிள்ளையைத் தொட்டுப் பரிபூரண சுகம் கொடுத்தார். இப்பொழுது அந்தக் குடும்பம் மிகவும் உண்மையாகத் தங்கள் ஊழியத்தில் தசம பாகம் தேவனுக்குக் கொடுத்து வருகின்றார்கள். நீங்களும் தேவனுக்குக் கொடுத்து அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளக் கற்றுக் கொள்ளுங்கள்.

ஒரு நாள் நான் அதிக கவலையோடிருந்தேன். காரணம் என் இரண்டு பிள்ளைகளையும் நல்ல பள்ளியில் சேர்க்க வேண்டும். இருவருக்கும் புத்தகங்கள் சீருடைகள் வாங்க வேண்டும். இன்னும் மற்ற பொருள்களும் வாங்க வேண்டும். இதற்கெல்லாம் ரூபாய் 1000/ தேவைப்படும். இவ்வளவு காசும் எனக்கு எப்படி கிடைக்கும். இதை எண்ணியே நான் கவலை கொண்டிருந்தேன்.

கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்டாலும் பிதா அதை உங்களுக்குத் தந்தருளுவார் என்று இயேசு தானாகச் சொன்ன வாக்குத்த[illegible]தம்

என் நினைவிற்கு வந்தது. 7 நாட்கள் உபவாசமிருந்து ஜெபித்தேன். ஒரு காகிதம் எடுத்துக் கொண்டு பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், பென்சில், ரப்பர், சர்ட், நிக்கர், பூட்ஸ், டை, பெல்ட், கலர் பென்சில், வெள்ளை யூனிப்பாம், வெள்ளை பூட்ஸ், சாக்ஸ், பென்சில் பாக்ஸ், ஆகிய எல்லாவற்றையும் வரிசையாக எழுதி ஒவ்வொன்றிற் கும் உரிய விலைபோட்டு, துணி தைப்பதற்குரிய டெய்லர் கூலியும் போட்டு எல்லாவற்றையும் கூட்டி மொத்த தொகையை தேவனுடைய சந்நிதியில் தேவனுடைய சமூகத்தில் வைத்து ஜெபிக்க ஆரம்பித்தேன்.

''ஆண்டவரே! உமது அடியேனாகிய நான் வீடு, வாசல், சொத்து, பணம், பந்து ஜனங்கள், உத்தியோகம் ஆகிய எல்லாவற்றையும் விட்டு விட்டேன். உமது ஊழியத்திற்கு என்னை அழைத்தீர்கள். பூலோகத்தில் இவையாவையும் விட்டு, என்னைப் பின்பற்றுகிறவனுக்கு இவை அனைத் தையும் 100 மடங்கு கூட்டித் தருவேன். பரலோகத்தில் நித்திய ஜீவனையும் கொடுப்பேன் என்று வாக்களித்திருக்கிறீர்கள். இப்பொழுது என்னிடத்தில் உம்முடைய வாக்குத்தத்தம் மாத்திரமே இருக்கிறது. உமக்கு நேராக என் கண்களைத் திசை திருப்புகிறேன். என் இரு கரங்களை உம் பக்கமாய் நீட்டி உம்மிடத்தில் சாய்க்கின்றேன். ஆரம்பத்திலிருந்தே என் பிள்ளைகளைத் தெலுங்குப் பள்ளியில் படிக்கும் படியாகச் செய்திருப்பீராகில் இப்பொழுது இவ்வளவு காசு தேவைப்படாது. இதுவரைக்கும் படிக்க வைத்த நீர் இனிமேலும் படிக்கும் படியாகச் செய்வீர் என்று நம்புகிறேன். இந்த நம்பிக்கையினால் தான் இந்தப் பட்டியலைத் தயாரித்து உமது சமூகத்தில் வைத்து ஜெபிக்கின்றேன்.

இந்த விலைப்பட்டியலில் மொத்தம் ரூபாய் 1000/- இருக் கிறது. இந்த ஆயிரம் ரூபாயையும் நீர் எனக்குத் தரவேண்டும். பிள்ளைகள் பள்ளியில் சேர கடைசி நாள் 16 ஆம் தேதி ஆகும். என் பிள்ளைகள் இருவரும், என் மனைவி ரெபெக்காவும் ஒரிசா மாநிலத்தில் என் மைத்துனன் வீட்டில் இருக்கிறார்கள். அவர்கள் அங்கு முழங்காலிட்டு அவர்கள் தாயாருடன்

சேர்ந்து ஜெபித்து வருகிறார்கள். நீர் ஜெபத்தைக் கேட்கிற தேவன் என்பதை நான் நன்றாக அறிவேன். 16 ஆம் தேதி கடந்து விட்டால் பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்க முடியாது.

அதற்கு பிறகு அவர்கள் படிக்க முடியாமல் இந்த ஆண்டை வீணாகக் கழிக்க வேண்டியிருக்கும். எனவே 15 ஆம் தேதி மதியத்திற்குள்ளாக ஆயிரம் ரூபாய் நீர் எனக்குத் தரவேண்டும். நீர் எங்கிருந்து கொண்டு வருவீரோ? யார் மூலம் அனுப்புவீரோ, அது எனக்குத் தெரியாது. எனக்குத் தேவையானதை நீரே தர வேண்டும். உம்மைத் தவிர தருகிறவர் எனக்கு வேறு யாரும் கிடையாது. இவ்விதமாகச் சாப்பிடாமல் இரவு ஒரு டம்ளர் பாலும் இரண்டு வாழைப் பழங்களும் சாப்பிட்டு ஏழு நாட்கள் வரை நான் ஜெபித்தேன். இந்த ஏழு நாட்களில் தேவன் எனக்குப் பணத்தைத் தரவில்லை. இனி எட்டாவது நாள் அதாவது 15 ஆம் தேதியும் ஜெபிக்க வேண்டும் என எண்ணி ஜவ்வரிசி கஞ்சி குடித்துவிட்டு மதியம் வரைக் காத்திருந்தேன். வீட்டில் காலிங் பெல் (Calling Bell) அடித்தது. திகைத்துப் போனேன். மறுபடியும் காலிங்பெல் அடித்தது. எனக்கு பலவீனமாக இருந்தால் உடனே என்னால் எழுந்திருக்க முடியவில்லை. ஆனால் காலிங்பெல் மறுபடியும் மறுபடியும் ஒலித்துக் தொந்தரவு செய்வதால் சிரமப்பட்டு எழுந்து மெதுவாகச் சென்று மேசையின் மேல் இருந்த கடிகாரத்தைப் பார்த்தேன். அப்பொழுது மதியம் 1-30 ஆகியிருந்தது.

இந்த கடும் வெயிலில் யார் வந்திருப்பார்கள் என்று எனக்குள் நானே கேட்டுக் கொண்டு வாசலுக்குச் சென்றேன். ஆச்சரியப்பட்டுப் போனேன். வந்தவர்கள் பிரசஸ்திலார்டு என்றார்கள். நான் அம்மா என்றேன். அவர்கள் எனக்கு தேவன் தந்த தாய் அல்லவா? அவர்களும் Praise the Lord என்றார்கள். அவர்கள் என் அறையில் நுழைந்துகொண்டே மகனே, நன்றாக இருக்கின்றீர்களா? எங்கே பிள்ளைகள்? சத்தமே ரணோமே? தூங்கிக் கொண்டு இருக்கிறார்களா? நீர் ஏன் இவ்வளவு பலவீனமாக இருக்கிறீர்கள்? உங்களுக்கென்ன

உடல்நலம் குறைவா? என்று ஒரே மூச்சாகப் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டே வந்தார்கள்.

என் குடும்பத்தினர் ஒரிசாவுக்குச் சென்றிருக்கிறார்கள். அதனால்தான் வீடு அமைதியாக இருக்கிறது. அவர்கள் இன்று வரவேண்டும் ஒருவேளை இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள் வந்து விடுவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டுள்ளேன் என்று நான் சொன்னேன். அவர்கள் என்னைப் பார்த்து ''எந்த வண்டியில் வருவார்கள் என்றார்கள். நான் மூன்று மணிக்கு வரும் கோனார்க் எக்ஸ்பிரஸ்ஸில் வருவார்கள் என்றேன். நீங்கள் எப்பொழுது ஸ்டேஷனுக்கு போவீர்கள் என்றார்கள். இல்லை, போக மாட்டேன் என்று சொன்னேன்.

அதற்கு அவர்கள் மிகவும் பலவீனமாய் காணப்படு கிறாயே? என்றார்கள் ஆம், உடல் நலம் சரியில்லை என்றேன். என்னவாயிற்று? நீ சாப்பிட்டு வருகிறாயா? இல்லையா என்றார்கள். எனக்குள்ளாக நாம் ஏன் இவர்களிடத்தில் பொய் சொல்ல வேண்டும். உபவாசம் இருக்கிறேன் என்று சொல்லலாம் அல்லவா! வேண்டாம், வேண்டாம். இவருக்கு ஏன் நாம் இவற்றையெல்லாம் சொல்ல வேண்டும். இயேசு கிறிஸ்து உபவாசத்தை இரகசியமாக உபவாசியுங்கள் அப்பொழுது பரலோக பிதா பலனளிப்பார் என்று சொல்லியிருக்கிறாரே! என்று எண்ணிக்கொண்டு, அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லாமல் மௌன மாக இருந்தேன்.

அவர்கள் நிதானமாக மகனே! நான் மிகவும் தேவையான ஒரு அலுவல் காரியமாக இங்கு வந்திருக்கிறேன் என்றார்கள். ''என்னம்மா அந்த வேலை'' என்றேன். என் இரண்டாவது மகன் 10,000 ரூபாய் சீட்டை எடுத்தான். அதில் தசமபாகம் எடுத்து கவரில் போட்டு நாங்கள் எல்லோரும் முழங்காலிட்டு ஜெபித்தோம். காலையில் எங்கள் பாஸ்டரை அழைத்து ஜெபித்துவிட்டு, அந்தச் தசமபாகத்தை அவர்களிடம் கொடுக் கலாம் என்று நினைத்திருந்தோம். அதிகாலையில் தேவன் கனவில் வந்து ''என் மகனே! பரதேசியும் என் தாசனுமாகிய

பரவஸ்துக்காக நீ என்ன செய்திருக்கிறாய்? என்று கேட்டார். உடனே நான் விழித்துக் கொண்டு எல்லோரையும் தூக்கத்தில் இருந்து எழுப்பினேன். எல்லோருக்கும் இந்த விஷயத்தை தெரியப்படுத்தினேன். எல்லோரும் மறுபடியும் பயபக்தி யோடு முழங்காலிட்டு ஜெபித்து, ஆண்டவரே! நீர் கொடுத்த கனவின் அர்த்ததை வேதத்தைத் திறந்து வாசிக்கும்போது எங்களுக்குத் தெளிவாக்கும் என்று வேதத்தைத் திறந்தோம். அதில் இவ்விதமாக இருந்தது:

''சுயதேசத்தில் இருக்கும் ஊழியக்காரர்களைப் போல் பரதேசிகளாக இருக்கும் என் ஊழியக்காரர்களையும் நீர் ஆசீர்வதிக்க வேண்டும்'' என்று இருந்தது. நீர் பரதேசியாக இருக்கிறாய் என்று அப்பொழுது எங்களுக்குப் புரிந்து சரி, இனி எப்பொழுது பொழுதுவிடியும் என்று உட்கார்ந்து கொண்டிருந்தோம். உங்கள் வீடு எனக்குத் தெரியாமல் இதே வழியில் மூன்று நான்கு முறை திரிந்துக் கொண்டு இருந்தேன். சந்தேகப்பட்டு ஆட்டோவை நிறுத்தி காலிங்பெல்லை அடித்தேன்.

உம்மைப் பார்த்த பிறகுதான் எனக்குத் தைரியம் வந்தது! என்று நடந்ததை எல்லாம் சொல்லி ''உமக்குப் பணம் மிகவும் தேவையாக இருக்கிறதா? உமக்கு எவ்வளவு தேவையோ? சொல். தேவன் எங்களுக்குப் பாரத்தைக் கொடுத்திருக்கிறார். நான் கொண்டு வந்தது போதவில்லை என்றால் உமக்கு எவ்வளவு தேவையோ? அவ்வளவும் தருகிறோம்'' என்றார்கள்.

தேவன் உங்களுக்கு எவ்வளவு சொன்னாரோ? அவ்வளவு தான். சரி அதுவே போதும் என்றேன். ''சரி, இதோ இந்தக் கவரை வைத்துக் கொள்ளுங்கள். இதில் ஆயிரம் ரூபாய் இருக்கிறது. பெற்றுக் கொள்ளுங்கள். பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்க வேண்டியதற்குத் தேவைப்படும்'' என்று கொடுத்துவிட்டு எனக்காகவும் ஜெபித்துவிட்டுப் போனார் கள். எனக்குள் நானே சிரித்துக் கொண்டேன். இயேசு ஆண்டவர் எவ்வளவு பெரிய தேவன். பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கிறவர் இயேசு. தேவைகளைப் பூர்த்தி செய்

கிறவர் இயேசு. சஞ்சல நேரத்தில் சந்தோஷம் அளிக்கிறவர் இயேசு.

பிரியமானவர்களே! என்ன செய்யவதென்று தெரியாமல் தவிக்கும் நேரத்தில் இயேசுவிடம் வந்து முழங்காலிட்டு ஜெபித்தால் இயேசுவே வழியாக இருப்பதால் அதற்கொரு வழியை உண்டு பண்ணுவார். எந்தக் குலமானாலும், எந்தச் சாதியானாலும், எந்த மதமானாலும், விசுவாசியானாலும், அவ்விசுவாசியானாலும், இயேசுவண்டை வாருங்கள். அவரை நம்பி நம்மைத் தாழ்த்தி அவரிடத்தில் கேளுங்கள். அவர் உமக்கு எல்லாவற்றையும் சொல்லிக் கொடுப்பார்.

பிரியமானவர்களே! இந்தப் புத்தகம் எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சாதாரண தமிழில் எழுதப்பட்டுள்ளது. இந்தப் புத்தகத்தை வாசித்த பிறகு இது உங்கள் வாழ்க்கையிலும், உங்கள் குடும்பத்திலும் எந்த விதமான மாற்றத்தைக் கொண்டு வந்தது என்பதை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இப்புத்தகத்தின் மூலம் உங்களுக்குக் கற்றுக் கொடுத்த பாடம் என்ன என்பதையும் தெரியப்படுத்துங்கள். இயேசு கிறிஸ்து வின் நாமத்தினாலே ஜெபிக்க வாஞ்சிக்கிறீர்களென்றால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள். உங்களுக்கு ஏதாவது ஒரு விசேஷமான ஜெபம் தேவைப்படுகிறதா? அப்படியானால் உடனே எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள். இந்தப் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கும்பொழுது தேவனுடைய ஆவியானவர் உங்களில் கிரியை செய்து உங்களில் மாற்றத்தை உண்டு பண்ணினால் அதை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

கர்த்தரில் பிரியமானவர்களே!

என்னுடைய சாட்சியை குறித்து உங்களுடைய சபைகளில் அல்லது பொது கூட்டங்களில் நான் பேச வேண்டுமென்று பரிசுத்த ஆவியினால் பெலபட்டவர்கள் கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டு கொள்கிறோம். கடிதம் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் எழுதலாம்.

பாஸ்டர் பரவஸ்து சூரிய நாராயணராவ்
கார்மேல் சர்ச்
போரபண்டா மெயின் ரோடு
ஹைதராபாத்-500 018
தொலைபேசி: 040-3831168, 3830019

(தெலுங்கிலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பாளரை நான் என்னுடன் கூட்டிவருவேன். ஆகவே மொழிபெயர்ப்பாளரை குறித்து சிரமபடவேண்டாம்).

PH: 26620644

ஆசிரியர் ஜகந்நாத மத பீடத்தில் கற்றவர். அர்ச்சகர்களின் குடும்பத்தில் பிறந்து,ஸ்ரீ லஷ்மி நாராயண சுவாமி ஆலயத்தில் பிரதான பூஜாரியாக அபிஷேகம் பண்ணப்பட்டார்.

சத்தியத்தை குறித்த வாஞ்சை உண்டாகி அதை அறிந்து கொள்ள முயற்சித்த போது பரமேசுவரனின் தரிசனம் கிடைத்தது. அந்த நாளில் சர்வலோகத்தின் இரட்சகரை குறித்த ஞானோதயம் உண்டாயிற்று. ஞானோதயத்தை பெற்றதற்காக தன் சொந்த ஜனங்களால் சித்திரவதை செய்யப்பட்டு, காயப் படுத்தப்பட்டு, அடைக்கப்பட்டிருந்த தருணத்தில் சர்வ லோகத் தையும் நடத்துகிற ஜகத்பிதாவானவர் தாமே அவருக்கு விடுதலை கொடுத்து, உடனடியாக பரிபூரண சுகத்தையும் அளித்தார்.

சுவிஷேச ஊழியத்தின் நிமித்தம் 5 முறை சிறைச் சாலையில் அடைக்கப்பட்டார். 1998 ஏப்ரல் 27-ம் தேதி, ஆந்திரப் பிரதேசம், அநந்தப்பூர் ஜில்லா, குண்டகல் என்ற பட்டிணத்தில் நடத்திய சுவிஷேச கூட்டத்தின் நிமித்தம் கிட்நேப் செய்யப்பட்டார்.

1999 ஜனவரி 12- 16 வரை, மேற்கு கோதாவரி ஜில்லா, பீமாவரம் என்ற பட்டிணத்தில் பெரிய சுவிஷேச கூட் டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர். அதற்குரிய பணிகள் 1998 டிசம்பர் மாதத்தில் துவங்கப்பட்டன. இந்த நாட்களில் பி. ஜே. பி. இயக்கத்தை சார்ந்தவர்கள், ஆசிரியரை கைது செய்து தூக்குத் தண்டனை விதிக்க வேண்டுமென்றும், அவருடைய புத்தகங்களை, ஒலிநாடாக்களை பறிமுதல் செய்ய வேண்டும் என்றும் போராட்டம் நடத்தினார்கள். பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் மூடப்பட்டன. Sec 295A, 298 IPC 34 என்ற சட்டத்தின் கீழ் ஆசிரியர் கைது செய்யப் பட்டார்.

1998 டிசம்பர் 23-ம் தேதி ராஜமுந்திரி மத்திய சிறைச்சாலையில் அடைக்கப் பட்டார். 5 நாட்கள் கான்சன்ட்ரேஷன் கேம்ப்-ல் இருந்த போது சுவிஷேசத்தைப் பிரசங்கித்தார். இதன் காரணமாக குளோஸ்டு பிரிசன் என்ற பகுதிக்கு மாற்றப்பட்டார். அங்கு 58 பேருக்கு சுவிஷேசத்தை அறிவித்து ஞானஸ்நானம் கொடுத்தார். இதற்காக தனி அறையில் கை, கால்கள் சங்கிலி களால் கட்டப்பட்டு, அதற்கு மத்தியில் ஒரு இரும்பு கம்பி சொரு கப்பட்டு 38 நாட்கள் அடைக்கப்பட்டிருந்தார். இவ்வாறு 46 நாட்கள் மத்திய சிறைச்சாலையில் கொடூரமான பாடுகளை அநுபவித்தார். 1999 பிப்ரவரி 7-ம் தேதி விடுதலையானார். இந்த வழக்கு இன்னும் முடிவடையாமல் இருக்கிறது.

ஆசிரியரின் தமிழ் ஒலிநாடாக்கள் சீக்கிரமே வெளியிடப்படவுள்ளன. இந்த சாட்சிப் புத்தகம் வேண்டுவோர், கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

P.Madan Mohan, Door No. 54, Cooks Road,
Chennai-600 012. Phone : 6430644.

ஆசிரிய
பற்றி.